# கவி பாடலாம்

கி.வா.ஜ.



**உலகளாவிய பொதுக் கள உரிமம் ( CC0 1.0 )**

இது சட்ட ஏற்புடைய உரிமத்தின் சுருக்கம் மட்டுமே. முழு உரையை https://creativecommons.org/publicdomain/zero/1.0/legalcode என்ற முகவரியில் காணலாம்.

**பதிப்புரிமை அற்றது**

இந்த ஆக்கத்துடன் தொடர்புடையவர்கள், உலகளாவிய பொதுப் பயன்பாட்டுக்கு என பதிப்புரிமைச் சட்டத்துக்கு உட்பட்டு, தங்கள் அனைத்துப் பதிப்புரிமைகளையும் விடுவித்துள்ளனர்.

நீங்கள் இவ்வாக்கத்தைப் படியெடுக்கலாம்; மேம்படுத்தலாம்; பகிரலாம்; வேறு கலை வடிவமாக மாற்றலாம்; வணிகப் பயன்களும் அடையலாம். இவற்றுக்கு நீங்கள் ஒப்புதல் ஏதும் கோரத் தேவையில்லை.

✱✱✱

இது, உலகத் தமிழ் விக்கியூடகச் சமூகமும் ( https://ta.wikisource.org ), தமிழ் இணையக் கல்விக் கழகமும் ( http://tamilvu.org ) இணைந்த கூட்டுமுயற்சியில், பதிவேற்றிய நூல்களில் ஒன்று. இக்கூட்டுமுயற்சியைப் பற்றி, https://ta.wikisource.org/s/4kx என்ற முகவரியில் விரிவாகக் காணலாம்.

**Universal (CC0 1.0) Public Domain Dedication**

This is a human-readable summary of the legal code found at https://creativecommons.org/publicdomain/zero/1.0/legalcode

**No Copyright**

The person who associated a work with this deed has **dedicated** the work to the public domain by waiving all of his or her rights to the work worldwide under copyright law, including all related and neighboring rights, to the extent allowed by law.

You can copy, modify, distribute and perform the work, even for commercial purposes, all without asking permission.

✱✱✱

This book is uploaded as part of the collaboration between Global Tamil Wikimedia Community ( https://ta.wikisource.org ) and Tamil Virtual Academy ( http://tamilvu.org ). More details about this collaboration can be found at https://ta.wikisource.org/s/4kx.

# கவி பாடலாம்

'வாகீச கலாநிதி'

கி. வா. ஜகந்நாதன்

அல்லயன்ஸ்
(நூற்றாண்டு கண்ட முதல் தமிழ்ப் புத்தக நிறுவனம்)

உரிமைப் பதிப்பு
அல்லயன்ஸ்
முதற் பதிப்பு - 2003
இரண்டாம் பதிப்பு - 2005
மூன்றாம் பதிப்பு - 2006

© ஆசிரியருக்கு

**விலை : ரூ.65-00**

அல்லயன்ஸ்
கம்பெனி
ப.எண். 244, ராமகிருஷ்ணா மடம் சாலை,
தபால்பெட்டி எண்: 617
மயிலாப்பூர், சென்னை - 600 004.
தொலைபேசி:24641314
இணைய தளம் : www.alliancebook.com
தொலை நகல் : Srinivasan@alliancebook.com

Typesetting : Amaravathi, W. Mambalam, Chennai - 33.
Printed by : Jai Ganesh Offset Printers, Chennai-4

முதற் பதிப்பின்

# முன்னுரை

தமிழ் மொழியில் புதிய மலர்ச்சி தோன்றியுள்ள காலம் இது. பழந்தமிழ் இலக்கியங்கள் மிகுதியாக இருந்தாலும் புதிய துறையில் உரைநடை இலக்கியங்கள் இந்த நூற்றாண்டில் தோன்றி வளரலாயின. உலக முழுவதுமுள்ள பல்வேறு மொழிகளிலும் உரைநடை இலக்கியங்களே பெரு வெள்ளமாக இப்போது வந்து கொண்டிருக்கின்றன.

ஆயினும், தமிழில் புதிய கவிதைகளைப் பாடும் ஊக்கத்துக்கும் குறைவில்லை. சில காலமாக இந்த ஊக்கமும் முயற்சியும் பல மடங்கு பெருகி விட்டன. மேடையில் பேச வேண்டும் என்ற அவா எவ்வாறு பலருக்கும் உண்டாகியிருக்கிறதோ, அவ்வாறே கவிதை எழுதவேண்டும் என்ற ஆர்வமும் இப்போது பலருக்கு உண்டாகி வளர்ந்து வருகிறது. பத்திரிகைகள் கவிதைகளை வெளியிடுவதோடு, அங்கங்கே அடுத்தடுத்துக் கவியரங்கங்கள் நடைபெறுகின்றன.

கவிதை பாடும் ஆசை இருக்கும் அளவுக்கு அதன் இலக்கணத்தைத் தெரிந்து கொள்ள வேண்டும் என்ற எண்ணம் இருப்பதில்லை. எதுகை, மோனை களைத் தெரிந்து கொண்டு ஏதோ ஒரு வகையாகப் பாடல்களை எழுதிப் பத்திரிகைகளுக்கு அனுப்பி, அவை வெளிவருவதை எதிர்நோக்கி ஆவலோடு காத்திருக்கும் உள்ளங்கள் பல. செய்யுளின் இலக் கணத்தைத் தெரிந்து கொள்ளும் பொறுமை பலருக்கு இருப்பதில்லை. எளிதிலே தெரிந்து கொள்ளும்படி அதைச் சொல்லுகிறவர்களும் இல்லை. எல்லாருமே யாப்பருங்கலக் காரிகையைப் படித்துக் கவிபாடக் கற்றுக் கொள்வதென்பது இயலாத காரியம்.

இந்த நிலையில், கவிபாடும் முறையை ஓரளவில் எளிதாகத் தெரிவிக்கும் கட்டுரைகளை எழுதினால் பலர் பயன் பெறக் கூடும் என்று எண்ணினேன். இளமை முதல் கவிபாடும் பழக்கம் உள்ளவனாதலின், நான் எவ்வாறு தொடங்கிப் பயின்று எழுத முடிந்ததோ, அந்த முறையில் கட்டுரைகளை எழுதலானேன்.

'மஞ்சரி'யில் இந்தக் கட்டுரைகளை எழுதத் தொடங்கினேன். 1959-ஆம் ஆண்டு ஜனவரி மாதம் தொடங்கி 1961-ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் வரையில் இவற்றை எழுதினேன். இவற்றைப் படித்தவர்களிற் பலர் தம்முடைய ஐயங்களை எழுதினார்கள்.

கட்டுரைகளுக்குப் பின் அன்பர்கள் கேட்ட வினாக்களுக்குரிய விடைகளை மாதந்தோறும் எழுதி வந்தேன். பலர் புதிய செய்யுட்களை எழுதி யனுப்பினார்கள். அவற்றில் சிலவற்றைத் தேர்ந்

தெடுத்து அவற்றில் உள்ள பிழைகள் இன்னவை என்பதைச் சுட்டிக் காட்டினேன்.

இந்தக் கட்டுரைகளைத் தொகுத்துப் புத்தக வடிவில் வெளியிடும் வாய்ப்பு இப்போது கிடைத்தது. 'மஞ்சரி'யில் வெளியான வினாவிடை களை அப்படியே வெளியிடுவதில் பயன் இல்லை யென்ற எண்ணத்தினால் சிலவற்றை மாத்திரம் தெரிந்தெடுத்துக் கட்டுரைகளின் பின்னே கொடுத் திருக்கிறேன்.

இது புத்தக உருவில் வர வேண்டும் என்ற விருப்பத்தைப் பல அன்பர்கள் தெரிவித்தார்கள். இதனால் கவிதையைப் புதியதாக எழுதும் அன்பர்கள் ஓரளவேனும் பயனடைவார்கள் என்றே நம்புகிறேன்.

இந்தக் கட்டுரைகளைத் தம் பத்திரிகையில் வெளியிட்டுதவிய 'மஞ்சரி'யின் ஆசிரியருக்கு என் நன்றியறிவு உரியது. இதனைப் புத்தக உருவில் வெளியிடும் மணிவாசகர் நூலகத்தாரிடத்தும் நன்றி காட்டும் கடப்பாடுடையேன். இதனை வெளியிடத் தூண்டியவர் என்னுடைய உழுவலன்பரும் சிவபூஜா துரந்தரரும் சிறந்த ரசிகருமாகிய திரு.பழ.சண்முகம் அவர்கள். அவர்களுடைய அன்புக்கு அடையாள மாகவே இந்த நூல் மலர்கிறது. அவர்களுக்கும் என் நன்றியறிவு உரியது.

**கி.வா.ஜகந்நாதன்**

அல்லயன்ஸ்

# பதிப்புரை

'வாகீச கலாநிதி' கி.வா. ஜகந்நாதன் அவர்கள் தன் வாழ்நாள் முழுவதையுமே தமிழ் மொழியின் வளர்ச்சிக்காகத் தன்னால் இயன்றதையும், தனக்குத் தெரிந்த பல விஷயங்களையும் பல வழிகளில் கூறி வந்தார். இவருடைய எழுத்துக்களுக்கு எப்போதுமே ஒரு தனிமதிப்பு உண்டு. காரணம் இவர் தனக்குத்தான் தமிழ் மொழியைப்பற்றி நன்கு தெரியும் என்று கூறிக் கொள்ளவில்லை. தான் அறிந்தவற்றை எளிய, அழகு தமிழில் பேசினார், எழுதினார். பழமைக்கும், புதுமைக்கும் ஒரு பாலமாக விளங்கினார்.

தமிழ் இலக்கியங்களைப்பற்றி நூற்றுக்கும் மேற்பட்ட நூல்களை எழுதினாலும், தமிழ்மொழியை நன்கு கற்க, ஐயப்பாடுகளைத் தீர்த்துக் கொள்ள - கி.வா.ஜ. பதில்கள், கவிதை எழுதுவது எப்படி, மேடைப் பேச்சு - போன்ற வழிமுறை நூல்களையும் எழுதியுள்ளார். கி.வா.ஜ., பி.ஸ்ரீ. போன்ற தமிழ் அறிஞர்கள் தமிழ் இலக்கியங்களிலும், ஆன்மிக இலக்கியங்களிலும் பற்று கொண்டு எழுதியதால்தான், இன்றளவும் நமக்குப் பல

தகவல்கள் கிடைக்கின்றன. அவற்றைப் போற்றிப் பாது காத்து, அடுத்த தலைமுறையினருக்கும் கொண்டு செல்ல எண்ணியே, தற்போது அவர்களுடைய நூல்களை நாங்கள் தொடர்ந்து வெளியிட்டுக் கொண்டிருக்கிறோம்.

இந்த நூலில் கி.வா.ஜ. அவர்கள் 1996-இல் எழுதிய முன்னுரை இன்றைக்கும் எவ்வளவு பொருத்தமாக உள்ளது என்பதைக் காணலாம். மிகுந்த அக்கரையுடன் இந்த நூலை முதலில் வெளியிட்ட மணிவாசகர் நூலகத்தினரை தமிழ் மக்கள் பாராட்டியே தீரவேண்டும்.

தமிழ் மக்கள் தொடர்ந்து கொடுக்கும் ஆதரவுதான், இத்தகைய அரும்பெரும் பழஜம வாய்ந்த நூல்களை எங்களால் வெளியிட முடிகிறது.

-பதிப்பகத்தார்

முந்தைய பதிப்பின்

# பதிப்புரை

தெய்வத் தமிழ்மொழி தொன்று தொட்டு நல்ல கவிதை வளம் பெற்றுச் சிறந்துள்ளது. இடையறாத தொடர்ச்சியான வரலாற்றினை உடைய தமிழ் மொழியில் அவ்வக்கால இயல்புகள், தன்மைகள் படிந் துள்ளன. இக்காலத்தில் கவிதை நூல்கள் பல எழுகின்றன. புதியதாகச் செய்யும் பணிகள் தமிழுக்கு நல்ல அணிகளாகத் திகழ வேண்டும். கவிதைகள் எண்ணிக்கையால் அளவால் பெருகி யுள்ளனவே தவிர தரத்தில் சிறப்புடையனவாகக் கூற முடியாது.

சிறந்த முறையில் கவிபாட நற்றுணை யாக அமைவது இந்நூல். தமிழின் தலைமைத் தொண்டர் உ.வே.சாமிநாத ஐயரின் முதன்மை மாணவர் திரு.கி.வா.ஜகந்நாதன் அவர்கள் கவிபாடுவதற்குரிய வழிவகைகளை மிக விளக்கமாகக் கூறியுள்ளார்கள். வடிவங் களையும் அமைப்புக்களையும் உள்ளடக் கத்தையும் நல்ல கவிதையின் நலங்களையும் எடுத்துரைத்துள்ளார்.

சிறந்த கவிஞரான கி.வா.ஜ. கவிதையின் எல்லா அம்சங்களையும் திறமுடன் விளக்கி யுள்ளார்.

நிறைந்த அனுபவம் உடைய ஆசிரியர் சிறந்த சான்றுகள் மூலம் வாசகர் உள்ளம் கொள்ளுமாறு விஷயங்களை விளக்கியுள்ளார். பல்லாண்டுகளாகத் தமிழ் நலம் உணர்ந்து அனுபவிக்கும் ஆசிரியர் கவிதையின் இலக்கணங்களை உறுதியுடன் வரையறை செய்கிறார். தமிழ்க் கவிதையாப்பு வளர்ந்த முறை அழகாக விளக்கப்பட்டுள்ளது. நன்றாகக் கவிபாடவும் யாப்பின் இயல்பறிந்து தமிழ்ச் சுவை துய்க்கவும் இந்நூல் துணை செய்யும்.

ஆசிரியர் கி.வா.ஜ.வின் மணிவிழா நாளில் இந்நூல் வெளிவருவதில் கழிபே ருவகை கொள்கிறோம். இதனை வெளியிடு வதில் பெருமை கொள்கிறோம். இவ் அரிய நூலை வெளியிட இசைவு தந்த ஆசிரியர் அவர்கட்கு எம் உளங் கனிந்த நன்றி. நூல் அழகுற அமையத் துணை செய்த அண்ணா மலைப் பல்கலைக்கழக விரிவுரையாளர் ச.மெய்யப்பன் எம்.ஏ. அவர்கட்கும் என் நன்றி உரியது.

ச.முத்துப்பழநியப்பன்

# உள்ளுறை

முதல் பாகம்

| | | | |
|---|---|---|---|
| 1. | இந்தக் கட்டுரைகள் | ...... | 13 |
| 2. | எதுகை | ...... | 18 |
| 3. | மோனை | ...... | 21 |
| 4. | அடியும் ஓசையும் | ...... | 28 |
| 5. | அசையும் சீரும் | ...... | 37 |
| 6. | வாய்பாடுகள் | ...... | 42 |
| 7. | அறுசீர் விருத்தங்கள் | ...... | 48 |
| 8. | எழுசீர் விருத்தம் | ...... | 53 |
| 9. | எண்சீர் விருத்தம் | ...... | 56 |
| 10. | அகவல் | ...... | 60 |
| 11. | ஆசிரியப்பா | ...... | 64 |
| 12. | வெண்டளையும் வெண்பாவும் | ...... | 69 |
| 13. | வெண்பா இறுதிச் சீர் | ...... | 77 |
| 14. | வெண்பா வகை | ...... | 81 |
| 15. | இன்னிசை வெண்பாவும் சிந்தியல் வெண்பாவும் | ...... | 86 |
| 16. | பஃறொடை வெண்பாவும் கலி வெண்பாவும் | ...... | 91 |
| 17. | கலித்துறை வகை | ...... | 93 |
| 18. | விருத்த வகை | ...... | 98 |
| 19. | தரவு கொச்சகக் கலிப்பா | ...... | 103 |
| 20. | யாப்பிலக்கணம் | ...... | 105 |

## இரண்டாம் பாகம்


| | | | |
|---|---|---|---|
| 1. | எழுத்து, அசை, சீர் | ...... | 113 |
| 2. | தளை | ...... | 116 |
| 3. | அடிகள் | ...... | 120 |
| 4. | மோனை எதுகைகளின் வகை | ...... | 123 |
| 5. | சிறப்பில்லாத எதுகை | ...... | 129 |
| 6. | பிற தொடைகளும் வகையும் | ...... | 137 |
| 7. | ஓசைகளின் வகை | ...... | 145 |
| 8. | வெண்பா இனம் | ...... | 152 |
| 9. | ஆசிரியத் தாழிசையும் துறையும் | ...... | 158 |
| 10. | ஆசிரிய விருத்தம் | ...... | 162 |
| 11. | ஒத்தாழிசைக் கலிப்பாக்கள் | ...... | 167 |
| 12. | கொச்சகக் கலிப்பா வகை | ...... | 178 |
| 13. | மயங்கிசைக் கொச்சகக் கலிப்பா | ...... | 184 |
| 14. | கலிப்பாவின் இனம் | ...... | 192 |
| 15. | வஞ்சிப்பாவும் இனமும் | ...... | 200 |
| 16. | மருட்பா | ...... | 205 |
| 17. | தெரிந்து கொள்ள வேண்டியவை | ...... | 209 |
| 18. | நல்ல கவிகள் | ...... | 213 |
| 19. | செய்யுளும் இசைப் பாடலும் | ...... | 217 |
| 20. | வினா விடைகள் | ...... | 223 |

# 1. இந்தக் கட்டுரைகள்

"காரிகை கற்றுக் கவி பாடுவதிலும், பேரிகை கொட்டிப் பிழைப்பது நன்றே'' என்ற பழமொழியை நீங்கள் கேட்டிருக்கிறீர்களா? காரிகையென்பது கவியின் இலக்கணத்தைச் சொல்லும் நூல். அதன் முழுப் பெயர் **யாப்பருங்கலக் காரிகை.** யாப்பு என்பது கவியைக் குறிக்கும் சொல். யாப்பு என்னும் கடலைக் கடக்க அது ஒரு கலத்தைப் போல, கப்பலைப் போல உதவுமாம்.

மேலே சொன்ன பழமொழி ஏன் வந்தது என்று பார்க்கலாம். கவி பாடுவது என்பது கருவிலே வர வேண்டிய பாக்கியம். எல்லோருமே கவி பாட முடியாது. எதுகை, மோனை என்று இலக்கணங்களைக் கற்றுக் கொண்ட மாத்திரத்தில் கவி தாராளமாகப் பாட வந்துவிடாது. கீற்று முடைகிற மாதிரி கவியை முடைய முடியாது. இந்த உண்மையைத்தான் அந்தப் பழமொழி சொல்கிறது.

ஆனால், இன்னாருக்குத்தான் பிறப்பிலே கவி பாடும் திறமை அமைந்திருக்கிறது என்பது எப்படித் தெரியும்? ஏதோ ஆசையினால் நானும் பாடுகிறேன் என்று ஆரம்பித்து, வாய்ப்பாகக் கிடைத்தால் நல்ல கவியாகப் பாடுகிறார்கள்; இல்லையானால் இதற்கும் நமக்கும் வெகு தூரம் என்று விட்டுவிடுகிறார்கள். முயன்று பார்த்தால்தான் யாருக்குக் கவி வரும், யாருக்கு வராது என்று தெரிய வரும்.

ஆகவே, கவி பாடிப் பெயர் பெறுவது என்பது எல்லோருக்கும் நிறைவேறும் காரியம் அல்லவானாலும், கவி பாட முயற்சி பண்ணுவதற்கு யாவருக்குமே உரிமை உண்டு. வெற்றியோ, தோல்வியோ அவரவர்களின் திறமையைப் பொறுத்தது.

''எத்தனையோ ஊமைக் கவிகள் உலகில் பிறந்து மறைந்திருக்கிறார்கள்'' என்று மேல்நாட்டுக் கவிஞன் ஒருவன் பாடினான். அந்த ஊமைக் கவிகளைக் கண்டு பிடித்துப் பாடச் சொல்வதற்கு யாருக்குத் தெரிகிறது?

இந்தக் காலத்தில் கவிதை எழுதுவதற்கு எல்லோருக்கும் ஆசை இருக்கிறது. பள்ளிக்கூடப் பிள்ளைகள்கூடக் கவி எழுதிப் பெயர் வாங்க வேண்டும் என்ற ஆவலுடைய வர்களாக இருக்கிறார்கள். முயற்சியும் செய்கிறார்கள். இப்படிச் செய்கிறவர்களில் இரண்டு வகையினரைப் பார்க்கிறோம். ஒரு சாரார் ஏதோ பெரிய கருத்தை அற்புதமாகச் சொல்லிவிட்டதாக எண்ணி வசனமும் அல்லாமல் பாட்டும் அல்லாமல் சில 'கவிதை'களை எழுதுகிறார்கள். அவர்களே அதைப் படித்தால்தான் அது பாட்டென்று தோன்றும். வேறு ஒரு சாரார் கவிதையில் வரும் எதுகை, மோனை என்னும் இரண்டை மாத்திரம், தெரிந்து கொண்டிருப்பார்கள். அவற்றை அமைத்துப் பாடுவார்கள். ஆனால் அது கவிதையாக இராது.

கவிதை கவிதையாவது அதில் உள்ள பொருள் சிறப்பினாலேதான். பொருளின் சிறப்போடு அதைச் சொல்லியிருக்கும் பாணியிலும் அழகு இருக்க வேண்டும். உரைநடையிலும் அதே கருத்தை அதே அழகோடு சொல்லிவிடலாம். ஆனால் அது கவிதையாகாது; உரைச் செய்யுள் அல்லது வசன கவிதை என்று சொல்லிக் கொள்ளலாம். கவிதைக்குத் தனி உருவம் உண்டு. அந்த

உருவம் ஓசையினால் அமைவது. சாகித்தியத்தைப் பற்றிக் கவனிக்காமலே சங்கீதத்தை ஓரளவு அநுபவிக்க முடியும். ராக தாளங்களின் அழகை உணர்ந்து நுகரலாம். அது போலவே கவிதையின் பொருளைக் கவனிக்காமலே, அது கவிதைக்குரிய இன்னோசையை உடையது என்று சொல்லி விடலாம். இதையே ஆங்கிலத்தில் (*Rhythm*) 'ரிதம்' என்று சொல்வார்கள்.

தமிழ்க் கவிதை இசையோடு கலந்தது. பேசும் போது நாம் சொற்களை விட்டு விட்டுப் பேசுகிறோம். சொல்லுக்கும் சொல்லுக்கும் இடையிலே ஒலித் தொடர்பு இல்லாமல் அற்றுப் போகிறது. தவளை விட்டு விட்டுக் கத்துகிறதே, அதை அரிக் குரல் என்பார்கள். விடாமல் ஒலித் தொடர்போடு வரும் குரல் இழுமென்குரல். சங்கீதத்தில் இழுமென் ஒலி வேண்டும். இடையிலே விட்டாலும் அந்த இழுமென்னும் இயல்பு மாறாமல் இருப்பதற்குச் சுருதி வைத்துக் கொள்கிறார்கள்.

சுருதி இல்லாமல் பாடினாலும் அந்தக் குரலிலே ஒரு சுருதி இழையோடும்; அதுதான் இசையின் சிறப்பு. அது போன்ற இழுமென்ற ஓசை தமிழ்க் கவிதைக்கு உண்டு.

ஆகையால் தமிழ்க் கவிதையை வாய்விட்டுப் பாடி அதன் ஓசை நயத்தை உணர வேண்டும். தமிழ்க் கவியைப் படித்துப் பார்த்தால் அதன் பொருளையும், பிற அழகு களையும் உணரலாம்; ஆனால் ஓசையின்பத்தைத் தெளிவாக உணர முடியாது. தமிழில் கவி பாட வேண்டுமென்று முயல் கிறவர்கள் பாட்டைப் பாடிப் பழக வேண்டும் ஒவ்வொரு பாட்டுக்கும் தனியே ஓர் ஓசை அமைதி இருக்கிறது. அதைத் தெரிந்து கொள்ள வேண்டும். பல பாடல்களைப் படித்துப் படித்து வாய்விட்டுப் பாடி அந்தப் பழக்கம் மிகுதியானால்

தான் கவி எழுத முடியும். இலக்கணம் தெரிந்திருந்தால் போதாது; இலக்கியமாகிய பாட்டின் ஓசை காதில் விழுந்து பழகியிருக்க வேண்டும்.

சிலருக்குச் சங்கீதத்தை அநுபவிக்க நன்றாகத் தெரியும். இது இன்ன ராகம் என்பதும் தெரியும். ஆனால் அந்த ராகத்தின் ஆரோகண அவரோகண சுவரம் தெரியாது. அபசுவரம் வந்தால் கண்டுபிடித்துவிடுவார்கள். இது கேட்டுக் கேட்டு உண்டான பழக்கத்தால் வருவது. பெரும் பாலும் சங்கீதத்தில் ஆர்வமும், பின்பு பாடும் பழக்கமும் உண்டாவதே இப்படித்தான். பிறகே லட்சண வித்துவான் ஆகிறார்கள்.

கவியையும் கேட்டுக் கேட்டு, வாயாரப் பாடிப் பாடி ஓசையுணர வேண்டும். இப்படிக் கேட்ட பழக்கத்தால் சிலர் விருத்தம் முதலிய சில கவிதைகளைப் பாடுவார்கள். இலக்கணம் கேட்டால் தெரியாது. எதுகை, மோனை இரண்டையும் தெரிந்து கொண்டு பழக்கத்தினால் ஓசையையும் தெரிந்து கொண்டு பாடுவார்கள். பாட்டு, பிழை இல்லாமல் இருக்கும். ராகம் சட்டென்று நினைவுக்கு வர அந்த ராகத்தில் அமைந்த கீர்த்தனையை நினைத்துக் கொள்வது, முறைப்படி சங்கீத சிட்சை இல்லாதவர்களுக்கு வழக்கம். அது போல இலக்கணம் தெரியாவிட்டாலும், ஏதாவது ஒரு பழம் பாட்டை ஓசையோடு பாடத் தெரிந்து கொண்டு, அந்த மெட்டில் தாமே பாடுகிறவர்கள் சிலர்.

இவ்வளவும் எதற்காகச் சொன்னேன் என்றால், கவிதையின் உருவம் அதன் ஓசையில் இருக்கிறதென்றும், பழம் பாடல்களை வாயாரப் பாடிப் பாடி அந்த ஓசையை உணர்ந்து கொள்ள வேண்டும் என்றும் வற்புறுத்து வதற்காகத்தான்.

செய்யுள் பாடத் தெரிந்து கொள்வது ஒரு வகை; நல்ல கவிதை இயற்றுவது ஒரு வகை. செய்யுள் பாடத் தெரிந்தவர்கள் எல்லோரும் கவிஞர்கள் ஆகிவிட முடியாது. ஆனால் கவிஞர்கள் எல்லோரும் செய்யுள் பாடத் தெரிந்தவர்களே.

செய்யுள் பாடத் தெரிந்தவர்களுக்கு நல்ல பாட்டு இது, பிழையான பாட்டு இது என்று வேறு பிரித்து அறிய முடியும். அதோடு மற்றொரு முக்கியமான லாபம் உண்டு; நல்ல கவிதையை நன்றாக அநுபவிக்க முடியும்; ராக லட்சணம் தெரிந்தவன் சங்கீதத்தை மற்றவர்களைவிட நன்றாக அநுபவிப்பது போல அநுபவிக்கலாம்; எதுகை மோனை அழகையும், ஓசையினிமையையும், யாப்புக்குரிய இலக்கணங்கள் அமைந்திருக்கும் சிறப்பையும் உணர்ந்து இன்புறலாம்; சந்த இன்பம், ஓசையினிமை,தொடைநயம் என்று வேறு வேறு வகையாகச் சொல்லும் அழகுகள் இன்ன என்பதைத் தெளிவாகத் தெரிந்து கொண்டு மகிழ்ச்சி அடையலாம்.

யாப்பிலக்கணத்தை முறையாகக் கற்றுக் கொள்ள வேண்டுமானால் ஓர் ஆசிரியரிடம் நேரே இருந்து பாடம் கேட்க வேண்டும். ஆனால் எதற்கும் எளிதான முறை வந்து விட்ட காலம் இது. ஆகையால் சம்பிரதாய முறைப்படி கற்றுக் கொள்ள முடியாதவர்களுக்கு ஓர் அளவு கவி பாடுவது எப்படி என்பதைச் சில கட்டுரைகளால் சொல்லலாம் என்று எண்ணுகிறேன். என்னுடைய அநுபவத்தில், இப்படிச் சொன்னால் படிப்படியாக விளங்கும் என்று உணர்ந்த ஒரு புது வழியைப் பின்பற்றி, இந்தக் கட்டுரைகளை எழுதியிருக்கிறேன்.

# 2. எதுகை

தமிழ்ச் செய்யுளுக்கே உரிய அழகு எதுகை என்பது. அதை ரைம் (*Rhyme*) என்று ஆங்கிலத்தில் சொல்கிறார்கள். மற்றப் பாஷைகளிலும் எதுகை உண்டு. ஆனால் தமிழில் அடியின் ஆரம்பத்தில் எதுகை இருக்கும். இதுதான் தமிழுக்கே சிறப்பாக அமைந்தது. எதுகை, மோனை என்ற இரண்டும் பாட்டுக்கு அழகு தருபவை. அவை இரண்டும் ஓசை இனிமையை உண்டாக்குபவை. எகனை, மொகனை என்று நாடோடியாக இவற்றைச் சேர்த்துச் சொல்வார்கள். பேசுகிறபோதுகூட இப்போது எதுகையையும் மோனையையும் இணைக்கிறார்கள். அடுக்கு மொழிக்கு இப்போது மேடைப் பேச்சிலும் சினிமாப் பேச்சிலும் ஒரு மோகம் உண்டாகியிருக்கிறது. அடுக்கு என்பது மோனை.

ஒவ்வோர் அடியின் ஆரம்பத்திலும் எதுகை இருப்பது தமிழ்ச் செய்யுளின் இயல்பு. அடியை வேறு பிரித்து அறிவதற்கு இந்த எதுகை துணையாக இருக்கிறது. அகவல், கலிவெண்பா, பெரும்பாலான கலிப்பாக்கள், சில வகை வெண்பாக்கள் இவற்றையன்றி மற்றப் பாடல்களில் பெரும்பாலானவை நான்கு அடிகளால் ஆன பாடல்களே. மிகவும் பெரிய பாடல்களாகத் தோன்றும் திருப்புகழ்ப் பாடல்கூட நான்கே அடிகளால் ஆனவை. ஒரே அடி, மடக்கி மடக்கி நீளமாக வருவதால் பல வரிகளாக இருக்கிறது. வரி வேறு; அடி வேறு. அடிகளை எதுகையைக் கொண்டு அடையாளம் தெரிந்து கொள்ளலாம்.

இரண்டாவது எழுத்து ஒரே மாதிரி அமைவதை எதுகை என்று சொல்வார்கள். 'இரண்டாம் எழுத்து ஒன்றுவது எதுகை' என்று இலக்கண முறையில் சொல்வது

வழக்கம். இரண்டாம் எழுத்துக்குப் பின்னும் சில எழுத்துக்கள் ஒரே மாதிரி இருந்தால் ஓசை நயமாக இருக்கும். கடைசிப் பட்சமாக இரண்டாம் எழுத்தாவது ஒன்றாக இருக்க வேண்டும்.

கந்தன் திருவடி
நந்தந் தலைமிசை
வந்தன் புடனுறின்
பந்தங் கழியுமே.

இந்தப் பாட்டில் ஒவ்வோர் அடியின் ஆரம்பத்திலும் இரண்டு, மூன்றாவது எழுத்துக்களாக ந்த என்பவை உள்ளன. கண்ணன், வண்ணன், அண்ணன், திண்ணன் என்று நான்கு அடியிலும் முதலில் சொற்கள் வந்தனவென்று வைத்துக் கொள்ளுங்கள். அப்போது மூன்று எழுத்துக்கள் ஒரே மாதிரி வரும்.

''உலகம் யாவையும் தாமுள வாக்கலு
நிலைபெ றுத்தலும் நீக்கலும் நீங்கலா
அலகி லாவிளை யாட்டுடை யாரவர்
தலைவ ரன்னவர்க் கேசரண் நாங்களே.''

இந்தக் கம்பராமாயணப் பாட்டிலே ல, லை என்ற இரண்டும் எதுகையாக வந்திருக்கின்றன. இப்படியே ல,லி,லு, லெ,லொ ஆகிய எழுத்துக்களும் வரலாம். குறிலாக இருந்தால் சிறப்பு. லை என்பது நெடிலானாலும் லய் என்பது போல ஒலிப்பதால் அதுவும் குறிலைப் போலவே அமையும்.

இரண்டாவது எழுத்து ஒன்றாக இருப்பதோடு முதல் எழுத்துப் பற்றியும் ஒன்றை அவசியமாகக் கவனிக்க வேண்டும். பலர் இதனைக் கவனிக்காமல் பிழை செய்கிறார்கள்.

பட்டு என்பதற்குக் கட்டு, குட்டு, கிட்டு, பிட்டு என்பவை எதுகையாக வரும். ஆனால் பாட்டு என்பது எதுகை ஆகாது. பாட்டு என்பதற்குக் காட்டு, நீட்டு, ஊட்டு என்பவை எதுகையாக வருமேயன்றிக் கட்டு, தட்டு என்பவை வருவதில்லை. முதலெழுத்துக் குறிலாக இருந்தால் எதுகையாக வருவதிலும் முதலெழுத்துக் குறிலாக இருக்க வேண்டும். அப்படியே நெட்டெழுத்தை முதலாக உடைய சொல்லுக்கு நெட்டெழுத்தை முதலாக உடைய சொல்லே எதுகையாக வரும்.

> காட்டினிற் குமுறும் கூகை கவின்பெறக் கூட்டி லுய்த்து
> வீட்டினிற் பயிலும் கிள்ளை.

இந்த இரண்டடிகளிலும் காட்டினிற், வீட்டினிற் என்று எதுகையாக அமைந்த சொற்களில் முதல் எழுத்தாக உள்ளவை இரண்டும் நெட்டெழுத்தாக இருப்பதைக் காண்க.

> பாம்பினைக் கண்ட போது
> பயத்தினால் நடுங்கும் பேதை
> கம்பினை எடுப்பா னோசொல்
> கடுகியே ஓடு வானே.

என்று பாடி ம்பினை என்ற மூன்று எழுத்துக்களும் ஒன்றி இருப்பதனால் எதுகை அமைந்துவிட்டதாக எண்ணக் கூடாது. பா-என்ற நெட்டெழுத்தை முதலாக உடைய சொல்லுக்குக் க-என்ற குற்றெழுத்தை முதலாக உடைய சொல் எதுகையாக வராது. 'காம்பினை எடுப்பா னோசொல்' என்று திருத்தினால் எதுகை அமைந்து விடும். (காம்பு-மூங்கில்.)

# 3. மோனை

ஒரு குறிப்பிட்ட எழுத்து, ஒன்றுக்கு மேற்பட்ட இடத்தில் சீரின் முதலில் வந்தால் அதை மோனை என்று சொல்வார்கள். 'மோனை முத்தமிழ் மும்மத மும்பொழி, யானை' என்று ஒரு புலவர் தம்மைக் கூறிக் கொண்டாராம். அதிலிருந்து மோனைக்கும் தமிழுக்கும் எவ்வளவு தொடர்பு உண்டென்பதைத் தெரிந்து கொள்ளலாம்.

முதல் எழுத்து ஒன்றி வருவது மோனை என்று இலக்கண முறையில் சொல்வது வழக்கம். மோனையை 'அல்லிடரேஷன்' (*Alliteration*) என்று ஆங்கிலத்திலும், பிராசம் என்று வடமொழியிலும் சொல்வார்கள்.

தமிழ்ச் செய்யுளில் ஒவ்வோர் அடியினுள்ளும் மோனை வருவது அழகு தரும். பழம் பாடல்களில் மோனை இராமல் இருக்கலாம். அதைக் கொண்டு மோனையே இல்லாமல் பாடினால் என்ன என்று சிலர் கேட்பார்கள். அலங்காரம் இல்லாமல் அழகாகத் தோற்றம் அளிக்கலாம், சிறந்த அழகியாக இருந்தால். ஆனால் அவர்களும் அணி செய்து கொள்கிறார்கள். ஆகவே, மோனை இருக்கும்படி பாடுவது பாட்டின் அழகை மிகுதிப் படுத்தும். கம்பன் முதலிய பெருங் கவிஞர்களுடைய வாக்கில் மோனை மிக நன்றாக அமைந்திருப்பதைக் காணலாம்.

க- என்ற எழுத்து அடியின் முதலில் வந்தால், அந்த அடியில் பின்னும் ஓரிடத்தில் அவ்வெழுத்து மோனையாக வரும். ஆங்கிலத்தில் க-என்பதற்குக் ககரவர்க்கம் முழு வதுமே மோனையாக வரலாம். தமிழில் க-வுக்குக்

க-வருவதே சிறப்பு. க,கா,கை,கௌ என்ற நான்கும் ஒன்றுக்கு ஒன்று மோனையாக வரும்.

கண்ணனைத் தொழுது நிற்கும்
கருத்துடை அன்பர் இன்னோர்

என்பதில் க-வுக்குக் க-வே மோனையாக வந்தது.

கந்தனை முருக னைச் செங்
கால்பணிந் திடுவார் மேலோர்

என்பதில் க-வுக்குக் கா-மோனையாக வந்தது.

கருத்தினில் வஞ்சங் கொண்டு
கைதொழு வாரை நம்பேல்.

இதில் க-வுக்குக் கை-மோனையாக வந்தது.

கழுத்தினில் வாயை வைத்துக்
கௌவிய புலியைக் கண்டான்.

இதில் ககரத்துக்குக் கௌ-மோனையாக வந்தது. இவ்வாறன்றிக் க-வுக்குக் கி-யோ, மேலே சொன்ன எழுத்துக்கள் அல்லாத எழுத்துக்களோ மோனையாக வருவதில்லை.

க-என்பது உயிர்மெய் எழுத்து; க்-என்ற மெய்யோடு அ-என்ற உயிர் சேர்ந்து உண்டானது. தனி உயிராக அடிக்கு முதலில் வந்தால் தனி உயிரே மோனையாக வர வேண்டும். அந்த வகையில் அ-ஆ-ஐ-ஔ என்ற நான்கும் ஒன்றுக்கு ஒன்று மோனையாக வரும்.

உயிர் மெய்யெழுத்துக்களில் மெய்யெழுத்து ஒன்றாகவே இருக்க வேண்டும்; அதனோடு சேர்ந்த உயிரெழுத்து மேலே சொன்ன மோனைக்குரிய எழுத்துக்களில் ஒன்றாகவே இருக்க வேண்டும். க-என்ற

எழுத்துக்குக் க-என்பது தான் மோனையாக வருமே யன்றிச் ச-என்பது வராது. இப்படி வரும் மோனை எழுத்துக்களைத் தெரிந்து கொள்ள வேண்டும்.

அ - ஆ - ஐ - ஔ
க - கா - கை - கௌ
ச - சா - சை - சௌ
த - தா - தை - தௌ
ம - மா - மை - மௌ

இப்படியே மற்ற எழுத்துக்களுக்கும் ஏற்றபடி நான்கு நான்கு எழுத்துக்கள் மோனையாக வரும். இவை அகரத்தோடு சேர்ந்த மோனை எழுத்துக்கள். இப்படி மூன்று தொகுதிகள் உண்டு.

அ - ஆ - ஐ - ஔ
இ - ஈ - எ - ஏ
உ - ஊ - ஒ - ஓ

உயிர் எழுத்துக்கள் பன்னிரண்டு. அவை நாலு நாலாகப் பிரிந்து மோனையாகப் பொருந்தி வரும். தனி உயிருக்குத் தனி உயிரே மோனையாக வேண்டும் என்பதையும், ஒரு குறிப்பிட்ட மெய்மேல் ஏறிய உயிருக்கு அதே மெய்மேல் ஏறிய உயிரே மோனையாக வரும் என்பதையும் மறக்கக் கூடாது.

இந்தப் பொதுவான விதியோடு, மெய்யெழுத் துக்களில் சில எழுத்துக்கள் ஒன்றற்கு ஒன்று மோனையாக வரும் என்ற சிறப்பு விதி ஒன்று உண்டு. ச-வுக்குத் த-வும், ஞ-வுக்கு ந-வும், ம-வுக்கு வ-வும் மோனையாக வரும். அதாவது ச்-என்ற மெய்யின் மேல் ஏறிய உயிருக்கு த்-என்ற மெய்யின் மேல் ஏறிய அதே உயிரோ, மோனைப் பொருத்த முள்ள உயிரோ வந்தால் மோனையாகும். அப்படி

அமையும் போது நாலு நாலாக அமைந்த மோனைக் கூட்டம் எட்டு எட்டாகச் சில எழுத்துக்களுக்கு அமையும்.

ச-சா-சை-சௌ-த-தா-தை-தௌ என்னும் எட்டிலும் எந்த ஒன்றுக்கும் வேறு எந்த ஒன்றும் மோனையாக வரும். ச-வுக்கு, தௌ-வரலாம். சௌ-க்கு, த-வரலாம். சா-வுக்கு, தை-வரலாம். இப்படியே சி, சு என்ற இரண்டு எழுத்துக் களை முதலாக உடைய மோனைக் கூட்டத்தைத் தெரிந்து கொள்ளுங்கள்.

ம-மா-மை-மௌ-வ-வா-வை-வௌ என்பவை ஒரு மோனைக் கூட்டம்.

ஞ-ஞா-ஞை-ஞௌ-ந-நா-நை-நௌ என்பவை ஒரு கூட்டம்.

"நாடிய பொருள் கை கூடும்
ஞானமும் புகழும் உண்டாம்"

என்ற கம்பராமாயணப் பாட்டில் நா-ஞா என்ற இரண்டும் மோனையாக வந்தன.

"சுதந்தர தேவி நின்னைத்
தொழுதிடல் மறக்கி லேனே"

என்ற பாரதி பாட்டில் சு-என்ற எழுத்துக்குத் தொ-என்பது மோனையாக வந்திருப்பது காண்க. ச்-என்ற மெய்க்கு த்-என்ற மெய்யும், உ-என்ற உயிருக்கு ஒ-என்ற உயிரும் மோனையாக வந்தன.

"பச்சைமா மலைபோல் மேனிப்
பவளவாய் கமலச் செங்கண்
அச்சுதா அமரர் ஏறே
ஆயர்தம் கொழுந்தே என்னும்

இச்சுவை தவிர யான்போய்
இந்திர லோகம் ஆளும்
அச்சுவை பெறினும் வேண்டேன்
அரங்கமா நகரு ளானே"

என்ற திருமாலைப் பாட்டில் இரண்டாவது அடியில் மாத்திரம் அ-வுக்கு ஆ-மோனையாக வந்திருக்கிறது. மற்ற அடிகளில் அந்த அந்த எழுத்தே வந்துள்ளது. இப்படி உள்ள பாடல்களைக் கவனித்து மோனை அமைந்திருப்பதைத் தெரிந்து கொள்ளலாம்.

★

இன்ன இன்ன எழுத்துக்கள் மோனையாக வரும் என்று தெரிந்து கொண்டால் போதாது. பாட்டில் இன்ன இடத்தில் மோனை வர வேண்டும் என்பது மிகவும் முக்கியம். ஓரடியில் எந்த இடத்தில் மோனை வந்தாலும் வரலாம். இடத்துக்கு ஏற்றபடி அதற்கு ஒரு பேர் உண்டு. அதைப் பற்றி இப்போது கவலைப்பட வேண்டாம். ஆனாலும் இன்ன இடத்தில் வந்தால் சிறப்பாக இருக்கும் என்பது பழக்கத்தால் தெளிவாகும்.

அடியில் சரி பாதியில் மோனை விழுந்தால் அழகாக இருக்கும். ஒவ்வோர் அடியிலும் இத்தனை சீர் என்ற கணக்கு உண்டு. ஆறு சீர் உள்ள பாட்டுக்கு முதலிலும் நான்காவது சீரிலும் மோனை அமைவது அழகு.

"இதந்தரு மனையின் நீங்கி
இடர்மிகு சிறைப்பட் டாலும்
பதந்திரு இரண்டும் மாறிப்
பழிமிகுத் திழிவுற் றாலும்

விதந்தரு கோடி இன்னல்
விளைந்தெனை யழித்திட் டாலும்
சுதந்தர தேவி நின்னைத்
தொழுதிடல் மறக்கி லேனே"

என்ற பாட்டில் ஆறு சீர்கள் இருக்கின்றன.

புத்தகங்களில் கவிதையைப் பார்த்தால் அங்கங்கே இடம் விட்டு அச்சிட்டிருப்பார்கள். வசனத்தில் வார்த்தைக்கு வார்த்தை இடம் விட்டு அச்சிடுவார்கள். பாட்டில் அப்படி இராது. ஓசையைக் கவனித்து ஒவ்வொரு சீரையும் தனித்தனியே பிரித்து அமைத்திருப்பார்கள். அந்தச் சீர் முழு வார்த்தையாக இருக்கலாம்; இரண்டு சொற்களாகவும் இருக்கலாம்; அல்லது உடைந்த சொற்களாகவும் இருக்கலாம். சீர்களைப் பற்றி விரிவாகப் பின்னால் தெரிந்து கொள்ளலாம். இப்போதைக்கு அச்சுப் புத்தகங்களில் இடம் விட்டுச் சீரைப் பிரித்து அச்சிட்டிருக்கிறார்கள் என்பதை உணர்ந்து கொண்டால் போதும். அதைக் கவனித்தால் ஓரடியில் எத்தனை சீர்கள் இருக்கின்றன என்று தெரிந்து கொள்ளலாம்.

மேலே சொன்ன, "இதந்தரு மனையி னீங்கி" என்ற பாட்டு ஆறு சீர் உள்ள விருத்தம். அதை '**அறுசீர்க் கழி நெடிலடி ஆசிரிய விருத்தம்**' என்று சொல்வார்கள். அதில் அடிக்கு ஆறு சீர் உண்டு என்ற ஒன்றை மாத்திரம் இப்போது நினைவில் வைத்துக் கொண்டால் போதும்.

இந்தப் பாட்டில் ஒவ்வோர் அடியிலும், முதல் சீரிலும் நான்காம் சீரிலும் மோனை அமைந்திருப்பதைக் காணலாம்.

"அரியானை அந்தணர்தம் சிந்தை யானை
அருமறையி னகத்தானை அணுவை யார்க்கும்"

என்னும் தேவாரம் எண்சீர் விருத்தம். இங்கே முதல் சீரிலும் ஐந்தாம் சீரிலும் மோனை இருப்பதைக் கவனியுங்கள். இடையிலும் மோனைகள் வந்திருக்கின்றன. அவை வந்தாலும் வராவிட்டாலும், முதல் சீரிலும் ஐந்தாம் சீரிலும் வருவதுதான் முக்கியம்.

சில பாடல்களில் வெவ்வேறு ஓசையுடைய சீர்கள் வரும். அப்போது ஓசை மாறும் இடத்தில் மோனையை வைப்பார்கள்.

''எண்ணிலா அருந்தவத்தோன் இயம்பியசொல்
மருமத்தின் எறிவேல் பாய்ந்த
புண்ணிலாம் பெரும்புழையில் கனல்நுழைந்தால்
எனச்செவியில் புகுத லோடும்''

என்ற பாட்டும் ஆறுசீர் விருத்தந்தான். ஆனால் இதில் முதல் நாலும் நீண்ட சீர்கள்; பின் இரண்டும் குறுகிய சீர்கள். ஓசை ஐந்தாம் சீரில் மாறுகிறது. அங்கே மோனை அமைந் திருக்கிறது.

மோனையை இப்படி உரிய இடத்தில் அமைத்தால் அழகாக இருக்கும் என்பதைச் சொல்லும் போது, எனக்கு ஒரு வரலாறு நினைவுக்கு வருகிறது. அதை என் ஆசிரியப்பிரானாகிய **மகாமகோபாத்தியாய டாக்டர் ஐயரவர்கள்** சொன்னார்கள்.

ஐயரவர்களுக்கு முன் கும்பகோணம் அரசினர் கல்லூரியில் தமிழ்ப் பண்டிதராக இருந்தவர் சி.தியாகராச செட்டியார் என்னும் புலவர். அவர் திரிசிரபுரம் மகாவித்துவான் மீனாட்சிசுந்தரம் பிள்ளையவர்களின் மாணாக்கர்; இலக்கணப் பெரும் புலவர். வேறு ஒரு புலவர் சில பாடல்களைப் பாடிக் கொண்டு வந்து அவரிடம் காட்டினார். செட்டியார் பாடலைப் பார்த்து, எதுகை

மோனை சரியாக அமைந்திருக்கின்றனவா என்று கவனித்தார். சில அடிகளில் மோனை சிறப்பான இடங்களில் அமையாமல் இருப்பதைக் கண்டு, ''இங்கே மோனை இல்லையே?'' என்றார். பாட்டுப் பாடின புலவர், வேறிடத்தில் உள்ள மோனையைக் காட்டி, ''இதோ இருக்கிறதே!'' என்றாராம். அதைச் செட்டியார் கவனிக்காமலா இருப்பார்?

''நெற்றியில் பொட்டு இட்டுக் கொள்ள வேண்டும் என்றால், எங்கே இட்டால் அழகாக இருக்குமோ அங்கே இடாமல், புருவத்துக்கு மேலே ஓரமாக இட்டுக் கொண்டு, 'இதோ நெற்றியில்தானே பொட்டு வைத்துக் கொண்டிருக்கிறேன்?' என்று சொல்வது போல இருக்கிறது, நீர் சொல்வது. எங்கே வைத்தாலும் மோனைதான் என்று இலக்கணம் சொன்னாலும், இப்படி வைத்தால் அழகு என்று இலக்கியங்கள் காட்டுகின்றனவே! அதை நீர் கவனிக்கவில்லையோ?'' என்று தியாகராச செட்டியார் கூறிப் பாட்டைத் திருத்தச் சொன்னாராம்.

ஆகவே, மோனையை உரிய இடத்தில் வைப்பது மிகவும் முக்கியம் என்பதைக் கருத்தில் கொள்ள வேண்டும்.

## 4. அடியும் ஓசையும்

எதுகையும் மோனையும் பாட்டுக்கு அழகு தருபவை. ஆனால் செய்யுட்களுக்கு உயிராக இருப்பது ஓசை. ஓசை தவறினால் அது பாட்டே ஆகாது. ஆகையால் கவிதையின் ஓசையில் இருக்கும் ஒழுங்கைத் தெரிந்து கொள்வது மிகவும் இன்றியமையாதது. ஓசையைக்

காதினால் உணர்வதுதான் முறை. அதற்காகப் பல பழம் பாடல்களைப் பாடிப் பாடிப் பழக வேண்டும் என்பதை முன்பே தெரிவித்திருக்கிறேன்.

ஓசையின் பகுதிகளையும், ஒவ்வொரு வகைச் செய்யுளுக்கும் தனித் தனியே அமைந்துள்ள ஓசைகளையும் பற்றி அடியிலிருந்து ஆரம்பித்துச் சொல்லிவந்தால் அசை, சீர், தளை, தொடை, அடி என்பவற்றைப் பற்றிச் சொல்ல வேண்டியிருக்கும். அதற்கு அசல் இலக்கணத்தையே படித்து விடலாம். அது அவ்வளவு எளிதில் புரிகிறதில்லை என்று தானே, இந்தக் கட்டுரைகளை எழுதும் முயற்சி தொடங்கியது?

ஓசையைப் பற்றிப் பொது வகையில் சொல்லுவதை விட ஒரு பாட்டை எடுத்துக் கொண்டு அதில் ஓசை எப்படி அமைந்திருக்கிறது என்பதைத் தெளிய வைப்பது எளிது. முதல் முதலில் எல்லோருக்கும் பழக்கமான பாட்டை எடுத்துக் கொண்டு ஓசையைக் கவனிப்போம்:

"இதந்தரு மனையி னீங்கி
யிடர்மிகு சிறைப்பட் டாலும்
பதந்திரு விரண்டு மாறிப்
பழிமிகுத் திடருற் றாலும்
விதந்தரு கோடி யின்னல்
விளைந்தெனை யழித்திட் டாலுஞ்
சுதந்தர தேவி நின்னைத்
தொழுதிடன் மறக்கி லேனே."

இந்தப் பாட்டில் ஒவ்வோரடியிலும் ஆறு சீர்கள் இருக்கின்றன. இந்தப் பாட்டு ஆசிரிய விருத்தம் என்னும் வகையைச் சார்ந்தது. ஆறு சீரையுடைய ஆசிரிய விருத்தம் ஆதலின் அறு சீரடி ஆசிரிய விருத்தம் என்று பெயர்.

ஒவ்வோரடியிலும் நாலு சீர் வருவது இயல்பான அளவு. அதைச் சரியான அளவாகக் கொண்டால் அதற்குக் குறைந்த சீர்கள் உள்ள அடிகள், அதற்கு அதிகமாக சீர்கள் உள்ள அடிகள் என்று இரண்டு வேறு வகை அடிகளும் உண்டு என்பது தெரியும். அளவுக்கு மேல் வளர்ந்தவர்களை நெட்டை என்று நாம் சொல்கிறோம்; நெடில் என்றும் சொல்லலாம். நாலு சீரை உடைய அடி அளவடி; அதற்கு மேல் வருபவை நெடிலடிகள். அந்த நெடிலடிகளிலும் இரண்டு வகை உண்டு. நாலுக்குமேல் ஐந்தாக வருவது நெடிலடி. அதற்கு மேல் எத்தனை சீர் வந்தாலும் அவை யாவுமே **கழிநெடி லடிகள்**. கழி என்பது மிகுதியைக் குறிக்கும் சொல். நெடிலுக்கும் மிக்கது என்று பொருள். ஆறு சீர் அடி, கழிநெடிலடி வகையைச் சார்ந்தது. நாலு சீரடியை அளவடி என்று சொன்னால் போதும்; அளவடி என்றாலே நாலு சீரடி என்று தெரிந்து கொள்ளலாம். அப்படியே நெடிலடி என்றாலே ஐந்து சீர் என்று தெரிந்து கொள்ளலாம். நாற்சீர் அளவடி, ஐஞ்சீர் நெடிலடி என்று குறிக்க வேண்டாம். ஆனால் கழிநெடிலடிகளை அப்படியே சொன்னால் போதாது. ஆறு முதல் எத்தனை சீர் வந்தாலும் கழி நெடிலடி யாகையால், கழிநெடிலடி என்று சொன்ன அளவில் அஞ்சுக்கு மேற்பட்ட சீர் இருக்கும் என்று விளங்குமேயன்றி, இத்தனை சீர் என்று திட்டமாகத் தெரியாது. ஆகையால் கழிநெடிலடி என்று குறிக்கும் போது இத்தனை சீர் என்ற கணக்கையும் சொல்வது வழக்கம். ஆகவே ஆறு சீர் விருத்தத்தை **அறுசீர்க் கழிநெடிலடி ஆசிரிய விருத்தம்** என்ற நீண்ட பெயரால் குறிப்பார்கள்.

இந்தப் பாட்டு விருத்தம்; ஆசிரியப்பாவுக்கு இனமாதலால் ஆசிரிய விருத்தம்; சீர் அளவினால் கழிநெடிலடி விருத்தம்; கணக்காகப் பார்த்தால் ஆறு சீர்

விருத்தம்; இத்தனையையும் சேர்த்து அந்தப் பெயரை வைத்திருக்கிறார்கள். இப்படியே, 'எழுசீர்க் கழிநெடிலடி ஆசிரிய விருத்தம், எண்சீர்க் கழிநெடிலடி ஆசிரிய விருத்தம் என்று விருத்தங்களுக்குப் பெயர் வழங்குவதை அச்சுப் புத்தகங்களில் பார்த்துத் தெரிந்து கொள்ளலாம்.

நாலு சீருக்குக் குறைவான சீர்களைக் கொண்ட இரண்டு சீரடி, மூன்று சீரடி என்று இரண்டு அடி வகை உண்டு. இரண்டு சீரடி குட்டையானது; மூன்று சீரடி அதை விடச் சிறிது நீண்டது. நாற்சீரடியை நோக்க அதுவும் சிறிய அடிதான். மிகவும் குட்டையான உருவத்தைக் **குறள்** என்றும், சற்றே உயர்ந்து, ஆனால் சராசரி அளவுக்குக் கீழே இருந்தால் **சிந்து** என்றும் சொல்வது வழக்கம். குறள், சிந்து, அளவு, நெடில், கழிநெடில் என்ற ஐந்தும் உயரத்தின் கூடுதல் குறைவினால் வந்த பெயர்கள். அந்தப் பெயர் களையே அடிகளுக்கும் வைத்திருக்கிறார்கள். இரண்டு சீரடிக்குக் குறளடி என்று பெயர்; மூன்று சீரடிக்குச் சிந்தடி என்று பெயர்.

ஆகவே, ஐந்து வகையான அடிகளைச் சீரின் கணக்கினால் வரையறை செய்திருக்கிறார்கள்.

2 சீர் அடி - குறள் அடி
3 சீர் அடி - சிந்தடி
4 சீர் அடி - அளவடி
5 சீர் அடி - நெடிலடி
6 சீர் அடி முதலான அடிகள் - கழிநெடிலடிகள்

ஆசிரிய விருத்தங்களில் ஆறு சீர் அடி முதலியவை களே வரும்; அதாவது, **கழிநெடிலடியே** வரும்.

முன்னாலே காட்டிய பாட்டில் உள்ள நான்கு அடிகளும் ஆறு சீர் அடிகளாகவே இருக்கும்.

"இதந்தரு மனையி னீங்கி
இடர்மிகு சிறைப்பட் டாலும்"

என்பது முதல் அடி. இதில் ஆறு சீர்கள் இருப்பதை இடம் விட்டிருப்பதைக் கொண்டு தெரிந்து கொள்ளலாம். இதற்கு நாமாக ஒரு மெட்டைப் போட்டுக் கொள்ளலாம்.

தனதன தனன தான
தனதன தனன தான

என்பது இதற்கு ஓசை வாய்ப்பாடு என்று வைத்துக் கொள்ளலாம். இது யாப்பிலக்கணத்தில் இராது. எளிதிலே விளங்குவதற்காக இப்படி வைத்துக் கொள்வதால் தவறு இல்லை.

பாட்டின் அடியையும் இந்த வாய்பாட்டையும் அடுத்தடுத்துச் சொல்லிப் பாருங்கள். இந்த அடியில் முதல் மூன்று சீர்களும், பின் மூன்று சீர்களும் ஓசையில் ஒரே மாதிரி இருக்கும். தயை செய்து இங்கே பொருளைப் பற்றிச் சிறிதும் கவலை கொள்ளாதீர்கள்.

இப்போது முதல் மூன்று சீர்களை மட்டும் சிறிது மாற்றிப் பாருங்கள். காதுக்கு ஓசை சரியாக வருகிறதா என்று கவனியுங்கள்.

தனன தனதன தான

என்பதற்கும்,

தனதன தனன தான

என்பதற்கும் ஓசை வேறுபாடு தெளிவாக இருக்கிறது. இந்த வாய்பாட்டை மறந்துவிட்டு வார்த்தைகளின் பொருளையும் மறந்துவிட்டுப் பாட்டில் உள்ள சீர்களை மாற்றினாலும் ஓசை வேறாகவே தோன்றும்.

"மனையி னிதந்தரு நீங்கிச்
சிறைப்பட் டிடர்தரு டாலும்."

ஓசை எவ்வளவு வேறுபடுகிறது பாருங்கள். ஆனால் இந்த அடியின் முன்பகுதியைப் பின்னாகவும் பின் பகுதியை முன்னாகவும் வைத்துப் பாருங்கள்.

"இடர்மிகு சிறைப்பட் டாலும்
இதந்தரு மனையி னீங்கி."

இப்போது ஓசை மாறுவதாகத் தெரியவில்லை. ஆகவே முன் உள்ள பாதி அடியும், பின்னுள்ள பாதி அடியும் ஒரே மாதிரி ஓசை உள்ளவை என்றும் இந்த அரையடியில் உள்ள மூன்று சீர்களும் வெவ்வேறு ஓசை உடையவை என்றும் அறிந்து கொள்ளலாம். சீர்களின் இடம் மாறினால் அடியின் ஓசையே மாறி விடுகிறது.

இனி இரண்டாவது அடியைப் பார்க்கலாம்.

"பதந்திரு விரண்டு மாறிப்
பழிமிகுத் திடருற் றாலும்."

இதற்கும் முன்பு போல ஓசைக்கு ஒரு வாய்பாட்டைச் சொல்லிப் பார்த்தால் முதலடியின் வாய்பாடாகவே இருப்பதைக் காணலாம்.

தனதன தனன தான
தனதன தனன தான

திருப்புகழ்ப் பாட்டுக்களில் வரும் சந்தக்குழிப்பிலும் தனதன, தான என்றெல்லாம் இருக்கும்; அங்கே ஓசையை அளக்கும் முறை வேறு; இங்கே நாம் சொல்வது வேறு. அதையும் இதையும் குழப்பிக் கொள்ள வேண்டாம்.

தனதன தனன தான

என்ற அரையடியில் சிறிது மாற்றம் உண்டு பண்ணிப் பார்க்கலாம்.

தனதன தான தான

இதில் இரண்டாவது சீரில் கொஞ்சம் மாற்றம் இருக்கிறது. அதனால் ஓசை மாறுகிறதா என்று திருப்பித் திருப்பிச் சொல்லிப் பாருங்கள்.

தந்தர தேவி நின்னைத்
தொழுதிடல் மறக்கிலேனே

என்ற நாலாவது அடியைப் பாருங்கள். அதற்கு ஓசை வாய்பாட்டை ஊட்டினால்,

தனதன தான தான
தனதன தனன தான

என்று வரும்.

முதல் பகுதியில் இரண்டாவது சீராகிய தேவி என்பதற்குத் தான என்று வாய்ப்பாடு அமைக்க வேண்டும். தனன வேறு, தான வேறு; ஆனாலும் இந்த இரண்டாவது சீரில் ஏற்பட்ட இந்த மாற்றத்தால் ஓசை மாறவில்லை.

திருப்பித் திருப்பி இந்தப் பாட்டைப் படியுங்கள். பிறகு பாட்டையே மறந்து விடுங்கள்.

அடியில் முன் கண்ட வாய்பாட்டோடு சில சீர்களில் மாறுபட்ட ஓசைகளைக் கொண்ட ஓர் அமைப்பைக் காணலாம்.

தனதன தான தான
தனதன தனன தான
தனதன தனன தான
தனதன தான தான

தனதன தனன தான
தானன தான தான
தனதன தான தான
தானன தான தான.

இதைச் சொல்லிச் சொல்லி ஓசையைக் கவனியுங்கள்.

தொண்டரடிப் பொடியாழ்வார் திருமாலை, கம்பன் பாட்டில் உள்ள அறுசீர் விருத்தப் பகுதிகள் முதலியவற்றை அடுத்தடுத்துப் படியுங்கள். ஓசை ஒரு விதமாகக் காதுக்குப் பழக்கமான பிறகு பின்னே வரும் பயிற்சியைச் செய்து பாருங்கள்.

செய்யுளை எழுத வேண்டி
— முயற்சி செய்தால்
பையவே ஓசை —
பாங்கினைப் பார்த்தல் வேண்டும்
செய்வது திருந்தச் செய்தால்
— வெற்றி எய்தும்;
மையறு கவிதை பாடும்
— — சேரும்.

இந்தப் பாட்டு ஆறு சீர் விருத்தம். 'இதந்தரு' என்று ஆரம்பித்த பாட்டில் முதலில் தனதன என்று வாய்பாடு போட்டோம். இது 'செய்யுளை' என்று தொடங்குவதனால் 'தானன' என்று போட்டுக் கொள்ள வேண்டும்.

இந்தப் பாட்டில் சில சீர்களை விட்டு வைத்திருக்கிறேன். அவற்றை நிரப்ப முயன்று பாருங்கள். முதலில் வார்த்தைகளைப் போடுவதற்குப் பதிலாகத் தக்கையைப் போல வாய்பாட்டைப் போட்டுப் பாடுங்கள். அர்த்தத்தைப் பற்றிச் சிறிதும் இப்போது கவலைப்பட வேண்டாம். விடப்பட்ட சீர்களை வாய்பாட்டால் நிரப்பிச்

சொல்லிப் பார்த்துக் கொண்டு, பிறகு அந்த ஓசைக்கு ஏற்ற வார்த்தைகளை ஒவ்வொன்றாக அமைத்துப் பாருங்கள். அப்படி அமைக்கும் போது மோனை வர வேண்டிய சீராக இருந்தால் மோனை வைக்க மறந்து விடக் கூடாது.

முதலடிக்கு மாத்திரம் சில விடைகளைக் குறிக்கிறேன். நான்காவது சீரில் **தானன** என்ற ஓசையாவது **தனதன** என்ற ஓசையாவது அமையலாம்; ஆனால் சி, சீ, செ, சே, தி, தீ, தெ, தே என்ற எட்டு எழுத்துக்களில் ஏதாவது ஒன்றை முதலாக உடைய சொல்லே வர வேண்டும்; அப்போதுதான் மோனை அமையும்.

அந்தச் சீரில் பின்வரும் வார்த்தைகள் வந்தால் பொருளும் ஒட்டும்; மோனையும் அமையும்.

*(1) சிறப்பினின், (2) சிறப்புற, (3) திருந்த, (4) திருத்தமாய், (5) சீரிய, (6) செம்மையாய், (7) சீர்பெற, (8) திருவுற, (9) திகழ, (10) திகழ்தர.*

இன்னும் பலவற்றை இணைக்கலாம். இவை போதும். இவற்றில் திருந்த, திகழ என்னும் இரண்டையும் இணைத்துப் பார்த்தால் ஓசை சரியாக வராது. மற்றவை சரியாக வரும். மற்ற அடிகளையும் நிறைவுறுத்திப் பாருங்கள்.

# 5. அசையும் சீரும்

'இதந்தரு மனையி னீங்கி' என்று வரும் பாடல் அறுசீர்க் கழிநெடிலடி ஆசிரிய விருத்தம் என்று தெரிந்து கொண்டோம். புத்தகங்களில் அறு சீர்க் கழி நெடிலடி ஆசிரிய விருத்தம் என்று பெயர் போட்டிருக்கும் எல்லாமே இந்தப் பாடலைப் போல இருக்கும் என்று எண்ணக்கூடாது. ஒரே ராகத்தில் ஒரே தாளத்தில் பல மெட்டுக்கள் அமைந்திருப்பது போல, ஆறு சீர்கள் கொண்ட விருத்தங்களிலும் பல வகை உண்டு. போன முறை பார்த்த விருத்தத்தைப் போல இன்றி வேறு ஓசையுடன் வரும் அறு சீர்க் கழி நெடிலடி ஆசிரிய விருத்தம் ஒன்றைக் கீழே பார்க்கலாம்.

தண்ணந் தமிழின் பெருமையெலாம்
　　சாற்ற நம்மால் முடிவதுவோ?
எண்ணம் உணர்ச்சி இயற்கைஎழில்
　　எல்லாம் சொல்லில் வடித்தெழிலார்
வண்ண ஓசை கூட்டிநலம்
　　வாய்த்த கவிகள் புலவர்பலர்
திண்ணென் றமைத்தார் அவர்கவிதை
　　தெரிந்தே இன்பம் அடைவோமே.

இந்தப் பாட்டில் ஒவ்வோர் அடியிலும் ஆறு சீர்களே இருக்கின்றன. ஆனால் பாட்டைப் படித்துப் பார்த்தால், ''இதந்தரு மனையி னீங்கி'' என்ற பாட்டைப் போல இல்லாமல் வேறு விதமான ஓசை உடையதாகத் தெரிகிறது.

தண்ணந் தமிழின் பெருமையெலாம்
　　சாற்ற நம்மால் முடிவதுவோ

என்ற முதலடிக்கு முன்பு சொன்ன மாதிரி வாய்பாடு அமைத்துப் பார்த்தால்,

தான தனன தனதனனா
தான தான தனதனனா

என்று வரும். முதல் பாதியும் பின் பாதியும் ஒத்து இணைந்து ஒலிக்கின்றன. பாதி அடியில் முதல் இரண்டு சீர்களையும் விட மூன்றாவது சீர் சற்றே பெரியதாக இருக்கிறது. 'தனதன தான தான' என்ற அரை யடியின் ஓசை வேறு; இந்த ஓசை வேறு. இந்த ஓசை வேறுபாடு எதனால் உண்டாகிறது?

சீர் என்பது இன்னதென்று இன்னும் நாம் தெரிந்து கொள்ளவில்லை. புத்தகத்தில் பிரிந்திருக்கிறதைக் கொண்டு தெரிந்து கொள்ளலாம் என்று சௌகரியத்தை உத்தேசித்து முன்பு சொன்னேன். இப்போது, நாமே சீரைப் பற்றித் தெரிந்து கொண்டு அதைப் பிரிக்கவும் தெரிந்து கொண்டால் நல்லது என்று தோன்றுகிறது.

சொல் என்பதற்கு உறுப்புக்கள் உண்டு. பல அங்கங்கள் சேர்ந்து உடம்பு அமைகிறது. அது போலவே பல எழுத்துக்கள் சேர்ந்து சொல் அமைகிறது. செய்யுளில் ஓர் அடியில் பல சீர்கள் இருக்கின்றன. சீர் என்பது அங்கம். பல சீர்களை உடைய அடி அங்கி; உடம்பு போன்றது. அப்படியே செய்யுள் என்னும் உடம்பில் அடி என்பது அங்கம். செய்யுளை நோக்க அடி என்பது அங்க மாகவும், சீரை நோக்க அது அங்கியாகவும் இருக்கிறது. பிள்ளையை நோக்க ஒருவன் தந்தையாக இருக்கிறான்; ஆனால் அவன் தந்தையை நோக்க அவன் மகனாக இருக்கிறான். அவ்வாறே அடி ஒரு முறையில் உடம்புபோல அங்கியாகவும், வேறு ஒரு முறையில் அங்கமாகவும் இருக்கிறது. அது போலவே சீருக்கும் அங்கம் உண்டு. அதை

அசை என்று சொல்வார்கள். அசைகளின் வேறுபாட்டால் சீரும் வேறுபடும். அந்த அசைக்கு அங்கம் எழுத்து. எழுத்தால் ஆனது அசை; அசையால் ஆனது சீர்; சீர்களால் ஆனது அடி. எழுத்து என்பது எல்லா இலக்கணத் துக்கும் அடிப்படை. யாப்பிலக்கணத்தின் சிறப்பான அடிப்படை அசை.

''இதந்தரு மனையி னீங்கி''

என்பது அரையடி; அதில் மூன்று சீர்கள் இருக்கின்றன. இதந்தரு என்பது ஒரு சீர். அதில் இரண்டு அசைகள் இருக்கின்றன. 'இதந்' என்பது ஓர் அசை; 'தரு' என்பது ஓர் அசை. 'மனையி' என்பது ஒரு சீர். அதில் 'மனை' என்ற அசையும் 'யி' என்ற அசையும் இருக்கின்றன. 'னீங்கி' என்பதிலும், 'னீங்' என்ற அசையும் 'கி' என்ற அசையும் இருக்கின்றன. இந்த அசைகளுக்குப் பேர் உண்டு. இதந்-தரு-மனை என்னும் மூன்றும் ஒரு வகை அசைகள்; யி-னீங்-கி என்பன ஒரு வகை. முன்னாலே உள்ள மூன்றும் நிரை அசைகள்; பின்னாலே உள்ளவை நேர் அசைகள். 'இதந்' என்பதும் 'நிரை' என்பதும் ஒன்று போலவே ஒலிக்கின்றன. 'யி' என்பதும், 'னீங்' என்பதும் 'நேர்' என்பது போல ஒலிக்கின்றன. நேரசை, நிரையசை என்ற இரண்டு அசைகளே உண்டு. யாப்பிலக்கணத்தின் அடிப்படை உறுப்பாகிய அசைகள் இரண்டே; மனிதன் இரண்டு காலால் நடப்பது போல, செய்யுட்கள் யாவுமே இந்த இரண்டு அசைகளாகிய அடிப்படை உறுப்புக்களைக் கொண்டு நடக்கின்றன.

க என்ற எழுத்தைத் தனியே பிரித்து உச்சரித்தால் அது நேர் அசையாகும்; அது தனிக் குற்றெழுத்து.

கா என்ற எழுத்தைச் சொன்னால் அதுவும் நேரசையாகும்; அது தனி நெட்டெழுத்து.

கல் என்பதும் நேர் அசையே; ஒரு குறிலும் அதனோடு ஒரு மெய்யெழுத்தும் சேர்ந்து வந்தாலும் அது நேர் அசை தான்.

கால் என்பது போல ஒரு நெடிலும் ஒரு மெய் யெழுத்தும் சேர்ந்து வந்தாலும் அதுவும் நேரசையே.

**இவ்வாறு நேரசை நான்கு விதமாக வரும். நிரையசையும் நான்கு விதமாக வரும்.**

**கல:** இது இரண்டு குறில்கள் சேர்ந்து வந்த நிரையசை.

**கலா:** இது ஒரு குறிலும் அதற்குப் பின் ஒரு நெடிலும் இணைந்து வந்த நிரையசை.

**கலம்:** இது இரண்டு குறிலும் ஒரு மெய்யும் இணைந்து வந்த நிரையசை.

**கலாம்:** இது ஒரு குறிலும் ஒரு நெடிலும் ஒரு மெய்யும் சேர்ந்து வந்த நிரையசை.

கல என்பதையே க என்றும் ல என்றும் பிரித்துத் தனித்தனியே நேர் அசையாகக் கொண்டால் என்ன என்ற கேள்வி பிறக்கலாம். பாட்டில் சீர் பிரிக்கும் போது க என்பது முன் சீரிலும் ல என்பது பின் சீரிலும் பிரிந்து வந்தால் தனித்தனியே நேரசைகளாகும். ஒரு சீரினிடையே சேர்ந்து வந்தால் நிரையசையே யாகும்.

"இதந்தரு மனையி னீங்கி"

என்ற அரை அடியில் 'இதந்தரு' என்ற சீரில் இரண்டு அசைகள் இருக்கின்றன. இதந்-நிரை; தரு-நிரை. எனவே, இந்தச் சீரை நிரைநிரை என்று சொல்லலாம். 'மனையி' என்பது நிரை நேர் ஆகும்; மனை-நிரை;யி-நேர். னீங்கி-நேர்நேர். **யினீ** என்பதைச் சேர்த்துப் பார்த்தால்

நிரையாகக் கொள்ளலாம், கலா என்பது போல. ஆனால் இந்தப் பாட்டில் **மனையி** என்று **யி** தனியே முதற் சீரில் சேர்ந்து பிரிந்து ஒலிக்கிறது. **னீங்** அடுத்த சீரில் சேர்ந்து பிரிந்து ஒலிக்கிறது.

இப்போது 'இதந்தரு' என்ற பாட்டை அசைகளாகப் பிரித்துப் பார்க்கலாம்:

இதந்தரு மனையி னீங்கி
நிரைநிரை நிரைநேர் நேர்நேர்

இடர்மிகு சிறைப்பட் டாலும்
நிரைநிரை நிரைநேர் நேர்நேர்

பதந்திரு விரண்டு மாறிப்
நிரைநிரை நிரைநேர் நேர்நேர்

பழிமிகுத் திழிவுற் றாலும்
நிரைநிரை நிரைநேர் நேர்நேர்

விதந்தரு கோடி யின்னல்
நிரைநிரை நேர்நேர் நேர்நேர்

சுதந்தர தேவி நின்னைத்
நிரைநிரை நேர்நேர் நேர்நேர்

தொழுதிடன் மறக்கி லேனே.
நிரைநிரை நிரைநேர் நேர்நேர்.

இந்தப் பாட்டில் உள்ள சீர்கள் யாவுமே இரண்டு அசைகளால் ஆனவை; அவற்றைச் ஈரசைச் சீர் என்று சொல்வார்கள்.

# 6. வாய்பாடுகள்

**யா**ப்பிலக்கணத்தில் ஒரு பாட்டின் உறுப்பாகிய அசைகள் இரண்டு என்பதையும், அவை நேரசை, நிரையசை என்று பெயர் பெறும் என்பதையும் பார்த்தோம். எழுத்துக்கள் சேர்ந்து சொல் ஆவது போல, அசைகள் சேர்ந்து சீர்கள் ஆகும். இது இன்ன பாடல் என்று தீர்மானம் செய்வதற்குச் சீர்களே துணையாக நிற்கின்றன. அசைகள் இரண்டானாலும் அவற்றின் பலவகைச் சேர்க்கையினால் சீர்கள் நான்கு வகைகளாக அமையும். அவற்றை இனிப் பார்ப்போம்.

ஓர் எழுத்துத் தனியே நின்று பொருளைத் தெரிவித்தால் அதுவே சொல் ஆகும். அதை ஓரெழுத்தொரு மொழி என்று சொல்வார்கள். அது போல ஓர் அசையே சீராக வருவதுண்டு. அதை **ஓரசைச் சீர்** என்று சொல்வார்கள். நேர் அசை தனியே நின்று சீராவதும், நிரை அசை தனியே நின்று சீராவதும் உண்டு. அப்படி வருபவை இரண்டு சீர்கள்.

இந்த ஓரசைச் சீர்கள் மிகுதியாக வருவதில்லை. வெண்பாக்களில் ஈற்றடியின் ஈற்றில் வரும். வேறு சில இடங்களிலும் வருவதுண்டு. வெண்பாக்களில் வரும் என்பதை மட்டும் இப்போது நினைவில் வைத்துக் கொண்டால் போதும்.

இரண்டு அசைகள் சேர்ந்து வரும் சீர்கள் நான்கு; நேர்நேர், நிரைநேர், நேர்நிரை, நிரைநிரை என்பவை அவை. ''இதந்தரு மனையி னீங்கி'' என்ற பாடலில் **ஈரசைச் சீர்கள்** வந்திருக்கின்றன.

*மூன்று அசைகள் சேர்ந்த மூவகைச் சீர்கள் எட்டு.*

| | |
|---|---|
| நேர்நேர்நேர் | நேர்நேர்நிரை |
| நிரைநேர்நேர் | நிரைநேர்நிரை |
| நேர்நிரைநேர் | நேர்நிரைநிரை |
| நிரைநிரைநேர் | நிரைநிரைநிரை |

*இப்படியே நான்கு அசைகள் சேர்ந்த நாலசைச் சீர்கள் பதினாறு உண்டு. மேலே சொன்ன எட்டு மூவசைச் சீர்களோடு நேர் அசையையும் நிரை அசையையும் சேர்த்தால் பதினாறு சீர்கள் வருவதைக் காணலாம்.*

நேர் நேர் நேர் நேர்
நிரை நேர் நேர் நேர்
நேர் நிரை நேர் நேர்
நிரை நிரை நேர் நேர்
நேர் நேர் நிரை நேர்
நிரை நேர் நிரை நேர்
நேர் நேர் நிரை நேர்
நிரை நிரை நிரை நேர்
நேர் நேர் நேர் நிரை
நிரை நேர் நேர் நிரை
நேர் நிரை நேர் நிரை
நிரை நிரை நேர் நிரை
நேர் நேர் நிரை நிரை
நிரை நேர் நிரை நிரை
நேர் நிரை நிரை நிரை
நிரை நிரை நிரை நிரை

*இந்த நாலு வகையான சீர்களிலும் ஈரசைச் சீர்களும், மூவசைச் சீர்களுமே மிகுதியாகச் செய்யுட்களில் வரும். இந்தச் சீர்கள் நேரை இறுதியாக உடைய சீர்கள், நிரையை*

இறுதியாக உடைய சீர்கள் என்று வேறாகப் பிரிக்க வேண்டிய அவசியம் யாப்பிலக்கணத்தில் வருகிறது. பின்னாலே அது புலனாகும். அப்படிச் சீரை அடையாளம் காட்டும் போது நிரையை ஈற்றிலே உடைய ஈரசைச் சீர், நேரை ஈற்றிலே உடைய மூவசைச் சீர் என்று சொன்னால் அவை நீளமாக இருக்கும். அவற்றை எளிதிலே அடை யாளம் காட்டச் சீர்களுக்கு வாய்பாடுகள் வைத்திருக் கிறார்கள்.

ஓரசைச் சீருக்கு **நாள், மலர்** என்பவை வாய்பாடுகள்; நேர்-நாள், நிரை-மலர். ஈரசைச் சீர்களுக்கு உரிய வாய்பாடுகள் வருமாறு:

நேர்நேர் - தேமா
நிரைநேர் - புளிமா
நேர்நிரை - கூவிளம்
நிரைநிரை - கருவிளம்.

எல்லோருக்கும் தெரிந்த மரங்களின் பெயர்களையும் அவற்றில் உள்ள பூ காய் கனிகள் ஆகிய பெயர்களையும் சீர்களுக்கு வாய்பாடு வகுக்கும் போது பயன்படுத்திக் கொண்டிருக்கிறார்கள். மாங்காயில் பழ மாங்காய், ஊறுகாய் மாங்காய் என்று இரண்டு வகை உண்டு. அவற்றையே தேமா, புளிமா என்று சொல்வார்கள். அப்படியே விளம் என்ற பெயருடைய மரங்கள் இரண்டு உண்டு. ஒன்று கூவிளம்; அதுதான் வில்வ மரம். மற்றொன்று கருவிளம்; அது விளாமரம்.

ஈரசைச் சீர்களில் நேராக முடியும் சீர்கள் இரண்டையும் **மாச்சீர்** என்று குறிப்பார்கள். நேர் ஈற்று ஈரசைச் சீர் என்று நீளமாகச் சொல்வதற்குப் பதிலாக மாச்சீர் என்று சொன்னால் போதும். அப்படியே நிரை ஈற்று ஈரசைச் சீர் என்று சொல்வதையே **விளச்சீர்** என்று சொன்னால் போதும்.

*மூவசைச் சீர்களுக்குரிய வாய்பாடுகள் வருமாறு:*

நேர் நேர் நேர் - தேமாங்காய்
நிரை நேர் நேர் - புளிமாங்காய்
நேர் நிரை நேர் - கூவிளங்காய்
நிரை நிரை நேர் - கருவிளங்காய்
நேர் நேர் நிரை - தேமாங்கனி
நிரை நேர் நிரை - புளிமாங்கனி
நேர் நிரை நிரை - கூவிளங்கனி
நிரை நிரை நிரை - கருவிளங்கனி.

*இந்தச் சீர்களில் நேர் ஈற்றுச் சீர்களைக் **காய்ச்சீர்** என்று சொல்வார்கள். காய்ச்சீர் என்று சொன்னாலே அது மூவசைச் சீர் என்பதும், நேரை ஈற்றிலே உடையது என்பதும் புலனாகும். நிரை ஈற்றுச் சீர்களைக் **கனிச்சீர்** என்று சொல்வார்கள்.*

*நாலசைச் சீர்களின் வாய்பாடு வருமாறு:*

நேர் நேர் நேர் நேர் - தேமாந்தண்பூ
நிரை நேர் நேர் நேர் - புளிமாந்தண்பூ
நேர் நிரை நேர் நேர் - கூவிளந்தண்பூ
நிரை நிரை நேர் நேர் - கருவிளந்தண்பூ
நேர் நேர் நிரை நேர் - தேமாநறும்பூ
நிரை நேர் நிரை நேர் - புளிமாநறும்பூ
நேர் நிரை நிரை நேர் - கூவிளநறும்பூ
நிரை நிரை நிரை நேர் - கருவிள நறும்பூ

*இவை எட்டும் **பூச்சீர்கள்.***

நேர் நேர் நேர் நிரை - தேமாந்தண்ணிழல்
நிரை நேர் நேர் நிரை - புளிமாந்தண்ணிழல்
நேர் நிரை நேர் நிரை - கூவிளந்தண்ணிழல்

நிரை நிரை நேர் நிரை - கருவிளந்தண்ணிழல்
நேர் நேர் நிரை நிரை - தேமாநறுநிழல்
நிரை நேர் நிரை நிரை - புளிமாநறுநிழல்
நேர் நிரை நிரை நிரை - கூவிளநறுநிழல்
நிரை நிரை நிரை நிரை - கருவிளநறுநிழல்.

இவை எட்டும் நிழற்சீர்கள். பூச்சீர் என்றால் அது நாலசைச்சீர் என்றும், நேர் என்ற இறுதியை உடையது என்றும் தெளி வாகும். நிழற்சீர் என்றால் நாலசைச் சீர் என்றும், நிரை என்ற உறுதியை உடையது என்றும் புலனாகும். நாலசைச் சீருக்குமேல் சீர்கள் இல்லை. அதாவது எந்தப் பாட்டா னாலும் ஒரு சீரில் நான்கு அசைகளுக்கு மேல் வருவதில்லை.

''இதந்தரு மனையி னீங்கி'' என்ற பாட்டுக்கு இப்போது சொன்ன வாய்பாடுகளை அமைத்துப் பார்க்கலாம்.

இதந்தரு மனையி னீங்கி
கருவிளம் புளிமா தேமா
இடர்மிகு சிறைப்பட் டாலும்
கருவிளம் புளிமா தேமா
பதந்திரு இரண்டு மாறிப்
கருவிளம் புளிமா தேமா
பழிமிகுத் திடருற் றாலும்
கருவிளம் புளிமா தேமா
விதந்தரு கோடி யின்னல்
கருவிளம் தேமா தேமா
சுதந்தர தேவி நின்னைத்
கருவிளம் தேமா தேமா

விளைந்தெனை அழித்திட டாலும்
கருவிளம் புளிமா தேமா
தொழுதிடல் மறக்கி லேனே.
கருவிளம் புளிமா தேமா.

*இந்த வாய்பாடுகளைக் கூர்ந்து பாருங்கள். ஒவ்வோர் அரை அடியிலும் உள்ள முதல் சீர், அதாவது அடியின் முதல் சீரும் நான்காம் சீரும் விளச்சீராகவே இருத்தலைக் காணலாம். விளச்சீர் என்பது நிரை அசையை இறுதியில் உடைய ஈரசைச்சீர். அரை அடியில் இரண்டாம் சீரும் மூன்றாம் சீரும் மாச்சீர்களாகவே இருக்கின்றன. ஆனால் இரண்டாம் சீரில் தேமாவும் புளிமாவும் வருகின்றன. மூன்றாம் சீரோ தேமாச் சீராகவே வருகிறது. இதை நன்றாகக் கவனிக்க வேண்டும். பாட்டின் ஓசையைக் கவனித்துக் கவி எழுதுங்கள். பிறகு வாய்பாட்டைப் புகுத்திப் பார்த்தால் இந்த முறையில் இருப்பதை அறியலாம்.*

*ஆகவே, இந்த அறுசீர்க் கழிநெடிலடி ஆசிரிய விருத்தத்தில் அரையடியில் முதல் சீர் விளச்சீராகவும், இரண்டாம் சீர் மாச்சீராகவும், மூன்றாம் சீர் தேமாச் சீராகவும் இருக்கின்றன என்று முடிவு கட்டிவிடலாம். இந்தப் பாட்டில் முதல் சீரும் நான்காம் சீரும் கருவிளமாகவே இருக்கின்றன. எதுகை வர வேண்டும் என்பதால் முதல் சீர் நான்கு அடியிலும் ஒத்தே வர வேண்டும். அங்கே யாவும் கருவிளமாக வந்தன. ஆனால் நான்காம் சீரில் அந்த நிர்பந்தம் இல்லை. கருவிளம், கூவிளம் என்ற இரண்டில் எது வேண்டுமானாலும் வரலாம்.*

# 7. அறுசீர் விருத்தங்கள்

சீர்கள் நான்கு வகை என்பதையும் அவற்றிற்குரிய வாய்பாடுகள் இன்னவை என்பதையும் தெரிந்து கொண்டோம். வாய்பாட்டைச் சொன்ன மாத்திரத்தில் இன்ன சீர் என்று தெரியும்படி பழகிக் கொள்ள வேண்டும். கீர்த்தனங் களுக்குச் சுவரம் வகுத்தால் அந்தச் சுவரங்களைக் கொண்டே இராக பாவம் அமைந்து விடுவதுபோல, இந்தச் சீர் அமைப் புக்களால் பாட்டின் அடிகளுக்கு உருவம் அமையும். ஆதலின் சங்கீத வித்துவான்கள் இராகத்தையும் கீர்த்தனங் களையும் சுவரம் அமைத்துக் காட்டுவது போல அடிகளை யும் வாய்பாட்டினால் காட்டலாம். இது பழக்கத்தால் வர வேண்டும். மாச்சீர் என்று சொன்னால், முதலில் அது ஈரசைச்சீர் என்று நினைவுக்கு வரவேண்டும். பிறகு நேரை ஈற்றிலே உடைய ஈரசைச்சீர் என்றும் நினைவுக்கு வர வேண்டும். பூச்சீர் என்றவுடன் நாலசைச் சீர்களில் நேராக முடியும் சீர் என்று தெரிந்து கொள்ளும்படி பழக்கம் செய்து கொள்ள வேண்டும்.

யாப்பருங்கலக் காரிகையில், ''மாஞ்சீர் கலியுட்புகா'' என்று வருகிறது. சீரின் வாய்பாடுகளைத் தெரிந்து கொண்டவர்கள் மாஞ்சீர் என்பது நேர் ஈற்று ஈரசைச்சீர் என்று தெரிந்து கொள்வார்கள். வாய்பாடு இல்லாவிட்டால் இவ்வளவு எளிதிலே சொல்ல இயலாது. நேர் ஈற்று ஈரசைச்சீர் என்று நீளமாகச் சொல்ல வேண்டும்.

அறுசீர் விருத்தமாகிய, ''இதந்தரு மனையி னீங்கி'' என்று தொடங்கும் பாரதியார் பாடலையே பலவற்றிற்கும் உதாரணமாகக் காட்டி இலக்கணத்தை விளக்கி வந்தேன். அந்தப் பாட்டுக்கு வாய்பாடு இன்னது என்று தெரிந்து

கொண்டோம். அறுசீரடி விருத்தங்களில் வேறு வகையும் உண்டு. இந்த விருத்தத்தின் முழுப் பெயர் அறுசீர்க் கழி நெடிலடி ஆசிரிய விருத்தம் என்பதை முன்பு தெரிவித்திருக்கிறேன். இது ஆசிரியப்பாவுக்கு இனமாகிய ஆசிரிய விருத்தம். இதில் உள்ள ஒவ்வோர் அடியிலும் ஆறு சீர்கள் உள்ளன. அதனால் அறுசீர் ஆசிரிய விருத்தம். ஐந்து சீருக்கு மேற்பட்டு எத்தனை சீர்கள் வந்தாலும் அந்த அடிக்குக் கழிநெடிலடி என்று பெயர். அதனால் இது அறுசீர்க் கழிநெடிலடி ஆசிரிய விருத்தம் என்று பெயர் பெற்றது.

அறுசீர்க் கழிநெடிலடி ஆசிரிய விருத்தங்களில் பல வகை உண்டு.

"சுருதி யோசை முழவோசை
சுகங்கள் பூவைக் கரும்பொருள்கள்
உரைசெ யோசை இயலிசைநீ
டோசை யுழவ ருழவோசை
பொருவி லாலை பாயோசை
பொழில்வா யலர்பாய் ஞிமிறோசை
வரிசை மாதர் சிலம்போசை
வளைநீ ரோசை தனின்மிகுமால்."

இதுவும் அறுசீர்க் கழிநெடிலடி யாசிரிய விருத்தந் தான். ஆனாலும் இதன் ஓசையும், 'இதந்தரு மனையி னீங்கி' என்று வரும் பாடலின் ஓசையும் வெவ்வேறு. இரண்டுக்கும் வேறுபாடு சீர் அமைப்பினால் அமைந்தது. "இதந்தரு மனையி னீங்கி" என்பதைப் போல வரும் விருத்தங்கள், அரையடிக்கு ஒரு விளச்சீரும் (அல்லது காய்ச் சீரும்) இரண்டு மாச்சீர்களும் அமைந்தவை. இந்தப் பாட்டைக் கவனித்துப் பாருங்கள். இதில் அரை அடிக்கு இரண்டு மாச்சீர்களும், ஒரு காய்ச் சீரும் வந்துள்ளன.

சுருதி யோசை முழவோசை
புளிமா தேமா புளிமாங்காய்
சுகங்கள் பூவைக் கரும்பொருள்கள்
புளிமா தேமா கருவிளங்காய்
உரைசெ யோசை யியலிசைநீ
புளிமா தேமா கருவிளங்காய்
டோசை யுழவ ருழவோசை
தேமா புளிமா புளிமாங்காய்
பொருவி லாலை பாயோசை
புளிமா தேமா தேமாங்காய்
பொழில்வா யலர்பாய் ஞிமிறோசை
புளிமா புளிமா புளிமாங்காய்
வரிசை மாதர் சிலம்போசை
புளிமா தேமா புளிமாங்காய்
வளைநீ ரோசை தனின்மிகுமால்
புளிமா தேமா கருவிளங்காய்.

*இதில் 1,2,4,5 ஆகிய நான்கு சீர்களும் மாச்சீர்களாகிய நேரீற்று ஈரசைச்சீர்கள். 3,6 ஆகிய இரண்டும் காய்ச் சீர்களாகிய நேரீற்று மூவசைச் சீர்கள். மாச்சீர் வரும் இடங்களில் தேமா, புளிமா என்னும் இரண்டும் வந்துள்ளன. காய்ச் சீர் வரும் இடங்களில் தேமாங்காய், புளி மாங்காய், கருவிளங்காய் என்னும் மூன்றும் வந்துள்ளன; கூவிளங்காயும் வரலாம். முன்னே சொன்ன அறுசீர் விருத்தத்தில் யாவும் ஈரசைச்சீர்கள். சிறுபான்மை முதற் சீரும், நான்காஞ் சீரும் மூவசைச் சீராக வரும். இந்தப் பாட்டிலோ ஈரசைச் சீர்களும், மூவசைச் சீர்களும் வருகின்றன. கண்டபடி வராமல் இன்ன இடத்தில் இன்ன சீர் வரும் என்ற வரையறை இருக்கிறது.*

எந்நாட்டும் பெறற்கரிய பெருஞான பீடமென
இருக்கும் நாடு
முன்னாட்டும் நான்மறையும் உபநிடதப் பெருநூலும்
முயன்று கற்றுப்
பின்னாட்டும் நூல்களெலாம் பயின்றறிவு பெற்றுணர்ந்து
பீடு சான்ற
நன்னாட்ட முடையவனு பவிகளுள நாடிதுபோல்
நவில வுண்டோ?

*இதுவும் ஒரு வகை அறுசீர்க் கழிநெடிலடி யாசிரிய விருத்தம். இதில் உள்ள அடியைப் பாதியிலே வெட்டி மடிக்க முடியாது; அதாவது முதல் மூன்று சீரைப் போலவே பின் மூன்று சீரும் இருக்கும் வகையைச் சார்ந்தது அன்று. இதில் முதன் நான்கு சீர்களும் காய்ச்சீர்கள்; பின் இரண்டும் மாச்சீர்கள்.*

எந்நாட்டும் பெறற்கரிய பெருஞான பீடமென
இருக்கும் நாடு
தேமாங்காய் கருவிளங்காய் புளிமாங்காய் கூவிளங்காய்
புளிமா தேமா.

*இவ்வாறே மற்ற அடிகளுக்கும் வாய்பாடு ஊட்டிக் காண்க. முதல் நான்கு சீர்களும் நேரீற்று மூவசைச் சீர்கள். அவை ஒரோசையாக உள்ளன. பின் இரண்டும் நேரீற்று ஈரசைச்சீர்கள். அவை வேறு ஓசை. நான்காவது சீரில் ஓசை மாறும் இடத்தில் மோனை அமைந்ததைக் கவனிக்க வேண்டும்.*

*இதில் முதல் நான்கு சீர்களிலும் காய்சீர்களில் எதுவும் வரலாம். அவை நான்கு என்பது உங்களுக்குத் தெரிந்தது தானே? பின் இரண்டு சீர்களில் ஐந்தாம் சீரில் புளிமா, தேமா என்னும் இரண்டு வரலாம். ஆறாம் சீர் தேமா, நேர்நேர் ஆக*

வரும். ''இதந்தரு மனையி னீங்கி'' என்ற பாட்டில் 3,6 ஆகிய இரண்டும் தேமாச் சீராகவே வரும் என்பதை முன்பு பார்த்தோம்.

இந்த விருத்தத்தை ஓரடிக்கு நான்கு காயும், இரண்டு மாவும் வரும் அறுசீர்க் கழிநெடிலடி ஆசிரிய விருத்தம் என்று அடையாளம் கூறித் தெரிந்து கொள்ளலாம்.

இது வரையில் நாம் தெரிந்து கொண்ட மூன்று வகை அறுசீர்க் கழிநெடிலடி ஆசிரிய விருத்தங்களாவன: 1. அரையடிக்கு ஒரு விளமும், இரு மாவும் வருவன. 2. அரையடிக்கு இரு மாவும், ஒரு காயும் வருவன. 3. ஓரடிக்கு நாலு காயும், இரு மாவும் வருவன. ஆறு சீர்களும் மாச்சீராகவே வரும் பாடல்களும் உண்டு.

ஆறு சீரு மாவாய்
அமையும் அடிகள் கொண்ட
வேறு பாட்டு முண்டு
விளம்பின் நான்காஞ் சீரில்
கூறு மோனை வந்தால்
குலவும் அழகு சாரும்
தேறும் விளம்வா ராமல்
சிந்தை கொள்ள வேண்டும்.

இது அத்தகையது.

இன்னும் பல வகையில் ஆறு சீர்களை அமைத்து விருத்தங்களைப் பாடியிருக்கிறார்கள் புலவர்கள். எல்லா வற்றிலும் ஓரடி எப்படி வருகிறதோ அவ்வண்ணமே மற்ற அடிகளும் அளவொத்து வரும்.

''உருகாத நீச ராயினும்
உணராத மூட ராயினும்

கருதாத சீல ராயினும்
      கசியாத நேச ராயினும்
வரையாத யாவ ராயினும்
      வலமாக நாக ராயர்சூழ்
திருவால வாயுள் மேவுவார்
      சிவமாவ ராணை யாணையால்.''

*இதுவும் அறுசீர் விருத்தம்; சந்தம் அமைந்தது. இதில் அரையடிக்கு ஒரு காயும் ஒரு மாவும் ஒரு விளமும் வந்தன. மூன்றாமடி ஆறாவது சீர் ராயர்சூழ் என்பதில் ர் என்பது ஒலி சிறக்காததனால் அதுவும் கூவிளம்போல் நின்றது. புலவர்களின் ஆற்றலுக்கு ஏற்றபடி அறுசீர் விருத்தங்கள் வெவ்வேறாக அமையும். ஆயினும் முதலிலே காட்டிய மூன்று வகைகளே பெரும்பான்மையாக நூல்களில் வருபவை.*

# 8. எழுசீர் விருத்தம்

*ஆசிரிய விருத்தங்களின் பொது இலக்கணம் எல்லா அடிகளும் அளவொத்து வருவது. அளவு என்பது சீர்களின் எண்ணிக்கை மாத்திரம் அன்று. இன்ன இன்ன சீர் இந்த இடங்களில் வர வேண்டும் என்ற வரையறை உண்டு. காய்ச்சீர், மாச்சீர், விளச்சீர் என்ற மூன்று சீர்களே பெரும் பாலும் ஆசிரிய விருத்தங்களில் வருகின்றன. இவை ஓரடியில் வந்தது போலவே நான்கு அடிகளிலும் வர வேண்டும். சில இடங்களில் மா, விளம், காய் என்பன போல ஈற்றசை ஒன்றியிருப்பதன்றிச் சீர் முழுவதுமே ஒரே மாதிரி வரும். தேமாச்சீர்தான் வர வேண்டும் என்பது*

போன்ற வரையறை இது. ''இதந்தரு மனையி னீங்கி'' என்ற அறு சீர் விருத்தத்தில் ஒவ்வோர் அடியிலும் மூன்று, ஆறாம் சீர்கள் தேமாவாகவே இருப்பதைக் காணலாம். அதை மாற்றினால் ஓசை வேறுபடுவதைப் பாட்டைச் சொல்லிப் பார்த்துத் தெரிந்து கொள்ளலாம்.

இதுவரையில் அறுசீர்க் கழிநெடிலடி ஆசிரிய விருத்தங்களின் இலக்கணத்தைப் பார்த்தோம். அதற்கு மேல் எழுசீர் முதலியன உண்டு.

ஆறுசீர் விருத்தம் அறிந்தவர் பின்னர்
அழகிய எழுசீர் விருத்தம்
கூறுமெம் முறையில் வருமென அறிந்து
குலவுறு மமைதியின் படியே
வீறுறப் பாடி இன்புறல் கூடும்
விளம்பிய செய்யுளிங் கிதன்பால்
வேறிலா திரண்டே அசையுறு சீர்கள்
மேவுதல் கண்டுணர்ந் திடுக.

இது எழுசீர் ஆசிரிய விருத்தம். ஐந்து சீர்களுக்கு மேல் எத்தனை சீர்கள் வந்தாலும் அந்த அடிக்குக் கழி நெடிலடி என்பது பெயர் என்று முன்பே தெரிந்து கொண் டிருக்கிறோம். ஆதலால் இது எழுசீர்க் கழி நெடிலடி ஆசிரிய விருத்தம்.

இந்த விருத்தத்தில் எல்லாச் சீர்களும் ஈரசைச் சீர்களாகவே வந்திருப்பதைக் காணலாம். ஓரடியைப் பன்முறை ஓதி ஓதி ஓசையை உணர்ந்து கவி எழுத வேண்டும். பிறகு சீர் பிரித்து வாய்பாடு அமைத்துப் பார்த்தால், என்ன என்ன சீர் எந்த எந்த இடத்தில் அமைந் திருக்கிறது என்பதை உணரலாம். இந்தப் பாட்டில் மோனை ஐந்தாவது சீரில் அமைவது அழகு. முதல் நாலு சீர் ஒரு

பகுதி, பின் மூன்று சீர் ஒரு பகுதியாகப் பிரித்து அந்த மோனை காட்டுகிறது.

கூவிளம் புளிமா கருவிளம் தேமா
கருவிளம் கூவிளம் புளிமா
கூவிளம் புளிமா கருவிளம் புளிமா
கருவிளம் கருவிளம் புளிமா
கூவிளம் தேமா கூவிளம் தேமா
கருவிளம் கூவிளம் புளிமா
கூவிளம் புளிமா கருவிளம் தேமா
கூவிளம் கூவிளம் புளிமா.

இப்படி வாய்பாடு ஊட்டிப் பார்த்தால் ஒவ்வோர் அடியிலும் நான்கு விளமும், மூன்று மாவும் வந்திருப்பது தெரிகிறது. முதன் நான்கு சீர்களில் விளச்சீரும் மாச்சீரும் மாறி மாறி வர, பின் மூன்று சீர்களில் இரண்டு விளமும் ஒரு மாவுமாக வந்திருக்கின்றன. இவற்றில் பொதுவாக விளச்சீர்களும் மாச்சீர்களும் வந்தன. குறிப்பிட்டுத் தேமாத் தான் வர வேண்டும் என்பது போன்ற வரையறை யில்லை. அதாவது, கூவிளம் வந்த இடத்தில் கருவிளம் வரலாம்; தேமா வந்த இடத்தில் புளிமா வரலாம்.

பின்வரும் பாடல்களில் நிரப்ப வேண்டியவற்றை நிரப்பிப் பயிலுக.

வேதமும் வேத அங்கமும் உணர்ந்த
வித்தக — அடைந்து
போதமுற் றொளிரும் — —
புகழுறப் — பெரியர்
ஆதரத் தோடு — —
அறிந்தவர் — —
— தெளிவார் அவர்நனி முயல்வார்
திகழுறு நூல்பல கற்பார்.

# 9. எண்சீர் விருத்தம்

*தமிழில் சித்தர் பாடல்கள் என்று ஒரு வகையான நூல் உண்டு. போகர், அகத்தியர், ரோமரிஷி, புலிப்பாணி என்பன போன்ற பெயர்களையுடைய சித்தர்கள் உண்டு. பதினெண் சித்தர் ஞானக்கோவை என்ற நூலில் சித்தர் பாடல்கள் எனப் பல வகைப் பாடல்களைக் காணலாம். வைத்திய நூல்களில் பல, சித்தர் பாடியவை.*

*சித்தர் பாடல்களில் பெரும்பாலானவை எண்சீர்க் கழிநெடிலடி ஆசிரிய விருத்தமாகவே இருக்கின்றன. பாடுவதற்கு எளியது இந்த விருத்தம். ''கேளப்பா, ஆளப்பா'' என்று எதுகையில் தொடர்கள் வரும் பாடலைப் பார்த்தால், சித்தர் பாட்டென்று கண்ணை மூடிக் கொண்டு சொல்லிவிடலாம். **'பாரதி அறுபத்தாறு'** என்பதில் உள்ள கவிகள் எல்லாம் இவ்வகையைச் சார்ந்தனவே.*

*இந்த வகை விருத்தத்தில் ஓரடியில் முதல் பாதியும் மறு பாதியும் ஒத்து நிற்கும்; ஆதலால், ஐந்தாவது சீரில்-அதாவது இரண்டாவது பாதி தொடங்கும் இடத்தில் மோனை அமையும்.*

காப்பியமும் தோத்திரமும் புலவர் பாடிக்
கவின்செய்யப் பேரழகு பூண்ட அன்னை,
யாப்பியலும் அணிஇயலும் பொருளின் பாங்கும்
இனிமையுற அமைந்தசெல்வி, மன்னர் பல்லோர்
பாப்பயிலத் தொண்டுகொண்ட தெய்வப் பாவை,
பழம்புலவோர் குழுவருளைப் பெறவைத் தாண்டு
பூப்பயிலும் பெரும்புகழ்சேர் தமிழாம் தேவி
புதுமலர்த்தாள் சிரம்வைத்துப் போற்றி வாழ்வாம்.

இந்தப் பாட்டில் ஒவ்வோரடியிலும் எட்டுச் சீர்கள் இருக்கின்றன. அரையடியில் முன் இரண்டு சீரும் காய்ச்சீர்கள்; நேரை இறுதியில் உடைய மூவசைச் சீர்கள். பின் இரண்டு சீரும் மாச்சீர்கள்; நேரை இறுதியிலே உடைய ஈரசைச்சீர்கள். ஆனால் ஒவ்வோர் அரையடியிலும் உள்ள நான்காவது சீர் தேமாவாகவே-நேர் நேராகவே இருப்பதைக் கவனிக்க வேண்டும்; அங்கே நிரை நேர் அல்லது புளிமாச்சீர் வந்தால் ஓசை கெட்டு விடும். பாட்டைப் படிக்கும் போது அங்கே புளிமா இருந்தால் வேறுபாடான ஓசை உண்டாதலைக் கவனிக்கலாம்.

தேவாரத்தில் அப்பர் சுவாமிகள் பாடிய திருத் தாண்டகப் பாக்களில் பெரும்பாலன எண் சீரடி விருத் தங்களாகவே இருக்கும்; சில இடங்களில் ஓசை கூடியும் இருக்கும்; குறைந்தும் இருக்கும். தாண்டகம் என்ற பெயரோடு வரும் பாடல் அது. அதற்குரிய இலக்கணம் இப்போது வழக்கில் இல்லை.

"சங்கநிதி பதுமநிதி யிரண்டுந் தந்து
தரணியொடு வானாளத் தருவ ரேனும்
மங்குவா ரவர்செல்வம் மதிப்போ மல்லோம்
மாதேவர்க் கேகாந்த ரல்ல ராகின்;
அங்கமெலாம் குறைந்தழுகு தொழுநோ யராய்
ஆவுரித்துத் தின்றுழலும் புலைய ரேனும்
கங்கைவார் சடைக்கரந் தார்க்கன்ப ராகில்
அவர்கண்டீர் யாம்வணங்கும் கடவு ளாரே."

இந்தப் பாடலில் மூன்றாம் அடியில் முதல் பாதியில் நான்காம் சீர் 'யராய்' என்று இருக்கிறது. எழுத்துக் கணக்கைக் கொண்ட தாண்டகப் பாட்டின் இலக்கணப்படி இந்த அடி சரி. ஆனால் இப்போதெல்லாம் இந்த முறைப்

படி பாடுவதில்லை. ஆகவே, எண் சீர் விருத்தப்படி அதை அமைத்தால் ஒட்டி வராது. மற்ற அடிகளெல்லாம் ஒத்து வந்திருப்பதைக் காண்க.

எண்சீர் விருத்தத்தில் காய்சீர் வரும் சில இடங்களில் விளச்சீர் வரலாம். மேலே உள்ள தாண்டகத்தில் இரண்டாவது அடி ஆரம்பத்தில் மங்குவார் என்று விளச்சீர் வந்திருப்பதைக் காண்க.

இனி வேறு வகை எண்சீர் விருத்தமும் தமிழ் இலக்கியத்தில் மிகுதியாகப் பயின்று வருகிறது. இராமலிங்க சுவாமிகள் பாடல்களில் இந்த வகை விருத்தம் அதிகம்.

'வாழையடி வாழையென வந்ததிருக் கூட்ட
மரபினில்யா னொருவனன்றோ வகையறியே னிந்த
ஏழைபடும் பாடுனக்குத் திருவுளச்சம் மதமோ
இதுதகுமோ இதுமுறையோ இதுதருமந் தானோ
மாழைமணிப் பொதுநடஞ்செய் வள்ளால்யான் உனக்கு
மகனலவோ நீயெனக்கு வாய்த்ததந்தை யலவோ
கோழையுல குயிர்த்துயர மினிப்பொறுக்க மாட்டேன்
கொடுத்தருணின் னருளொளியைக் கொடுத்தருளிப்
பொழுதே.''

இது இராமலிங்க சுவாமிகள் பாடல். அரையடியில் முதல் மூன்றும் காய்ச்சீராகவும் நான்காவது மாச்சீராகவும் வந்துள்ளன. மாச்சீரில் தேமா, புளிமா என்னும் இரண்டும் வந்திருப்பதைக் கவனிக்க வேண்டும். கூட்ட, னிந்த, தானோ, மாட்டேன் என்பவை தேமாச் சீர்கள்; மதமோ, உனக்கு, யலவோ, பொழுதே என்பவை புளிமாச்சீர்கள். திருவருட்பாவில் உள்ள இத்தகைய பாடல்களைப் படித்துப் படித்துப் பழகினால் எளிதில் பாட வரும்.

இந்த எண்சீர் விருத்தத்திலும் ஐந்தாவது சீரில் மோனை அமையும்.

வேறு வகையான எண்சீர் விருத்தங்களும் உண்டு. அவை அருமையாகவே நூல்களில் வந்துள்ளன.

அலையோ டியநெஞ் சினிலே துயரால்
அயர்வே னையரு ளருளிப் புவியில்
மலைவோ டொருசஞ் சலமும் பிறவா
வகையில் குலவும் படிவைத் தருள்வாய்
இலையோ டியசெவ் வயில்வே லவனே
இமையோர் நலவாழ் வடையச் சமரில்
குலையோ டசுரர் ஒழியப் பொருதாய்
குமரா அமரா பதிகா வலனே.

இது ஒருவகை எண்சீர் விருத்தம். இதில் எல்லாச் சீர்களும் புளிமாச்சீராகவே அமைந்திருக்கின்றன. பொதுவாகவே, ஆசிரிய விருத்தங்களில் புலவர்கள் தம்முடைய கற்பனைத் திறத்தால் பல வகையான உருவங்களைப் படைத்திருக்கிறார்கள்; இனியும் படைப்பார்கள். ஆசிரிய விருத்தங்களைப் பாடிப் பழக வேண்டுமானால் கம்பராமாயணத்தையும் வில்லிபாரதத்தையும் அடிக்கடி படித்து வாயாரப் பாடிப் பழக வேண்டும்.

# 10. அகவல்

ஓசையே பாட்டின் உருவத்தைச் செவ்வை ஆக்குகிறது. பழகிய காதுக்குப் பாட்டைக் கேட்ட மாத்திரத்தில், தவறு இருந்தால் உடனே புலப்படும். பாட்டுக்குச் சரியான உரைகல் பாட்டுக் கேட்டுப் பயின்ற காது. அதனால் தான் கவி பாடப் புகுகிறவர்கள் பல பாடல்களை வாயாரப் பாடிப் பழக வேண்டுமென்று சொல்கிறேன். பொருள், இலக்கணம் ஆகியவற்றைப் பின்பு கவனித்துக் கொள்ள லாம். ஓசை சரியாக இருந்தால் இலக்கணமும் சரியாக இருக்கும். கவியின் ஓசையை விருத்தத்தில் தெளிவாகக் காணலாம். அதனால்தான் ஆசிரிய விருத்தங்களைப் பற்றியே இதுவரையில் எழுதி வந்தேன்.

தமிழில் பாக்கள் நான்கு வகைப்படும். அவற்றை நாற்கவி யென்று சொல்வார்கள். வெண்பா, ஆசிரியப்பா, கலிப்பா, வஞ்சிப்பா என்பவை அவை. யாப்பிலக்கண நூல்களில் அந்த வரிசையில் இலக்கணத்தைச் சொல்லி யிருப்பார்கள். பாவுக்கு இனமாகச் சில பாடல்கள் உண்டு. அவற்றைப் பாவினம் என்று புலவர் கூறுவர். அவை தாழிசை, துறை, விருத்தம் என்று மூன்று வகை. ஒவ்வொரு பாவுக்கும் இந்த மூன்று இனங்களும் உண்டு. இதுவரையில் நாம் கவனித்தவற்றின் பெயரே அவை இன்ன பாவின் இனம் என்பதை உணர்த்தும். ஆசிரியப்பாவின் இனமா தலின் ஆசிரிய விருத்தம் என்று பெயர் வந்தது. பிற்காலத்துக் காப்பியங்களிலும் பிற வகை நூல்களிலும் புலவர்கள் பெரும்பாலும் ஆசிரிய விருத்தங்களையே ஆண்டிருக் கிறார்கள். தேவார காலத்துக்குப் பிறகு காவியகாலம் தொடங்கியது. அது முதல் கவிதையுலகில் ஆசிரிய விருத்தமே அரசாட்சி செய்து வருகிறது.

பாரதியார் இயற்பாட்டைப் போலவே இசைப் பாட்டையும் எளிதில் ஆண்டார். இசைப் பாடல்களில் இசைக்குத் தலைமை இருக்கும்; கவிச்சுவை இரண்டாம் பட்சமாக இருக்கும். பாரதியார் செய்த பெரிய புரட்சி, இசைப் பாடல்களாகிய கண்ணிகளையும் சிந்துகளையும் இலக்கியச் சுவை உடையனவாகச் செய்தது. தேவாரம் எப்படிப் பண் அமைந்து இசைப்பாவாகவும், சிறந்த கவிச்சுவை அமைந்து இலக்கியப் பனுவலாகவும் இருக்கிறதோ அவ்வாறு பாரதியார் இசைப்பாட்டு வகைகளைக் கவிச்சுவை உடையனவாக அமைத்தார். அவர் பாடல்களிலும் ஆசிரிய விருத்தங்கள் பல உண்டு.

சங்ககாலத்தில் ஆசிரியப்பாவே மிகுதியாக இருந்தது. இன்று கிடைக்கும் சங்ககாலத்து நூல்களில் உள்ள பாடல் களைக் கணக்கிட்டுப் பார்த்தால் ஆசிரியப் பாக்களே முதலிடம் பெறுவதைக் காணலாம்.

ஆசிரியப்பாவை அகவல் என்றும் சொல்வார்கள். அகவல் என்பதற்கு அழைத்தல் என்று பொருள். ஒருவரை வரவேற்பதற்கும் அழைப்பதற்கும் ஏற்ற ஓசையமைப்பை உடையது அகவல். அகவலில் பெரும்பாலும் ஈரசைச் சீர்களே வரும். அதனால் அவற்றை **ஆசிரியச்சீர், அகவற்சீர்** என்று வழங்குவர்; இயற்சீர் என்றும் அதைக் கூறுவது உண்டு.

ஆசிரியப்பாவில் ஒவ்வோரடியும் நான்கு ஈரசைச் சீர்களால் அமைந்திருக்கும். இடையிலே காய்ச்சீர்—நேரில் முடியும் மூவசைச் சீர்கள்—வரலாம். அகவல் மூன்றடி முதல் பல அடிகளால் வரும்.

"வாழிய செந்தமிழ் வாழ்கநற் றமிழர்
வாழிய பாரத மணித்திரு நாடு

இன்றெமை வருத்தும் இன்னல்கள் மாய்க
நன்மைவந் தெய்துக தீதெலாம் நலிக...''

இந்தப் பாரதியார் பாட்டு அகவல் அல்லது ஆசிரியப்பா.

அகவலில் ஒவ்வோரடியிலும் மூன்றாவது சீரில் மோனை அமைந்தால் அழகாக இருக்கும். எல்லா அடிகளும் நாற்சீரடிகளாக அமைவது **நிலைமண்டில ஆசிரியப்பா** என்று பெயர் பெறும். கடைசி அடிக்கு முன் அடி மாத்திரம் மூன்று சீர்களால் அமைய, மற்ற அடிகளெல்லாம் நாற்சீர் அடிகளாக இருப்பது **நேரிசையாசிரியப்பா.** இந்த இரண்டுமே நூல்களில் அதிகமாக உள்ளவை. நடு நடுவே இரண்டு சீரடி, மூன்று சீரடியாகச் சிலவற்றைப் பெற்று மற்றவை நாற்சீரடியாக இருப்பது **இணைக்குறளாசிரியப்பா.** எல்லா அடிகளும் நாற்சீரடிகளாக அமைய, எந்த அடியை எங்கே மாற்றி வைத்தாலும் பொருள் மாறாமல் இருப்பது **அடிமறி மண்டில ஆசிரியப்பா.** இந்த இரு வகைகளும் இலக்கியத்தில் மிகுதியாக வருவதில்லை.

''நிலத்தினும் பெரிதே வானினும் உயர்ந்தன்று
நீரினும் ஆரள வின்றே சாரல்
கருங்கோற் குறிஞ்சிப் பூக்கொண்டு
பெருந்தேன் இழைக்கும் நாடனொடு நட்பே.''

இது குறுந்தொகையென்னும் சங்க நூற் பாட்டு. இதில் ஈற்றயலடியாகிய மூன்றாவது அடி முச்சீர் அமைந்தது. அதனால் இது நேரிசை ஆசிரியப்பா. சங்ககாலத்து அகவலின் ஓசையே ஒரு தனிச் சிறப்புடையது.

இந்தப் பாட்டின் அடிகளுக்கு ஓசை யூட்டிப் பார்க்கலாம்.

"நிலத்தினும் பெரிதே வானினு முயர்ந்தன்று
கருவிளம் புளிமா கூவிளம் புளிமாங்காய்
நீரினு மாரள வின்றே சாரல்
கூவிளம் கூவிளம் தேமா தேமா
கருங்கோற் குறிஞ்சிப் பூக்கொண்டு
புளிமா புளிமா தேமாங்காய்
பெருந்தேன் இழைக்கும் நாடனொடு நட்பே
புளிமா புளிமா கூவிளங்காய் தேமா.

*இந்த ஆசிரியப்பாவில் கூவிளம், கருவிளம், தேமா, புளிமா என்ற நான்கு ஈரசைச் சீர்களும் வந்தன. மூன்று இடங்களில் காய்ச்சீர்கள் வந்தன. முதல் அடியில் நான்காம் சீரும், மூன்றாம் அடியிலும் கடைசி அடியிலும் மூன்றாம் சீரும் காய்ச்சீராக அமைந்ததைக் காண்க.*

*இரண்டு இரண்டு அடிகளில் எதுகை அமைந்தால் ஆசிரியப்பா அழகாக அமையும்.*

அகவற் பாக்க ளவைநான் காகும்;
தகநாற் சீர்கள் சார்ந்து நடக்கும்;
இரண்டிரண் டடிகளில் எதுகை யமைந்தால்
திரண்டநல் ஓசை சிறந்தமை வுறுமே.

*இதில் இரண்டடிகளில் ஒரெதுகையாக அமைந் திருப்பதைக் காண்க. இது நிலைமண்டில ஆசிரியப்பா.*

மாந்தர்கள் அன்பார் வாழ்வடை வாரே;
சாந்தியே பெரிய தாரகம் ஆமே;
ஆந்துயர் பொறுத்தல் அரும்பெருந் தவமே;
காந்திவாழ் வெடுத்துக் காட்டா மன்றே.

*இதில் நான்கு அடிகளில் எதை எங்கே வைத்து எழுதினாலும் பொருள் மாறுவதில்லை. அடியை*

எப்படியும் மறித்துப் போடலாம். இது அடிமறி மண்டில ஆசிரியப்பா. அகவலில் மோனை இடத்தில் எதுகை வருவதுண்டு.

வீரரும் வேந்தரும் போரினிற் புக்கார்;
மக்களெல் லோரும் தொக்குவாழ்த் தினரே;
வெற்றிமா மகள்கைப் பற்றினன் அரசன்;
சால்விற லின்றித் தோல்வியுற் றவர்கள்
புவியுடல் போட்டன ரவிந்தொழிந் தாரே.

இந்த ஆசிரியப்பாவின் ஒவ்வோரடியிலும் மூன்றாம் சீரில் எதுகை வந்தது; அதாவது, முதற்சீரும் மூன்றாம் சீரும் எதுகையாக இணைந்து வந்தன. இதற்குப் பொழிப் பெதுகை என்று பெயர். எதுகை வந்தால் அங்கே மோனை இல்லையே என்ற குறை இராது.

## 11. ஆசிரியப்பா

இதுவரையில் ஆசிரிய விருத்தத்தைப் பற்றியும், ஆசிரியப் பாவைப் பற்றியும் சில இலக்கணங்களைத் தெரிந்து கொண்டோம். ஆசிரியப் பாவைப் பற்றி இன்னும் சில இலக்கணங்களைத் தெரிந்து கொள்ள வேண்டும்.

ஆசிரியப் பாவில் பெரும்பாலும் ஈரசைச் சீர்களே வரும் என்பதை, அவ்வகைச் சீர்களுக்கு அகவற்சீர், ஆசிரிய உரிச்சீர் என்று பெயர் வழங்குவதால் தெரிந்து கொள்ளலாம். சங்க காலத்து நூல்களில் வரும் ஆசிரியப் பாக்களில் காய்ச் சீர் இடையே விரவி வரும். அதனால் அதன் ஓசையே கம்பீரமாக இருக்கும்.

"கொங்குதேர் வாழ்க்கை யஞ்சிறைத் தும்பி
காமஞ்செப் பாது கண்டது மொழிமோ
பயிலியது கெழீஇய நட்பின் மயிலியற்
செறியெயிற் றரிவை கூந்தலின்
நறியவும் உளவோநீ அறியும் பூவே!"

இந்தப் பாட்டு எழுந்ததற்குக் காரணமான கதையைப் பலர் அறிந்திருப்பார்கள். கதை உண்மையோ, இல்லையோ அதைப்பற்றி இங்கே கவலை வேண்டாம். ஒரு கதையைப் படர விடுவதற்குக் காரணமான பாட்டு இது என்பதை மட்டும் நினைவில் வைத்துக் கொண்டால் போதும். சங்க நூல்கள் மிகுதியாக வழங்காத இடைக்காலத்திலும் இந்தப் பாட்டு வழங்கி வந்தது. இதை ஆலவாய் இறைவன் பாடல் என்று அந்த வரலாறு கூறுகிறது.

இந்தப் பாடலில் ஈற்றயலடி மூன்று சீர்களால் அமைந் திருக்கிறது; ஆகவே, இது நேரிசை ஆசிரியப்பா. இதில் இரண்டாவது அடியின் முதற் சீரும், மூன்றாம் அடியின் முதற் சீரும், ஐந்தாம் அடியின் இரண்டாவது சீரும் மூவசைச் சீர்களாக வந்திருக்கின்றன. அவை தேமாங்காய், கருவிளங்காய், புளிமாங்காயாக உள்ளன. எட்டுத் தொகையில் நற்றிணை, குறுந்தொகை, ஐங்குறுநூறு, பதிற்றுப்பத்து, அகநானூறு, புறநானூறு என்னும் நூல்கள் ஆறும் ஆசிரியப் பாக்களால் ஆனவை. அவற்றிற் பெரும்பாலன நேரிசையாசிரியப் பாக்கள். அவற்றை ஆராய்ந்தால் காய்ச்சீர்கள் அங்கங்கே விரவி வந்திருப்பதைக் காணலாம்.

அகவல்களில் ஈறு ஏகாரமாக முடிவது பெரும் பான்மை மரபு. ஒ, ஈ, ஆய், என், ஐ என்று முடிவதும் உண்டென்று இலக்கணம் கூறுகிறது. ஆனால் ஏ என்று முடியும் அகவல்களும், என் என்று முடியும் அகவல்களுமே இப்போது கிடைக்கின்றன. 'நிலைமண்டில ஆசிரியப்பா

என் என்று முடிவது சிறப்பு' என்று ஓர் இலக்கண நூல் கூறுகிறது. இணைக்குறளாசிரியப் பாவில் முதல் அடியும், ஈற்றடியும் நாற்சீரடிகளாகவே இருக்க வேண்டும். இடையில் இரண்டு மூன்று நான்கு சீரடிகள் வரலாம். சிறுபான்மை ஐந்து சீர் அடியும் வருவதுண்டு.

இங்கே ஒரு பழங்கதை நினைவுக்கு வருகிறது. கம்பரிடம் யாரோ ஒரு விறகுதலையன் வந்து, ''எனக்கு அரசனிடம் பரிசு வாங்கித் தர வேண்டும்'' என்று சொன்னானாம். ''எதையாவது பாடிக் கொண்டு வா; பரிசு வாங்கித் தருகிறேன்'' என்று அந்தக் கவிச் சக்கரவர்த்தி சொன்னாராம். அவனுக்குத் தமிழிலே பயிற்சி இல்லை. எங்கோ நடந்து போகும் போது, வீதியில் சிறு பிள்ளைகள் சிறு வீடு கட்டி விளையாடிக் கொண்டிருந்தார்களாம். ஒரு பெண் ஓர் ஆண்பிள்ளையை உட்கார்த்தி வைத்து, ''நீ தான் மாப்பிள்ளை நான்தான் உன் மனைவி; இந்தா இதைச் சாப்பிடு'' என்று ஒரு சிறிய இலையில் மண்ணைப் படைத்தாள். அதைக் கண்ட விறகுதலையன், ''மண்ணுண்ணி மாப்பிள்ளையே'' என்று சொல்லிக் கொண்டான். அதையே தன் கவியின் தொடக்கமாக வைத்துக் கொண்டான். பிறகு ஒரு காக்கை கத்தியது; ''காவிறையே'' என்பதைச் சேர்த்துக் கொண்டான். குயிலின் குரல் காதில் பட்டது. ''கூவிறையே'' என்று பாடினான். பிறகு அங்கே பெருச்சாளி ஒரு கோவிலில் ஓடியது; ''உங்களப்பன் கோவிலில் பெருச்சாளி'' என்று பாட்டை நீட்டினான். எதிரே ஒரு நண்பன் வந்தான். இந்தப் பாட்டை விறகு தலையன் கூறவே, ''என்னடா இது? கன்னா பின்னா என்று இருக்கிறது. அரசன் பெயர் வேண்டாமோ?'' என்று கேட்டான். அவன் சொன்னதையும் சோழன் பெயரையும் சேர்த்து, ''கன்னா பின்னா மன்னா தென்னா சோழங்கப் பெருமானே'' என்று பாட்டை முடித்தான். ''மண்ணுண்ணி மாப்பிள்ளையே காவிறையே கூவிறையே உங்களப்பன்

கோவிலில் பெருச்சாளி-கன்னா பின்னா மன்னா தென்னா சோழங்கப் பெருமானே'' என்று அந்த அருமையான கவிதையைக் கம்பரிடம் போய்ச் சொன்னானாம்!

அவர் அதைக் கேட்டுப் புன்முறுவல் பூத்தார். அவனை அரசவைக்கு அழைத்துச் சென்றார். அங்கே அவன் தன் பாடலைச் சொன்னான். கேட்டவர்கள் நகைத்தார்கள். கம்பர் எழுந்து உரை கூறினார்.

''இதற்குப் பொருள் இன்னதென்பதை ஆய்ந்து காண வேண்டும். நம்முடைய அரசரை முதலில் மன்மதனே என்று அழைத்திருக்கிறார் புலவர். மண்ணுண்ணி-உலகத்தை உண்ட திருமால்; மா-திருமகள். இந்த இருவருக்கும் புதல்வனாகிய மன்மதனே என்று பொருள்பட, 'மண்ணுண்ணி மாப்பிள்ளையே!' என்று தொடங்கியிருக்கிறார். கா என்பது கற்பகம்; அதற்கு இறைவன் இந்திரன்; ஆதலின், காவிறையே என்பதற்கு இந்திரனே என்று பொருள் கொள்ள வேண்டும். கூ என்பது பூமி; அதற்கு இறைவன் நம் பெருமான். உலகச் சக்கரவர்த்தி என்பதையே கூவிறையே என்று உணர்த்தினார். 'உங்கள் தந்தையாரும் சக்கரவர்த்தி' என்பதை 'உங்கள் அப்பன் கோ' என்றார். அவர் வில்லில் பெரிய சிங்கம் போன்ற திறமையுடையவர்; 'வில்லில் பெரிசு ஆளி' என்று பிரிக்க வேண்டும். வில்லில் என்பது விலில் என்றும், பெரிது என்பது பெருசு என்றும் விகாரமாயின. கன்னா-கர்ணனே, பின்னா-அவனுடைய தம்பியாகிய தர்மபுத்திரனே, மன்னா-அரசனே, தென்னா-தென்னாட்டுக்குத் தலைவனே, சோழங்கப் பெருமானே-சோழர்களில் பெரியவனே. இப்படிப் பொருள் கொள்ளும்படி பாடிய இப்புலவர் புலமையை நாம் பாராட்ட வேண்டும்'' என்று உரை விரித்தார் கம்பர்.

அதோடு நிற்கவில்லை. அந்த உளறலை இன்ன வகைப் பாடல் என்று சொல்ல வேண்டுமே! ''இது

இணைக்குறளாசிரியப் பா. ஏகாரத்தில் முடிந்திருக்கிறது'' என்று கூறிச் சீரும் பிரித்துக் காட்டினாராம்.

''மண்ணுண்ணி மாப்பிள்ளை யேகா விறையே
கூவிறை யேஉங்க ளப்பன்
கோவி லில்பெருச் சாளி
கன்னா பின்னா மன்னா
தென்னா சோழங் கப்பெரு மானே.''

இணைக்குற ளாசிரியப் பா என்பதைப் பரிகாசம் பண்ணிய பாடலாக இதைக் கருதலாம். எதையும் ஆசிரியப் பாவில் அடக்கி விடலாம் என்று சிலர் எண்ணுவதுண்டு. அதைப் பரிகாசம் செய்யவே இந்தக் கதை எழுந்திருக்க வேண்டும்.

இதோ நல்ல இணைக்குறளாசிரியப் பா ஒன்றைப் பாருங்கள்;

''நீரின் தண்மையும் தீயின் வெம்மையும்
சாரச் சார்ந்து
தீரத் தீரும்
சாரல் நாடன் கேண்மை
சாரச் சாரச் சார்ந்து
தீரத் தீரத் தீர்பொல் லாதே.''

இதில் உள்ள ஆறு அடிகளில் முதலடியும் ஈற்றடியும் நான்கு சீரடிகளால் வந்துள்ளன. மற்றவை முறையே இருசீரடி, இருசீரடி, முச்சீரடி, முச்சீரடியாக அமைந்திருக்கின்றன. இத்தகைய ஆசிரியப்பாக்கள் மிகவும் அருமையாகவே நூல்களில் வந்துள்ளன. அருமையாக வந்தாலும் அதற்கும் இலக்கணம் உண்டல்லவா? அதனால்தான் அதற்கும், அது போலவே அடிமறி மண்டில ஆசிரியப் பாவுக்கும் இலக்கணம் சொல்லியிருக்கிறார்கள்.

# 12. வெண்டளையும் வெண்பாவும்

‘‘எல்லாப் புலவர்க்கும் வெண்பாப் புலி’’ என்று ஒரு பாட்டு முடிகிறது. வெண்பாப் பாடுவது அரிது என்ற கருத்தை அது சொல்கிறது. ஆனால் பாடம் பண்ணுவதற்கு வெண்பா எளிதாக இருப்பது. ‘‘வெண்பா இருகாலில் கல்லானை வெள்ளோலை, கண் பார்க்கக் கையால் எழுதானைப்-பெண்பாவி, பெற்றாளே பெற்றாள் பிறர்நகைக்கப் பெற்றாளே, எற்றோமற் றெற்றோமற் றெற்று’’ என்ற பாட்டில், இரண்டு முறை ஒரு வெண் பாவைச் சொன்னால் சராசரி அறிவுடையவன் ஒருவன். அதைப் பாடம் பண்ணிவிடலாம் என்ற கருத்து அமைந் திருக்கிறது.

வெண்பாவில் மிகவும் முக்கியமாக அமைய வேண்டியது வெண்டளை. மற்றப் பாடல்களை-கட்டளைக் கலித்துறையைத் தவிர-தளையைப் பற்றிக் கவலைப் படாமலே பாடலாம். தளை இலக்கணம் தெரிந்து கொள்ளா தவர்களும் வெண்பா, கட்டளைக் கலித்துறை ஆகியவற்றை யன்றி மற்றவற்றைப் பாடிவிடலாம். ஆனால் வெண்டளை யின் இலக்கணம் தெரியாமல் வெண்பாவைப் பாடவே முடியாது.

தமிழில் ஏழு தளைகள் உண்டு. வெண்பாவுக்குரிய தளையை வெண்டளை என்று சொல்வார்கள்; இயற்சீர் வெண்டளை, வெண்சீர் வெண்டளை என்று அது இரண்டு வகைப்படும். ஆசிரியத் தளை என்பது ஒன்று. அதுவும் நேரொன்றாசிரியத்தளை, நிரையொன்றாசிரியத்தளை என்று இருவகைப்படும். கலித்தளை என்பது ஒன்றே.

வஞ்சித்தளை யென்பது ஒன்றிய வஞ்சித்தளை, ஒன்றாத வஞ்சித்தளை என்று இரண்டு வகை. ஆக நாலு பாவுக்கும் உரிய நான்கு தளைகள் விரிந்து ஏழு தளைகள் ஆகும்.

தளை என்ற சொல்லுக்குக் கட்டு, விலங்கு என்ற பொருள்கள் உண்டு. இரண்டு ரெயில் பெட்டிகளைச் சேர்ப்பதற்கு இடையே கொக்கி இருப்பது போல இரண்டு சீர்கள் இணையும்போது உள்ள கொக்கி அல்லது சங்கிலி போன்ற அமைப்பையே தளை என்று சொல்வார்கள்.

தமிழ்விடு தூது என்னும் நூலில் தமிழில் உள்ள தளையை எண்ணி வேடிக்கையாக ஒரு புலவர் பாடியிருக்கிறார். பொய்கையார் என்னும் புலவர் களவழி நாற்பது என்ற நூலைப் பாடிச் சேரமானைச் சிறைவிடும்படி செய்தார். 'சேரமான் காலில் இருந்த தளையை விடும்படி செய்த உனக்கு ஏழு தளை உண்டென்று சொல்வது என்ன பைத்தியக்காரத்தனம்?' என்று அந்தப் புலவர் பாடுகிறார். தமிழைப் பார்த்துச் சொல்வதாக இருக்கிறது அது.

''சேரமான்
தன்னடிக் கண்டு தளைவிடுத்தாய் ஏழ்தளைஉன்
பொன்னடிக்குண் டென்பதென்ன புத்தியோ?''

மற்றத் தளைகளை யெல்லாம் இப்போது தெரிந்து கொள்ள வேண்டாம்; அவற்றைப் பற்றிப் பிறகு பார்த்துக் கொள்ளலாம். வெண்டளையைப் பற்றிய இலக்கணத்தைத் தெரிந்து கொண்டு வெண்பாவின் இலக்கணத்தையும் இப்போது கவனிக்கலாம்.

வெண்டளையின் இலக்கணத்தை எளிதிலே தெரிந்து கொள்வதற்கு நாடோடியாக ஒரு வாய்பாடு வழங்குகிறது. **''மாமுன் நிரையும் விளமுன் நேரும்: காய்முன் நேரும்''** என்பதே அந்த வாய்பாடு. மூன்றே மூன்று விதிகள். மாமுன்

நிரை என்பது ஒன்று; விளமுன் நேர் என்பது ஒன்று; காய்முன் நேர் என்பது ஒன்று. முன் இரண்டும் இயற்சீராகிய ஈரசைச்சீர் முன்னாலே நிற்க, அவற்றின்பின் வரவேண்டிய சீர்களைப் பற்றிச் சொல்வது; பின்னது வெண்சீராகிய காய்ச்சீர் நிற்க, பிறகு வருவதைப் பற்றிச் சொல்வது. நின்ற சீர் முழுவதையும் தெரிந்து கொள்ள வேண்டும்; வரும் சீரின் முதல் அசை இன்னதென்று தெரிந்தால் போதும்; இன்ன தளையென்று சொல்லிவிடலாம்.

## (1) மாமுன் நிரை;

மாச்சீர் என்பது நேரில் முடியும் ஈரசைச் சீர்; தேமா, புளிமா என்பவை (நேர்நேர், நிரைநேர்). இந்தச் சீரின் முன் நிரை வர வேண்டும். அது இயற்சீர் வெண்டளை.

"அகர முதல எழுத்தெல்லாம்."

இந்த அடியில் அகர என்பது புளிமா; அதன்முன் முத என்ற நிரை வந்தது; இது இயற்சீர் வெண்டளை. முதல என்பதும் புளிமா; இதன் முன் எழுத் என்ற நிரை வந்தது; ஆதலின் இதுவும் இயற்சீர் வெண்டளை.

## (2) விளமுன் நேர்:

விளம் என்பது நிரையில் முடியும் ஈரசைச் சீர்; கூவிளம், கருவிளம் என்ற இரண்டும் விளச்சீர் என்பது நமக்குத் தெரியும். இந்த இரண்டு சீர்களுக்குப் பின் வரும் சீரின் ஆரம்பம் நேராக இருந்தால் வெண்டளை; இதுவும் இயற்சீர் வெண்டளையே.

"மலர்மிசை ஏகினான் மாணடி சேர்ந்தார்"

என்ற குறளின் அடியில் மலர்மிசை என்றது கருவிளம்; அதன்முன் ஏ என்ற நேர் வந்தது. ஏகினான் என்பது கூவிளம்;

அதன் முன் மா என்ற நேர் வந்தது. மாணடி என்பதும் கூவிளம்; அதன் முன் சேர்ந் என்று நேர் வந்தது. இவை யாவும் இயற்சீர் வெண்டளை.

## (3) காய்முன் நேர்:

காய்ச்சீருக்கு வெண்சீர் என்றும் ஒரு பேர் உண்டு. பெரும்பாலும் வெண்பாவில் வருவதனால் அப்பெயர் வந்தது. நேரில் முடிகிற மூவசைச் சீர்கள் அவை. அவற்றிற்குமுன் நேர் வந்தால் அது வெண்டளை; நின்ற சீர் வெண்சீர் ஆதலின் இது வெண்சீர் வெண்டளை யாகும்.

''துப்பார்க்குத் துப்பாய துப்பாக்கித் துப்பார்க்கு''

என்ற அடியில் காய்முன் நேர் வந்ததைக் காணலாம்.

தளை பார்க்கும் போது நின்ற சீர் இன்னதென்று பார்ப்பது போல, வருஞ் சீர் இன்னதென்று கவனிக்க வேண்டிய அவசியம் இல்லை; வருஞ்சீரின் முதல் அசையைக் கவனித்தால் போதும்.

ஆகவே, மாமுன் நிரை என்றால், தேமா, புளிமா என்ற இரண்டில் ஒன்று நிற்க, புளிமா, கருவிளம், புளிமாங்காய், கருவிளங்காய், மலர் என்ற வாய்பாடு களையுடைய சீர்கள் வரலாம். தனி நிரையசையே சீராக வந்தால் அதற்குரிய வாய்பாடு மலர் என்பது; வெண்பாவின் இறுதியில் அது வரும்.

விளமுன் நேர் என்றால், கூவிளம், கருவிளம் என்ற இரண்டில் ஒன்று நிற்க, தேமா, கூவிளம், தேமாங்காய், கூவிளங்காய், நாள் என்ற வாய்பாடு உடைய சீர்கள் வரலாம். நாள் என்பது நேர் என்ற தனி அசையே ஓரசைச் சீராக வருவது; வெண்பாவின் ஈற்றில் அது வரும்.

காய்முன் நேர் என்பது, தேமாங்காய், புளிமாங்காய், கூவிளங்காய், கருவிளங்காய் என்ற நான்கில் ஏதேனும் ஒரு சீர் நிற்க, அதன் முன் தேமா, கூவிளம், தேமாங்காய், கூவிளங்காய், நாள் என்ற வாய்பாடுகளையுடைய சீர்கள் வருவது.

இவை மூன்றும் வெண்டளை.

**வெண்பாவில் எதுகை மோனை இல்லாமல் இருக்கலாம்; ஆனால், வெண்டளை இல்லாமல் வராது.** திருக்குறளில் சில பாக்களில் எதுகை மோனை இல்லாமல் இருக்கலாம்; ஆனால், 1330 குறட்பாக்களிலும் வெண்டளை அமைந்தே இருக்கும்.

வெண்பாவின் இலக்கணங்களுள் தலையானது வெண்டளை அமைதல்.

வெண்பாக்கள் குறள் வெண்பா, நேரிசைச் சிந்தியல் வெண்பா, இன்னிசைச் சிந்தியல் வெண்பா, நேரிசை வெண்பா, இன்னிசை வெண்பா, பஃறொடை வெண்பா, கலி வெண்பா என்று ஏழு வகை. கலி வெண்பாவைக் கலிப்பாவில் சேர்த்து இலக்கணம் கூறும்; ஆனால், இப்போதுள்ள கலிவெண்பாக்கள் யாவும் வெண்பா இலக்கணம் அமைந்தனவாக இருக்கின்றன. இவற்றை அடியளவைக் கொண்டு ஐந்து பிரிவாக வகுக்கலாம்.

(1) இரண்டடி வெண்பா-குறள் வெண்பா.

(2) மூன்றடி வெண்பா-சிந்தியல் வெண்பாக்கள்

(3) நான்கடி வெண்பா-நேரிசை வெண்பாவும் இன்னிசை வெண்பாவும்.

(4) நான்கு முதல் பன்னிரண்டடி வரையில்- பஃறொடை வெண்பா.

(5) பதின்மூன்று முதல் எத்தனை அடியானாலும்- கலிவெண்பா.

இந்த வெண்பா வகைகள் எல்லாவற்றிற்கும் பொதுவாகச் சில இலக்கணங்கள் உண்டு. அவை வருமாறு:

(1) ஓரசைச் சீர், ஈரசைச் சீர், காய்ச்சீர் ஆகியவைகளே வரும்.

(2) வெண்டளையே வரும்.

(3) ஈற்றடி முச்சீரடியாகவும் மற்றவை யாவும் நாற்சீரடியாகவும் இருக்கும்.

(4) ஈற்றுச் சீர் நாள், மலர், காசு, பிறப்பு என்ற வாய்பாடுகளில் ஒன்றை உடையதாக இருக்கும்.

இந்த வெண்பாக்களில் மிகுதியாக வழக்கில் உள்ளது நேரிசை வெண்பா. அதைப்பற்றி முதலில் பார்த்து விட்டு மற்றவற்றைப் பிறகு பார்க்கலாம்.

## நேரிசை வெண்பா

நேரிசை வெண்பாவின் இலக்கணத்தை எளிதிலே நினைவில் வைத்துக் கொள்ள நாடோடியாக ஒரு வாய்பாடு வழங்குகிறது. **''நாற்சீர்-முச்சீர்-நடுவே தனிச்சீர்''** என்பது அது.

நேரிசை வெண்பாக்களில் இரண்டாவது அடியில் உள்ள மூன்றாம் சீருக்குப் பின் ஒரு கோட்டையிட்டுப் பிறகு நான்காஞ் சீரை எழுதுவது வழக்கம். கோட்டுக்கு அப்புறம் இருப்பதைத் தனிச்சீர் என்று சொல்வர். இரண்டாவதடியின் நாலாம் சீர் அது. அது அந்த அடியின் ஓர் உறுப்பாக இருந்தாலும் அந்த அடியின் முதற்சீருக்கும் அதற்கும் ஒரே

எதுகை அமைந்திருப்பதனால், அதைத் தனிச் சீர் என்றார்கள்.

“ஆழ வமுக்கி முகக்கினு மாழ்கடனீர்
நாழி முகவாது நானாழி-தோழி
நிதியுங் கணவனும் நேர்படினுந் தந்தம்
விதியின் பயனே பயன்.”

இந்தப் பாட்டில் இரண்டாவதடியின் முதற்சீர் **நாழி**; நான்காவது சீர் அதனோடு எதுகையில் ஒன்றிய **தோழி**; தோழி என்பது தனிச்சீர்.

இந்த வெண்பாவில் முதல் இரண்டடியும் ஓரேதுகை யாகவும் பின் இரண்டடியும் ஒரெதுகையாகவும் உள்ளன. இதுவும் நேரிசை வெண்பாவின் இலக்கணங்களில் ஒன்று. நான்கடியும் ஒரெதுகையாகவும் வரும்.

மேலே காட்டிய பாட்டில் வெண்டளை பிறழாமல் வந்திருப்பதைக் கவனித்துப் பார்க்க வேண்டும்.

(1) ஆழ-தேமா; அமுக்கி-புளிமா=மாமுன் நிரை வந்த இயற்சீர் வெண்டளை.

(2) அமுக்கி-புளிமா; முகக்கினு-கருவிளம்=மாமுன் நிரை வந்த இயற்சீர் வெண்டளை.

(3) முகக்கினு-கருவிளம்; ஆழ்கடனீர்-கூவிளங்காய் = விளமுன் நேர் வந்த இயற்சீர் வெண்டளை.

(4) ஆழ்கடனீர்-கூவிளங்காய்; நாழி-தேமா=காய்முன் நேர் வந்த வெண்சீர் வெண்டளை.

(5) நாழி-தேமா; முகவாது-புளிமாங்காய்=மாமுன் நிரை வந்த இயற்சீர் வெண்டளை.

(6) முகவாது-புளிமாங்காய்; நானாழி-தேமாங்காய்= காய்முன் நேர் வந்த வெண்சீர் வெண்டளை.

(7) நானாழி-தேமாங்காய்; தோழி-தேமா = காய் முன் நேர் வந்த வெண்சீர் வெண்டளை.

(8) தோழி-தேமா; நிதியுங்-புளிமா=மாமுன் நிரை வந்த இயற்சீர் வெண்டளை.

(9) நிதியுங்-புளிமா; கணவனு-கருவிளம்=மாமுன் நிரை வந்த இயற்சீர் வெண்டளை.

(10) கணவனு-கருவிளம்; நேர்படினுந்-கூவிளங்காய்= விளமுன் நேர் வந்த இயற்சீர் வெண்டளை.

(11) நேர்படினுந்-கூவிளங்காய்; தந்தம்-தேமா=காய்முன் நேர் வந்த வெண்சீர் வெண்டளை.

(12) தந்தம்-தேமா; விதியின்-புளிமா=மாமுன் நிரை வந்த இயற்சீர் வெண்டளை.

(13) விதியின்-புளிமா; பயனே-புளிமா=மாமுன் நிரை வந்த இயற்சீர் வெண்டளை.

(14) பயனே-புளிமா; பயன்-மலர்=மாமுன் நிரை வந்த இயற்சீர் வெண்டளை.

# 13. வெண்பா இறுதிச் சீர்

வெண்பாவின் ஈற்றுச் சீர் நாள், மலர், காசு, பிறப்பு என்ற வாய்பாட்டில் வரவேண்டும். நேர் என்னும் ஓர் அசையே சீராக வருவதுண்டு; அப்படியே நிரை என்பதும் வரும். நேர் என்ற அசைச் சீரின் வாய்பாடு **நாள்;** நிரை என்ற அசைச்சீரின் வாய்பாடு **மலர்.**

''மலர்மிசை ஏகினான் மாணடி சேர்ந்தார்
நிலமிசை நீடுவாழ் வார்''

என்ற குறளின் ஈற்றுச்சீர் **வார்** என்பது; அது நேர் என்னும் ஓரசைச்சீர்; ஆகவே, இந்தக் குறள் **நாள்** என்னும் வாய்பாட்டில் முடிந்தது.

''கற்றதனா லாய பயனென்கொல் வாலறிவ
னற்றா டொழாஅ ரெனின்''

என்பதில் 'ரெனின்' என்பது ஈற்றுச் சீர். இரண்டு குறிலும் ஓர் ஒற்றும் வந்த நிரையசையே சீராக நிற்கிறது; **மலர்** என்பது அதற்கு வாய்பாடு. ஆகவே இந்தக் குறள் **மலர்** என்ற வாய்பாட்டில் முடிந்திருக்கிறது.

வெண்பாவில் ஈரசைச்சீரும், மூவசைச் சீருள் காய்ச் சீரும், ஈற்றில் மட்டும் ஓரசைச்சீரும் வரும். ஈற்றில் ஈரசைச் சீரும் வரும்; மூவசைச் சீர் வராது.

ஓரசைச் சீர்களுக்கு இயல்பாக உள்ள வாய்பாடுகளே **நாள், மலர்** என்பன. ஆனால் வெண்பாவில் ஈற்றில் வரும் ஈரசைச் சீர்களுக்கு, அவற்றின் இயல்பான வாய்பாடுகள் இருக்கவும் வேறு வாய்பாடுகளை வகுத்திருக்கிறார்கள். அதைக் கவனிக்கலாம்.

வெண்பாக்களின் இறுதியில் வரும் ஓரசைச்சீர்களின் வாய்பாட்டைப் பார்த்தோம். வெண்பா இறுதிச் சீராக ஈரசைச்சீர்கள் யாவும் வருவதில்லை. மாச்சீர் மட்டுமே வரும்; தேமா, புளிமா என்னும் இரண்டும் வரும். ஆனால் அவை இரண்டும் குற்றியலுகரத்தில் முடிவனவாக இருக்க வேண்டும்; அதனால்தான் தேமா, புளிமா என்ற வாய்பாடுகள் இருந்தாலும், தனியே குற்றியலுகரத்தில் முடியும் **காசு**, **பிறப்பு** என்ற வேறு வாய்பாடுகளை இலக்கணம் கூறுகிறது. முற்றுகரமும் சிறுபான்மை வரும். உகரம் அல்லாததை ஈறாக உடைய சொல் ஈரசைச் சீராக வெண்பா ஈற்றில் வராது.

> ''இருள்சே ரிருவினையுஞ் சேரா விறைவன்
> பொருள்சேர் புகழ்புரிந்தார் மாட்டு.''

இந்தக் குறளின் ஈற்றுச் சீர் **மாட்டு** என்பது; இது தேமா என்னும் வாய்பாடுடைய ஈரசைச்சீர்தான்; ஆனாலும் உகர இறுதியோடு வந்திருக்கிறதைக் கவனிக்க வேண்டும். ஆகையால் இது காசு என்னும் வாய்பாட்டைப் பெறும். இப்படியே,

> 'அகர முதல எழுத்தெல்லாம் ஆதி
> பகவன் முதற்றே யுலகு.''

என்னும் குறளில் உள்ள ஈற்றுச் சீர் 'யுலகு' என்பது. அது புளிமா என்னும் வாய்பாட்டையுடைய ஈரசைச் சீரே ஆனாலும், உகர இறுதியை உடைமையால் **பிறப்பு** என்ற வாய்பாட்டை உடையதாயிற்று. காசு, பிறப்பு என்ற வாய்பாடுகளை ஈற்றுச் சீருக்கு மட்டும் கொள்ள வேண்டுமேயன்றி, இடையில் வரும் உகர இறுதி மாச்சீருக்குக் கொள்ளக் கூடாது.

"தனக்குவமை யில்லாதான் றாள்சேர்ந்தார்க் கல்லான்
மனக்கவலை மாற்ற லரிது."

இந்தக் குறளுக்கு வாய்பாடு சொல்லிப் பாருங்கள்

கருவிளங்காய் தேமாங்காய் தேமாங்காய் தேமா
கருவிளங்காய் தேமா பிறப்பு.

இப்படி வாய்பாடு அமைக்கும் பொழுது இறுதிச் சீரைப் புளிமா என்று அமைக்கக் கூடாது.

நாள், மலர், காசு பிறப்பு என்னும் வாய்பாடுகளை வெண்பா இறுதிச் சீருக்கு அமைத்திருக்கிறார்கள். தமிழ் நாட்டில் யாவருக்கும் தெரிந்த சொற்களாக இருந்தால் வாய் பாடாக வழங்க எளிதாக இருக்கும். இந்தச் சொற்களும், இவற்றால் குறிக்கப்பெறும் பொருள்களும் தமிழ் மக்கள் நன்றாக அறிந்தவை. நாள்-மலர் என்பவை ஓர் இனம்; காசு-பிறப்பு என்பவை ஓர் இனம். நாள் என்பது தினத்தைக் குறிக்கும் பெயர்; காலைக்கும் பெயர். காலையில் மலரும் மலரை நாள் மலர் என்று சொல்கிறோம். ஆதலின், நாளுக்கும் மலருக்குத் தொடர்பு உண்டு; அது பற்றி அந்த இரண்டையும் வாய்பாடாக அமைத்தார்கள். அது மட்டும் அன்று; நாள் என்பதற்கே மலர் என்று ஒரு பொருள் உண்டு; தக்கயாகப் பரணி உரைகாரர் இந்தப் பொருளைச் சொல்கிறார். இதனாலும் நாளும் மலரும் இனமான சொற்கள் என்று தெரிந்து கொள்ளலாம்.

ஆனால் காசு, பிறப்பு என்ற இரண்டுக்கும் என்ன தொடர்பு, இந்த இரண்டும் யாவருக்கும் தெரிந்த இனமான பொருள்களைக் குறிக்கும் பெயர்களாக இருக்க வேண்டும். அதனால்தான் இந்த இரண்டையும் ஒன்றாக வைத்து வாய்பாடாகக் கொண்டார்கள். பழங்காலத்தில் பெண்கள் அணியும் கலன்களில் காசு, பிறப்பு என்பவை இரண்டு.

''கீசுகீசென்னும்'' (7) என வரும் திருப்பாவைப் பாசுரத்தில், ''காசும் பிறப்பும் கலகலப்பக் கைபேர்த்து'' என்ற அடி வருகிறது. அங்கே காசு, பிறப்பு என்ற இரண்டும் ஒரு சேர வருகின்றன. காசு என்பதற்கு அச்சுத் தாலி என்றும், பிறப்பு என்பதற்கு ஆமைத் தாலி என்றும் பொருள் எழுதியிருக் கிறார்கள். தாலி என்பது கழுத்தில் தொங்கவிடும் அணிகலன். கழுத்தில் தொங்க அணிவதனால் திருமங்கலி யத்துக்குத் தாலி என்ற பெயர் வந்தது. தாலிகள் அந்த அந்த வகுப்புக்கு ஏற்றபடி வெவ்வேறு உருவம் உடையனவாக இருக்கும். தமிழ் நாட்டில் பெரும்பாலும் இரண்டு வகைத் தாலிகள் வழக்கில் இருக்கின்றன. ஒன்று புலிப்பல்லைப் போலவும் சீப்புப் போலவும் ஒரு பக்கம் பற்களை உடையதாய்த் தட்டையாய்ச் சில அடையாளங்களைப் பொறித்ததாய் இருக்கும். அதுதான் அச்சுத் தாலி. வேறு ஒரு வகைத் தாலி கரண்டி முட்டையைக் கவிழ்த்தாற் போல அரைக்குமிழாக இருக்கும்; ஆமையின் முதுகு ஓடு போலப் புடைத்திருக்கும்; அதைப் பொட்டு என்றும் சொல்வார்கள். அது ஆமைத் தாலி. கோயிலில் அம்பிகைக்கு அதை அணிந்திருப்பார்கள். பழங்காலத்தில் உருத்திரகணிகை யருக்குப் பொட்டுக் கட்டும் வழக்கம் இருந்தது. அந்தப் பொட்டு ஆமைத் தாலியாகும்.

ஆகையால், இருவகைத் தாலிகளாகிய இனப் பொருளைக் குறிக்கும் சொற்களாகிய காசு, பிறப்பு என்னும் இரண்டையும் வெண்பா ஈற்றடியில் வரும் மாச்சீர்களுக்கு வாய்பாடாக வைத்தார்கள்.

# 14. வெண்பா வகை

தமிழில் உள்ள பாக்கள் நான்கு வகை. ஆதலின் புலவர்களை நாற்கவி ராசர் என்று பாராட்டுவார்கள். நாற்கவிராச நம்பி என்ற புலவர் ஒருவர் அகப்பொருள் விளக்கம் என்ற நூலை இயற்றியிருக்கிறார். வெண்பா, ஆசிரியப்பா, கலிப்பா, வஞ்சிப்பா என்ற நான்கு பாக்களிலும் முதலில் நிற்பது வெண்பா. அதில் முக்கியமாகக் கவனிக்க வேண்டியது வெண்டளை.

பன்னிரண்டாவது கட்டுரையில் நேரிசை வெண்பாவின் இலக்கணத்தைப் பார்த்தோம். இப்போது அதன் வகைகளையும் மற்ற வெண்பாக்களையும் கவனிப்போம்.

## குறள் வெண்பா

இரண்டு அடிகளை உடையதாக வருவது குறள் வெண்பா. வெண்பாக்களுக்குரிய பொது இலக்கணங்களாகிய (1) வெண்டளை அமைதல், (2) ஈற்றடி முச்சீராக இருத்தல், (3) மற்ற அடிகள் நாற்சீராய் வருதல், (4) ஈற்றுச் சீர் நாள், மலர், காசு, பிறப்பு என்ற வாய்பாடுகளில் ஒன்றைப் பெற்று வருதல் என்பவை எல்லா வெண்பாக்களிலும் இருக்க வேண்டும். ஆகவே, குறள் வெண்பாக்களில் முதலடி நாற்சீராகவும் இரண்டாம் அடி முச்சீராகவும் வரும்.

இவ்வாறு வரும் குறட்பாக்களை எதுகையை நோக்கி இரண்டு வகையாகப் பிரிப்பார்கள். இரண்டு அடிகளும் ஓரெதுகையாக வரலாம்; அப்படி இல்லாமலும் வரலாம்.

எதுகை வேறுபாட்டை விகற்பம் என்று குறிப்பது மரபு. ஒரே எதுகையாக அமைந்தால் அது ஒரு விகற்பம் என்றும், ஒவ்வோரடியும் வெவ்வேறு வகையில் இருந்தால் இரு விகற்பம் என்றும் கூறுவர்.

"அகர முதல வெழுத்தெல்லா மாதி
பகவன் முதற்றே யுலகு"

என்ற குறளில் இரண்டடியும் ஒரே எதுகையாக வந்தன. அகர-பகவன் என்ற முதற் சீர்கள் ஒரெதுகையாக நிற்பதைக் காண்க. இது ஒரு விகற்பக் குறள் வெண்பா.

"உருவுகண் டெள்ளாமை வேண்டு முருள்
பெருந்தேர்க்கச்சாணி யன்னா ருடைத்து."

இந்தப் பாட்டின் இரண்டடியிலும் ஒரே எதுகை அமையவில்லை. இரண்டும் வேறு வேறாக உள்ளன. இது இருவிகற்பக் குறள் வெண்பா.

திருக்குறளில் இந்த இருவகைப் பாடல்களும் வருவதைக் காணலாம். குறள் வெண்பாவினால் அமைந்த நூல்களில் சிறந்ததாதலின் வேறு பெயர் அமையாமல் திருக்குறள் என்ற பெயரே, திருவள்ளுவர் இயற்றிய நூலுக்கு அமைந்தது. ஒளவையார் பாடிய ஒளவை குறள் என்ற நூலும், திருவருட் பயன் என்ற நூலும், வேறு சில நூல்களும் முழுவதும் குறட்பாக்களால் அமைந்தவையே. பொருள்செறிவு நிரம்பியதாக இருந்தால்தான் குறளுக்கு அழகு. இரண்டடி வெண்பாவாகக் கணக்குப் பார்த்து எழுதி விட்டால், இலக்கணப்படி அது குறளாக இருக்கலாம்; ஆனாலும் சிறந்த குறள் என்று சொல்ல இயலாது. எல்லா வகையாலும் சிறப்புடைய திருக்குறளைப் போலக் குறட்பாவில் நூல் அமைவது மிகவும் அரிது.

## நேரிசை வெண்பா

நேரிசை வெண்பாவின் இலக்கணத்தை முன்பு கவனித்தோம். அந்தப் பாவில் எதுகையை நோக்கி இரண்டு வகை உண்டு. முதல் இரண்டடியும் தனிச் சொல்லும் பின் இரண்டடியும் யாவும் ஒரே எதுகையாக அமைந்தால் ஒரு விகற்ப நேரிசை வெண்பா என்று பெயர் பெறும்.

முந்தையோர் பாடிவைத்த முத்தமிழ்நூல் தம்மையெல்லாம்
அந்துமுதற் பூச்சி அழிக்காமல்-வந்தெடுத்துத்
தந்தபெரு வள்ளல் தமிழ்ச்சாமி நாதகுரு
செந்தமிழ்த்தாய் பெற்றமணிச் சேய்.

இந்தப் பாட்டில் எல்லாம் ஒரெதுகையாக அமைந் திருப்பதால் இது ஒரு விகற்ப நேரிசை வெண்பா ஆகும்.

முதல் இரண்டடியும் தனிச் சொல்லும் ஒரெதுகை யாகவும், பின் இரண்டடிகள் ஒரெதுகையாகவும் வந்தால் அது இருவிகற்ப நேரிசை வெண்பா என்று பெயர் பெறும்.

''காமர் கயல்புரளக் காவி முகைநெகிழத்
தாமரையின் செந்தேன் தளையவிழப்- பூமடந்தை
தன்னாட்டம் போலுந் தகைமைத்தே சாகரஞ்சூழ்
நன்னாட்டின் முன்னாட்டும் நாடு.''

இந்த நளவெண்பாப் பாட்டு இருவிகற்ப நேரிசை வெண்பா. இவ்வாறன்றி வேறு எப்படி எதுகை மாறி வந்தாலும் அது நேரிசை வெண்பா ஆகாது; இன்னிசை வெண்பா என்னும் பெயர் பெறும்.

வேறு ஒரு முறையில் நேரிசை வெண்பாவை இரண்டு வகையாகப் பிரிப்பதுண்டு. அவை இரு குறள் நேரிசை வெண்பா; ஆசிடையிட்ட நேரிசை வெண்பா என்ற பெயர் பெறும்.

இரண்டு குறள் வெண்பாக்களை வைத்து, முதல் குறள் வெண்பாவுக்குப் பின் தனிச் சொல்லை இணைத்து வைத்தாற் போன்ற அமைப்பை உடையது இருகுறள் நேரிசை வெண்பா.

நகைகொள் முகமுடைய நல்லோனாம் காந்தி
பகைவனையும் அன்பிற் பரிந்து-மிகநலஞ்செய்
பாங்கதனைக் காட்டியிந்தப் பாருலக முள்ளளவும்
ஓங்கிநின்றான் நல்லோர் உளத்து.

இந்த வெண்பாவில் இரண்டாம் அடியின் மூன்றாம் சீர் பரிந்து என்று குறள் வெண்பாவின் ஈற்றுச் சீருக்குரிய இலக்கணத்தோடு நிற்கிறது. மிகநலஞ்செய் என்ற தனிச் சொல்லை எடுத்துவிட்டால் இரண்டு குறளை அடுத்தடுத்து எழுதினது போலத் தோற்றும். இது இருகுறள் நேரிசை வெண்பா. இதில் எதுகை இரு வகையாக அமைந்தமையால் இருவிகற்ப நேரிசை வெண்பாவும் ஆகும்.

"முருகனே செந்தில் முதல்வனே மாயோன்
மருகனே ஈசன் மகனே-ஒருகைமுகன்
தம்பியே நின்னுடைய தண்டைக்கால் எப்பொழுதும்
நம்பியே கைதொழுவேன் நான்."

இந்தப் பழம் பாட்டில் இரண்டாவது அடியின் மூன்றாம் சீர் மகனே என்பது. இது வெண்பாவின் ஈற்றுச் சீர் ஆகாது. மகன் என்றோ மக என்றோ முடிந்தால் மலர் என்ற வாய்பாடாகக் கொள்ளலாம். மக என்பதற்கு மேல் னே என்ற அசை ஒன்று கூடுதலாக இருக்கிறது. அந்த அசை இங்கே ஆசு ஆகும். உலோகங்களை ஒன்றோடொன்று இணைக்க உதவும் பொருளுக்கு ஆசு என்றும் பற்றா சென்றும் பெயர். அதுபோலத் தனிச் சொல்லுக்கும் குறள் வெண்பாவின் ஈற்றுச் சீராக இருக்க வேண்டியதற்கும்

இடையே ஓரசையோ இரண்டசையோ வந்தால் அதை ஆசு என்று சொல்வார்கள்; அந்த வெண்பா ஆசிடையிட்ட óèÁi W ³Q å àGQ GÏu . µ Kó¿, னே என்ற நேரசை ஒன்று மட்டும் வந்தமையால் இது ஓராசு இடையிட்ட நேரிசை வெண்பா.

> "குன்ற மெறிந்தாய் குரைகடலிற் சூர்தடிந்தாய்
> புன்றலைய பூதப் பொருபடையாய்-என்றும்
> இளையா யழகியா யேறூர்ந்தா னேறே
> உளையாயென் னுள்ளத் துறை."

*இந்தப் பாட்டில் இரண்டாம் அடியின் மூன்றாம் சீர் பொருபடையாய் என்பது. அது பொரு என்று இருந்தால் மலர் என்ற வாய்பாட்டையுடைய குறளின் இறுதிச்சீர் ஆகும். அதற்கு மேல் படை-யாய் (நிரை நேர்) என்று இரண்டு அசைகளோடு ஒட்டிப் பின்வரும் தனிச் சொல்லோடு தளையும் பொருளும் பொருந்த இணைவதால், இது ஈராசு இடையிட்ட நேரிசை வெண்பா.*

*இரண்டாம் அடியின் மூன்றாம் சீரைக் கொண்டு இந்த வேறுபாட்டை உணர வேண்டும்.*

*'கண்டு' என்று இருந்தால் அது இருகுறள் நேரிசை வெண்பாவாகும். அதுவே 'கண்ட' என்று வந்தால் (கண்+ட) ஓராசிடையிட்ட நேரிசை வெண்பாவாகும். 'பிறகு' என்று வந்தால் இருகுறள் நேரிசை வெண்பா ஆகும். அதுவே 'பிறகோ' என நின்றால், ஓராசிடையிட்ட நேரிசை வெண்பா ஆகிவிடும். வெண்பாவின் இடையில் வரும் சீர் இது; ஆகையால் குற்றியலுகர ஈறுடைய காசு, பிறப்பு என்ற இரண்டு வாய்பாடுகளுக்கு ஏற்ப வருவனவெல்லாம் இருகுறள் நேரிசை வெண்பா ஆகும். மற்றவை யாவும் ஆசிடையிட்டவையே.*

இரண்டாம் அடியின் மூன்றாஞ் சீர் காசு, பிறப்பு என்ற வாய்பாட்டுக்கு ஏற்றபடி வந்தால், தனிச் சொல் நிரையை முதலாக உடைய சீராகவே இருக்கும்; முன் இரண்டடிகளும் நிரையை முதலாக உடையனவாகவே இருக்கும். ஆதலால், இருகுறள் நேரிசை வெண்பாக்கள் யாவுமே நிரையை முதலாக உடைய சீரில் தொடங்க வேண்டும்.

# 15. இன்னிசை வெண்பாவும் சிந்தியல் வெண்பாவும்

**நே**ரிசை வெண்பாவின் இலக்கணத்தைத் தெரிந்து கொண்டவர்களுக்கு இன்னிசை வெண்பாவின் இலக்கணம் தெரிந்து கொள்வது மிக எளிது. நான்கு அடிகளை உடைய வெண்பாக்களில் நேரிசை வெண்பாக்கள் அல்லாதன இன்னிசை வெண்பாக்களாம். இன்னிசை வெண்பாக்களில் வெண்பாவுக்குரிய பொது இலக்கணம் அமைந்திருக்க வேண்டும் என்பதை மறந்துவிடக் கூடாது. (1) வெண்டளையே வருதல், (2) ஈற்றடி முச்சீரால் வருதல், (3) ஈற்றுச் சீர் காசு, பிறப்பு, நாள், மலர் என்ற வாய்பாட்டில் அமைதல் என்ற மூன்று அடிப்படையான இலக்கணங்கள் இன்னிசை வெண்பாவிலும் அமைய வேண்டும். நேரிசை வெண்பாவில் இரண்டாவது அடியின் நான்காஞ் சீர் தனிச் சொல்லாக இருக்கும்; பாட்டு முழுவதும் ஒரெதுகையாக வேனும், முன் இரண்டடி ஒரெதுகை பின்னிரண்டடி மற்றோர் எதுகையாக இரண்டெதுகையாகவேனும் வரும். இந்த இலக்கணங்களில் எது வேறுபட்டாலும் அது இன்னிசை வெண்பா ஆகிவிடும். அப்படி வரும் இன்னிசை

*வெண்பாக்களை ஒருவாறு பின்கண்ட வண்ணம் வகுக்கலாம்;*

*(1) தனிச்சொல் இல்லாமல் ஒரெதுகையால் வருதல்.*

வண்ணத்தைத் தேடி மலியத் தொகுத்துவைத்துக்
கிண்ணத்தி லூற்றிக் கிழியெடுத்துத் தூரிகையை
நண்ணவைத்துத் தீட்டும் நயமில்லா ஓவியனே
எண்ணமெங்கே வைத்தாய் இசை.

*இது ஒரு விகற்ப இன்னிசை வெண்பா. இந்தப் பாடலில் இரண்டாம் அடி இறுதியில் தனிச் சொல் வந்திருந் தால் அது ஒரு விகற்ப நேரிசை வெண்பா ஆகும்.*

*(2) தனிச்சொல்லே இன்றி இரண்டு, மூன்று, நான்கு விகற்பங்களால் வருதல்.*

தெள்ளுதமிழ் நூலுள் திருவள் ளுவர்தந்த
ஒள்ளியநூ லாங்குறள்போல் உள்ளதுவே றுண்டோசொல்
வையம் புகழ்ந்து மதிக்கும் கருத்துடைத்தால்
செய்யதமிழ்ப் பாவும் சிறந்து.

*இது இரண்டு விகற்பத்தால் வந்தது.*

அருணகிரி நாதர் அயில்வேல் முருகன்
தருணஇளந் தாமரைத்தாள் சார்ந்தின்பம் பெற்றதனை
வண்ணத் திருப்புகழால் வாய்மலர்ந்தார் இவ்வுலகில்
பாடிமகிழ் வுற்றார் பலர்.

*இந்த வெண்பா முன் இரண்டடியும் ஒரெதுகையாய், பின் இரண்டடியும் தனித்தனி எதுகையாய் வந்தமையின் மூன்று விகற்பமுடைய இன்னிசை வெண்பா ஆயிற்று.*

கன்னிக் குமரி கவின்சேரும் தென்னெல்லை
வேங்கடமாம் குன்றம் விளங்கும் வடவெல்லை

இவ்விரண்டி னூடே எழில்பெறவே ஓங்குதமிழ்
சான்றோர் வழிபட்ட தாய்.

இந்த இன்னிசை வெண்பா, நான்கு அடிகளும் வெவ்வேறு எதுகையாக வந்தமையின் நான்கு விகற்பம் உடையதாயிற்று.

இங்கே காட்டிய மூன்றும் பலவிகற்பத்தால் வந்த இன்னிசை வெண்பா.

(3) தனிச்சொல் இரண்டாம் அடியிலன்றி மற்ற அடிகளில் வருதல்.

குன்றம் கவினும் குறிஞ்சியிலே-நின்றபிரான்
வென்றி வடிவேற்கை வீரன் மயிலேறும்
அண்ணல் முருகன் அவனடியே தஞ்சமென
நண்ணுவார்க் கெய்தும் நலம்.

இதில் முதலடியில் தனிச் சொல் வந்தது.

கொல்லிமலை வேளுக் குறிச்சியிலே கோழியினை
மெல்லத் துடையிடுக்கி வேட்டுவக்கோ லங்கொண்டு
வல்ல முருகன் வருமெழிலை-நல்லபடி
பார்த்தார் உளம்போம் பறி.

இதில் மூன்றாம் அடியில் தனிச்சொல் வந்தது.

"மழையின்றி மாநிலர்த்தார்க் கில்லை மழையும்
தவமிலா ரில்வழி இல்லைத்-தவமும்
அரசிலா ரில்வழி யில்லை-அரசனும்
இல்வாழ்வா ரில்வழி இல்."

இதில் அடிதோறும் தனிச் சொல் வந்தது.

(4) இரண்டாம் அடியில் தனிச் சொல் பெற்று மூன்று விகற்பத்தாலும் நான்கு விகற்பத்தாலும் வருதல்.

காவிரிசூழ் மோகைநகர்க் காந்தமலை மேயபிரான்
பூவிரிதாள் போற்றுகின்ற புண்ணியர்க்கு-நாவிரியும்
பலபுகழும் நீளும் பரந்த பொருளுடையும்
ஏற்றமன்றித் துன்பம் இலை.

இது இரண்டாம் அடியில் தனிச் சொல் பெற்று, மூன்று விகற்பத்தால் வந்த இன்னிசை வெண்பா.

நல்லன வெல்லாம் நனிசெய்வோம் என்றிருத்தல்
பூவில் இயலும் பொருளன்றே-ஆவதனால்
நாளுஞ்செய்த யாவையுமே நல்லனவென் றாக
ஒழுகினால் மேன்மை யுறும்.

இது இரண்டாம் அடியில் தனிச் சொல் பெற்று நான்கு விகற்பத்தால் வந்த இன்னிசை வெண்பா.

வெண்பாவின் பொது இலக்கணங்கள் அமைந்து நேரிசை வெண்பாவுக்கு வேறுபட்டு நிற்கும் நாலடியுள்ள எல்லா வெண்பாக்களும் இன்னிசை வெண்பாக்கள் ஆம். இந்த வேறுபாடு எதுகையைப் பார்த்தால் தெரிய வரும்.

## சிந்தியல் வெண்பா

நேரிசை வெண்பாவைப் போலவும் இன்னிசை வெண்பாவைப் போலவும் மூன்று அடிகளால் வரும் வெண்பா, சிந்தியல் வெண்பாவாகும். சீரானாலும் அடியானாலும் மூன்றாக வந்தால் சிந்து என்ற அடையைப் பெறும். நான்கு அடி சரியான அளவு; மூன்று அடி சிந்து; இரண்டடி குறள். இவற்றை முன்பும் பார்த்தோம். இரண்டடியுள்ள வெண்பாவைக் குறள் வெண்பா என்பர். மூன்றடியுள்ள வெண்பாவைச் சிந்தியல் வெண்பா என்பர்.

*நேரிசை வெண்பாவைப் போல இரண்டாம் அடியில் தனிச்சொல் வர, ஒரு விகற்பத்தாலோ இரண்டு விகற்பத் தாலோ வருவது* **நேரிசைச் சிந்தியல் வெண்பா.**

பாடிப் படித்துப் பயின்று பொருள்தெளிந்து
நாடி யுணர்ந்தொழுகும் நல்லவரைத்-தேடியே
கூடி வணங்குமுல கு.

*இது ஒரு விகற்பத்தால் வந்த நேரிசைச் சிந்தியல் வெண்பா.*

படைக்கலம் ஏந்தாமற் பாரித்துப் போரை
நடத்தியவன் காந்தியெனும் நல்லான்-அடற்கெதிரே
ஆரேநின் றாற்றுகிற் பார்.

*இது இரு விகற்பத்தால் வந்த நேரிசைச் சிந்தியல் வெண்பா.*

*தனிச் சொல் இன்றி ஒரு விகற்பத்தாலும் இரு விகற்பத்தாலும் பல விகற்பத்தாலும் வருவது* ***இன்னிசைச் சிந்தியல் வெண்பா.***

கண்ணன் அடியே கருதி வணங்குபவர்
எண்ணமெலாம் எண்ணியவா றீடேறும் என்பதனைத்
திண்ணமாய் நெஞ்சே தெளி.

*இது ஒரு விகற்பத்தால் வந்த இன்னிசைச் சிந்தியல் வெண்பா.*

சொல்லிற்குள் ளேபொருளில் தோய்ந்துணர்வி லேயூறி
நல்லசுவை கண்டுவகை நாட்டமுடை யோர்பாவின்
இன்பமெலாம் காண்பர் இனிது.

*இது இரு விகற்பத்தால் வந்த இன்னிசைச் சிந்தியல் வெண்பா.*

தெய்வந் தெளிந்தோர் சிறிதும் பிறர்க்கின்னல்
சூழாது நன்மைசெய்யும் தூயோர் அறமொன்றே
ஆற்றுவார் நல்லோர் அறி.

*இது மூன்று விகற்பத்தால் வந்த இன்னிசைச் சிந்தியல் வெண்பா.*

*முதல் அடியில் தனிச்சொல் வந்தாலும் இன்னிசைச் சிந்தியல் வெண்பாவே ஆகும்.*

# 16. பஃறொடை வெண்பாவும் கலி வெண்பாவும்

*குறள் வெண்பா இரண்டு அடிகளாலும், சிந்தியல் வெண்பா மூன்று அடிகளாலும், நேரிசை இன்னிசை வெண்பாக்கள் நான்கு அடிகளாலும் வரும் என்று அறிந்தோம். நாலடிக்கு மேற்பட்டு வரும் வெண் பாக்களைப் பற்றி இனிப் பார்ப்போம்.*

*நான்கு அடிக்குமேல் பன்னிரண்டு அடி வரைக்கும் வரும் வெண்பா பஃறொடை வெண்பாவாகும். இரண்டு அடிக்கு ஒரு தனிச் சொல் பெற்று வந்தாலும், அடி தோறும் தனிச் சொல் பெற்று வந்தாலும், தனிச் சொல்லே இன்றி வந்தாலும் வெண்டளை பிறழாமல் ஈற்றடி முச்சீராய், இறுதிச்சீர் நாள், மலர், காசு, பிறப்பு என்னும் நான்கு வாய்பாடுகளில் ஒன்றுடையதாய் அமைய வேண்டும்.*

"வையக மெல்லாங் கழனியா வையகத்துச்
செய்யகமே நாற்றிசையில் தேசங்கள் செய்ய

வான்கரும்பே தொண்டை வளநாடு வான் கரும்பின்
சாறேயந் நாட்டுத் தலையூர்கள் சாறட்ட
கட்டியே கச்சிப் புறமெல்லாம் கட்டியுட்
டானேற்ற மாய சருக்கரை மாமணியே
ஆனேற்றான் கச்சியகம்.''

*இது ஏழடியினால் வந்த பஃறொடை வெண்பா.*

*பன்னிரண்டு அடிக்கு மேல் வருவன கலிவெண்பா. முன்பெல்லாம் கலிப்பாவின் வகையான வெண்கலிப் பாவையே கலிவெண்பா என்று சொல்லி வந்தார்கள். வெண்டளையே வந்தாலும், அதோடு கலித்தளை விரவி வந்தாலும் வெண்கலிப்பா என்னும் பெயரால் வழங்கியது. பிற்காலத்தில் பல அடிகளால் வெண்டளை பிறழாது அமைந்த பாட்டையே கலிவெண்பா என்று சொல்ல லானார்கள். கந்தர் கலிவெண்பா, திருவிளையாடற் போற்றிக் கலிவெண்பா என்ற பிரபந்தங்கள் கலிவெண் பாவினால் அமைந்தவை. தூது, உலா, மடல் என்பவையும் கலிவெண்பாக்களால் அமைந்தவையே. பலபல உலாக்களும் தூதுகளும் தமிழில் உள்ளன.*

*கலிவெண்பாவில் இரண்டடிகளை ஒரு கண்ணி என்று சொல்லும் வழக்கம் ஏற்பட்டது. ''மூதுலாக் கண்ணி தொறும்'' என்று குறிப்பிட்டிருப்பதைக் காண்க. கண்ணி களைக் கொண்டு கணக்கிடும் வழக்கமும் உண்டாயிற்று. ஏழு கண்ணி முதல் எத்தனை கண்ணிகளாலும் கலிவெண்பா வரும். கண்ணி என்ற கணக்கு வந்துவிட்டபடியால் கலி வெண்பாவின் அடிகள் இரட்டைப் படையாகவே இருக்க வேண்டிய அவசியம் உண்டாயிற்று.*

*சங்க காலத்து நூலாகிய கலித்தொகையில் பல கலி வெண்பாக்கள் உள்ளன. அவற்றில் ஒற்றைப்படையான*

அடிகளை உடைய பாடல்களும் உண்டு. திருவாசகத்தில் முதலில் உள்ள சிவபுராணம் கலிவெண்பாவால் அமைந்தது. சேரமான் பெருமாள் நாயனார் இயற்றிய ஆதி உலா என்பது தான் இப்போது தெரியும் உலாக்களில் பழையது. அது கண்ணிகளாகப் பிரித்துக் கணக்கிடும் வகையில் அமைந்திருக்கிறது.

வெண்பாவின் பொதுவிலக்கணம் யாவும் அமைந்து அடி மிகுதி ஒன்றே தனக்குரிய வேறுபாடாகக் கொண்டதனால் கலி வெண்பாவைக் கலிப்பா வகையில் சேர்ப்பதை விட வெண்பா வகையில் சேர்ப்பதே பொருத்தமானது; கலித்தளை விரவிவரும் வெண்கலிப்பாவைக் கலிப்பா வகையில் சேர்க்கலாம்.

## 17. கலித்துறை வகை

இதுவரையிலும் ஆசிரிய விருத்தம், ஆசிரியப்பா வெண்பா ஆகியவற்றைப் பற்றிய இலக்கணங்களைத் தெரிந்து கொண்டோம். வெண்பா, ஆசிரியப்பா என்ற இரண்டு பாக்களே இலக்கியங்களில் பெரும்பாலும் வழங்குகின்றன. கலிப்பா வகையில் தரவு கொச்சகக் கலிப்பா என்பதும், அதன் இனத்தில் கலித்துறை, கலிவிருத்தம் என்பனவும் இன்றும் புலவர்களால் பாடப் பெறுகின்றன. விருத்தங்களாலான காப்பியங்களில் ஆசிரிய விருத்தங்களோடு மேலே சொன்ன மூவகைப் பாடல்களையும் காணலாம். கம்பனுடைய இராமாயணம் முழுவதும் விருத்தங்களாலானது என்று பொதுவாகச் சொல்வார்கள். ''கம்பன் விருத்தக் கவித்திறமும்,'' ''விருத்த மென்னும் ஒண்பாவுக் குயர் கம்பன்'' என்று அந்த விருத்தத்

திறத்தைப் பாராட்டிப் பழம் புலவர்கள் பாடியிருக் கிறார்கள். அதில் தரவு கொச்சகக் கலிப்பாவும் கலித் துறையும் இருக்கின்றன.

பாக்கள் நான்கு; பாவினங்கள் மூன்று. வெண்பா, ஆசிரியப்பா, கலிப்பா, வஞ்சிப்பா என்பவை நான்கு பாக்கள். இவற்றில் ஒவ்வொன்றுக்கும் தாழிசை, துறை, விருத்தம் என்று மும்மூன்று இனங்கள் உண்டு. ஆசிரியப்பா வின் இனங்களில் ஒன்றாகிய ஆசிரிய விருத்தத்தின் இலக்கணத்தை விரிவாகப் பார்த்தோம். வெண்பாவின் இனமான விருத்தத்துக்கு வெளிவிருத்தம் என்று பெயர். கலியினங்களில் ஒன்று கலிவிருத்தம். அப்படியே வஞ்சியினங்களில் ஒன்று வஞ்சி விருத்தம். இந்த விருத்தங்கள் யாவுமே அளவொத்த நான்கு அடிகளை உடையன. கலித்துறையென்பது அடிக்கு ஐந்து சீர்களாய் நான்கு அடியும் அளவொத்து வருவது.

> வேதம் யாவையும் அறிந்துயர் வித்தகன் விமல
> போதம் மேவிய புங்கவன் எங்கணும் புகழ்கொள்
> நாதன் நான்முக னும்பொரு வில்லனாம் நம்பன்
> கோத மில்லவன் திருவடி பணிந்துகை குவிப்பாம்.

இது கலித்துறை. இதைக் கலிநிலைத்துறை என்றும் சொல்வதுண்டு. இந்தச் செய்யுளில் ஓரடிக்கு ஐந்து சீர்கள் வந்துள்ளன. முதற் சீரும் ஐந்தாம் சீரும் மாச்சீராகவும் மற்ற மூன்று சீர்களும் விளச்சீர்களாகவும் வந்திருக்கின்றன.

> வேதம் - யாவையும் - அறிந்துயர் - வித்தகன் - விமல
> தேமா - கூவிளம் - கருவிளம் - கூவிளம் - புளிமா.

முதற்சீரும் ஐந்தாம் சீரும் புளிமாவாகவும் வரலாம்; தேமாவாகவும் வரலாம். முதற்சீர் ஓரடியில் தேமாவாக வந்தால் நான்கடிகளிலும் தேமாவாகவே வர வேண்டும்.

ஐந்தாம் சீரில் இந்த நியதி இல்லை. இந்தப் பாட்டிலே விமல (புளிமா), புகழ் கொள் (புளிமா), நம்பன் (தேமா), குவிப்பாம் (புளிமா) என்று இருவகை மாச்சீர்களும் ஐந்தாம் சீராக வந்திருப்பதைக் காண்க.

ஐந்து சீர்களையுடைய அடி நெடிலடி என்று பெயர் பெறுமென்று முன்பே தெரிந்து கொண்டிருக்கிறோம். ''கலித்துறையே நெடிலடி நான்கா நிகழ்வது'' என்று யாப்பருங்கலக் காரிகை கூறும்.

விருத்தக் கலித்துறை என்பது ஒரு வகை.

''வென்றான் வினையின் தொகையாயவி
ரிந்து தன்கண்
ஒன்றாய்ப் பரந்த உணர்வின்னொழி
யாது முற்றும்
சென்றான் திகழும் சுடர்சூழொளி
மூர்த்தி யாகி
நின்றா னடிக்கீழ்ப் பணிந்தார்வினை
நீங்கி நின்றார்.''

இதில் அடிதோறும் ஐந்து சீர்கள் உள்ளன. முன் மூன்று சீர்களிடையே வெண்டளை வந்தது. மூன்றாவது சீர் கனிச்சீராகவும் நான்காவது ஐந்தாவது சீர்கள் மாச்சீராகவும் ளஉள்ளன. குண்டலகேசி, சீவக சிந்தாமணி முதலியவற்றில் இத்தகைய கலித்துறைகள் வந்துள்ளன. காப்பியங்களில் வந்தமையால் இவற்றைக் காப்பியக் கலித்துறையென்றும் சொல்வார்கள்.

''செம்பொன் வரைமேற் பசும்பொன்னெழுத்
திட்ட தேபோல்
அம்பொன் பிதிர்வின் மறுவாயிரத்
தெட்ட ணிந்து

வெம்புஞ் சுடரிற் சுடருந்திரு
மூர்த்தி விண்ணோர்
அம்பொன் முடிமே லடித்தாமரை
சென்னி வைப்பாம்.''

இந்தச் சீவக சிந்தாமணிப் பாட்டிலும் மேலே சொன்ன வகையில் சீர்கள் அமைந்திருக்கின்றன. பிற்கால நூல்களில் இந்த விருத்தக் கலித்துறையைப் புலவர்கள் மிகுதியாக எடுத்தாளவில்லை.

கட்டளைக் கலித்துறை என்பது ஒரு வகை. கட்டளை என்பது கணக்கு என்ற பொருளையுடையது. எழுத்துக் கணக்கை உடைய பாடல்களுக்குக் கட்டளை என்ற அடை இருக்கும். கட்டளைக் கலிப்பா அத்தகையது.

கட்டளைக் கலித்துறையும் நான்கு அடிகளும் அடிக்கு ஐந்து சீரும் உடையது. ஆனால் அளவு ஒத்து வருவதன்று. அளவொத்து வருவதாவது, மாச்சீர் ஓரடியில் ஓரிடத்தில் வந்தால் மற்ற அடிகளில் அவ்விடத்தில் மாச்சீரே வருவது. இப்படியே மற்றச் சீர்களும் வரும். கட்டளைக் கலித் துறையில் இந்த வரையறை இல்லை.

இதற்கு எழுத்துக் கணக்கு உண்டு. நேரை முதலாக உடைய அடியில் ஒற்றை நீக்கிப் பதினாறு எழுத்துக்களும், நிரையை முதலாக உடைய அடியில் பதினேழு எழுத்துக்களும் அமைய வேண்டும்.

ஆசிரியச் சீர், வெண்சீர் என்னும் இரு வகைச் சீர்களே இந்தப் பாடலில் வரும்; அதாவது மாச்சீர், விளச்சீர், காய்ச்சீர் என்பனவே வரும். ஒவ்வோரடியிலும் கடைசிச் சீர் மாத்திரம் விளங்காய்ச் சீராக இருக்கும்; மற்றவற்றில் காய்ச்சீர் வந்தால் மாங்காய்ச் சீர்களாகவே இருக்கும். ஒவ்வோர் அடியிலுமுள்ள ஐந்து சீர்களிடையிலும்

வெண்டளை அமைய வேண்டும். இது மிகவும் முக்கிய மானது. ஆனால் முதலடியின் ஈற்றுச் சீருக்கும், அடுத்த அடியின் முதற் சீருக்கும் இடையே வெண்டளை இருக்க வேண்டியதில்லை. நேரை முதலாக உடைய பாட்டில் இங்கும் வெண்டளை இருக்கும்.

வெண்டளை மேலே சொன்ன வகையில் வந்து, ஐந்து சீர்களில் ஈற்றுச் சீரில் மட்டும் விளங்காய்ச் சீர் வந்து அமைந்தால் எழுத்துக் கணக்குச் சரியாக இருக்கும். எழுத்தை எண்ணிப் பாட வேண்டாம். முன் சொன்ன இலக்கணம் இருந்தால் நிச்சயமாக எழுத்துக் கணக்குத் தவறாமல் இருக்கும்.

"நாளென் செயும்வினை தானென்
செயுமெனை நாடிவந்த
கோளென் செயுங்கொடுங் கூற்றென்
செயுங்கும ரேசரிரு
தாளுஞ் சிலம்புஞ் சதங்கையுந்
தண்டையுஞ் சண்முகமும்
தோளுங் கடம்பு மெனக்குமுன்
னேவந்து தோன்றிடினே."

இந்தப் பாட்டில் நாளென், தாளென், கோளென், கூற்றென், தாளுந், தோளுங்-என்பவை தேமாச் சீர்கள், சிலம்புஞ், கடம்பு-என்பன புளிமாச் சீர்கள். இவற்றின் முன் நிரை வந்துள்ளது. செயும்வினை, செயுமெனை, செயுங் கொடுங், செயுங்கும, சதங்கையுந், மெனக்குமுன் என்பன கருவிளச் சீர்கள். தண்டையும் என்பது கூவிளச்சீர். இவற்றின் முன் நேர் வந்தது. னேவந்து என்பது காய்ச்சீர். இதற்கு முன்னும் நேர் வந்தது. இவ்வாறு வெண்டளை அமைந்தது காண்க. ஒவ்வோரடியின் ஈற்றுச் சீரும் விளங்காய்ச் சீராக வந்திருக்கிறது. நாடிவந்த (கூவிளங்

காய்), ரேசரிரு (கூவிளங்காய்), சண்முகமும் (கூவிளங்காய்), தோன்றிடினே (கூவிளங்காய்) என்பவற்றைக் காண்க. கருவிளங்காயும் வரலாம். இறுதி ஏயில் முடியும்.

கந்தர் அலங்காரம் முழுவதும் கட்டளைக் கலித் துறையால் ஆனது. கோவை நூல்கள் யாவுமே கட்டளைக் கலித்துறையால் அமைந்தவை. அவற்றைப் படித்துக் கட்டளைக் கலித்துறை பாடக் கற்றுக் கொள்ளலாம்.

கலித்துறைகளில் ஐந்தாம் சீரில் மோனை அமைவது சிறப்பு.

# 18. விருத்த வகை

ஒவ்வொரு வகைப் பாவுக்கும் தாழிசை, துறை, விருத்தம் என்று மூன்று இனங்கள் உண்டு என்பதை முன்பே தெரிந்து கொண்டோம். அவற்றில் கலித்துறையைப் பற்றி யும் ஆசிரிய விருத்தத்தைப் பற்றியும் அறிந்தோம். இனி மற்ற விருத்தங்களின் இலக்கணத்தையும் கவனிக்கலாம்.

## வெளிவிருத்தம்

வெண்பாவின் இனமாகிய விருத்தத்தை வெண்பா விருத்தம் என்று சொல்வதில்லை; வெளி விருத்தம் என்பார்கள். மற்றவை அவ்வப்பாவின் பெயர்களோடு இணைந்திருக்கும்; ஆசிரிய விருத்தம், கலிவிருத்தம், வஞ்சி விருத்தம் என்று அவை பெயர் பெறும்.

வெளி விருத்தம் ஐந்து சீர்களை உடைய அடிகள் மூன்றோ நான்கோ பெற்று வரும். இதில் முக்கியமான

இலக்கணம், ஒவ்வோர் அடியிலும் ஒரே சொல்லோ தொடரோ ஐந்தாவது சீராக இருக்கும். **நான்கு அடிகளும் ஒரெதுகையாக வரும்;** இது எல்லா விருத்தங்களுக்கும் பொது இயல்பு.

வீரம் இல்லார் வீரம் பெற்றார் காந்தியினால்
சீரொன் றில்லாத் தேயம் இலங்கும் காந்தியினால்
போரென் றாலும் உயிர்க்கோள் இல்லை காந்தியினால்.

இந்த வெளிவிருத்தம் மூன்றடிகளால் வந்து, காந்தியினால் என்ற ஒரு சொல்லே அடிதோறும் ஐந்தாம் சீராகப் பெற்றிருப்பது காண்க.

"ஆவா வென்றே அஞ்சின ராழ்ந்தார் ஒருசாரார்
கூகூ வென்றே கூவிளி கொண்டார் ஒருசாரார்
மாமா வென்றே மாய்ந்தனர் நீத்தார் ஒருசாரார்
ஏகீர் நாய்கீர் என்செய்து மென்றார் ஒருசாரார்."

இது நான்கடியால் வந்த வெளிவிருத்தம். ஈற்றில் ஒரு தொடரே வராவிட்டால் இது கலித்துறை ஆகிவிடும்.

ஆசிரிய விருத்தத்தின் இலக்கணத்தை முன்பே விரிவாகப் பார்த்துவிட்டோம்.

## கலிவிருத்தம்

அளவொத்து வரும் நான்கு சீர் அடிகள் நான்காக வருவது கலிவிருத்தம்.

"உலகம் யாவையும் தாமுள வாக்கலும்
நிலைபெ றுத்தலும் நீக்கலும் நீங்கலா
அலகி லாவிளை யாட்டுடை யாரவர்
தலைவ ரன்னவர்க் கேசர ணாங்களே."

கம்ப ராமாயணத்தில் வரும் இது கலி விருத்தம். இந்த விருத்தத்தில் அடி தோறும் பன்னிரண்டு எழுத்துக்களே இருப்பதைக் காணலாம். யாப்பிலக்கணத்தில் வரும் எழுத்துக் கணக்கில் ஒற்றுச் சேராது என்பதை நினைவில் வைத்துக் கொள்ள வேண்டும். இந்த விருத்தத்தில். ''புளிமா கூவிளம் கூவிளம் கூவிளம்'' என்ற வாய்பாட்டில் ஒவ் வோரடியும் வந்திருக்கிறது. புளிமாவுக்குப் பதில் தேமா இருந்தால் அடிதோறும் பதினோரெழுத்துக்கள் இருக்கும்.

சாந்த மாமுனி வோர்தொழும் தற்பரன்
சேந்தன் வேலவன் சேவலெ டுத்தவன்
போந்த கொங்கிற் பொலிதரு மோகனூர்க்
காந்த மாமலை காதல்செய் தானரோ.

இந்தப் பாடலில் அடிதோறும் பதினோரெழுத்து வந்ததைக் காணலாம். கொங்கிற்-பொலிதரு என்னும் இடத்தில் கூவிளஞ் சீர் வராவிட்டாலும் மா வந்த பொழுது அடுத்து நிரை வந்தமையால் ஓசை கெடாமல் எழுத்துக் கணக்கும் கெடாமல் நின்றன.

பலபல கலையுணர் பருணிதர் குலவினர்
கலைநல மிகுசுவை கருதினர் பருகினர்
அலைபடு கடலென அளவறு பனுவல்கள்
குலவுற அவைநனி குவியுற நிறுவினர்.

இதுவும் ஒரு வகைக் கலி விருத்தம். ஒவ்வொரு சீரும் கருவிளமாகவே வந்தது. பனுவல்கள் என்பதில் லகர ஒற்று அலகிடப்படாது.

கந்தர் அநுபூதியில் வருவன கலிவிருத்தங்களே.

"ஆடும் பரிவே லணிசே வலெனப்
பாடும் பணியே பணியா யருள்வாய்

தேடும் கயமா முகனைச் செருவில்
சாடுந் தனியா னைசகோ தரனே.''

*கலி விருத்தங்களில் இன்னும் பலவகை உண்டு.*

## வஞ்சி விருத்தமும் வஞ்சித் துறையும்

*வஞ்சி விருத்தம் மூன்று சீரடிகள் நான்கினால் வரும்.*

''சோலை யார்ந்த சுரத்திடைக்
காலை யார்கழ லார்ப்பவும்
மாலை மார்பன் வருமெனின்
நீல வுண்கண் இவள்வாழும்.''

*இது வஞ்சி விருத்தம்.*

பாதம் பரவிப் பணியின்
ஏதம் எதுவும் இல்லாப்
போதம் அருளிப் புகுவான்
கோதில் கருணைக் குமரன்.

*இதுவும் வஞ்சி விருத்தம்.*

*இதனோடு தொடர்ந்து வேறு ஒன்றையும் தெரிந்து கொண்டால் நினைவில் நன்றாகப் பதியும்.*

*இரண்டு சீரடிகள் நான்கு வந்தால் அதற்கு வஞ்சித்துறை என்று பெயர்.*

'கண்ணன் கழலிணை
நண்ணும் மனமுடையீர்
எண்ணும் திருநாமம்
திண்ணம் நாரணமே.''

*இது நம்மாழ்வார் வாடல்; வஞ்சித் துறை.*

இப்போது அளவொத்து வரும் அடிகளைக் கொண்ட பாடல்கள் இன்னவை என்பதை நினைவுக்குக் கொண்டு வருவோம்.

இரு சீரால் வரும் அடி நான்கை உடையது **வஞ்சித்துறை.**

மூன்று சீரால் வரும் அடி நான்கை உடையது **வஞ்சி விருத்தம்.**

நான்கு சீரால் வரும் அடி நான்கை உடையது **கலிவிருத்தம்.**

ஐந்து சீரால் வந்து ஒரு சொல்லே ஈற்றில் வருவது **வெளிவிருத்தம்.**

ஐந்து சீரால் வரும் அடி நான்கை உடையது **கலித்துறை.**

ஆறுசீர் முதல் எத்தனை சீராலும் வரும் அடி நான்கை உடையது **ஆசிரிய விருத்தம்.**

சீர்க் கணக்கை வரிசையாக எண்ணிப் பார்த்துத் தெரிந்து கொள்ள வேண்டியவை இவை.

விருத்த வகையை மட்டும் கவனித்தால் பின் வருவனவற்றை நினைவிற் கொள்ள வேண்டும்.

1. **வெளிவிருத்தம் :** 5 சீர்; ஒரே சொல் ஈற்றுச் சீர்; மூன்று அல்லது நான்கடி.
2. **ஆசிரிய விருத்தம் :** 6 சீர் முதல் எத்தனை சீரும் வரலாம்; நான்கடி.
3. **கலிவிருத்தம் :** 4 சீர்; 4 அடி.
4. **வஞ்சி விருத்தம் :** 3 சீர்; 4 அடி.

# 19. தரவு கொச்சகக் கலிப்பா

கம்ப ராமாயணம் முதலிய காப்பியங்களில் வரும் நான்கடிச் செய்யுள் ஒன்று உண்டு. அது **தரவு கொச்சகக் கலிப்பா** என்று பேர் பெறும். கலிப்பாவின் இலக்கணத்தை இன்னும் நாம் பார்க்கவில்லை. இலக்கியங்களில் பெருக வழங்கும் செய்யுட்களையே ஒன்றன்பின் ஒன்றாகப் பார்த்து வருகிறோம். யாப்பிலக்கணத்தில் உள்ள முறைப்படி எழுத்து, அசை, சீர், தளை, தொடை, அடி, பா, பாவினம் என்று நாம் இப்போது பார்க்கவில்லை. ஆகவே, கலிப்பா வகை எல்லாவற்றின் இலக்கணத்தையும் தெரிந்து கொள்வதற்கு முன் தரவு கொச்சகக் கலிப்பாவைப் பற்றிமட்டும் இப்போது தெரிந்து கொள்ளலாம்.

கலிப்பாவுக்குப் பல உறுப்புக்கள் உண்டு. அதன் முதல் உறுப்புத் தரவு; கடைசி உறுப்பு, சுரிதகம். ஒரு தரவு மாத்திரம் தனியே வருவது தரவு கொச்சகக் கலிப்பாவில் ஒரு வகை. அதுவே விருத்தம் பயின்று வரும் நூல்களில் வரும்.

இந்தத் தரவு கொச்சகக் கலிப்பா நான்கு அடிகளால் ஆனது. ஈரசைச் சீர்களாகிய மாச்சீரும் விளச் சீரும் மூவசைச் சீர்களுள் காய்ச்சீரும் உடையதாகி வரும். முழுதும் காய்ச்சீர்களால் வருவதும் உண்டு. ஈரசைச் சீர் வரும் போது மாச்சீருக்கு முன் நிரை வரும். மற்றவை எப்படி வேண்டுமானாலும் வரும்.

எந்நாளும் மங்காத இளமையெழில் உறுகுமரன்
மின்னாளும் வடிவேற்கை வித்தகன்சே வற்கொடியோன்
முந்நான்கு திருக்கரத்தோன் மோகைநகர்க் காந்தமலை
மன்னாவான் தனைமறவா மாண்பினர்துன் படையாரே.

இந்தப் பாடலில் எல்லாம் வெண்சீராக-காய்ச்சீராக-வந்திருப்பதைக் காண்க. காய்முன் நேரும், காய் முன் நிரையும் இதில் விரவி வந்துள்ளன.

கண்ணன் திருவடியே கைதொழுது பூப்புனைந்து
நண்ணும் அவன்புகழை நாடொறும் கேட்டுவந்தோர்
திண்ண முடையநெஞ்சும் சீரும் சிறப்புமடைந்
தெண்ணில் பெருமைக் கிருப்பிடமா யிலகுவரே.

இந்தப் பாடலில் காய்ச்சீரும் மாச்சீரும் விளச்சீரும் விரவி வந்துள்ளன. காய்முன் நேரும், காய்முன் நிரையும் வந்துள்ளன. இருப்பிடமா-யிலகுவரே; இங்கே காய்முன் நிரை வந்தது காண்க. நாடொறும் என்னும் விளச்சீர் முன் நேர் வந்தது. விளமுன் நிரை வருவதும் உண்டு. ஆனால் இதில் உள்ள மாச்சீர்கள் எல்லாவற்றுக்கும் முன் நிரை வந்திருப்பது காண்க. கண்ணன் திருவடியே-நண்ணும் அவன் புகழை-திண்ண முடையநெஞ்சும்-சீரும் சிறப்புமடைந்-தெண்ணில் பெருமைக் கிருப்பிடமா என்பவற்றைக் காண்க.

"தோலுந் துகிலும் குழையும் சுருள்தோடும்
பால்வெள்ளை நீறும் பசுஞ்சாந்தும் பைங்கிளியும்
சூலமும் தொக்க வளையு முடைத்தொன்மைக்
கோலமே நோக்கிக் குளிர்ந்தூதாய் கோத்தும்பீ"

என்னும் திருவாசகப் பாடலும் தரவு கொச்சகக் கலிப்பாவே. இதில் காய்ச்சீரும் மாச்சீரும் விளச்சீரும் வந்தன. மாச்சீர் வந்த இடங்களிலெல்லாம் அதன் முன் நிரையே வந்திருப்பதைக் கவனிக்க வேண்டும். தோலுந் துகிலும் குழையும் சுருள்தோடும்-நீறும் பசுஞ்சாந்தும்-தொக்க வளையு முடைத் தொன்மை-நோக்கிக் குளிர்ந்தூதாய் என்பவற்றைக் காண்க.

தரவு கொச்சகக் கலிப்பா நான்கு அடிகளுக்கு அதிகமாக வருவதையும், வேறு வகையில் வருவதையும் பின்பு

பார்த்துக் கொள்ளலாம். இப்போதைக்கு நாலடியால் வரும் தரவு கொச்சகக் கலிப்பாவைப் பற்றி மாத்திரம் தெரிந்து கொண்டால் போதும். இது பா வகையில் ஒன்றாக இருந்தாலும் விருத்தங்களால் ஆன காப்பியங்களிடையே மிகுதியாக வருகிறது.

# 20. யாப்பிலக்கணம்

**த**மிழைப்பற்றிச் சொல்லும்போது முத்தமிழ் என்று சொல்வது ஒரு வழக்கு. இயல், இசை, நாடகம் என்று மூன்று பெரும் பிரிவாகப் பிரித்துத் தமிழை ஆராய்ந்தார்கள் புலவர்கள். இலக்கிய இலக்கணங்கள் இயற்றமிழ்; இசைப் பாடல்கள், அவற்றின் இலக்கணங்கள் இசைத் தமிழென்னும் பிரிவைச் சார்ந்தவை; கூத்தைப் பற்றிய இலக் கணமும் இலக்கியமும் நாடகத் தமிழ்.

இயல்தமிழின் இலக்கணத்தை இக்காலத்தில் ஐந்தாகப் பிரிப்பார்கள்; எழுத்து, சொல், பொருள், யாப்பு, அணி என்பன அவை. பழங்காலத்தில் யாப்பு, அணி என்பவற்றைப் பொருளில் அடக்கிச் சொன்னார்கள். தொல்காப்பியத்தில் யாப்பிலக்கணமாகிய செய்யுளின் இலக்கணம் பொருளதிகாரத்தில் செய்யுளியலில் சொல்லப் பெறுகிறது.

மிகப் பழங்காலத்திலேயே தமிழில் கவிபாடும் புலவர்கள் தோன்றினர்; பல பாடல்களைப் பாடினர். நாளடைவில் தமிழுக்கு இலக்கணம் வகுத்த புலவர்கள் செய்யுளின் இலக்கணத்தையும் வரையறுத்தார்கள். யாப்பு, பாட்டு, தூக்கு, செய்யுள் என்பன கவியைக் குறிக்கும் சொற்கள். செய்யுள் இலக்கணத்தை யாப்பிலக்கணம் என்று வழங்குவது மரபாக இருக்கிறது. யாத்தல் என்பது கட்டுதல்

என்ற பொருளையுடையது. யாப்பு-கட்டப்பட்டது (*Composition*). உலகவழக்கில், ''பாட்டுக் கட்டினான்'' என்று பேசுவதைக் காண்கிறோம். ''கழல்யாப்புக் காரிகை நீர்த்து'' என்ற குறளில் யாப்பு என்னும் சொல் கட்டுதல் என்னும் பொருளில் வந்ததைக் காணலாம்.

இப்போது நமக்குத் தெரிந்த இலக்கண நூல்களில் மிகப் பழமையானது அகத்திய முனிவர் இயற்றிய அகத்தியம். அது மூன்று தமிழுக்கும் உரிய இலக்கணத்தைக் கூறும் நூல். இயற்றமிழ் இலக்கணப் பகுதியில் செய்யுளின் இலக்கணமும் இருந்தது. அது மிக விரிவாக இருந்தது என்று தெரிய வருகிறது. தொல்காப்பிய உரையில் பேராசிரியர், 'செய்யுளிலக்கணம் அகத்தியத்துப் பரந்து கிடந்ததனை' (மரபியல், 95, உரை) என்று எழுதுகிறார். இப்போது அகத்தியம் கிடைக்கவில்லையாதலின், அகத்தியர் செய்யுளின் இலக்கணத்தை இன்னவாறு வரையறுத்தார் என்று தெரிந்து கொள்ள முடியவில்லை.

அகத்தியத்துக்கு அடுத்தபடி பழமையான இலக்கண நூல் தொல்காப்பியம். அதில் பொருளதிகாரத்தில் ஒன்பது இயல்கள் இருக்கின்றன. எட்டாவது இயல் செய்யுள் இயல். அதில் 243 சூத்திரங்கள் உள்ளன. அதைத் தனியே ஓரதிகாரமாகக் கொள்ளக் கூடாது; பொருளில் அடங்கியதே என்று கூறுவார் பேராசிரியர். தொல்காப்பியச் செய்யுளியல் உரையில், 'மற்று இதனை யாப்பதிகாரம் என வேறு ஓர் அதிகாரமாக்கி உரைப்பாரும் உளர். அங்ஙனம் கூறின் வழக்கதிகாரம் எனவும் வேறு வேண்டுமெ‌ன மறுக்க' என்று அவர் எழுதியுள்ளார்.

தொல்காப்பியச் செய்யுளியலில் செய்யுளுக்கு உறுப்புக்கள் என்று முப்பத்து நான்கைக் கூறுகிறார் ஆசிரியர் தொல்காப்பியர்.

பொருளிலக்கணத்தின் பகுதியாக இருந்த யாப்பிலக்கணம் விரிந்து, நாளடைவில் தனியே இலக்கண நூல் அமைக்கும்படி ஆயிற்று. யாப்பருங்கலம் என்னும் நூலின் உரையில் அவ்வுரையாசிரியர் பல பல யாப்பிலக்கண நூல்களை எடுத்து மேற்கோள் காட்டுகிறார். அவற்றைப் பார்க்கும் போது, பழங்காலத்தில் யாப்பிலக்கண ஆராய்ச்சி மிக விரிவாக நடைபெற்றது என்று தெரியக் கிடக்கிறது.

தனிச் செய்யுளையன்றி நூல்களின் இலக்கணத்தைச் சொல்லும் இலக்கணங்கள் தனியே உண்டாயின. அவற்றைப் பாட்டியல் என்று சொல்வார்கள். பன்னிரு பாட்டியல் என்பது பழைய பாட்டியல் நூல்.

மாபுராணம், பூதபுராணம் என்று இரண்டு பழைய யாப்பிலக்கண நூல்கள் இருந்தன. அவை மிகவும் விரிவாக இருந்தன என்பதை, 'பரந்துபட்ட பொருண்மையவாகிய மாபுராணம் பூத புராணம் என்பன சில் வாழ்நாட் சிற்றறிவின் மாக்கட்கு உபகாரப் படாமையின்' (தொல். மரபியல்,97,உரை) என்று பேராசிரியர் எழுயதிலிருந்து தெரிந்து கொள்ளலாம். இலக்கண நூலுக்குப் புராணம் என்ற பெயர் அமைந்தது விநோதமாக இருக்கிறது. அவிநயம் என்பது ஐந்து இலக்கணத்தையும் உடைய பழைய நூல். அதில் யாப்பதிகாரம் விரிவாக இருந்தது.

தொல்காப்பியத்தை அடியொற்றியும் பல விரிந்த பகுதிகளை இணைத்தும் பல்காப்பியர் என்னும் புலவர் ஒரு செய்யுளிலக்கண நூல் செய்தார். அது பல்காப்பியம் என்னும் பெயரோடு வழங்கியது. அப்படியே பல்காயனார் என்பவர் பல்காயம் என்ற யாப்பிலக்கண நூலை இயற்றினார்.

காக்கைபாடினியார் என்னும் பெண்புலவர் ஒரு யாப்பிலக்கண நூல் செய்தார். அதற்குக் காக்கை பாடினியம்

என்று பெயர். அவரை, ''கற்றார் மதிக்கும் கலைக் காக்கை பாடினியார்'' என்று ஒரு பாட்டிலே புலவர் ஒருவர் சிறப்பித்துப் பாராட்டுகின்றார். சிறு காக்கை பாடினியம் என்று பிற்காலத்தில் செய்யுளிலக்கண நூல் ஒன்று இருந்தது. அதை இயற்றியவர் மற்றொரு காக்கை பாடினியார்.

இவற்றையன்றிக் கையனார் யாப்பு, நத்தத்தர் யாப்பு, சங்கயாப்பு, மயேச்சுவரர் யாப்பு என்ற பெயரோடு வழங்கிய நூல்கள் யாவும் யாப்பிலக்கணத்தைத் தனியே வரையறுத்துச் சொல்லுபவை. பரிமாணனார், பனம்பாரனார், நல்லாறனார், வாய்ப்பியனார், கடிய நன்னியார், பாடலனார் என்னும் ஆசிரியர்களும் செய்யுளின் இலக்கணத்தைச் சொல்லியிருக்கிறார்கள். பெரிய பம்மம், செய்யுளியல், யாப்பியல், கவிமயக்கறை பெரிய முப்பழம், தக்காணியம் என்னும் பெயருள்ள நூல்களிலும் செய்யுளிலக்கணங்கள் சொல்லப்பட்டன என்று உரைகளில் வரும் குறிப்புக்களால் தெரிய வருகின்றது.

தமிழ் நெறி விளக்கம் என்ற நூலில் யாப்பிலக்கணம் இருந்திருக்கக் கூடும் என்று அதன் பதிப்பாசிரியராகிய மகாமகோபாத்தியாய டாக்டர் ஐயரவர்கள் எழுதியிருக்கிறார்கள்.

இப்போது நமக்கு உருப்படியாகக் கிடைக்கும் பழைய செய்யுள் இலக்கணம் தொல்காப்பியச் செய்யுளியல் ஒன்று தான். எழுத்து முதலிய இலக்கணங்கள் முழுவதையும் வரையறுக்கும் பிற்கால நூல்களில் யாப்பின் இலக்கணமும் அமைந்திருக்கிறது. வீரசோழியம், இலக்கண விளக்கம், தொன்னூல், முத்து வீரியம் என்பவற்றில் செய்யுளிலக்கணப் பகுதி இருப்பதைக் காணலாம்.

புலவர்கள் யாப்பிலக்கணத்துக்கு மேல்வரிச் சட்டமாகக் கொண்டு பாராட்டும் நூல் **யாப்பருங்கலக் காரிகை**. அதனை இயற்றியவர் முதற் குலோத்துங்கன்

காலத்தில் வாழ்ந்த அமுதசாகரர் என்பவர். அவர் ஜைனர். முதலில் **யாப்பருங்கலம்** என்னும் நூலை இயற்றிப் பின்பே யாப்பருங்கலக் காரிகையை இயற்றினார். இந்த இரண்டுக்கும் குணசாகரர் என்பவர் விரிவான உரைகளை இயற்றியுள்ளார். யாப்பருங்கலம் நூற்பா என்னும் சூத்திர வடிவில் அமைந்தது, யாப்பருங்கலக் காரிகை கட்டளைக் கலித்துறைகளால் அமைந்தது. ''காரிகை கற்றுக் கவி பாடுவதிலும், பேரிகை கொட்டிப் பிழைப்பது நன்றே'' என்பது ஒரு பழமொழி. தமிழ் நாட்டில் கவி பாடுபவர்கள் காரிகையை ஆழ்ந்து கற்றார்கள் என்பதை இந்தப் பழமொழி புலப்படுத்துகிறது.

யாப்பிலக்கணத்தில் இரண்டு வகையான முறைகள் இருந்தன என்று தெரிகிறது. அசைகளை நேர்-நிரை-நேர்பு-நிரைபு என்று பிரித்தும், அடிக்கு எழுத்தெண்ணிக் கணக்குப் பண்ணிக் கட்டளையடி என்று வகுத்துப் பெயரிட்டும், தளைக்கு இலக்கணம் கூறாமல் விட்டும், பாவினம் என்ற பிரிவைக் கொள்ளாமலும் இலக்கணம் வகுத்தவர் ஒரு சாரார். தொல்காப்பியத்தில் இந்த முறையைக் காணலாம். அந்நூலின் உரையில் தளை வகுத்தல் தொல்காப்பியருக்கும் அவரைப் பின் பற்றி நூல் இயற்றிய ஆசிரியர்களுக்கும் உடம்பாடு அன்று என்று பேராசிரியர் வற்புறுத்திக் கூறுவார். விருத்தம் போன்ற பாடல்களைச் கொச்சகம் என்ற வகையில் பழைய ஆசிரியர்கள் அடக்குவர் என்பதைச் சிலப்பதிகார உரையினால் அறியலாம்.

ஆனால் இந்த முறை நீண்ட காலத்துக்கு முன்பே வழக்கு இழந்திருக்க வேண்டும். சீர்வகைப்படி அடிவரையறை செய்தலும், தளையை வகுத்தலும், பாவினங்களை ஏற்பதுமாகிய முறையை மயேச்சுவரர் என்பவர் விரிவாகத் தம் இலக்கணத்தில் உரைத்திருக்க

வேண்டுமென்று தோன்றுகிறது. அந்த முறைப்படி நூல்களை இயற்றினார் அமுதசாகரர். வெண்பா முதலியவற்றுக்குச் செப்பலோசை முதலிய ஓசைகள் உண்டு என்று இலக்கணம் கூறினாலும், அவற்றைத் தளையினாலும் அடியினாலும் தெரிந்து கொள்ளும்படி யாப்பருங் கலக்காரிகை வழி காட்டுகிறது. தொல்காப்பியரின் வழியைப் பின்பற்றினவர்கள், ஓசையை அந்தத் துறையில் பழக்க முடையவர்கள் கேட்ட மாத்திரத்தில் தெரிந்து கொள்ளலாம் என்று கூறுவர். 'பா என்பது சேட்புலத்தில் இருந்த காலத்தும் ஒருவன் எழுத்தும் சொல்லும் தெரியாமற் பாடம் ஓதுங்கால், அவன் சொல்லுகின்ற செய்யுளை விகற்பித்து இன்ன செய்யுளென்று உணர்தற்கு ஏதுவாகிப் பரந்து பட்டுச் செல்வதோர் ஓசை' (தொல்.செய்யுளியல், 1,உரை) என்பர் பேராசிரியர்.

எழுத்தை எண்ணி அடி வகுக்கும் முறையைக் கட்டளைக் கலிப்பா, கட்டளைக் கலித்துறை என்னும் இருவகைச் செய்யுட்களில் மட்டும் இப்போது காண்கிறோம். இவற்றுக்கு இலக்கணம் யாப்பருங்கலக் காரிகையில் இல்லை; அதன் உரையாசிரியர் உரையிடையே வகுத்துரைக்கிறார். யாப்பருங்கலக் காரிகை யென்னும் நூலே கட்டளைக் கலித்துறையால் ஆனது. அதற்கு அந்நூலில் இலக்கணம் இல்லாதது வியப்பாகத் தோன்றுகிறது அல்லவா?

இப்போது காரிகையே புலவர்களிடையே பெரு வழக்காக இருக்கிறது. தொல்காப்பியச் செய்யுளியல் இளம்பூரணர், பேராசிரியர், நச்சினார்க்கினியர் என்னும் ஆசிரியர்களுடைய உரையுடன் இருந்தும் அதனை ஆராய்கிறவர்கள் இல்லை. எளிதாக மனனம் பண்ணும் வகையில் சுருக்கமாய் அமைந்திருப்பதால் யாப்பருங்கலக் காரிகை புலவர் உலகில் இன்று விளக்கத்துடன் நின்று

நிலவுகிறது. காரிகை என்பது கட்டளைக் கலித்துறைக்குரிய பெயர். ஆனால் காரிகையென்றவுடன் யாப்பருங்கலக் காரிகையே தமிழ் படித்தவர்களின் நினைவுக்கு வரும். யாப்பருங்கலக் காரிகை என்ற நீண்ட பெயர் சுருங்கிக் காரிகை என்று சொன்ன அளவிலே இன்ன நூல் என்று தெரிந்து கொள்ளும்படி அந்நூலின் பெருமை இருக்கிறது.

இந்த நூலை இயற்றியதற்காக அமுதசாகரருக்குக் குளத்தூர் என்ற ஊரை அரசன் வழங்கினான். அதற்குக் காரிகைக் குளத்தூர் என்ற பெயர் அமைந்தது.

பழங்காலத்தில் நான்கு வகைப் பாக்களோடு பரிபாடல் என்ற பாவும் புலவர்களால் பாடப் பெற்றது. அகத்துறைக்குச் சிறந்தவை கலிப்பாவும் பரிபாடலும் என்று தொல்காப்பியர் சொல்கிறார். ஆதலின் அவ்வகைப் பாடல்கள் தொல்காப்பியர் காலத்திலும் அவருக்கு முன்புப் மிகுதியாக உண்டாயின என்று தோன்றுகிறது. நாளடைவில் பரிபாடலைப் பாடுபவர் குறைந்தனர். எட்டுத் தொகை நூல்களில் ஒன்று பரிபாடல் என்ற பெயரோடே இருக்கிறது கடைச் சங்க காலத்தில் ஆசிரியப் பாக்களே மிகுதியாக இருந்தன. வெண்பாக்களும் உண்டு, ஆனால் தேவாரத் திருமுறைகளும் திவ்யப் பிரபந்தங்களும் எழுந்த பிறகு பாவினங்களே மிகுதியாகத் தோன்றின. அவற்றிலும் விருத்தங்கள் மல்கின. சீவகசிந்தாமணி முதலிய பெருங் காப்பியங்கள் முழுவதும் விருத்தங்களால் அமைந்தன. விருத்த மென்னும் ஒண்பாவுக் குயர் கம்பன் தோன்றிப் பதினாயிரம் விருத்தங்களால் இராமாயணத்தைப் பாடினான். நான்கு சீர்களால் வரும் கொச்சகக் கலிப்பாவும், ஐந்து சீர்களால் வரும் கலித்துறையும் விருத்தங்களின் வகைகளைப் போலவே அமைந்தன. ஆகவே விருத்தங்களே பிற்காலக் கவியுலகில் வீறு நடை போட்டன என்று சொல்லலாம். ஒரு புலவர் விருத்தப் பாவியல் என்று

தனியே ஒருநூலாக விருத்தத்துக்குரிய இலக்கணத்தை எழுதினார்.

இப்போது இசைப் பாட்டுக்களும் இயற்பாக்களோடு சேர்ந்து கலந்து வழங்குகின்றன. பழங்காலத்தில் இசைப் பாக்களாகிய உருப்படிகளுக்குரிய இலக்கணம் இருந்திருக்க வேண்டும். கட்டளை என்ற கணக்கு இசைப்பாக்களிலும் உண்டென்று திருமுறை கண்ட புராணத்தால் புலனாகின்றது.

இப்போது இசைப்பாக்களாகிய உருப்படிகளுக்கு வரையறையான இலக்கணம் ஏதும் இல்லை. எதுகை மோனைகளை அமைத்தும், தாளத்தைக் கொண்டு ஓசையை வரையறுத்தும் புலவர்கள் சாகித்தியங்களைப் பாடுகிறார்கள். ஆயினும், அவற்றுக்குரிய இலக்கணத்தை வரையறுத்து நூல் செய்தவர் யாரும் இல்லை. கண்ணி, சிந்து, கந்தருவ மார்க்கச் செய்யுள் என்பன இலக்கியங்களிடையே வருகின்றன. இப்போது கீர்த்தனங்களும் வேறு வகையான இசைப் பாடல்களும் வந்துவிட்டன. எல்லாவற்றுக்கும் ஏற்ற இலக்கணங்களை வரையறுக்க வேண்டியது அவசியம். இயற்பாவுக்கும், இசைப்பாவுக்கும் பொதுவான உறுப்புக்கள் எழுத்து, அசை, சீர், தொடை என்பவை. இவற்றையன்றி, அடி, பாட்டின் உறுப்பு (பல்லவி போன்றவை) ஆகியவைகளைப் பற்றியும் பாட்டின் வகைகளைப் பற்றியும் ஆராய்ந்து பொதுவான இயல்பு களைத் தெரிந்து வகுத்து இலக்கணம் அமைக்க வேண்டும். இயலும் இசையும் தெரிந்த புலவர்கள் இந்தத் துறையில் புகுந்து ஆராய்ந்து முடிவுகட்டினால் ஒரு புதிய யாப்பிலக் கணத்தை இயற்ற முடியும்.

# கவி பாடலாம்

(இரண்டாம் பாகம்)

---

## 1. எழுத்து, அசை, சீர்

இது வரையில் யாப்பிலக்கணத்தில் உள்ள பழைய முறைப்படி செய்யுளின் இலக்கணத்தை எழுதி வரவில்லை. பெரும்பாலும் இலக்கியங்களில் பயின்று வரும் செய்யுட்களின் இலக்கணங்களையும், அவை சம்பந்தமான வேறு சில இலக்கணங்களையும் பார்த்தோம். இனி, யாப் பிலக்கண நூலில் உள்ளவற்றில் அவசியமானவற்றைப் பற்றிச் சொல்ல விரும்புகிறேன்.

செய்யுளின் இலக்கணத்தை யாப்பிலக்கணம் என்று குறிப்பது வழக்கு. அந்த இலக்கணம் யாப்புக்கு உரிய உறுப்புக்கள் ஆறு என்று சொல்லும். எழுத்து, அசை, சீர், தளை, அடி, தொடை என்பன அவை. செய்யுட்களைப் பா என்றும் பாவினம் என்றும் இரு வகையாகப் பிரிப்பார்கள்.

எழுத்தினால் ஆனது அசை; அசைகளால் ஆனது சீர்; சீர்களால் ஆனது அடி; அடிகளால் ஆனது பா; சீரும் சீரும் சேரும் இணைப்புக்குத் தளை என்று பெயர். மோனை, எதுகை முதலிய அழகான அமைப்புக்களுக்குத் தொடை என்று பெயர்.

எழுத்தைப்பற்றிய இலக்கணத்தை முதலில் யாப்பிலக்கணம் கூறுகிறது. அதைப் பற்றி நாம் எழுத்திலக்கணத்திலும் தெரிந்து கொள்ளலாம். குறில், நெடில், உயிர், குற்றியலிகரம், குற்றியலுகரம், ஐகாரக் குறுக்கம், ஆய்தம், மெய், வல்லினம், மெல்லினம், இடையினம், உயிர்மெய், அளபெடை என்னும் பதின்மூன்றும் எழுத்தின் வகை.

அசைகளின் இலக்கணத்தை முன்பே பார்த்தோம். அசைகள் நேரசை, நிரையசை என்று இரண்டு வகைப்படும் என்பதும், தனிக் குறில்-தனி நெடில்-ஒற்றடுத்த குறில்-ஒற்றடுத்த நெடில் என்னும் நான்கும் நேரசைகள் என்பதும், இரண்டு குறில்-குறிலையடுத்த நெடில்-இரு குறிலும் ஒற்றும்-குறில் நெடில் ஒற்று ஆகியவை நிரையசைகள் என்பதும் முன்பே நாம் அறிந்தவை. இவற்றுக்கு உதாரணமாக ஆ-ழி-வெள்-வேல்; வெறி-சுறா-நிறம்-விளாம் என்பவற்றை யாப்பருங் கலக் காரிகை எடுத்துக் காட்டுகிறது. 'குற்றெழுத்துத் தனியே வரினும், நெட்டெழுத்துத் தனியே வரினும், குற்றெழுத்து ஒற்றடுத்து வரினும், நெட்டெழுத்து ஒற்றடுத்து வரினும் நேரசையாம். குறில் இணைந்து வரினும், குறில் நெடில் இணைந்து வரினும், குறில் இணைந்து ஒற்றடுத்து வரினும், குறில் நெடில் இணைந்து ஒற்றடுத்து வரினும் நிரையசையாம்' என்பது காரிகை உரை.

அசையின் இலக்கணத்தைச் சொல்லும் சூத்திரம் வருமாறு:-

"குறிலே நெடிலே குறில்இணை ஏனைக் குறில்நெடிலே
நெறியே வரினும், நிரைந்துஒற் றடுப்பினும் நேர்நிரை என்று
அறி, வேய் புரையும்மென் தோளி; உதாரணம்: ஆழிவெள்வேல்
வெறியேய் சுறாநிறம் விண்தோய் விளாமென்று வேண்டுவரே."

[நெறியே வரினும்-முறையாக வந்தாலும். நிரைந்து-வரிசையாக நின்று. வேய்புரையும் மென் தோளி-மூங்கிலை ஒத்த மெல்லிய தோளையுடைய பெண்ணே. ஒரு பெண்ணை நோக்கிப் பாடம் சொல்லிக் கொடுப்பது போல ஆசிரியர் பாட்டைப் பாடியிருக்கிறார். பெண்ணை முன்னிலையாக வைத்துப் பாடினால் அதை மகடூஉ முன்னிலை எபர். (மகடூஉ-பெண்) வேண்டுவர்-புலவர்கள் விரும்புவார்கள்.]

சீர்கள் ஒன்று முதல் நான்கு அசைகளால் அமையும். ஓரசைச் சீர் இரண்டு. அவற்றை அசைச் சீர் என்றும் சொல் வார்கள். நேர் என்ற ஓரசைச் சீருக்கு நாள் என்பது வாய்பாடு. நிரை என்ற ஓரசைச் சீருக்கு மலர் என்பது வாய்பாடு.

ஈரசைச் சீர்கள் நான்கு: தேமா, புளிமா, கூவிளம், கருவிளம் என்பன. இவற்றை ஆசிரிய உரிச்சீர், அகவற்சீர், இயற்சீர் என்று கூறுவர்.

மூவசைச் சீர்கள் காய்ச்சீர், கனிச்சீர் என இரு வகைப் படும். காய்ச்சீர் தேமாங்காய், புளிமாங்காய், கூவிளங்காய், கருவிளங்காய் என நான்கு. இவற்றை வெண்பா உரிச்சீர், வெண்சீர் என்று கூறுவர்.

கனிச்சீர் தேமாங்கனி, புளிமாங்கனி, கூவிளங்கனி, கருவிளங்கனி என நான்கு. இவற்றை வஞ்சி உரிச்சீர், வஞ்சிச்சீர் என்று கூறுவர்.

நாலசைச் சீர்கள் பதினாறு. தேமா, புளிமா, கூவிளம், கருவிளம், என்ற நான்கோடு தண்பூ, தண்ணிழல், நறும்பூ, நறுநிழல் என்ற நான்கையும் தனித்தனியே சேர்த்தால் பதினாறு சீர்கள் வரும். இவற்றைப் பொதுச்சீர் என்பார்கள்.

வெண்சீர், ஆசிரியச் சீர், வஞ்சிச் சீர் என்று ஒவ்வொரு வகைப் பாவின் பெயரோடும் சீர் இருப்பது போலக் கலிச் சீர் என்று ஒன்று இல்லை.

சீர்களைக் குறிப்பிடும் போது அவற்றில் வரும் ஈற்றைச் சுட்டிப் பெயர் சொல்வது வழக்கம். மாச்சீர், விளச்சீர், காய்ச்சீர், கனிச்சீர், பூச்சீர், நிழற்சீர் என்று குறிப்பிடுவார்கள்.

## 2. தளை

முன்பு ஏழு தளைகளின் பெயரை மாத்திரம் சொல்லி வெண்டளையின் இலக்கணத்தை விரிவாகச் சொன்னேன். தளை பார்க்கும் வழக்கம் வெண்பாவிலும் கட்டளைக் கலித் துறையிலும் மட்டும் இருக்கிறதென்பதையும் முன்பு கூறினேன். மற்றத் தளைகளையும் இனித் தெரிந்து கொள்ளலாம்.

**1. வெண்டளை** இரண்டு வகைப்படும்: இயற்சீர் வெண்டளை; வெண்சீர் வெண்டளை. மாமுன் நிரையும் விளமுன் நேரும் காய்முன் நேரும் வருவன வெண்டளை.

**2. ஆசிரியத்தளை :** நேரொன் றாசிரியத்தளை, நிரையொன் றாசிரியத்தளை என்று இரண்டு வகைப்படும். நின்ற சீர் ஆசிரியச் சீர் அல்லது இயற்சீராக இருக்க, வரும் சீரின் முதலசையோடு ஒத்து நிற்பது ஆசிரியத் தளை. மாமுன் நேர் வந்தால் நேரொன் றாசிரியத்தளை; விளமுன் நிரை வந்தால் நிரையொன் றாசிரியத்தளை. வருகின்ற சீர் எதுவாக இருந்தாலும் அதைக் கவனிக்க வேண்டியதில்லை. அதன் முதல் அசையை மாத்திரம் பார்த்தால் போதும்.

ஆனால் நிற்கும் சீர் ஈரசைச் சீராக இருந்தால்தான் ஆசிரியத்தளை வர முடியும்.

காமன் வேவக் கண்ட கண்ணன்
யாமம் ஆடும் எந்தை யானைத்
தோலைப் போர்த்த சோதி
காலைப் பற்றிற் காமம் போமே.

இந்தப் பாடலில் எல்லாச் சீர்களுமே தேமாவாக வந்தன. பாட்டு முழுவதும் நேரொன் றாசிரியத்தளை வந்தது காண்க.

"திருமழை பொழிந்திடும் இருணிற விசும்பின்
விண்ணதி ரிமிழிசை கடுப்பப்
பண்ணமைந் தவர்தேர் சென்ற வாறே."

இந்தப் பாட்டில் திருமழை-பொழிந்திடும் என்பதில் நிரையொன் றாசிரியத்தளை வந்தது. பொழிந்திடும்-இருணிற, இருணிற-விசும்பின், விண்ணதி-ரிமிழிசை, ரிமிழிசை-கடுப்ப, பண்ணமைந்-தவர்தேர் என்னும் இடங்களில் எல்லாம் நிரையொன் றாசிரியத்தளையே வந்திருக்கிறது. விசும்பின்-விண்ணதிர் என்பது நேரொன் றாசிரியத்தளை. கடுப்பப்-பண்ணமை என்பதும் அது. அவர்தேர்-சென்ற, சென்ற-வாறே என்ற இடங்களிலும் நேரொன் றாசிரியத்தளை வந்தது.

நின்ற சீர் ஆசிரியச் சீராக இருக்க, வரும் சீர் முதல் அசை ஒத்து நின்றால் ஆசிரியத் தளையாகும்; ஒவ்வாமல் நின்றால் இயற்சீர் வெண்டளையாகும் என்பதை இங்கே நினைவுபடுத்திக் கொள்வது நலம்.

சற்றே விளக்கமாகப் பார்த்தால் இயற்சீர் அல்லது ஈரசைச்சீர் நிற்க, எந்தச் சீர் வந்தாலும் இயற்சீர் வெண்டளை

யும் ஆசிரியத்தளையும் அமையும். அவை தனித்தனி இவ்விரண்டு வகை.

மாமுன் நிரை
விளமுன் நேர் இவை இயற்சீர் வெண்டளை

மாமுன் நேர்
விளமுன் நிரை இவை ஆசிரியத் தளை.

**3. கலித்தளை:** காய்ச்சீராகிய வெண்சீர் நிற்க, வரும் சீரின் முதல் நிரையாக வரின் கலித்தளையாகும். இது ஒரே வகை.

**''செல்வப்போர்க் கதக்கண்ணன் செயிர்த்தெறிந்த சினவாழி.''** இந்த அடியில் நான்கு சீர்களும் காய்ச்சீர்கள். காய் முன் நிரை வந்தமையால் கலித்தளையாயிற்று. செல்வப்போர்க்-தேமாங்காய், கதக்கண்ணன்-நிரை நேர்நேர் என்பதைக் காண்க.

**4. வஞ்சித்தளை :** கனிச் சீருக்கு வஞ்சிச் சீர் என்று பெயர். கனிச்சீர் நிற்க, வரும் அசை நிரையானால் ஒன்றிய வஞ்சித் தளை; நேர் ஆனால் ஒன்றாத வஞ்சித் தளை.

''மந்தாநிலம் மருங்கசைப்ப
வெண்சாமரை புடைபெயர்தரச்
செந்தாமரை நாண்மலர்மிசை.''

இந்த அடிகளில் முதல் இரண்டில் தேமாங்கனி-கருவிளங்காய் என்ற வாய்பாட்டுச் சீர்கள் வந்தன. கனிமுன் நிரை வந்தமையின் இது ஒன்றிய வஞ்சித் தளை. மூன்றாவது அடியில் தேமாங்கனி-கூவிளங்கனி என்ற வாய்பாட்டுச் சீர்களில் கனிமுன் நேர் வந்தது. இது ஒன்றாத வஞ்சித்தளை.

ஆகவே, மொத்தம் ஏழு தளைகள் இருந்தலைப் பார்த்தோம்.

1. இயற்சீர் வெண்டளை
2. வெண்சீர் வெண்டளை
3. நேரொன் றாசிரியத்தளை
4. நிரையொன் றாசிரியத்தளை
5. கலித்தளை
6. ஒன்றிய வஞ்சித் தளை
7. ஒன்றாத வஞ்சித் தளை.

ஈரசைச் சீர் நிற்க அமையும் தளைகள் மூன்று: (1) இயற்சீர் வெண்டளை, (2) நேரொன் றாசிரியத்தளை, (3) நிரையொன் றாசிரியத் தளை.

காய்ச்சீர் நிற்க அமையும் தளைகள் இரண்டு: (1) வெண்சீர் வெண்டளை, (2) கலித்தளை

கனிச்சீர் நிற்க வரும் தளைகள் இரண்டு: (1) ஒன்றிய வஞ்சித்தளை (2) ஒன்றாத வஞ்சித்தளை.

வேறு ஒரு வகையிலும் இவற்றைப் பிரித்துப் பார்க்கலாம்; ஒத்து வரும் தளைகள், ஒவ்வாது வரும் தளைகள் என்று பிரிக்கலாம்.

ஒப்பன: (1) வெண்சீர் வெண்டளை, (2) நேரொன் றாசிரியத்தளை, (3) நிரையொன் றாசிரியத்தளை, (4) ஒன்றிய வஞ்சித்தளை.

ஒவ்வாதன: (1) இயற்சீர் வெண்டளை, (2) கலித்தளை, (3) ஒன்றாத வஞ்சித்தளை.

தளையைப் பற்றிய இலக்கணத்தைச் சொல்லும் யாப்பருங்கலக் காரிகைச் சூத்திரம் வருமாறு:

"தண்சீர் தனதொன்றில் தன்தளை யாம்;தண வாதவஞ்சி
வண்சீர் விகற்பமும் வஞ்சிக் குரித்து; வல் லோர்வகுத்த
வெண்சீர் விகற்பம் கலித்தளை யாய்விடும்; வெண்டளையாம்
ஒண்சீர் அகவல் உரிச்சீர் விகற்பமும் ஒண்ணுதலே."

'தன் சீர் நின்று வருஞ்சீர் முதலசையோடு ஒன்றுவது தன் தளையாம். வஞ்சிச்சீர் நின்று வருஞ்சீர் முதலசையோடு ஒன்றாதது ஒன்றாத வஞ்சித்தளையாம். வெண்பா உரிச்சீர் நின்று வருஞ்சீர் முதலசையோடு ஒன்றாதது கலித்தளையாம். ஆசிரியவுரிச்சீர் நின்று வருஞ்சீர் முதலசையோடு ஒன்றாதது இயற்சீர் வெண்டளையாம்' என்பது இதன் பொருள்.

# 3. அடிகள்

அடிகளின் வகையைப் பற்றி முதல் பாகத்தில் பார்த்தோம். இங்கே அவற்றைச் சுருக்கமாக நினைப்பூட்டிக் கொள்ளலாம்.

இரண்டு சீர்கள் அமைந்த அடிக்குக் **குறளடி** என்று பெயர்.

மூன்று சீர்களால் வருவது **சிந்தடி**.

நான்கு சீர்களால் வருவது **நேரடி**.

ஐந்து சீர்களால் வருவது **நெடிலடி**.

ஆறு முதலிய சீர்களால் வருவது **கழி நெடிலடி**.

நேரடிக்கு அளவடி என்றும் ஒரு பெயர் உண்டு.

**குறளடி வரும் இடங்கள்:**

1. இணைக்குறளாசிரியப்பாவில் இடையிடையே வரும்.
2. கலிப்பாவில் அம்போதரங்க உறுப்பில் வரும்.
3. குறளடி வஞ்சிப்பாவில் வரும்.
4. வஞ்சித் தாழிசையில் வரும்.
5. வஞ்சித் துறையில் வரும்.

**சிந்தடி வரும் இடங்கள்:**

1. எல்லா வெண்பாக்களிலும் ஈற்றடியாக வரும்.
2. நேரிசையாசிரியப்பாவின் ஈற்றயலடியாக வரும்.
3. இணைக்குறளாசிரியப்பாவின் இடையே வரும்.
4. கலிப்பாவில் அம்போதரங்க உறுப்பில் வரும்.
5. சிந்தடி வஞ்சிப்பாவில் வரும்.
6. வெண்டாழிசையின் இறுதி அடியாக வரும்.
7. வெண்டுறையில் இடையே வரும்.
8. ஆசிரியத் துறையின் இடையே வரும்.
9. கலித்தாழிசையின் இடையே வரும்.
10. வஞ்சி விருத்தத்தில் வரும்.

**நேரடி வரும் இடங்கள்:**

1. வெண்பாக்களில் ஈற்றடி ஒழிந்த மற்ற அடிகள் நேரடியாக வரும்.
2. நிலைமண்டில ஆசிரியப்பாவில் எல்லா அடிகளும் நேரடியாக வரும்.
3. நேரிசை ஆசிரியப்பா ஈற்றயலடி ஒழிந்த அடிகள்.

4. இணைக்குறளாசிரியப்பாவில் பெரும்பாலான அடிகள்.
5. அடிமறிமண்டில ஆசிரியப்பா அடிகள்.
6. கலிப்பாவில் தரவு, தாழிசை அடிகள்.
7. கலிப்பாவில் அம்போதரங்க உறுப்பில் சில அடிகள்.
8. வெண்டாழிசையில் வரும்.
9. வெண்டுறையில் வரும்.
10. ஆசிரியத் தாழிசையில் வரும்.
11. ஆசிரியத் துறையில் வரும்.
12. கலித்தாழிசையில் வரும்.
13. கலிவிருத்தத்தின் அடிகள் நேரடிகளே.

## நெடிலடி வரும் இடங்கள்:

1. இணைக்குறளாசிரியப்பாவில் அருகி வரும்.
2. குறட்டாழிசையில் வரும்.
3. வெளி விருத்தத்தில் வரும்.
4. ஆசிரியத் துறையில் வரும்.
5. ஆசிரியத் தாழிசையில் வரும்.
6. கலித்தாழிசையில் வரும்.
7. கலித்துறையின் அடிகள் நெடிலடிகளே.

## கழிநெடிலடி வரும் இடங்கள்:

1. கலிப்பாவில் வண்ணக உறுப்பில் வரும்.
2. குறட்டாழிசையில் வரும்.
3. வெளிவிருத்தத்தில் வரும்.
4. வெண்டுறையில் வரும்.

5. ஆசிரியத் தாழிசையில் வரும்.
6. ஆசிரியத் துறையில் வரும்.
7. ஆசிரிய விருத்தம் யாவும் கழிநெடிலடியாய் வருவனவே.

அதிகமான சீர்களை உடைய அடிகளை ஆசிரிய விருத்தத்தில் காணலாம்.

மிகவும் குறைந்த அடிகளையுடைய பாட்டுக் குறள் வெண்பா; அது இரண்டடிகளை உடையது. அகவற்பா மூன்றடிகளுக்குக் குறைவாக வராது. கலிப்பா நான்கடியிற் குறைந்து வராது. வஞ்சிப்பாவுக்கு மூன்றடியே இழிந்த எல்லை; சிறுபான்மை இரண்டடிகளாலும் வரும்.

வெண்பாவில் பஃறொடை வெண்பா 12 அடி வரையில் வரும். கலிவெண்பா எத்தனை அடிகளாலும் வரலாம். ஆசிரியப்பாவின் அடிகளுக்கு மேல் எல்லை இல்லை. கலிப்பாவும் வஞ்சிப்பாவும் எத்தனை அடிகளாலும் வரலாம். ''உரைப்போர் உள்ளக் கருத்தின் அளவே பெருமை'' என்று பாட்டுக்களின் மேல் எல்லையைப் பற்றி யாப்பருங்கலக் காரிகை கூறுகிறது.

# 4. மோனை எதுகைகளின் வகை

எழுத்து, அசை, சீர், தளை, அடி, தொடை என்பவை செய்யுளின் உறுப்புகள். இவை யாவும் காரணப் பெயர்கள். எழுதப்படுவதனால் எழுத்து என்ற பெயர் உண்டாயிற்று. அசைத்தல் என்பதற்குக் கட்டுதல் என்பது பொருள். எழுத்துக்களை இணைத்துக் கட்டி நடக்கச் செய்வதனால் அசை என்ற பெயர் வந்தது. சீர் என்பது தாளத்துக்குப் பெயர்.

வரையறையான ஓசையே (Rhythm) தாளம் ஆகும். செய்யுட்களில் அந்த வரையறை அமையும்படி செய்வதனால் சீர் என்ற பெயர் வந்தது.

தளை என்றால் பிணைப்பது என்று பொருள்; விலங்குக்கும் பெயர். அது சீரையும் சீரையும் பிணைப்பதனால் தளை என்றார்கள். தளை என்ற சொல் தள் என்ற பகுதியிலிருந்து வந்தது. தளையமைந்து நிற்றலைத் தட்டல் என்று சொல்வது பழைய மரபு. வெண்டளை தட்டு நிற்கும் என்றால் வெண்டளை அமைந்து நிற்கும் என்று பொருள் கொள்ள வேண்டும். இப்போது புலவர்கள் பேச்சில், தளை தட்டுகிறது என்றால், தளை தவறுகிறது என்று பொருள் கொள்கிறோம். அடுத்து நடப்பதால் அடி ஆயிற்று. பாட்டு நடப்பதற்கு அடிபோல் உதவுவதால் இப்பெயர் வந்ததாகவும் கொள்ளலாம்.

தொடை என்பது தொடுக்கப் பெறுவது என்னும் பொருளுடையது. தொடுக்கும் மாலைக்கும் தொடையென்று பெயர் உண்டு. அழகு பெறத் தொடுக்கும் மாலை போலச் செய்யுளில் அழகு அமைய அமைவது தொடை. தொடைகள் எட்டு: மோனை, இயைபு, எதுகை, முரண், அளபெடை, அந்தாதித் தொடை, இரட்டைத் தொடை, செந்தொடை. இவற்றில் முதல் ஐந்தும் சிறப்பானவை. அவற்றிலும் எதுகை, மோனை என்னும் இரண்டையுமே இப்போது பாவாணர்கள் கவனித்து அமைத்து வருகிறார்கள்.

எதுகை, மோனை என்னும் இரண்டு தொடைகளையும் பற்றி ஓரளவு முதல் பாகத்தில் தெரிந்து கொண்டோம். இனி அவற்றின் வகைகளையும் பிற தொடைகளையும் பற்றிக் கவனிப்போம்.

முதலில் சொன்ன ஐந்து தொடைகளில் ஒவ்வொன்றும் எட்டு வகைப்படும். ஒவ்வொரு வகைக்கும் ஒவ்வொரு பெயர் உண்டு. மோனையின் வகை எட்டாவன: (1) அடிமோனை, (2) இணைமோனை, (3) பொழிப்பு மோனை, (4) ஒரூஉ மோனை, (5) கூழை மோனை, (6) மேற்கதுவாய் மோனை, (7) கீழ்க்கதுவாய் மோனை, (8) முற்று மோனை. அடி, இணை, பொழிப்பு, ஒரூஉ, கூழை, மேற்கதுவாய், கீழ்க்கதுவாய், முற்று என்னும் எட்டு அடைகளையும் மற்ற நான்கு தொடைகளோடும் இயைத்து அவைகளிலும் ஒவ்வொன்று எவ்வெட்டு வகையாதலைக் காணலாம்.

ஒரு சீரின் முதல் எழுத்தும் மற்றொரு சீரின் முதல் எழுத்தும் ஒன்றி வருவது மோனை. மோனை என்பதற்கு முன்னிடம் என்பது பொருள். மோனையை முதல் தொடை என்று சொல்வார்கள்.

செய்யுளின் அடிதோறும் முதற் சீரில் மோனை அமைவது அடிமோனை.

"மாவும் புள்ளும் வதிவயிற் படர
மாநீர் விரிந்த பூவும் கூம்ப
மாலை தொடுத்த கோதையும் கமழ
மாலை வந்த வாடை
மாயோ ளின்னுயிர்ப் புறத்திறுத் தன்றே."

இந்த நேரிசை ஆசிரியப்பாவில்அடி தோறு மோனை வந்தது. இது அடிமோனை. அடிமோனை அமையும்படி பாட வேண்டும் என்ற வரையறை இல்லை.

இப்படியே அடி தோறும் எதுகை அமைவது அடி எதுகை.

வண்ண மேவிய மாமயில் மேல்வரும்
அண்ணல் வேற்கரத் தாறுமு கன்பதம்
நண்ணி நாளும் நயந்து பணிந்தவர்
எண்ணம் யாவும் இனிதுறும் என்பவே.

*இப்பாட்டில் அடிதோறும் முதற்சீரில் எதுகை அமைந்தமையால் இது அடி எதுகை. செய்யுள் இயற்றுவார் அடி எதுகை அமையும்படி பாட வேண்டும். எல்லாப் புலவர்களுடைய பாட்டிலும் பெரும்பாலும் அடியெதுகை அமைந்திருப்பதைக் காணலாம்.*

*ஓரடிக்குள்ளே பல சீர்களில் அமையும் மோனை, எதுகைகள் இணை முதலியவையாகப் பெயர் பெறும். நான்கு சீர்களையுடைய பாட்டில் வரும் மோனை முதலிய தொடைகளுக்கே அதனதன் நிலைக்கு ஏற்பத் தனித்தனியே பெயர் அமைத்திருக்கிறார்கள். அவையே இணை முதல் முற்றுவரையுள்ள விகற்பங்கள்.*

*(1) இணை : முதல் இரண்டு சீர்களில் அமைவது.*

"அணிமலர் அசோகின் தளிர்நலம் வென்று."

*இந்த ஆசிரியப்பாவின் அடியில் முதல் இரண்டு சீர்களில் மோனை வந்திருக்கிறது. இது இணை மோனை.*

"பொன்னின் அன்ன பொறிசுணங் கேந்தி."

*இந்த ஆசிரியப்பா அடியில் முதல் இரண்டு சீர்களில் எதுகை வந்தது. இது இணை எதுகை.*

பாரதப் பண்பைத் தெரிந்துணர் அன்பர்கள்
சீருறத் தேயம் ஓங்குதல் வேண்டிக்
காந்தி கருத்தறிந் தெனைப்பல தொண்டை
மாந்தர்கள் வாழுந் திறத்தினிற் செய்தனர்

ஆங்கவர் ஆற்றிய செயலால்
தீங்கெலாம் தீரப் பெற்றனம் யாமே.

*இந்த நேரிசையாசிரியப் பாவில் அடி தோறும் இணை மோனை வந்தமை காண்க. இணை என்பது இரட்டைக்குப் பெயர். முதல் இரண்டு சீர்களில் அடுத்தடுத்து வந்தமையால் இப்பெயர் பெற்றது.*

*(2) பொழிப்பு: முதற் சீரிலும் மூன்றாம் சீரிலும் அமைவது.*

அம்பதும மாமலர் போல் அழகொழுகும் திருவடியை.

*இதில் பொழிப்பு மோனை வந்தது.*

செம்பொன் அன்ன அம்பொற் சுடருரு.

*இதில் பொழிப்பெதுகை வந்தது.*

*நான்கு சீருடைய பாடல்களில் பொழிப்பு மோனை வரும்படி பாடுவதே சிறப்பு. புலவர்களின் செய்யுட்களில் இந்த அமைதியைக் காணலாம். ஆசிரியப்பாவில் அடி எதுகை வராதபோது பொழிப்பெதுகை அமையும்படி பாடுதல் சிறப்பு.*

*(3). ஒரூஉ: முதல் சீரிலும் நான்காவது சீரிலும் அமைவது.*

அன்பருளம் மேவும் முருகன் அடிமலரே

*இந்த வெண்பா அடியில் ஒரூஉ மோனை வந்தது,*

செங்கமலத் தாளைத் தெரிசித்துப் பங்கமற்று.

*இந்த வெள்ளடியில் ஒரூஉ எதுகை வந்தது.*

*(4)கூழை: முதல் மூன்று சீரிலும் அமைவது.*

வேதம் விரித்த வியன்மலர்த் திருவாய்.

*இந்த அகவலடியில் கூழை மோனை வந்தது.*

வேலன் பாலன் போலும் நெஞ்சன்.

*இந்த ஆசிரிய அடியில் கூழை எதுகை வந்தது.*

***(5) மேற்கதுவாய்:*** *இரண்டாம் சீரிலன்றி மற்ற மூன்று சீர்களில் அமைவது.*

ஆறு முகத்தா னாகும் அமுதம்.

*இதில் மேற்கதுவாய் மோனை வந்தது.*

கற்றவர் போற்றும் நற்றவச் சுற்றம்.

*இதில் மேற்கதுவாய் எதுகை வந்தது. இரண்டாம் சீரில் முதல் எழுத்து நெடிலாக வந்தமையால் எதுகை அமையவில்லை.*

***(6) கீழ்க்கதுவாய்:*** *மூன்றாவது சீரிலின்றி மற்ற மூன்று சீர்களில் வருவது.*

அவிர்மதி அனைய திருநுதல் அரிவை.

*இதில் கீழ்க்கதுவாய் மோனை வந்தது.*

அன்ன மென்ன அழகுற மன்னும்.

*இதில் கீழ்க்கதுவாய் எதுகை வந்தது.*

***(7) முற்று:*** *நான்கு சீரிலும் வருவது.*

"தூய துணைவன் துறந்தமை தூற்றும்."

*இதில் முற்று மோனை வந்தது.*

இங்கித மங்கள மெங்குமி லங்குக.

இதில் முற்றெதுகை வந்தது.

இங்கே சொன்ன கீழ்க்கதுவாயை மேற்கதுவாய் என்றும் மேற்கதுவாயைக் கீழ்க்கதுவாய் என்றும் சில ஆசிரியர்கள் மாற்றிச் சொல்வதுண்டு.

# 5. சிறப்பில்லாத எதுகை மோனைகள்

இரண்டாம் எழுத்து ஒன்றி வரும் எதுகையும் முதலெழுத்து ஒன்றிவரும் மோனையும் இன்னபடி இருந்தால் ஓசையின்பம் மிகுதியாகும் என்பதை முதல் பாகத்திலே பார்த்தோம். முன் அத்தியாயத்தில் நாற்சீரடியில் வரும் எதுகை மோனைகளின் வகையைப் பார்த்தோம்.

சிறப்பில்லாத எதுகை மோனை வகைகள் சில உண்டு. முந்தையோர் செய்யுட்களில் அவை இருந்தால் அவற்றிற்கு வகை இன்னதென்று தெரிந்து கொள்ளவே இவற்றை வகுத்திருக்கிறார்கள். ஆதலின், நாம் புதியதாகப் பாடும் பாட்டில் எதுகை மோனை இந்த அளவில் அமைந்தால் போதும் என்று எண்ணக் கூடாது.

**வருக்க எதுகை:** ஒரு மெய்யோடு வந்த உயிர்கள் வருக்கமாகும். க, கா, கி, கீ, கு, கூ, கெ, கே, கை, கொ, கோ, கௌ என்பன ககர வருக்க எழுத்துகள். இவை எதுகை வரும் இடத்தில் வந்தால் வருக்க எதுகை ஆகும்.

நீடுபுகழ்க் காந்தி நினைவை மறந்ததனால்
வாடித் தவித்து வருந்துகிறோம்-நாடதனில்

கூடாரைக் கூடிக் குதர்க்கத்தில் நாள்போக்கிப்
பாடறியேம் பெற்றேம்துன் பம்.

*இந்தப் பாடலில் டு, டி, ட, டா, ட என்பன ஒன்றற் கொன்று எதுகையாக வந்தன. இது வருக்க எதுகை.*

***வருக்க மோனை:*** *மேலே சொன்ன வகையில் மோனை அமைந்தால் அது வருக்க மோனையாம்.*

பண்புறச் சொற்கள் பாங்காய் அமையப்
பாடல் பாடும் பழக்கம் வேண்டும்;
பிழையிலா தெழுதும் பெற்றியுங் கின்றேல்
பீடெங் கிருந்து பெறுதல் கூடும்?
புதுமைக் கருத்தும் பொற்புறு சந்தமும்
பூணும் அணியெனப் பொருந்தலங் காரமும்
பெரியோர் போற்றும் அரிய கருத்தும்
பேணி அமையப் பெட்புறும் கவிதை;
பையப் பைய இயற்றிற் பனுவலைப்
பொருத்த மாகவே பூர்த்திசெய் திடலாம்;
போனக மனைய இனிமையும் பொருளிற்
பௌவமென் ஆழமும் அமைந்து படருமே.

*இந்தப் பாடலில் அடியின் முதலெழுத்துக்கள் பகர வருக்கமாகவே வந்திருத்தலின், இது பகர மெய் வருக்க மோனை.*

***நெடில் எதுகை:***

"ஆவா எனவேங்கி அல்லாந்து சோகாத்துப்
பாகா யுருகிப் படர்ந்தார் சிலமாதம்."

*இதில் இரண்டாம் எழுத்துக்கள் நெடிலாக அமைந்தன. இது நெடில் எதுகை.*

*நெடில் மோனை:*

"ஆர்கலி உலகத்து மக்கட் கெல்லாம்
ஓதலிற் சிறந்தன் றொழுக்க முடைமை."

*இதில் முதல் எழுத்துக்கள் ஒன்றி வராவிட்டாலும் அவை நெடிலாக இருப்பதனால் நெடில் மோனை ஆயிற்று.*

*இன எதுகை: இன எழுத்துக்கள் ஒன்றிவரத் தொடுத்தால் இன எதுகை. அது வல்லின எதுகை, மெல்லின எதுகை, இடையின எதுகை என்று மூன்று வகைப்படும்.*

"தக்கார் தகவில ரென்ப தவரவர்
எச்சத்தாற் காணப் படும்."

*இந்தக் குறளில் இரண்டாம் எழுத்துக்கள் ஒன்றி வராவிடினும் அவை வல்லினமாக அமைந்துள்ளன. இது வல்லின எதுகை.*

அச்சத் தாலே ஆழ்ந்திடு கின்றேன் அண்ணாஎன்
பக்கத் தேவந் தின்ப மளித்தாற் பாங்கின்றோ?

*இதிலும் வல்லின எதுகை வந்தது.*

"அன்பீனு மார்வ முடைமை யதுவீனும்
நண்பென்னு நாடாச் சிறப்பு.

*இந்தக் குறளில் இரண்டாம் எழுத்துக்கள் ஒன்றி வராவிடினும் அவை மெல்லினமாக வந்தமையின், இது மெல்லின எதுகை.*

"எல்லா விளக்கும் விளக்கல்ல சான்றோர்க்குப்
பொய்யா விளக்கே விளக்கு."

இதில் இரண்டாம் எழுத்தாக லகர யகரங்கள் வந்தமையால் இது இடையின எதுகை.

**இன மோனை:** இன எதுகைக்குச் சொன்னபடியே மோனை வரும் இடங்களில் இன எழுத்துக்கள் வந்தால் அது இன மோனை ஆகும்.

கருத்துச் செறிவும் கவினார் ஓசையும்
சிறப்பச் சேரும் திறமுறின் கவியாம்;
திருத்த மின்றிச் சீரிற் சிதைவுறப்
பொருத்த மில்லாச் சொற்கள் புகுத்திச்
செய்யும் கவியைச் செய்யுளாக் கொள்ளார்
தண்டமிழ் நெறியின் தகையுணர்ந் தோரே.

இந்தப் பாட்டில் ஒவ்வோர் அடியின் முதலிலும் வல்லின எழுத்துக்கள் வந்தன. இது வல்லின மோனை.

நட்டாரை வாழ்த்தி நலஞ்செய்வார் தம்பாலே
மெச்சிப் புகுவார் பலர்.

இதில் மெல்லின மோனை வந்தது.

யானை யனையார் எலியனையார் என்றிருவர்
வாழ்வார்இவ் வையகத்து.

இதில் இடையின மோனை வந்தது.

**மூவகை எதுகை:** தலையாகு எதுகை, இடையாகு எதுகை, கடையாகு எதுகை என்று மூன்று வகை உண்டு. சீர் முழுவதும் ஒன்றி வருவது தலையாகெதுகை; ஓரெழுத்து மட்டும் ஒன்றி வருவது இடையாகெதுகை; மற்றவை கடையாகெதுகை.

கலைநவின்ற பெரும்புலமைக் கவிஞர்களைப் போற்றிசைத்து
நிலைநவின்ற பன்னூல்கள் நேயத் துடனியற்றப்

புலைநவின்ற மெய்யழிந்தும் புகழுடம்பு பெற்றவர்கள்
அலைநவின்ற கடற்புவியில் அனைவரினும் மேலவரே.

*இதில் தலையாகெதுகை வந்தது.*

''அகர முதல எழுத்தெல்லா மாதி
பகவன் முதற்றே உலகு.''

*இதில் இடையாகெதுகை வந்தது.*

''தக்கார் தகவிலர் என்ப தவரவர்
எச்சத்தாற் காணப் படும்.''

*இதில் கடையாகெதுகை வந்தது.*

***மூவகை மோனை:*** *சீர் முழுவதும் ஒன்றுவது தலையாகு மோனை; ஓரெழுத்தே ஒன்றுவது இடையாகு மோனை; பிற கடையாகு மோனை.*

''பற்றுக பற்றற்றான் பற்றினை அப்பற்றைப்
பற்றுக பற்று விடற்கு.''

*இதில் உள்ள அடிமோனை முழுச்சீரும் ஒன்றி வந்தமையால் தலையாகு மோனை.*

மாவும் புள்ளும் வாழும் வகையில்
மாநில வுயிரெலாம் மகிழ்ந்தினி திருப்ப
மாட்சிபெற் றிலகிய மன்னனிம் மன்னனே,

*இதில் இடையாகு மோனை வந்தது. பிற வகையாக வருவன கடையாகு மோனை.*

**வேறு சில எதுகைகள்:** *இரண்டாம் எழுத்தின் மேல் ஏறிய உயிர் ஒன்றி வந்தால்* ***உயிரெதுகை****யாகும்.*

''துளியொடு மயங்கிய தூங்கிரு ணடுநாள்
அணிகிளர் தாரோ யருஞ்சுர நீந்தி

வடியமை யெஃகம் வலவயி னேந்தித்
தனியே வருதி நீயெனின்
மையிருங் கூந்தல் உய்தலோ அரிதே.''

இதில் இகரமாகிய உயிர் இரண்டாம் எழுத்துக்களில் வந்தமையால் உயிரெதுகை ஆயிற்று.

ய, ர, ல, ழ என்னும் மெய்யெழுத்துக்கள் இடையே நிற்க ஒன்றினால் அது ஆசிடையிட்ட எதுகையாகும்.

''காய்மாண்ட தெங்கின் பழம்வீழக் கமுகி னெற்றிப்
பூமாண்ட தீந்தேன் றொடைகீறி வருக்கை போழ்ந்து.''

இதில் காமாண்ட, பூமாண்ட என்று இருந்தால் எதுகை சிறக்கும். ஆனால் முதலடியில் யகர ஒற்று இடையே வந்தது. இது ஆசிடையிட்ட எதுகை. ஆசு என்பது ஒட்டாத இரண்டு உலோகப் பொருள்களை ஒட்டும்படி இடையே அமைக்கும் பொருள்; பற்றாசு என்று அதனைச் சொல்வார்கள். அது போல இருப்பதனால் இதை ஆசு என்றார்கள்.

''மாக்கொடி மாணையும் மவ்வற் பந்தரும்
கார்க்கொடி முல்லையும் கலந்த பந்தரில்.''

இதில் இரண்டாமடியில் ரகர ஒற்று இடையில் வந்தது. இது ரகர ஆசிடையிட்ட எதுகை.

''ஆவே றுருவின ஆயினும் ஆபயந்த
பால்வே றுருவின அல்லவாம்.''

இது லகர ஆசிடையிட்ட எதுகை.

''வாழ்கின்றே மென்று மகிழன்மின்; வாணாளும்
போகின்ற பூளையே போன்று.''

*இது முகர ஆசிடையிட்ட எதுகை.*

பாகமதிற் பெண்ணுடைய பண்பன் அடியார்கள்
ஆர்கலிசூழ் வையக் கணி.

*இது ரகர ஆசிடையிட்ட எதுகை.*

*அடிகளில் இடையிடையே ஒவ்வொன்றை விட்டு எதுகை அமைந்தால்* ***இடையிட்டெதுகை*** *யாகும்.*

"நீடா ரிவணென நீமனம் கொண்டார்
கேளார் கொல்லோ காதலர் தோழி
வாடாப் பௌவம் அறமுகந் தெழிலி
பருவம் பொய்யாது வலனேர்பு வளைஇ
ஓடா மலையன் வேலிற்
கடிது மின்னுமிக் கார்மழைக் குரலே."

*இதில் ஒன்றுவிட்டு ஓரடியில் எதுகை வந்தமையால் இடையிட்டெதுகை யாகும்.*

*முதலிரண்டடியும் ஓரெதுகையாய்ப் பின் இரண்டடியும் மற்றோர் எதுகையாய் வந்தால்* ***இரண்டடி எதுகை*** *யாகும்.*

"துவைக்கும் துளிமுன்னீர்க் கொற்கை மகளிர்
அவைப்பதம் பல்லுக் கழகொவ்வா முத்தம்
மணங்கமழ்தார் அச்சுதன் மண்காக்கும் வேலின்
அணங்கமுத மந்நலார் பாட்டு."

*இதில் இரண்டடி எதுகை வந்தது.*

*இரண்டாம் எழுத்தன்றி மூன்றாம் எழுத்து ஒன்றி வந்தால்* ***மூன்றாமெழுத்தொன்*** *றெதுகை யாகும்.*

"பவழமும் பொன்னுங் குவைஇய முத்தின்
திகழரும் பீன்றன புன்னை."

இதில் மூன்றாம் எழுத்தாகிய ழகரம் ஒன்றும் எதுகை வந்தது.

விட்டிசைத்தலால் வல்லொற்றைப் போல ஓசை அமைந்து எதுகை வந்தால் அது விட்டிசை வல்லொற் றெதுகை யாகும்.

"பற்றிப் பலகாலும் பான்மறி உண்ணாமை
நொஅலையல் நின்ஆட்டை நீ."

இதில் நொ என்ற குறிலுக்குப் பின் வரும் அகரம் விட்டு இசைப்பதனால் வல்லோசை உண்டாகிறது. இது விட்டிசை வல்லொற்றெதுகை.

தொடர்ந்து பல சீர்களிலும் எதுகை வந்தால் அது வழி யெதுகை ஆகும்.

"மண்டலம் பண்டுண்ட திண்டேர் வரகுணன்
தொண்டியின்வாய்
கண்டலந் தண்டுறைக் கண்டதொன் றுண்டு
கனமகர
குண்டலங் கெண்டை யிரண்டொடு தொண்டையுங்
கொண்டொர்திங்கள்
மண்டலம் வண்டலம் பக்கொண்டல் தாழ
வருகின்றதே."

இதில் வழியெதுகை வந்தது.

# 6. பிற தொடைகளும் வகையும்

மோனை, எதுகை என்ற இரண்டு தொடைகளின் இலக்கணத்தையும் அவற்றின் வகைகளையும் அறிந்தோம். இனிப் பிற தொடைகளைப் பற்றித் தெரிந்து கொள்ளலாம்.

**இயைபுத் தொடை:** இறுதியில் உள்ள எழுத்தாவது சொல்லாவது ஒன்றிவரத் தொடுப்பது இயைபுத் தொடை. அடிதோறும் இப்படி வருவது அடி இயைபுத் தொடை.

> இந்திய நாட்டினை இணைத்தவன் காந்தியே
> சொந்தநா டென்று சொன்னவன் காந்தியே
> சுதந்தரம் பெறும்வகை துணிந்தவன் காந்தியே
> இதம்பெறு மன்புரு வேயக் காந்தியே.

இந்த அகவற்பாவில் அடிதோறும் ஈற்றுச்சீர் இணைந்து வந்தமையால் இது அடி இயைபு.

எதுகை, மோனைகளுக்குக் கூறிய இணை முதலிய வகைகள் இயைபு, முரண், அளபெடை என்ற மூன்று தொடைகளிலும் உண்டு. மற்றத் தொடைகளுக்கு முதற் சீரிலிருந்து பார்க்க வேண்டும். இயைபுக்குக் கடைசிச் சீரிலிருந்து பார்க்க வேண்டும்.

> "மொய்த்துடன் தவழும் முகிலே பொழிலே
> மற்றதன் அயலே முத்துறழ் மணலே
> நிழலே இனியதன் அயலது கடலே
> மாதர் நகிலே வல்லே இயலே
> வில்லே நுதலே வேற்கண் கயலே
> பல்லே தளவம் பாலே சொல்லே

புயலே குழலே மயிலே இயலே
அதனால்
இவ்வயின் இவ்வுரு இயங்கலின்
எவ்வயி னோரும் இழப்பர்தந் நிறையே.''

இந்த ஆசிரியப்பாவில் முதல் ஏழு அடிகளிலும் முறையே இணை இயைபு, பொழிப்பு இயைபு, ஒரூஉ இயைபு, கூழை இயைபு, மேற்கதுவாய் இயைபு, கீழ்க் கதுவாய் இணைபு, முற்று இயைபு என்னும் ஏழும் வந்தன. முதல் இரண்டு சீர்களில் மோனை வந்தால் இணைமோனை என்று பெயர் பெறும். பிற தொடைகளும் அப்படியே பெயர் பெறும். ஆனால் இயைபுக்கு மாத்திரம் இறுதியி லிருந்து நோக்கி வகை கூற வேண்டும். பின் இரண்டு சீரில் இணைந்து வந்தால்தான் இணையியைபு என்று சொல்ல வேண்டும். மற்றவையும் இப்படியே பார்த்து வகை தெரிந்து கொள்ள வேண்டும்.

முரண் தொடை: முரண் என்பது விரோதம் அல்லது மாறுபாடு. சொல்லால் முரணாவது சொல் முரண்; பொருளால் மாறுபடுவது பொருள் முரண். 'காட்டாவைக் காட்டினான்' என்பதில் காட்டா, காட்டி என்பவை ஒன்றுக்கு ஒன்று மாறுபட்டதுபோலச் சொல்லளவில் தோன்றுகின்றன. பொருளை நோக்கினால் சொற்களே வேறு; ஒரே பகுதியில் தோன்றியவை அல்ல. காட்டா என்பது காட்டுப் பசு என்ற பொருளையுடையது. இது சொல் முரண்.

மேடு-பள்ளம், இருள்-ஒளி, செல்வம்-வறுமை: இவை பொருள் முரண்.

சொல்லாலோ பொருளாலோ முரண்படும் சொற்கள் தொடர்ந்து வருவது முரண் தொடை. மற்றத் தொடை

களைப் போலவே இதுவும் அடிமுரண், இணை முரண், பொழிப்பு முரண் ஒரூஉ முரண், கூழைமுரண், மேற் கதுவாய் முரண், கீழ்க்கதுவாய் முரண், முற்று முரண் என எட்டு வகைப்படும்.

அடிதோறும் முதற் சீரில் முரண் வந்தால் **அடி முரண்** ஆகும்.

"இருள்பரந் தன்ன மாநீர் மருங்கின்
நிலவுக்குவித் தன்ன வெண்மணல் ஒருசிறை
இரும்பின் அன்ன கருங்கோட்டுப் புன்னை
பொன்னின் அன்ன நுண்டா திறைக்கும்
சிறுகுடிப் பரதவர் மடமகள்
பெருமதர் மழைக்கணும் உடையவால் அணங்கே."

இருள்-நிலவு, இரும்பு-பொன், சிறு-பெரு என்பன ஒன்றுக்கொன்று முரணாக இருத்தல் காண்க. அடி தோறும் முதற் சீரில் வந்தமையால் இது அடி முரண் என்று பெயர் பெறும்.

மற்ற வகைகளுக்கு உதாரம்:

"சீறடிப் பேரெழில் கொடிபோல் ஒல்குபு
சுருங்கிய நுசுப்பிற் பெருகுவடம் தாங்கிக்
குவிந்துசுணங் கரும்பிய கொங்கை விரிந்து
சிறிய பெரிய நிகர்மலர்க் கோதைதன்
வெள்வளைத் தோளும் சேயரிக் கருங்கணும்
இருக்கையும் நிலையும் ஏந்தெழில் இயக்கமும்
துவர்வாய்த் தீஞ்சொலும் உவந்தெனை முனியாது
என்றும் இன்னணம் ஆகுமதி
பொன்றிகழ் நெடுவேற் போர்வல் லோயே."

இந்தப் பாட்டில் முதல் ஏழு அடிகளிலும் முறையே இணை முரண், பொழிப்பு முரண், ஒரூஉ முரண், கூழை முரண், மேற்கதுவாய் முரண், கீழ்க்கதுவாய் முரண், முற்று முரண் என்பன வந்தன.

துவர்வாய்-தீஞ்சொல் என்பன சொல் முரண்; துவர்வாய் என்பது துவர்க்கும் வாய் என்ற பொருளைத் தோற்றச் செய்தது; ஆனால் அதன் இயல்பான பொருள் பவழம் போன்ற வாய் என்பது. தீஞ்சொல்-இனிய சொல். துவர்ப்பும் இனிமையும் முரண்பட்டன.

*அளபெடைத் தொடை:* உயிரளபெடையோ ஒற்றளபெடையோ தொடர்ந்து வருவது அளபெடைத் தொடை. இதிலும் அடியளபெடையும், இணையளபெடை முதல் முற்றளபெடை வரையிலும் உள்ள ஏழும் உண்டு.

"ஆஅ! அளிய அலவன்றன் பார்ப்பினோ
டீஇ ரிரையும்கொண் டீரளைப் பள்ளியுள்
தூஉம் திரையலைப்பத் துஞ்சா திறைவன்தோள்
மேஎ வலைப்பட்ட நம்போல் நறுநுதால்
ஓஒ உழக்கும் துயர்."

இதில் அடிதோறும் முதற்சீரில் அளபெடை வந்தமையால் இது அடியளபெடைத் தொடை.

"தாஅன் தாஅ மரைமலர் உழக்கிப்
பூஉக் குவளைப் போஒ தருந்திக்
காஅய்ச் செந்நெற் கறித்துப் போஒய்
மாஅத் தாஅள் மோஒட் டெருமை
தேஎம் புனலிடைச் சோஒர் பாஅல்
மீஇன் ஆஅர்ந் துகளும் சீஇர்
ஏஎர் ஆஅர் நீஇள் நீஇர்
ஊரன் செய்த கேண்மை
ஆய்வளைத் தோளிக் கலரா னாதே."

இந்தச் செய்யுளில் முதல் ஏழு அடிகளில் முறையே இணையளபெடை, பொழிப்பளபெடை, ஒரூஉ அளபெடை, கூழையளபெடை, மேற்கதுவாயளபெடை, கீழ்க்கதுவாயளபெடை, முற்றளபெடை என்ற ஏழும் வந்தன.

மோனை, எதுகை, இயைபு, முரண், அளபெடை என்ற ஐந்தும் அடி முதல் முற்றுவரையில் உள்ள எட்டு வகைகளாக அமையும்.

இப்படி அமையாத தொடைகள் மூன்று உண்டு. அவை அந்தாதித் தொடை, இரட்டைத் தொடை, செந்தொடை என்பன.

*அந்தாதித் தொடை:* அடிதோறும், ஓரடியின் இறுதியிலுள்ள எழுத்தோ அசையோ சீரோ அடியோ அடுத்த அடியின் முதலில் தொடர்ந்து வரும்படி தொடுப்பது அந்தாதித் தொடை.

''உலகுடன் விளக்கும் ஒளிதிகழ் அவிர்மதி
மதிநலன் அழிக்கும் வளங்கெழு முக்குடை
முக்குடை நீழற் பொற்புடை யாசனம்
ஆசனத் திருந்த திருந்தொளி அறிவனவ்
வாசனத் திருந்த திருந்தொளி அறிவனை
அறிவுசேர் உள்ளமோ டருந்தவம் புரிந்து
துன்னிய மாந்தர தென்ப
பன்னருஞ் சிறப்பின் விண்மிசை உலகே.''

இந்த அகவலின் புரிந்து-துன்னிய, தென்ப-பன்னரும் என்பவற்றில் எழுத்துக்கள் அந்தாதித்து வந்தன. அவிர்மதி-மதிநலன், அறிவனை-அறிவுசேர், உலகே-உலகுடன் என்பவற்றில் அசைகள் அந்தாதியாயின. முக்குடை, ஆசனம் என்னும் சீர்கள் அந்தாதித்து மீட்டும் வந்தன. 4,5-ஆம் அடிகளே அந்தாதித்து வந்தன.

இறுதி அடியின் இறுதிச் சீரும், முதல் அடியின் முதற் சீரும் அந்தாதியாக அமைந்திருப்பதையும் கவனிக்க வேண்டும்.

**இரட்டைத்தொடை:** ஓரடி முழுவதும் வந்த சொல்லே திரும்பத் திரும்ப வரும்படி தொடுப்பது இரட்டைத் தொடை. இது நாற்சீரடிகளில் வருவது.

> "ஒக்குமே ஒக்குமே ஒக்குமே ஒக்கும்
> விளக்கினுட் சீறெரி ஒக்குமே ஒக்கும்
> குளக்கொட்டிப் பூவின் நிறம்."

இதில் முதலடியில் இரட்டைத் தொடை வந்தது.

**செந்தொடை:** எந்தத் தொடையும் இல்லாமல் வருவது செந்தொடை.

> "பூத்த வேங்கை வியன்சினை ஏறி
> மயிலின மகவு நாடன்
> நன்னுதற் கொடிச்சி மனத்தகத் தோனே."

இந்தப் பாட்டு மோனை, எதுகை முதலிய தொடை களில் ஏதும் வாராமல் தொடுத்தமையால் இது **செந்தொடை.**

**பிற வகைகள்:** மேலே சொன்ன அடிமுதல் முற்று வரையில் உள்ள தொடை வகைகள் நாற்சீரடிகளிலே அமைவன. இந்த வகைகளையன்றி வேறு சில வகைகளும் மோனை, எதுகை, இயைபு, முரண், அளபெடை என்னும் தொடைகளுக்குக் கூறுவதுண்டு. அவை சிறப்புடையன அல்ல.

கடை, கடையிணை, பின், கடைக்கூழை, இடைப் புணர் என ஐந்து வகைப்படுவன அவை.

*(1) இறுதிச் சீர்களெல்லாம் ஒன்ற அமைப்பது கடை.*

"கயன்மலைப் பன்ன கண்ணிணை கரிதே
தடநகில் திவளும் தனிவடம் வெளிதே
நூலினும் நுண்ணிடை சிறிதே
ஆடமைத் தோளிக் கழகோ பெரிதே."

இதில் *கடைமுரண்* வந்தது.

*(2) கடை இரு சீரும் ஒன்றி வரத் தொடுப்பது* ***கடையிணை.***

வேதம் உணர்ந்து விதித்த மதித்தறிந்தே.

இதில் ***கடையிணை*** *எதுகை வந்தது.*

*(3) இறுதிச் சீரும் இரண்டாஞ் சீரும் ஒன்றி வரத் தொடுப்பது* ***பின்.***

ஏதுமின்றி யாவுமறிந் தின்புற்றங் காவலொடும்.

இதில் ***பின்*** *எதுகை வந்தது.*

*(4) முதற் சீரையன்றி மற்ற மூன்றிலும் ஒன்றி வரத் தொடுப்பது* ***கடைக்கூழை.***

ஈசன் திருவடியைத் தேர்ந்து தெளிவார்க்கு.

இதில் ***கடைக்கூழை மோனை*** *வந்தது.*

*(5) இடையில் உள்ள இரண்டாவது மூன்றாவது சீர்கள் ஒன்றிவரத் தொடுப்பது* ***இடைப்புணர் தொடை.***

பாசவினைத் தொல்லையெலாம் ஒல்லையினிற் பாறுமே.

இதில் ***இடைப்புணர் எதுகை*** வந்தது.

***இதுவரைக்கும் சொன்ன தொடைகளின் வகைகளைத்*** *தொகுத்து நினைவு கொள்வது நலம்.*

(1) அடிதோறும் முதலில் ஒன்றி வருவது அடிமோனை முதலியனவாகத் தொடைக்கு ஏற்பப் பெயர் பெறும்.

(2) அடிதோறும் இறுதிச் சீர் ஒன்றி வருவது கடைமோனை முதலியனவாகப் பெயர் பெறும்.

குறிப்பு: இயைபுத் தொடைக்கு மாத்திரம் தலை கீழாகப் பார்த்துப் பெயர் சொல்ல வேண்டும்.

மற்ற வகைகள் பின்வருமாறு அமையும்: (மோனைத் தொடையைச் சார்த்தி உதாரணம் சொல்லப் பெற்றாலும் மற்றத் தொடைகளுக்கும் பொருத்திக் கொள்ள வேண்டும்).

| சீர் எண் | பெயர் |
|---|---|
| 1-2 | இணை மோனை |
| 1-3 | பொழிப்பு மோனை |
| 1-4 | ஒரூஉ மோனை |
| 1-2-3 | கூழை மோனை |
| 1-3-4 | மேற்கதுவாய் மோனை |
| 1-2-4 | கீழ்க்கதுவாய் மோனை |
| 1-2-3-4 | முற்று மோனை |
| 3-4 | கடையிணை மோனை |
| 2-4 | பின் மோனை |
| 2-3-4 | கடைக்கூழை மோனை |
| 2-3 | இடைப்புணர் மோனை |

# 7. ஓசைகளின் வகை

பாக்கள் நான்கு வகை என்பதை முன்பு பார்த்தோம். ஒவ்வொரு வகைப் பாவுக்கும் ஒவ்வோர் ஓசை உண்டு. இந்த ஓசையைத் தளையைக் கொண்டு தெரிந்து கொள்ளும் முறையை யாப்பருங்கலமும், யாப்பருங்கலக் காரிகையும் சொல்கின்றன. தொல்காப்பியம் தளையை வரையறுக்க வில்லை. பாக்களுக்குத் தனித்தனியே உள்ள ஓசையின் இயல்பை, கேட்ட பழக்கத்தைக் கொண்டு அறிய வேண்டும் என்று தொல்காப்பிய உரையில் பேராசிரியர் சொல்கிறார். அந்த ஓசையைத் தெரிந்து கொள்ளக் கூர்மையான செவி வேண்டுமாம். அத்தகைய செவியை எஃகுச் செவி என்று கூறுவர்.

இசையில் ஓர் இராகத்தைப் பாடும்போது இன்ன இராகம் என்று கேட்டவுடனே பழக்கம் உள்ளவர்கள் தெரிந்து கொள்கிறார்கள். ஆரோகண அவரோகண சுவரங் களை வைத்துக் கணக்குப் பார்த்த பிறகு தெரிந்து கொள்வ தில்லை. காதினால் கேட்டு இன்ன இராகம் என்று தெரிந்த பிறகு அதற்குரிய இலக்கணத்தை ஒட்டிப் பார்த்தால் அது சரியாக அமைந்திருப்பதை உணரலாம்.

இராகத்தைச் சுவரத்தால் வரையறை செய்து தெரிந்து கொள்வது போன்றது, தளையைப் பார்த்து இன்ன ஓசை என்று தெரிந்து கொள்ளும் முறை.

வெண்பாவுக்கு உரியது **செப்பல் ஓசை.** செப்பல் என்பதற்கு விடை கூறுதல் என்று ஒரு பொருள் உண்டு. கேள்வியை வினாவென்றும், விடையைச் செப்பு என்றும் இலக்கண நூல்கள் சொல்லும். முன் இரண்டடி ஒரு கேள்வியைச் சொல்லப் பின் இரண்டடி அதற்குரிய

விடையைச் சொல்ல, நடுவில் தனிச்சீரில் ஒரு நிறுத்தத்தைப் பெறும் வகையில் வெண்பா அமைந்திருக்கிறது. அதனால் செப்பலோசை என வந்ததென்று தோன்றுகிறது.

> "அப்பிலே தோய்த்திட் டடித்தடித்து நாமதனைத்
> தப்பினால் அஃதுநமைத் தப்பாதோ-செப்பக்கேள்
> இக்கலிங்கம் போனால்பின் ஏகலிங்க மாமதுரைச்
> சொக்கலிங்க முண்டே துணை"

என்பதில் இப்படி அமைந்திருப்பதைக் காணலாம்.

வெண்பாவின் ஓசையை வெள்ளோசை என்றும் சொல்வதுண்டு.

ஆசிரியப்பாவின் ஓசை **அகவலோசை.** ஆசிரியப் பாவுக்கே அகவற்பா என்று ஒரு பெயர் உண்டல்லவா? அது அந்த ஓசையினால் வந்ததுதான். அகவல் என்பது அழைத்தல் என்னும் பொருள் உடையது. ஒவ்வோரடியும் தனித்தனியே அழைக்கும் வகையில் அமைந்திருக்கிறது தான் காரணம் போலும்.

கலிப்பாவின் ஓசை **துள்ளலோசை** என்று பெயர் பெறும். அலைகள் துள்ளுவது போல இருப்பதனால் அந்தப் பெயர் வந்திருக்கலாம்.

வஞ்சிப்பாவுக்கு உரியது **தூங்கலோசை.** தூங்கல்-தொங்குதல். கனத்தால் தொங்குவது போல நெடுஞ் சீர்களால் அமைந்திருப்பதனால் இந்தப் பெயர் வந்திருக்குமோ என்று தோன்றுகிறது.

இந்த நான்கு வகை ஓசைகளில் ஒவ்வொன்றும் மூன்று மூன்றாகப் பிரிந்து பெயர் பெறும். செப்பலோசை யானது ஏந்திசைச் செப்பலோசை, தூங்கிசைச் செப்ப லோசை, ஒழுகிசைச் செப்பலோசை என்று மூன்றாகும்.

*(1) வெண்சீர் வெண்டளை மட்டும் வரும் வெண்பாவில் அமையும் ஓசை* **ஏந்திசைச் செப்பல்** *எனப்படும்.*

"வெண்சீர் வெண்டளை யால்வரும் யாப்பை
ஏந்திசைச் செப்பல் என்மனார் புலவர்"

*என்பது பழைய இலக்கணச் சூத்திரம்.*

"யாதானும் நாடாமால் ஊராமால் என்னொருவன்
சாந்துணையும் கல்லாத வாறு."

*இந்தப் பாட்டில் வெண்சீர் வெண்டளையே வந்தவாறு காண்க. இதற்கு வாய்பாடு அமைத்தால்,*

தேமாங்காய் தேமாங்காய் தேமாங்காய் கூவிளங்காய்
கூவிளங்காய் தேமாங்காய் காசு.

*என்று அமையும். ஈற்றுச் சீர் அல்லாதன யாவும் காயச்சீர்களாக அமைந்திருப்பதைக் கவனிக்க வேண்டும்.*

*(2) இயற்சீர் வெண்டளை மட்டும் அமைந்து வரும் வெண்பாக்களில் அமைவது* **தூங்கிசைச் செப்பலோசை.**

"பாலொடு தேன்கலந் தற்றே பணிமொழி
வாலெயி றூறிய நீர்."

*இதில் ஈற்றுச் சீரைத் தவிர மற்ற எல்லாம் இயற்சீராகிய ஆசிரிய உரிச்சீர்களாகவே வந்தன; ஆதலின், இயற்சீர் வெண்டளையே அமைந்தது.*

கூவிளம் கூவிளம் தேமா கருவிளம்
கூவிளம் கூவிளம் நாள்

*என்று வாய்பாடு அமைத்துப் பார்த்தால் மாவும் விளமுமே வந்தது புலனாகும்.*

(3) இருவகை வெண்டளையும் கலந்து வருவது **ஒழுகிசைச் செப்பலோசை.**

"அகர முதல எழுத்தெல்லாம் ஆதி
பகவன் முதற்றே உலகு."

இந்தப் பாட்டில் அகர-முதல, முதல-எழுத்தெல்லாம், ஆதி-பகவன், பகவன்-முதற்றே, முதற்றே-உலகு என்பவற்றில் மாமுன் நிரை வந்தது. இது இயற்சீர் வெண்டளை. எழுத்தெல்லாம்-ஆதி என்பதில் காய்முன் நேர் வந்து வெண்சீர் வெண்டளை ஆயிற்று. இப்படி இருவகை வெண்டளையும் விரவி வந்ததனால் இது ஒழுகிசைச் செப்பலோசை ஆயிற்று.

ஆசிரியத்துக்குரிய அகவலோசையும் இப்படியே மூன்று வகைப்படும்; அவை ஏந்திசை அகவலோசை, தூங்கிசை அகவலோசை, ஒழுகிசை அகவலோசை என்பன.

(1) நேரொன் றாசிரியத்தளை மட்டும் வந்தால் **ஏந்திசை அகவலோசை** வரும்.

வேலன் செவ்வேள் மெத்தென் பாதம்
சீலர் போற்றி செய்வர் என்ப
தோத வேண்டுங் கொல்லோ
யாதும் யாண்டும் ஈவான் அன்றோ?

இதில் எல்லாச் சீர்களும் தேமாவாகவே வந்தன; மாமுன் நேர் வந்த நேரொன்றாசிரியத் தளையே வந்தது.

(2) நிரையொன் றாசிரியத்தளை மட்டும் வந்தால் அது **தூங்கிசை அகவலோசை.**

"அணிநிழ லசோகமர்ந் தருணெறி நடாத்திய
மணிதிக ழவிரொளி வரதனைப்
பணிபவர் பவநனி பரிசறுப் பவரே."

*இதில் விளமுன் நிரை வரும் நிரையொன் றாசிரியத் தளையே வந்தது.*

*(3) நேரொன்றாசிரியத் தளை, நிரையொன் றாசிரியத் தளை, இயற்சீர் வெண்டளை விரவி வருவது* ***ஒழுகிசை அகவலோசை.***

முருகன் பாதம் முன்னி ஏத்தி
உருகிய அடியவர் உளங்கனிந் தருள்செயின்
நலம்வந் தமைந்து நயக்க
வலம்பெற் றுயர்வமிம் மகிதல மதனினே.

*இதில் அவ்வாறு வந்தமை காண்க.*

*கலிப்பாவுக் குரிய துள்ளலோசை ஏந்திசைத் துள்ளலோசை, அகவல் துள்ளலோசை, பிரிந்திசைத் துள்ளலோசை என்று மூன்று வகைப்படும்.*

*(1) கலித்தளை மட்டும் வந்தால்* ***ஏந்திசைத் துள்ளலோசை.***

''முருகமர்தா மரைமலர்மேல்
முடியிமையோர் புடைவரவே
வருசினனார் தருமறைநூல்
வழிபிழையா மனமுடையார்
இருவினைபோய் விழமுனியா
வெதிரியகா தியையரியா
நிருமலரா யறிவினராய்
நிலவுவர்சோ தியினிடையே.''

*இதில் காய்முன் நிரை வந்து யாவும் கலித்தளையாக அமைந்ததைக் கவனிக்க.*

*(2) வெண்டளையும் கலித்தளையும் விரவி வந்தால் அது* ***அகவல் துள்ளலோசை*** *யாகும்.*

"வேதங்கள் அறைகின்ற
உலகெங்கும் விரிந்தனநின்
பாதங்கள் இவையென்னிற்
படிவங்கள் எப்படியோ
ஓதங்கொள் கடலன்றி
ஒன்றினோ டொன்றொவ்வாப்
பூதங்க டொறுநிறைந்தால்
அவையுன்னைப் பொறுக்குமோ."

*இந்தப் பாட்டில் காய்முன் நிரை வந்த கலித்தளையும், காய்முன் நேர் வந்த வெண்சீர் வெண்டளையும், விளமுன் நேர்வந்த இயற்சீர் வெண்டளையும் வந்துள்ளன,*

*(3) பல தளையும் விரவி வருவது* **பிரிந்திசைத் துள்ளலோசை.**

"குடநிலைத் தண்புறவிற்
கோவல ரெடுத்தார்ப்பத்
தடநிலைய பெருந்தொழுவில்
தகையேறு மரம்பாய்ந்து
வீங்குமணிக் கயிறொரீஇத்
தாங்குவனத் தொன்றப்போய்க்
கலையினொடு முயலிரியக்
கடிமுல்லை முறுவலிப்ப."

*இதில் 'குடநிலைத்-தண்புறவிற்' என்பதில் விள முன் நேர் வந்தது. இது இயற்சீர் வெண்டளை. 'தண்புறவிற்-கோவலர்'-இதில் காய் முன் நேர் வந்தது. இது வெண்சீர் வெண்டளை. 'கோவல-ரெடுத்தார்ப்ப'-விள முன் நிரை வந்தது. இது நிரையொன் றாசிரியத் தளை. 'தடநிலைய பெருந்தொழுவில்'-இதில் காய் முன் நிரை வரக் கலித்தளை அமைந்தது. இப்படிப் பல தளைகளும் கலந்து வந்தது காண்க.*

வஞ்சிப்பாவுக்குரிய தூங்கலோசையும் ஏந்திசைத் தூங்கல், அகவல் தூங்கல், பிரிந்திசைத் தூங்கல் என்று மூன்று வகைப்படும்.

(1) ஒன்றிய வஞ்சித் தளையால் வருவது **ஏந்திசைத் தூங்கலோசை.**

"வினைத்திண்பகை விழச்செற்றவன்
வனப்பங்கய மலர்த்தாளிணை
நினைத்தன்பொடு தொழுதேத்துநர்
நாளும்
மயலார் நாற்கதி மருவார்
பெயரா மேற்கதி பெறுகுவர் விரைந்தே."

இதில் கனிமுன் நிரை வந்து ஒன்றிய வஞ்சித் தளை அமைந்தமையின் ஏந்திசைத் தூங்கலோசை வந்தது. பின்னால் உள்ள இரண்டு அடிகளும் ஆசிரியச் சுரிதகம்.

(2) ஒன்றாத வஞ்சித் தளையால் வருவது **அகவல் தூங்கலோசை.**

"வானோர்தொழ வண்டாமரைத்
தேனார்மலர் மேல்வந்தருள்
ஆனாவருள் கூர்றிவனைக்
காணார்
மலர்கொண் டேத்தி வணங்குநர்
பலர்புகழ் முத்தி பெறுகுவர் விரைந்தே."

இதில் கனி முன் நேர் வந்து, ஒன்றாத வஞ்சித் தளை அமைந்தமையால் அகவல் தூங்கலோசை ஆயிற்று.

(3) மேலே சொன்ன இரண்டு தளைகளும் பிறவும் விரவி வந்தால் அதைப் **பிரிந்திசைத் தூங்கலோசை** என்பர்.

"மந்தாநிலம் மருங்கசைப்ப
வெண்சாமரை புடைபெயர்தரச்
செந்தாமரை நாண்மலர்மிசை
எனவாங்
கினிதின் ஒதுங்கிய இறைவனை
மனமொழி மெய்களின் வணங்குது மகிழ்ந்தே."

# 8. வெண்பா இனம்

*பாக்கள் நான்கு வகை என்றும் அவை வெண்பா, ஆசிரியப்பா, கலிப்பா, வஞ்சிப்பா என்றும் பாவினங்கள் துறை, தாழிசை, விருத்தம் என மூவகைப்படும் என்றும் முன்பு கண்டோம். வெண்பாவின் வகைகளாகிய குறள் வெண்பா, சிந்தியல் வெண்பா, நேரிசை வெண்பா, இன்னிசை வெண்பா, பஃறொடை வெண்பா, கலி வெண்பா ஆகியவற்றின் இலக்கணத்தை முதல் பாகத்தில் அன்பர்கள் அறிந்திருப்பார்கள்.*

*வெண்பாவின் இனங்களைப் பற்றி இப்போது கவனிக்கலாம். குறள் வெண்பாவுக்குக் குறள் வெண் செந்துறை, குறள் தாழிசை என்று இரண்டு இனங்கள் உண்டு.*

## குறள் வெண் செந்துறை

*இரண்டு அடிகளாய் அளவு ஒத்து அறம் பொருள் இன்பம் வீடு என்னும் சிறந்த உறுதிப் பொருள்களைப் பற்றி வருவது குறள்வெண்செந்துறை. இதை வெண் செந்துறை என்றும் கூறுவது உண்டு.*

"ஒழுகிய ஓசையின் ஒத்தடி இரண்டாய்
விழுமிய பொருளது வெண்செந் துறையே"

*என்பது யாப்பருங்கலம்.*

"ஆர்கலி உலகத்து மக்கட் கெல்லாம்
ஓதலிற் சிறந்தன் றொழுக்க முடைமை"

*என்னும் முதுமொழிக் காஞ்சிப் பாட்டில் இவ்விலக் கணங்கள் பொருந்தியிருப்பதால் அது குறள் வெண் செந்துறை யாகும்.*

*நான்கு சீருக்கு அதிகமாகப் பல சீரால் அமைந்த அடி இரண்டாய் ஈற்றடி குறைந்து வருபவையும், செந்துறை வெள்ளையிற் சிதைந்து வருபவையும், குறள் வெண்பாவில் தளை பிறழ்ந்து வருபவையும் குறள் தாழிசை எனப்படும். தாழிசைக் குறள் என்றும் இதைச் சொல்வதுண்டு.*

"நண்ணு வார்வினை நைய நாடொறும்
நற்ற வர்க்கர சாய ஞானநற்
கண்ணி னானடி யேஅடை வார்கள்
கற்றவரே."

*இந்தக் குறள் தாழிசை நான்கு சீரினும் மிக்க அடிகளை உடையதாய், முதலடி எட்டுச் சீரும் இரண்டாவது அடி ஐந்து சீரும் உடையதாய் வந்தது.*

வெள்ளை நரைத்தலை மிக்கவ ராயினும்
எள்ளி யுரைப்பீர் என்னே நுங்குணம்.

*இது குறள் வெண்செந்துறைபோல இருப்பினும் விழுமிய பொருளுடையதாக இல்லாமையால் குறள் தாழிசை ஆயிற்று.*

எத்தனை காலம் பெரியாரோ டிருந்தாலும்
பித்தருக் குண்டாமோ பெட்பு.

இது குறள்வெண்பாவைப் போலத் தோற்றினாலும், பெரியாரோ டிருந்தாலும் என்ற இடத்தில் கலித்தளை அமைந்து செப்பலோசை பிறழ்ந்தமையால் இது குறள் தாழிசை ஆயிற்று.

பின் இரண்டும் அத்துணைச் சிறப்புடையன அல்ல.

## வெளி விருத்தம்

இனி வெண்பாவின் இனங்களைக் கவனிக்கலாம்.

வெளி விருத்தத்தைப் பற்றி முன்பு ஓரளவு அறிந்தோம். ஐஞ்சீரடி மூன்றோ நான்கோ வந்து, ஐந்தாவது சீர் ஒரே சொல்லாக வருவது வெளிவிருத்தம்.

''ஒருமூன் றொருநான் கடியடி தோறும்
தனிச்சொல் தழுவி நடப்பன வெள்ளை
விருத்தம் எனப்பெயர் வேண்டப் படுமே''

என்பது காக்கைப்பாடினியம் என்ற பழைய யாப்பிலக்கணச் சூத்திரம்.

''கொண்டல் முழங்கினவால் கோபம் பரந்தனவால்
என்செய்கோயான்
வண்டு வரிபாட வார்தளவம் பூத்தனவால்
என்செய்கோயான்
எண்டிசையுந் தோகை இயைந்தகவி ஏங்கினவால்
என்செய்கோயான்.''

இது மூன்று அடியாகி, அடிதோறும் இறுதியில் 'என் செய்கோயான்' என்ற தனிச் சொல்லைப் பெற்று வந்த வெளி விருத்தம். ஐந்தாம் சீராக ஒரே தொடர் மீட்டும் மீட்டும் வந்திருத்தலைக் கவனிக்க.

"ஆவா வென்றே அஞ்சின ராழ்ந்தார் ஒருசாரார்
கூகூ வென்றே கூவிளி கொண்டார் ஒருசாரார்
மாமா வென்றே மாய்ந்தனர் நீத்தார் ஒருசாரார்
ஏகீர் நாய்கீர் என்செய்து மென்றார் ஒருசாரார்."

*இது நாலடியாய் வந்த வெளி விருத்தம்.*

## வெண்டாழிசை

*மூன்று அடிகளை உடையதாய் முதல் இரண்டும் நாற்சீரடிகளாகவும், ஈற்றடி வெண்பாவைப் போல முச்சீர் அடியாகவும் நிற்பது வெண்டாழிசை ஆகும். இதனை* ***வெள்ளொத்தாழிசை*** *என்றும் கூறுவது உண்டு.*

"நண்பி தென்று தீய சொல்லார்
முன்பு நின்று முனிவு செய்யார்
அன்பு வேண்டு பவர்."

*இது வெண்டாழிசை. வெண்டளை பிறழாமல் இச்செய்யுள் வந்திருந்தால் சிந்தியல் வெண்பாவாகும். அப்படி வாராமையால் இது வெண்டாழிசை யாயிற்று.*

*சிந்தியல் வெண்பா ஒரு பொருள்மேல் மூன்று அடுக்கி வந்தால் அதையும்* ***வெள்ளொத்தாழிசை*** *என்று சொல்வதுண்டு.*

"அன்னாய் அறங்கொல் நலங்கிளர் சேட்சென்னி
ஒன்னா ருடைபுலம் போல நலங்கவர்ந்து
துன்னான் துறந்து விடல்."
"ஏடீ அறங்கொல் நலங்கிளர் சேட்சென்னி
கூடா ருடைபுலம் போல நலங்கவர்ந்து
நீடான் துறந்து விடல்."

"பாவாய் அறங்கொல் நலங்கிளர்சேட்சென்னி
மேவார் உடைபுலம் போல நலங்கவர்ந்து
காவான் துறந்து விடல்."

இந்த மூன்றும் ஒரு பொருளை மூன்று வேறு வகையில் சொல்வதால் ஒரு பொருள்மேல் மூன்று அடுக்கி வந்தன. இம் மூன்றும் இணைந்து ஒரு வெள்ளொத் தாழிசையாக அமைந்தன.

## வெண்டுறை

மூன்று அடி முதல் ஏழடி வரையில் உடையனவாய், பின் உள்ள சில அடிகள் சில சீர் குறைந்து வருவன வெண்டுறை ஆகும். எத்தனை சீராலும் அடிகள் அமையலாம். அடிகள் யாவும் ஒரே ஒலியாக வந்தால் ஒரொலி வெண்டுறை என்றும், சீர் குறையும் பின்னடிகள் வேறு ஒலியாக வந்தால் வேற்றொலி வெண்டுறை என்றும் பெயர் பெறும்.

"குழலிசைய வண்டினங்கள் கோழிலைய செங்காந்தட்
குலைமேற் பாய
அழலெரியின் மூழ்கினவால் அந்தோ அளியவென்
றயல்வாழ் மந்தி
கலுழ்வனபோல் நெஞ்சழிந்து கல்லருவி தூஉம்
நிழல்வரை நன்னாடன் நீப்பானோ அல்லன்."

இது நான்கடியாய், ஈற்றடி இரண்டும் இரண்டிரண்டு சீர் குறைந்து வந்த ஒரொலி வெண்டுறை.

"தாளாளர் அல்லாதார் தாம்பல ராயக்கால்
என்னா மென்னாம்
யாளியைக் கண்டஞ்சி யானைதன் கோடிரண்டும்
பீலிபோற் சாய்த்துவிடும் பிலிற்றி யாங்கே."

*இது மூன்றடியால் வந்து, ஈற்றடி இரண்டும் இரண்டிரண்டு சீர் குறைந்து வந்த ஓரொலி வெண்டுறை.*

"முழங்குதிரைக் கொற்கைவேந்தன் முழுதுலகம் புரந்தளித்து
முறைசெய் கோமான்
வழங்குதிறல் வாள்மாறன் மாச்செழியன் தாக்கரிய
வைவேல் பாடிக்
கலங்கிநின் றாரெலாம் கருதலா காவணம்
இலங்குவா ளிரண்டினா லிருகைவீ சிப்பெயர்ந்
தலங்கன்மா லையவிழ்ந் தாடவா டும்மிவள்
பொலங்கொள்பூந் தடங்கட்கே புரிந்துநின் றாரெலாம்
விலங்கியுள் ளந்தப விளிந்துவே றாபவே."

*இது ஏழடியாய் முதல் இரண்டடியும் ஆறு சீராய் ஓரோசையுடையனவாய், பின்புள்ள ஐந்தடியும் நாற்சீராய் வேற்றோசையாய் வந்த வேற்றொலி வெண்டுறை.*

*ஈற்றடி ஒரு சீர் குறைந்து வருவதும் வெண்டுறையின் பாற்படும்.*

"வெறியுறு கமழ்கண்ணி வேந்தர்கட் காயினும்
உறவுற வரும்வழி உரைப்பன உரைப்பன்மன்
செறிவுறு தகையினர் சிறந்தனர் இவர்நமக்
கறிவுறு தொழிலரென் றல்லவை சொல்லன்மின்
பிறபிற நிகழ்வன பின்."

*இது ஐந்தடியாய் இறுதி அடி ஒரு சீர் குறைந்து வந்த ஓரொலி வெண்டுறை.*

# 9. ஆசிரியத் தாழிசையும் துறையும்

ஆசிரியப்பா நான்கு வகைப்படும் என்பதை முன்பு பார்த்தோம். நேரிசை ஆசிரியப்பா, நிலைமண்டில ஆசிரியப்பா, இணைக்குறள் ஆசிரியப்பா, அடிமறி மண்டில ஆசிரியப்பா என்ற நான்கு வகைகளின் இலக்கணத்தையும் முதற் பாகத்தில் அறிந்தோம். இனி ஆசிரியப்பாவின் இனங் களைப் பற்றித் தெரிந்து கொள்ளலாம்.

## ஆசிரியத் தாழிசை

ஆசிரியத் தாழிசை, ஆசிரியத்துறை, ஆசிரிய விருத்தம் என்று ஆசிரியப்பாவின் இனம் மூவகைப்படும். அள வொத்து அமைந்த மூன்று அடிகளால் வருவது **ஆசிரியத் தாழிசை.** ஒரு பொருள் மேல் மூன்று அடுக்கி வருவது சிறப்பு.

வேலினை எடுத்தனை விண்ணவர்க் கருளினை
மாலற அன்பர் மனத்தில் இருந்தனை
காலுற வணங்கினம் கருணையை அருள்தியே.

இது ஒரு பொருள் மேல் ஒன்று வந்த ஆசிரியத் தாழிசை.

"கன்று குணிலாக் கனியுதிர்த்த மாயவன்
இன்றுநம் ஆனுள் வருமேல் அவன்வாயிற்
கொன்றையந் தீங்குழல் கேளாமோ தோழீ."

"பாம்பு கயிறாக் கடல்கடைந்த மாயவன்
ஈங்குநம் ஆனுள் வருமேல் அவன்வாயில்
ஆம்பலந் தீங்குழல் கேளாமோ தோழீ."

"கொல்லையஞ் சாரற் குருந்தொசித்த மாயவன்
எல்லிநம் ஆனுள் வருமேல் அவன்வாயில்
முல்லையந் தீங்குழல் கேளாமோ தோழீ."

இவை மூன்றடியால் அளவொத்து ஒரு பொருள் மேல் மூன்று அடுக்கி வந்த ஆசிரியத் தாழிசை.

ஓரடிக்கு இத்தனை சீர் என்ற வரையறை இல்லை. எத்துணைச் சீராலும் மூன்றடி அமைந்து வரலாம்.

## ஆசிரியத்துறை

ஆசிரியத் துறை நான்கு வகைப்படும். நான்கு அடிகளாய் இடையிலே குறைந்த அடிகளை உடையனவாய் வருவது பொது இலக்கணம். அந்த நால்வகையும் வருமாறு:-

1. நான்கு அடி உடையதாய் ஈற்றயலடி குறைந்து வருவது.
2. நான்கு அடி உடையதாய் ஈற்றயலடி குறைந்து இடைமடக்காய் வருவது.
3. நான்கடியாய் இடையிடை குறைந்து வருவது.
4. நான்கடியாய் இடையிடை குறைந்து மடக்காய் வருவது.

ஓரடிக்கு எத்துணைச் சீரும் வரலாம்.

1. சாந்தமலை யாமனத்துத் தாபர்கள் நனிபோற்றித்
தாழும் குன்றம்
காந்தமலை எனவறிந்து சென்றினிது மலர்தூவிக்
கந்த னைவேல்

வேந்தமலி யுங்கடம்ப வள்ளியொடு மமரர்கரி
காந்தமலை வில்லாயென் றாதரித்தால் புவியிலிடர்
காணா மன்றே.

*இது நான்கடியாய் ஈற்றயலடி குறைந்து, மற்ற அடிகள் மூன்றும் ஒத்து வந்த ஆசிரியத் துறை. மூன்றாவது அடியும் ஒத்திருந்தால் இது ஆசிரிய விருத்தமாகிவிடும்.*

2. "வண்டுளர் பூந்தார் வளங்கெழு செம்பூட்சேய்
வடிவே போலத்
தண்டளிர்ப் பிண்டித் தழையேந்தி மாவினவித்
தணந்தோன் யாரே
தண்டளிர்ப் பிண்டித் தழையேந்தி வந்துநம்
பண்டையப் பதிவினவிப் பாங்கு படமொழிந்து
படர்ந்தோ னன்றே."

*இது நான்கடியாய் ஈற்றயலடி குறைந்து இடை மடக்காய் வந்த ஆசிரியத்துறை.*

*இரண்டாம் அடியில் வந்த தண்டளிர்ப் பிண்டித் தழையேந்தி என்ற பகுதியே மூன்றாமடியில் மீட்டும் மடக்கி வந்தமையின் இடைமடக்காயிற்று.*

3. "கொன்றார்ந் தமைந்த குருமுகத் தெழினிறக்
குருதிக் கோட்டன இருந்தடப் பெருங்கைக்
குன்றாமென அன்றாமெனக்
குமுறா நின்றன கொடுந்தொழில் வேழம்

வென்றாங் கமைந்த விளங்கொளி இளம்பிறைத்
துளங்குவாள் இலங்கெயிற் றழலுளைப் பரூஉத்தாள்
அதிரும் வானென எதிரும் கூற்றெனச்
சுழலா நின்றன சுழிகண் யாளி

சென்றார்ந் தமைந்த சிறுநுதி வள்ளுகிர்ப்
பொறிஎருத் துறுவலிப் புலவுநா றழல்வாய்ப்
புனலாமென அனலாமெனப்
புகையா நின்றன புவிமா னேற்றை

என்றாங் கிவைஇவை இயங்கலின் எந்திறத்
தினிவரல் வேண்டலம் தனிவரல் விலக்கலின்
இறுவரைமிசை எறிகுறும்பிடை இதுவென்னென
அதுநோனார்
காவிரவிடைக் களவுளமது கற்றோரது கற்பன்றே.''

*இது முதலடியும் மூன்றாமடியும் பதினான்கு சீராய் மற்ற அடி இரண்டும் பதினாறு சீராய் அமைந்தது. இது இடையிடை குறைந்து வந்த ஆசிரியத்துறை.*

4. ''இரங்கு குயில்முழவா இன்னிசையாழ் தேனா
அரங்கம் அணிபொழிலா ஆடும் போலும் இளவேனில்
அரங்கம் அணிபொழிலா ஆடு மாயின்
மரங்கொல் மணந்தகன்றார் நெஞ்சமென் செய்த
திளவேனில்.''

*இது நான்கடியாய் இடையிடை குறைந்து இடை மடக்காய் வந்த ஆசிரியத்துறை. இதில் முதலடியும் மூன்றா மடியும் நான்கு சீர்களாலும், இரண்டாமடியும் நான்காமடியும் ஐந்து சீர்களாலும் வந்தது காண்க.*

# 10. ஆசிரிய விருத்தம்

ஆசிரிய விருத்தம் ஆறுசீர் முதல் எத்தனை சீராலும் அளவொத்த நான்கு அடிகளால் வருமென்பதைத் தொடக்கத்திலேயே பார்த்தோம். பிற்காலக் காப்பியங்களில் பெரும் பாலானவை ஆசிரிய விருத்தத்திலே அமைந்திருக்கின்றன. பழங்காலத்தில் தொல்காப்பியத்தின்படி கொச்சகம் என்று அடக்கிக் கொள்வதற்கு உரியனவாக உள்ள சில பாடல்கள் யாப்பருங்கலக் காரிகையின்படி ஆசிரிய விருத்தத்தில் அடங்குவனவாக இருக்கும். சிலப்பதிகாரத்தில் வரும் ஆற்று வரி, கொச்சகம் என்று பெயர் பெறும். ஆயினும் அது அறுசீர்க் கழிநெடிலடி ஆசிரிய விருத்தத்தின்பாற்படுவதைக் காணலாம்.

"மருங்கு வண்டு சிறந்தார்ப்ப
மணிப்பூ வாடை யதுபோர்த்துக்
கருங்க யற்கண் விழித்தொல்கி
நடந்தாய் வாழி காவேரி
கருங்க யற்கண் விழித்தொல்கி
நடந்த வெல்லாம் நின்கணவன்
திருந்து செங்கோல் வளையாமை
அறிந்தேன் வாழி காவேரி."

இந்த ஆற்றுவரிப் பாட்டு அரையடிக்கு இரண்டு மாவும், ஒரு காயுமாக வந்த அறுசீர்க் கழிநெடிலடி ஆசிரிய விருத்தமாக இருப்பதைக் காண்க.

இவ்வாறு வந்த ஆசிரிய விருத்தம் நாளடைவில் பலவகைச் சந்தங்களை உடையதாய்ப் பெருகிப் பரந்து வளர்ந்துவிட்டது.

*ஆறு, ஏழு, எட்டுச் சீர்களால் வரும் ஆசிரிய விருத் தங்களே சிறப்புடையன என்று கூறுவர்.*

காவிரிக் கரையில் மோகைக் கடிநகர்ப் புறத்தே ஓர்சார்
பூவிரித் திலகும் சோலை பொதுளிய காந்தக் குன்றம்
நாவிரித் தமைந்த பாவில் வல்லவர் நவின்ற சீர்கொண்
டோவியத் தகுதி பெற்றே உயர்ந்தது காண்பி ரன்றே.

*இது அறுசீர்க் கழிநெடிலடி ஆசிரிய விருத்தம்.*

வண்ணக் கடம்ப மலர்த்தாரான் வள்ளி யணையும் திருமார்பன்
சுண்ண நீறு சுடர்முகங்கள் துலங்கு மோரா றுடையவள்ளல்
உண்ணத் தெவிட்டாப் பேரமுத மொத்த பாவால் அருணகிரி
திண்ணத் துடனே பாடஅருள் தேவன் என்றும் துணையாவான்.

*இதுவும் அறுசீர்க் கழிநெடிலடி ஆசிரிய விருத்தம்.*

கஞ்சமலர் நான்முகனைத் தலைக்குட்டிச் சிறையிருத்தும்
கந்த சாமி
நெஞ்சமலர் அன்புடையோர்க் கெந்நாளும் துணையாகும்
நேயன் தூயன்
வஞ்சமலர் தருமனத்துச் சூரபன்மன் குலமுழுதும்
மடித்த வேலன்
தஞ்சமென அடிவணங்கிப் புகலடைந்தோர் தம்மடியே
சார்து மன்றே.

*இதுவும் அறுசீர்க் கழிநெடிலடி ஆசிரியவிருத்தம்.*

"அம்மையே யப்பா ஒப்பிலா மணியே
அன்பினில் விளைந்தஆ ரமுதே
பொய்ம்மையே பெருக்கிப் பொழுதினைச் சுருக்கும்
புழுத்தலைப் புலையனேன் றனக்குச்

செம்மையே யாய சிவபதம் அளித்த
செல்வமே சிவபெரு மானே
இம்மையே உன்னைச் சிக்கெனப் பிடித்தேன்
எங்கெழுந் தருளுவ தினியே."

*இது எழுசீர்க் கழிநெடிலடி ஆசிரிய விருத்தம்.*

சீதங்கொள் கடம்பலங்கல் மார்பி னானைத்
திருமாலின் மருமகனைப் புலவர் பாடும்
கீதங்கொள் பெருமானைச் சோதி வைவேல்
கெழுமுதிருக் கரத்தானைச் சிறக டித்து
நாதங்கொள் தனிச்சேவல் கொடியாக் கொண்ட
நாயகனைத் தாயனைய அருளி னானைப்
பாதங்கொள் பற்றென்னப் பற்றி னார்க்குப்
பயனாய கடவுளினைப் பரவு வோமே.

*இது எண்சீர்க் கழிநெடிலடி ஆசிரிய விருத்தம்.*

"மருந்தறியேன் மணியறியேன் மந்திரமொன் றறியேன்
மதியறியேன் விதியறியேன் வாழ்க்கைநிலை யறியேன்
திருந்தறியேன் திருவருளின் செயலறியேன் அறந்தான்
செய்தறியேன் மனமடங்கும் திறத்தினிலோ ரிடத்தே
இருந்தறியேன் அறிந்தோரை ஏத்திடவு மறியேன்
எந்தைபிரான் மணிமன்றம் எய்தஅறி வேனோ
இருந்த திசை சொலவறியேன் எங்ஙனம்நான் புகுவேன்
யார்க்குரைப்பேன் என்னசெய்வேன் ஏதுமறிந் திலனே."

*இதுவும் எண்சீர்க் கழிநெடிலடி ஆசிரிய விருத்தமே.*

வானின் மேயவர்கள் சூர னாலிடர்கொள் போதி லேயவர்தம்
வாழ்வு சீரடைய வைத்தவன்
தேனி னோடுதினை யூண தாகவளி காடு மேவுமகள்
சீரு லாவுமெழில் சிந்தையின்

மேனி லாவஅவள் பால தாகமிகு மாலொ டேகியவன்
வேத வேள்விநனி காப்பவன்
ஆனை மாமுகவ னார்பி னேஉதய மான மாகுமரன்
ஆறு வீடுடைய நாதனே.

*இது ஒன்பதின் சீர்க் கழிநெடிலடி ஆசிரிய விருத்தம்.*

''கொங்கு தங்கு கோதை யோதி மாத ரோடு
கூடி நீடும் ஓடை நெற்றி
வெங்கண் யானை வேந்தர் போந்து வேத கீத
நர்த வென்று நின்று தாழ
அங்க பூவ மாதி யாய ஆதி நூலின்
நீதி யோதும் ஆதி யாய
செங்கண் மாலைக் காலை மாலை சேர்நர் சேர்வர்
சோதி சேர்ந்த சித்தி தானே.''

*இது பதின்சீர்க் கழிநெடிலடி ஆசிரிய விருத்தம்.*

''பேரா தரிக்கும் அடியவர்தம்
பிறப்பை ஒழித்துப் பெருவாழ்வும்
பேறுங் கொடுக்க வரும்பிள்ளைப்
பெருமான் என்னும் பேராளா
சேரா நிருதர் குலகலகா
சேவற் கொடியாய் திருச்செந்தூர்த்
தேவா தேவர் சிறைமீட்ட
செல்வா என்றுன் திருமுகத்தைப்
பாரா மகிழ்ந்து முலைத்தாயர்
பரவிப் புகழ்ந்து விருப்புடன்அப்
பாவா வாஎன் றுனைப்போற்றிப்
பரிந்து மகிழ்ந்து வரவழைத்தால்
வாரா திருக்க வழக்குண்டோ
வடிவேல் முருகா வருகவே

வளருங் களபக் குரும்பைமுலை
வள்ளி கணவா வருகவே.''

*இது பன்னிரு சீர்க் கழிநெடிலடி ஆசிரிய விருத்தம். அரையடிக்கு இரண்டு மாவும் ஒரு காயும் உள்ள அறுசீர்க் கழிநெடிலடி ஆசிரிய விருத்த அடிகளே மீட்டும் மடக்கி வந்தது இது. இத்தகைய விருத்தங்களை இரட்டையாசிரிய விருத்தங்கள் என்றும் கூறுவர்.*

''துள்ளுமறி யாமனது பலிகொடுத் தேன்கர்ம
துட்டதே வதைகளில்லை
துரியநிறை சாந்ததே வதையா முனக்கே
தொழும்பனன் பபிடேகநீர்
உள்ளுறையி லென்னாவி நைவேத்தி யம்ப்ராணன்
ஓங்குமதி தூபதீபம்
ஒருகால மன்றிதுச தாகால பூசையா
ஒப்புவித் தேன்கருணைகூர்
தெள்ளுமறை வடியிட்ட அமுதப் பிழம்பே
தெளிந்ததே னேசீனியே
திவ்யரசம் யாவும் திரண்டொழுகு பாகே
தெவிட்டாத ஆனந்தமே
கள்ளனறி வூடுமே மெள்ளமெள வெளியாய்க்
கலக்கவரு மானந்தமே
கருதரிய சிற்சபையி லானந்த ந்ருத்தமிடு
கருணாக ரக்கடவுளே.''

*இதுவும் பன்னிரு சீர்க்கழிநெடிலடி ஆசிரிய விருத்தம். இதுவும் இரட்டை ஆசிரிய விருத்தம்.*

# 11. ஒத்தாழிசைக் கலிப்பாக்கள்

**பா**க்கள் நான்கில் மூன்றாவது கலிப்பா. அதற்குரிய ஓசை துள்ளலோசை. ஒத்தாழிசைக் கலிப்பா, கொச்சகக் கலிப்பா, வெண் கலிப்பா என்ற மூன்று பெரும் பிரிவை உடையது அது. ஒத்தாழிசைக் கலிப்பாவின் வகை: (1) நேரிசை ஒத்தாழிசைக் கலிப்பா, (2) அம்போதரங்க ஒத்தாழிசைக் கலிப்பா, (3) வண்ணக ஒத்தாழிசைக் கலிப்பா என்னும் மூன்று. கொச்சகக் கலிப்பா (1) தரவு கொச்சகக் கலிப்பா, (2) தரவிணைக் கொச்சகக் கலிப்பா, (3) சிஃறாழிசைக் கொச்சகக் கலிப்பா, (4) பஃறாழிசைக் கொச்சகக் கலிப்பா, (5) மயங்கிசைக் கொச்சகக் கலிப்பா என்று ஐந்து வகைப்படும். வெண் கலிப்பாவில் வேறு வகையில்லை.

கலிப்பாவிற்குரிய உறுப்புக்கள் சில உண்டு. தரவு, தாழிசை, அம்போதரங்கம், வண்ணகம், தனிச்சொல், சுரிதகம் என்பவை அவை. இந்த உறுப்புக்கள் யாவும் வரும் கலிப்பா வண்ணக ஒத்தாழிசைக் கலிப்பா.

ஒத்தாழிசைக் கலிப்பாவில் ஒன்றாகிய நேரிசை ஒத்தாழிசைக் கலிப்பாவில் தரவு, தாழிசை, தனிச்சொல், சுரிதகம் என்னும் நான்கும் வரும். இவற்றோடு அம்போ தரங்கம் சேர்ந்து வருவது அம்போதரங்க ஒத்தாழிசைக் கலிப்பா. அவற்றோடு வண்ணக உறுப்பும் சேர்ந்து வருவது வண்ணக ஒத்தாழிசைக் கலிப்பாவாகும்.

## நேரிசை ஒத்தாழிசைக் கலிப்பா

தரவு ஒன்றும் தாழிசை மூன்றும் தனிச்சொல்லும் சுரிதகமும் முறையே பெற்று வருவது நேரிசை ஒத்தாழிசைக் கலிப்பா.

தரவு என்பது தருதல் என்னும் பொருளை உடையது. அது முகப்பைப் போன்றது. எருத்தம் என்றும் அதற்குப் பெயருண்டு. நான்கு சீர்களை உடைய அடிகளால் வரும். பெரும்பாலும் விளச்சீர், காய்ச்சீர்களால் அடிகள் அமையும். நேரிசை ஒத்தாழிசைக் கலிப்பாவில் தரவு மூன்றடி முதல் பல அடிகளுடையதாக வரும்.

தாழிசை என்பது தரவினும் தாழ்ந்து இசைப்பதனால் அப்பெயர் பெற்றது. அதற்கு இடைநிலைப் பாட்டு என்றும் ஒரு பெயர் உண்டு. இரண்டடி முதல் நான்கடி வரையிலும் தாழிசை வரும். தரவுக்குள்ள அடிகளைவிடக் குறைவாகவே இருக்க வேண்டும்.

தனிச் சொல் என்பது பாட்டின் அடிகளோடு ஓசையில் இசையாமல் தனியே நிற்கும். அதற்கு விட்டிசை, தனிநிலை, கூன் என்ற பெயர்களும் உண்டு.

சுரிதகம் என்பது கடைசியில் முடிந்து நிற்கும் உறுப்பு. கலிப்பா வஞ்சிப்பா என்னும் இரண்டிலும் இது வரும். வெண்பாச் சுரிதகம், ஆசிரியப்பாச் சுரிதகம் என்று இரண்டு வகை உண்டு. நேரிசை ஒத்தாழிசைக் கலிப்பாவில் இந்த இரண்டில் ஏதேனும் ஒன்று வரும். சுரிதகம் என்பது சுழித்து முடிதல் என்னும் பொருளுடையது. அதற்கு அடக்கியல், வைப்பு, வாரம், போக்கியல் என்றும் பெயர்கள் உண்டு.

இந்த உறுப்புக்களின் பெயருக்குரிய காரணத்தைப் பின்வரும் பழைய சூத்திரம் புலப்படுத்துகிறது.

"தந்துமுன் நிற்றலின் தரவே, தாழிசை
ஒத்தாழ் தலின்அஃ தொத்தா ழிசையே,
தனிதர நிற்றலின் தனிச்சொல், குனிதிரை
நீர்ச்சுழி போல நின்றுசுரிந் திறுதலின்
சோர்ச்சியில் புலவர் சுரிதகம் என்ப."

*நேரிசை ஒத்தாழிசைக் கலிப்பாவுக்கு உதாரணம் வருமாறு.*

*(தரவு)*

"வாளெடுங்கண் பனிகூர வண்ணம்வே றாய்த்திரிந்து
தோளெடுந்தண் டகைதுறந்து துன்பங்கூர் பசப்பினவாய்ப்
பூணொடுங்கு முலைகண்டும் பொருட்பிரிதல் வலிப்பவோ.

*(தாழிசை)*

சூருடைய நெடுங்கடங்கள் சொலற்கரிய என்பவால்
பீருடைய நலந்தொலையப் பிரிவாரோ பெரியவரே. (1)

சேணுடைய கடுங்கடங்கள் செலற்கரிய என்பவால்
நாணுடைய நலந்தொலைய நடப்பாரோ நயமிலரே. (2)

சிலம்படைந்த வெங்கானம் சீரிலவே என்பவால்
புலம்படைந்த நலந்தொலையப் போவாரோ பொருளிலரே. (3)

*(தனிச்சொல்)*

எனவாங்கு

*(சுரிதகம்)*

அருளென லிலராய்ப் பொருள்வயிற் பிரிவோர்
பன்னெடுங் காலமும் வாழியர்
பொன்னொடுந் தேரொடும் தானையிற் பொலிந்தே."

*இந்தக் கலிப்பாவில் தரவு ஒன்றும், தாழிசைகள் மூன்றும், தனிச் சொல்லும், சுரிதகமும் அமைந்துள்ளமையின் இது நேரிசை ஒத்தாழிசைக் கலிப்பா.*

## அம்போதரங்க ஒத்தாழிசைக் கலிப்பா

தரவு ஒன்றும், தாழிசை மூன்றும், அம்போதரங்க உறுப்பும், தனிச் சொல்லும், சுரிதகமும் பெற்று வருவது அம்போதரங்க ஒத்தாழிசைக் கலிப்பாவாகும். அம்போ தரங்கம் என்பதற்கு நீரின் அலை என்று பொருள். கரையை அடைய அடைய அலையின் உயரம் சுருங்குவது போல இருப்பதனால் இந்தப் பெயர் அமைந்தது. முதலில் நாற்சீரடி, பிறகு முச்சீரடி, பின்பு இருசீரடிகளாக அமைவது இந்த உறுப்பு. நாற்சீரடிகள் இரண்டு அமைந்தவை இரண்டு, நாற்சீர் ஓரடி நான்கு, முச்சீரடி எட்டு, இரு சீரடி பதினாறு இவை அமைந்து அம்போதரங்கம் வரும். நான்கு, எட்டு, பதினாறு என்பவை அவற்றிலே பாதியாக வருவதும் உண்டு.

அம்போதரங்க உறுப்பை அசையடி, பிரிந்திசைக் குறள், சொற்சீரடி, எண் என்றும் கூறுவர். நாற்சீர் ஈரடி களைப் பேரெண் என்றும், நாற்சீர் ஓரடிகளை அளவெண் என்றும், முச்சீர் ஓரடிகளை இடையெண் என்றும், இருசீரடிகளைச் சிற்றெண் என்றும் சொல்வார்கள்.

அம்போதரங்க ஒத்தாழிசைக் கலிப்பாவுக்கு உதாரணம் வருமாறு:-

(தரவு)

''கெடலரும் மாமுனிவர் கிளந்துடன் தொழுதேத்தக்
கடல்கெழு கனைசுடரிற் கலந்தொளிரும் வாலுளைய
அழலுவிர் சுழல்செங்கண் அரிமாவாய் மலைந்தானைத்
தாரொடு முடிபிதிர்த்த தமனியப் பொடிபொங்க
வார்புனல் இழிகுருதி அகலிட முடிநனைப்பக்
கூருகிரால் மார்பிடந்த கொலைமலி தடக்கையோய்.

*(தாழிசை)*

முரசதிர் வியன்மதுரை முழுவதூஉம் தலைபனிப்பப்
புரைதொடித் திரடிண்டோட் போர்மலைந்த மறமல்லர்
அடியொடு முடியிறுப்புண் டயர்ந்தவர் நிலஞ்சேரப்
பொடியெழ வெங்களத்துப் புடைத்ததுநின் புகழாமோ? (1)

கலியொலி வியனுலகம் கலந்துடன் நனிநடுங்க
வலியியல் அவிராழி மாறெதிர்ந்த மருட்சோர்வு
மாணாதார் உடம்போடு மறம்பிதிர எதிர்மலைந்து
சேணுயர் இருவிசும்பிற் சிதைத்ததுநின் சினமாமோ? (2)

படுமணி யினநிரை பரந்துடன் இரிந்தோடக்
கடுமுரண் எதிர்மலைந்த காரொலி எழிலேறு
வெரிநொடு மருப்பொசிய வீழ்ந்துதிறம் வேறாக
எருமலி பெருந்தொழுவின் இறுத்ததுநின் இகலாமோ? (3)

*(அம்போதரங்கம்)*

இலங்கொளி மரகதம் எழில்மிகு வியன்கடல்
வலம்புரித் தடக்கை மாஅல் நின்னிறம் (1)

விரியிணர்க் கோங்கமும் வெந்தெரி பசும்பொனும்
பொருகளி றட்டோய் புரையும் நின்னுடை. (2)

*(இவை பேரெண்)*

கண்கவர் கதிர்முடி கனலும் சென்னியை, (1)
தண்சுடர் உறுபுகை தவிர்த்த ஆழியை, (2)
ஒலியியல் உவணம் ஓங்கிய கொடியை, (3)
வலிமிகு சகடம் மாற்றிய அடியினை. (4)

*(இவை அளவெண்)*

போரவுணர்க் கடந்தோய் நீ, (1)
புணர்மருதம் பிளந்தோய் நீ, (2)
நீரகலம் அளந்தோய் நீ, (3)
நிழல்திகழ்ஐம் படையோய் நீ. (4)

*(இவை இடையெண்)*

ஊழி நீ, உலகும் நீ, (1-2)
உருவும் நீ, அருவும் நீ, (3-4)
ஆழி நீ, அருளும் நீ, (5-6)
அறமும் நீ, மறமும் நீ (7-8)

*(இவை சிற்றெண்)*

*(தனிச்சொல்)*

எனவாங்கு

*(சுரிதகம்)*

அடுதிறல் ஒருவன்நிற் பரவுதும் எங்கோன்
தொடுகழற் கொடும்பூண் பகட்டெழில் மார்பிற்
கயலொடு கலந்த சிலையுடைக் கொடுவரிப்
புயலுறழ் தடக்கைப் போர்வேல் அச்சுதன்
தொன்று முதிர்கடல் உலகம் முழுதுடன்
ஒன்றுபுரி திகிரி உருட்டுவோன் எனவே.''

*அம்போதரங்க ஒத்தாழிசைக் கலியில் தரவு ஆறடியாகவே வரும்.*

## வண்ணக ஒத்தாழிசைக் கலிப்பா

*ஒத்தாழிசைக் கலிப்பாவில் மூன்றாவது வகை வண்ணக ஒத்தாழிசைக் கலிப்பா. வண்ணகம் என்பது ஓர்*

உறுப்புக்குப் பெயர். அதை அராகம், அடுக்கியல் முடுகியல், போக்கியல் என்ற பெயர்களாலும் வழங்குவர். பெரும்பாலும் விளச்சீர்களே விரவி வருவது அது. கருவிளச்சீர்களே மிகுதியாக வரும். அப்படி வருவதனால் முடுகும் ஓசை உண்டாகிறது. இந்த வண்ணக உறுப்பாகிய அராகத்தைத் தாழிசைக்கும், அம்போதரங்கத்துக்கும் இடையிலே பெற்று வருவது வண்ணக ஒத்தாழிசைக் கலிப்பா.

நேரிசை ஒத்தாழிசைக் கலிப்பா நான்கு உறுப்புக்களை உடையது. அம்போதரங்க ஒத்தாழிசைக் கலிப்பாவோ ஐந்து உறுப்புகளை உடையது. வண்ணக ஒத்தாழிசைக் கலிப் பாவுக்கு ஆறு உறுப்புக்கள் இருக்கும். அவையாவன, தரவு, தாழிசை, வண்ணகம், அம்போதரங்கம், தனிச்சொல், சுரிதகம். வண்ணக ஒத்தாழிசைக் கலிப்பாவிலும் தரவு ஆறடியாகவே வரும்.

தனதன தனதன தனதன தனதன என்பது போன்ற ஓசையுடன் வேகமாக நடத்தலின் அராக உறுப்புக்கு முடுகியல் என்று பெயர் வந்தது. இப்படிச் சந்தம் அமைந்த வெண்பாவை முடுகு வெண்பா என்றும், முன்னும் பின்னும் முடுகு அமைந்ததை முன் முடுகு வெண்பா, பின் முடுகு வெண்பா என்றும் பிற்காலத்தார் கூறும் வழக்கு இங்கே ஒப்பு நோக்குதற்குரியது.

அராக உறுப்பு நாற்சீரடியாகிய அளவடி முதல் எல்லா அடியாலும் வரும். நான்கடி முதல் எட்டடி வரையில் அமையும்.

> "அளவடி முதலா அனைத்திலும், நான்கடி
> முதலா இரட்டியும் முடுகியல் நடக்கும்"

என்பது பழைய சூத்திரம்.

*வண்ணக ஒத்தாழிசைக் கலிப்பாவுக்கு உதாரணம் வருமாறு:*

*(தரவு)*

''விளங்குமணிப் பசும்பொன்னின் விரித்தமைத்துக்
கதிர்கான்று
துளங்குமணிக் கனைகழற்காற் றுறுமலர் நறும்பைந்தார்ப்
பளுஉத்தடக்கை மதயானைப் பணையெருத்தின் மிசைத்தோன்றிக்
குரூஉக்கொண்ட மணிப்பூணோய் குறையிரந்து முன்னாட்கண்
மாயாத வனப்பினையாய் மகிழ்வார்க்கும் மல்லர்க்கும்
தாயாகித் தலையளிக்கும் தண்டுறை யூரகேள்:

*(தாழிசை)*

காட்சியாற் கலப்பெய்தி எத்திறத்தும் கதிர்ப்பாகி
மாட்சியால் திரியாத மரபொத்தாய் கரவினால்
பிணிநலம் பிரிவெய்திப் பெருந்தடந்தோள் வனப்பழிய
அணிநலம் தனியேவந் தருளுவது மருளாமோ? (1)

அன்பினால் அமிழ்தளைஇ அறிவினாற் பிறிதின்றிப்
பொன்புனை பூணாகம் பசப்பெய்தப் பொழிலிடத்துப்
பெருவரைத்தோ ளருளுவதற் கிருளிடைத் தமியையாய்க்
கதிர்வளைத்தோள் கதிர்ப்பிக்கும் காதலும் காதலோ? (2)

பாங்கனையே வாயிலாப் பலகாலும் வந்தொழுகும்
தேங்காத கரவினையும் தெளியாத இருளிடைக்கண்
குடவரைவேய்த் தோளிணைகள் குளிர்ப்பிப்பான் தமியையாய்த்
தடமலர்த்தார் அருளுநின் தகுதியும் தகுதியோ? (3)

*(அராகம்)*

தாதுறு முறிசெறி தடமல ரிடையிடைத்
தழலென விரிவன பொழில்
போதுறு நறுமலர் புதுவிரை தெரிதரு
கருநெய்தல் விரிவன கழி
தீதுறு திறமறு கெனநனி முனிவன
துணையொடு பிணைவன துறை
மூதுறு மொலிகலி நுரைதரு திரையொடு
கழிதொடர் புடையது கடல்.

*(அம்போதரங்கம்)*

கொடுந்திற லுடையன சுறவேறு கொட்பதனால்
இடுங்கழி யிராவருதல் வேண்டாமென் றுரைத்திலமோ? (1)

கருநிறத் துறுதொழிற் கராம்பெரி துடைமையால்
இருணிறத் தொருகான லிராவார லென்றிலமோ? (2)

*(இவை பேரெண்)*

நாணொடு கழிந்தன்றால் பெண்ணரசி நலத்தகையே; (1)
துஞ்சலும் ஒழிந்தன்றால் தொடித்தோளி தடங்கண்ணே; (2)
அரற்றொடு கழிந்தன்றா லாரிருளு மாயிழைக்கே; (3)
நயப்பொடு கழிந்தன்றா னனவது நன்னுதற்கே. (4)

*(இவை அளவெண்)*

அத்திறத்தா லசைந்தன தோள். (1)
அலரதற்கு மெலிந்தன கண். (2)
பொய்த்துரையாற் புலர்ந்தது முகம். (3)
பொன் னிறத்தாற் போர்த்தன முலை. (4)
அழலினா லசைந்தது நகை. (5)

அணியினா லொசிந்த திடை. (6)
குழலினா னிமிர்ந்தது முடி. (7)
குறையினாற் கோடிற்று நிறை. (8)

*(இவை இடையெண்)*

உட்கொண்ட தகைத்தொருபால். (1)
உலகறிந்த வலத்தொருபால். (2)
கட்கொண்டல் துளித்தொருபால். (3)
கழிவெய்தும் படிற்றொருபால். (4)
பரிவுறூஉம் தகைத்தொருபால். (5)
படர்வுறூஉம் பசப்பொருபால். (6)
இரவுறூஉம் துயரொருபால். (7)
இளிவந்த வெளிற்றொருபால். (8)
மெலிவு வந் தலைத்தொருபால். (9)
விளர்ப்பு வந் தடைந்தொருபால். (10)
பொலிவுசென் றகன்றொருபால் (11)
பொறைவந்து கூர்ந்தொருபால். (12)
காதலிற் கதிர்ப்பொருபால். (13)
கட்படாத் துயரொருபால். (14)
ஏதிலசென் றணைந்தொருபால். (15)
இயனாணிற் செறித்தொருபால். (16)

*(இவை சிற்றெண்)*

*(தனிச்சொல்)*

எனவாங்கு,

*(சுரிதகம்)*

இன்னதிவ் வழக்கம் இத்திறம் இவணலம்
என்னவு முன்னாட் டின்னா யாகிக்

கலந்த வண்மையை யாயினும் நலந்தகக்
கிளையொடு கெழீஇய தளையவிழ் கோதையைக்
கற்பொடு காணியம் யாமே
பொற்பொடு பொலிகநும் புணர்ச்சி தானே.''

*இதில் உள்ள அராக உறுப்பு ஏழு சீர்களை உடைய அடிகள் நான்கால் வந்தது காண்க. இதில் உள்ள அம் போதரங்க உறுப்பில், முறையே நாற்சீர் ஈரடிகளாலான இரண்டு பேரெண்ணும், நாற்சீர் ஓரடியால் ஆன நான்கு அளவெண்ணும், முச்சீர் ஓரடியால் ஆன எட்டு இடை யெண்ணும், இருசீர் ஓரடியால் ஆன பதினாறு சிற் றெண்ணும் வந்தன.*

## வெண்கலிப்பா

*கலித்தளையும், வெண்டளையும் விரவிவந்த நாற் சீரடிகளால் நடந்து இறுதியடி மூன்று சீர்களால் அமைந்தால் அது வெண்கலிப்பா ஆகும். வெண்டளையே வந்தால் அது கலிவெண்பாவாம். வெண்கலிப்பாவுக்கு உதாரணம்.*

''வாளார்ந்த மழைத்தடங்கண் வனமுலைமேல் வம்பனுங்கக்
கோளார்ந்த பூணாகம் குழைபுரளக் கோட்டெருத்தின்
மாலைதாழ் கூந்தலார் வரன்முறையான் வந்தேத்தச்
சோலைதாழ் பிண்டிக்கீழ்ச் சூழ்ந்தவர்தம் சொல்முறையான்
மனையறமும் துறவறமும் மண்ணவர்க்கும் விண்ணவர்க்கும்
வினையறுக்கும் வகைதெரிந்து வீட்டொடுகட் டிவையுரைத்த
தொன்மைசால் கழிகுணத்தெந் துறவரசைத் தொழுதேத்த
நன்மைசால் வீடெய்து மாறு.''

*இந்தப் பாட்டில் காய்முன் நிரை வந்த கலித்தளையும், காய்முன் நேர் வந்த வெண்டளையும் விரவி வந்தது காண்க.*

# 12. கொச்சகக் கலிப்பா வகை

கொச்சகக் கலிப்பா ஐந்து வகைப்படும். அவை தரவு கொச்சகக் கலிப்பா, தரவிணைக் கொச்சகக் கலிப்பா, சிஃறாழிசைக் கொச்சகக் கலிப்பா, பஃறாழிசைக் கொச்சகக் கலிப்பா, மயங்கிசைக் கொச்சகக் கலிப்பா என்பன.

## தரவு கொச்சகக் கலிப்பா

ஒத்தாழிசைக் கலிப்பாவில் வரும் தரவு என்னும் உறுப்பு மட்டும் தனியாக வந்தாலும், அதனோடு தனிச் சொல்லும் சுரிதகமும் சேர்ந்து வந்தாலும் அது தரவு கொச்சகக் கலிப்பா ஆகும்.

"தினைத்தனை உள்ளதோர்
பூவினில்தேன் உண்ணாதே
நினைத்தொறும் காண்டொறும்பே
சுந்தொறும் எப்பொழுதும்
அனைத்தெலும் புண்ணெக
ஆனந்தத் தேன்சொரியும்
குனிப்புடை யானுக்கே
சென்றூதாய்க் கோத்தும்பீ."

இது நாற் சீருடைய நான்கடியால் வந்த தரவு கொச்சகக் கலிப்பா. கவிஞர்கள் நான்கடிகளால் பாடுவதே பெருவழக்காக இருக்கிறது. திருவாசகத்தில் உள்ள திரு வெம்பாவை முதலியன எட்டடிகளால் வந்த தரவு கொச்சகக் கலிப்பாக்கள். காய்ச் சீரும் விளச் சீரும் விரவி வருவது இது. கலித்தளையும் வெண்டளையும் சிறு பான்மை நிரையொன்றாசிரியத் தளையும் கலந்து வரும். மாச்சீர் வந்தால் இயற்சீர் வெண்டளை அமையும்.

*தனிச் சொல்லும் சுரிதகமும் பெற்று வந்த தரவு கொச்சகக் கலிப்பாவுக்கு உதாரணம் வருமாறு:*

"குடநிலைத் தண்புறவிற் கோவலர் எடுத்தார்ப்பத்
தடநிலைய பெருந்தொழுவிற் றகையேறு மரம்பாய்ந்து
வீங்குமணிக் கயிறொரீஇத் தாங்குவனத் தொன்றப்போய்க்
கலையினொடு முயலிரியக் கடிமுல்லை முறுவலிப்ப
எனவாங்கு
ஆனொடு புல்லிப் பெரும்புதல் முனையும்
கானுடைத் தவர்தேர் சென்ற வாறே."

*இந்தப் பாட்டில் நாற்சீரடியாகிய அளவடிகள் நான்கு முன்பும், பிறகு தனிச் சொல்லும், ஆசிரியச் சுரிதகமும் வந்திருப்பது காண்க.*

## தரவிணைக் கொச்சகக் கலிப்பா

*இரண்டு தரவுகளும், அவற்றில் இடையிலும் பின்னும் தனிச் சொல்லும், இறுதியில் சுரிதகமும் உடைய தாகி வருவது **தரவிணைக் கொச்சகக் கலிப்பா.** இணை என்பது இரண்டைக் குறிப்பது.*

"வடிவுடை நெடுமுடி
வானவர்க்கும் வெலற்கரிய
கடிபடு நறும்பைந்தார்க்
காவலர்க்கும் காவலனாம்
கொடிபடு மணிமாடக்
கூடலார் கோமானே!
எனவாங்கு
துணைவளைத்தோள் இவள்மெலியத்
தொன்னலம் தொடர்ப்புண்டாங்

கிணைமலர்த்தா ஏருளுமேல்
இதுவதற்கோர் மாறென்று
துணைமலர்த் தடங்கண்ணார்
துணையாகக் கருதாரோ.
அதனால்
செவ்வாய்ப் பேதை இவள்திறத்
தெவ்வா றாங்கொல்இஃ தெண்ணிய வாறே.''

*இந்தத் தரவிணைக் கொச்சகக் கலிப்பாவில் என வாங்கு என்றும், அதனால் என்றும் இடையிலும் பின்னும் தனிச் சொல் வந்தது காண்க.*

*சுரிதகம் இன்றியும் தரவிணைக் கொச்சகம் வரும்.*

முந்நான்கு திருக்கரத்து முருகவேள் தனைப்பணிந்தார்
இன்னாங்கு தவிர்ந்தென்று மின்பவாழ் வடைவரெனப்
பன்னாளும் பெரியோர்கள் பாடுவது கேட்டிருப்போம்;
அதனால்
பிறவியெனும் பிணிதொலையப் பிணிமுகமேற் கொண்டருளி
அறவுருவாம் தேவியர்கள் அணைந்திருபா லுஞ்சுடரத்
திறவிதின்நற் பவனிவரும் திருவுருவைப் போற்றுதுமே.

*இரண்டு தரவு வர, இடையே தனிச் சொல் வந்த தரவிணைக் கொச்சகக் கலிப்பா இது.*

## சிஃறாழிசைக் கொச்சகக் கலிப்பா

*தரவு ஒன்றும் தாழிசை மூன்றும் இடையிடையே தனிச் சொல்லும் இறுதியில் சுரிதகமும் பெற்று வருவது **சிஃறாழிசைக் கலிப்பா.***

''பரூஉத்தடக்கை மதயானைப்
பணையெருத்தின் மிசைத்தோன்றிக்

குரூஉக்கொண்ட வெண்குடைக்கீழ்க்
குடைமன்னர் புடைசூழப்
படைப்பரிமான் தேரினொடு
பரந்துலவு மறுகினிடைக்
கொடித்தானை யிடைப்பொலிந்தான்
கூடலார் கோமானே;
ஆங்கொருசார்
உச்சியார்க் கிறைவனா
யுலகெலாம் காத்தளிக்கும்
பச்சையார் மணிப்பைம்பூண்
புரந்தரனாப் பாவித்தார்
வச்சிரங் காணாத
காரணத்தால் மயங்கினரே;
ஆங்கொருசார்
அக்கால மணிநிரைகாத்
தருவரையாற் பகைதவிர்த்து
வக்கிரனை வடிவழித்த
மாயவனாப் பாவித்தார்
சக்கரம் காணாத
காரணத்தால் சமழ்த்தனரே;
ஆங்கொருசார்
மால்கொண்ட பகைதணிப்பான்
மாதடிந்து மயங்காச்செங்
கோல்கொண்ட சேவலங்
கொடியவனாப் பாவித்தார்
வேல்கண்ட தின்மையால்
விம்மிதராய் நின்றனரே;
அஃதான்று

கொடித்தேர் அண்ணல் கொற்கைக் கோமான்
நின்றபுகழ் ஒருவன் செம்பூண் சேஎய்
என்றுநனி அறிந்தனர் பலரே தானும்
ஐவருள் ஒருவன்என் றறிய லாகா
மைவரை யானை மடங்கா வென்றி
மன்னவன் வாழியென் றேத்தத்
தென்னவன் வாழி திருவொடும் பொலிந்தே.''

*இது சிஃறாழிசைக் கலிப்பா. இதில் தாழிசைகளுக்கு முன்னே தனிச் சொற்கள் வந்தன; அவை வராவிடின் இது நேரிசை யொத்தாழிசைக் கலிப்பா ஆகிவிடும்.*

## பஃறாழிசைக் கொச்சகக் கலிப்பா

*தரவு ஒன்றும் மூன்றுக்கு மேற்பட்ட தாழிசைகளும் தனிச்சொல்லும் சுரிதகமும் வந்தால் அது* ***பஃறாழிசைக் கொச்சகக் கலிப்பா*** *ஆகும்.*

*(தரவு)*

''தண்மதியோர் முகத்தாளைத்
    தனியிடத்து நனிகண்டாங்
குண்மதியு முடைநிறையு
    முடன்தளர முன்னாட்கண்
கண்மதியொப் பிவையின்றிக்
    காரிகையை நிறைகவர்ந்து
பெண்மதியின் மகிழ்ந்தநின்
    பேரருளும் பிறிதாமோ?

*(தாழிசை)*

இளநலம் இவள்வாட
　　இரும்பொருட்குப் பிரிவாயேல்
தளநல முகைவெண்பற்
　　றாழ்குழல் தளர்வாளோ? (1)

நகைநலம் இவள்வாடத்
　　தரும்பொருட்குப் பிரிவாயேல்
வகைநலம் இவள்வாடி
　　வருந்திஇல் இருப்பாளோ? (2)

அணிநலன் இவள்வாட
　　அரும்பொருட்குப் பிரிவாயேல்
மணிநலன் மகிழ்மேனி
　　மாசொடு மடிவாளோ? (3)

நாம்பிரியோம் இனியென்று
　　நறுநுதலைப் பிரிவாயேல்
ஓம்பிரியோம் எனவுரைத்த
　　உயர்மொழியும் பழுதாமோ? (4)

குன்றளித்த திரள்தோளாய்
　　கொய்புனத்திற் கூடியநாள்
அன்றளித்த அருள்மொழியால்
　　அருளுவது மருளாமோ? (5)

சில்பகலும் ஊடியக்கால்
　　சிலம்பொலிசீ றடிபரவிப்
பல்பகலும் தலையளித்த
　　பணிமொழியும் பழுதாமோ? (6)

*(தனிச்சொல்)*

அதனால்

*(சுரிதகம்)*

அரும்பெற லிவளினும் தரும்பொரு ளதனினும்
பெறும்பெற லரியன வெறுக்கையும் அற்றே
விழுமிய தறிமதி வாழி
தழுவிய காதலிற் றரும்பொருள் சிறிதே."

*இந்தப் பஃறாழிசைக் கொச்சகக் கலிப்பாவில் ஒரு தரவும், ஆறு தாழிசைகளும், தனிச் சொல்லும், நான்கடிச் சுரிதகமும் வந்தன. தரவினும் குறைந்த அடிகளை உடையது தாழிசை என்பது நினைவில் இருத்தற்குரியது.*

## 13. மயங்கிசைக் கொச்சகக் கலிப்பா

*கலிப்பாவுக்கு உரிய உறுப்புக்கள் தரவு, தாழிசை, அராகம், அம்போதரங்கம், தனிச்சொல், சுரிதகம் என்னும் ஆறு என்பதை முன்பே அறிவோம். இந்த ஆறு உறுப்புக்களும் மிகுதியாகவும் குறைவாகவும் இடம் மாறியும் வந்தால் அது மயங்கிசைக் கொச்சகக் கலிப்பாவாகும்.*

*(தரவு)*

"மணிகொண்ட திரையாழி
சுரிநிமிர மருங்கசைஇப்
பணிகொண்ட முடிச்சென்னி
அரங்காடும் பைந்தொடியும்

பூந்தொத்துக் கொத்தவிழ்ந்த
புனத்துழாய் நீழல்வளர்
தேந்தத்து நறைக்கஞ்சத்
தஞ்சாயல் திருந்திழையும்

மனைக்கிழவன் திருமார்பும்
மணிக்குறங்கும் வறிதெய்தத்
தனக்குரிமைப் பணிபூண்டு
முதற்கற்பின் தலைநிற்ப

அம்பொன்முடி முடிசூடும்
அபிடேக வல்லியொடும்
செம்பொன்மதில் தமிழ்க்கூடல்
திருநகரம் பொலிந்தோய்கேள்.

*(தாழிசை)*

விண்ணரசும் பிறஅரசும்
சிலரெய்த விடுத்தொருநீ
பெண்அரசு தரக்கொண்ட
பேரரசு செலுத்தினையே. (1)

தேம்பழுத்த கற்பகத்தின்
நறுந்தெரியல் சிலர்க்கமைத்து
வேம்பழுத்து நறைக்கண்ணி
முடிச்சென்னி மிலைச்சினையே. (2)

வானேறும் சிலபுள்ளும்
பலர்அங்கு வலனுயர்த்த
மீனேறோ ஆனேறும்
விடுத்தடிகள் எடுப்பதே. (3)

மனவட்ட மிடுஞ்சுருதி
வயப்பரிக்கு மாறன்றே
கனவட்டம் தினவட்ட
மிடக்கண்டு களிப்பதே. (4)

விண்ணாறு தலைமடுப்ப
நனையாநீ விரைப்பொருநைத்
தண்ணாறு குடைந்துவையைத்
தண்டுறையும் படிந்தனையே. (5)

பொழிந்தொழுகு முதுமறையின்
சுவைகண்டும் புத்தமுதம்
வழிந்தொழுகும் தீந்தமிழின்
மழலைசெவி மடுத்தனையே. (6)

*(அராகம்)*

அவனவ னதுவெனு மவைகளி லொருபொருள்
இவனென உணர்வுகொ டெழுதரு முருவினை. (1)

இலதென உள்தென இலதுள தெனுமவை
அலதென அளவிட அரியதொ ரளவினை. (2)

குறியில னலதொரு குணமிலன் எனநிலை
அறிபவர் அறிவினும் அறிவரு நெறியினை. (3)

இருமையும் உதவுவ னெவனவன் எனநின
தருமையை உணர்வுறி னமிழ்தினும் இனிமையை. (4)

*(தாழிசை)*

வைகைக்கோ புனற்கங்கை
வானதிக்கோ சொரிந்துகரை

செய்கைக்கென் றறியேமால்
திருமுடிமண் சுமந்ததே. (1)

அரும்பிட்டுப் பச்சிலையிட்
டாட்செய்யும் அன்னையவள்
தரும்பிட்டுப் பிட்டுண்டாய்
தலையன்பிற் கட்டுண்டே. (2)

முலைகொண்டு குழைத்திட்ட
மொய்வளைகை வளையன்றே
மலைகொண்ட புயத்தென்னீ
வளைகொண்டு சுமந்ததே. (3)

ஊன்வலையி லகப்பட்டார்க்
குட்படாய் நின்புயத்தோர்
மீன்வலைகொண் டதுமொருத்தி
விழிவலையிற் பட்டன்றே. (4)

*(அம்போதரங்கம்)*

போகமாய் விளைந்தோய் நீ
புவனமாய்ப் பொலிந்தோய் நீ
ஏகமாய் இருந்தோய் நீ
எண்ணிறந்து நின்றோய் நீ
வானும் நீ-நிலனும் நீ
மதியும் நீ-கதிரும் நீ
ஊனும் நீ-உயிரும் நீ
உளதும் நீ-இலதும் நீ

*(தனிச்சொல்)*

எனவாங்கு,

(சுரிதகம்)

பொன்பூத் தலர்ந்த கொன்றைபீர் பூப்பக்
கருஞ்சினை வேம்பு திருமுடிச் சூடி
அண்ணலா னேறு மண்ணுண்டு கிடப்பக்
கண்போற் பிறழும் கெண்டைவலன் உயர்த்து
வரியுடற் கட்செவி பெருமூச் செறியப்
பொன்புனைந் தியன்ற பைம்பூண் தாங்கி
முடங்குளைக் குடுமி மடங்கலந் தவிசில்
பசும்பொனசும் பிருந்த பைம்பொன்முடி கவித்தாங்
கிருநிலம் குளிர்தூங் கொருகுடை நிழற்கீ
அரசுவீற் றிருந்த ஆதியங் கடவுள்நின்
பொன்மலர் பொதுளிய சின்மலர் பழிச்சுதும்
ஐம்புல வழக்கின் அருஞ்சுவை யறியாச்
செம்பொருட் செல்வனின் சீரடித் தொழும்புக்
கொண்பொருள் கிடையா தொழியினு மொழிக
பிறிதொரு கடவுட்குப் பெரும்பயன் தரூஉம்
இறைமையுண் டாயினு மாக குறுகிநின்
சிற்றடி யவர்க்கே குற்றேவல் தலைக் கொண்
டம்மா கிடைத்தவா வென்று
செம்மாப் புறூஉம் திறம்பெறற் பொருட்டே."

இந்தப் பாட்டில் எட்டடித் தரவு ஒன்றும், ஈரடித் தாழிசைகள் ஆறும், அராகமும், மீட்டும் ஈரடித் தாழிசைகள் நான்கும், அம்போதரங்க உறுப்பும், தனிச்சொல்லும், பத்தொன்பதடி ஆசிரியச் சுரிதகமும் வந்தன. இதற்கு முன் நாம் பார்த்த கலிப்பா வகையில் இப்படி உறுப்புக்கள் கொண்ட பாட்டு ஒன்றும் இல்லை. இதில் இடவரை யறையின்றியும் இத்தனை என்ற வரையறையின்றியும் உறுப்புக்கள் கலந்து அமைந்தமையின் இது மயங்கிசைக் கொச்சகக் கலிப்பா ஆயிற்று. தமிழில் உள்ள பிரபந்தங்களில்

*ஒன்றாகிய கலம்பகத்தில் முதல் பாட்டு மயங்கிசைக் கொச்சகக் கலிப்பாவாகவே இருக்கும். இங்கே காட்டிய பாடல் குமர குருபர முனிவர் இயற்றிய* ***மதுரைக் கலம் பகத்தில்*** *உள்ள முதற் பாட்டு.*

*யாப்பருங்கலக் காரிகையில் மேற்கோளாகக் காட்டி யிருக்கும் மயங்கிசைக் கொச்சகக் கலிப்பா வருமாறு:*

*(தரவு)*

''மணிகிளர் நெடுமுடி மாயவனும் தம்முனும்போன்
றணிகிளர் நெடுங்கடலும் கானலும் தோன்றுமால்
நுரைநிவந் தவையன்ன நொப்பறைய சிறையன்னம்
இரைநயந் திரைகூடும் ஏமஞ்சார் துறைவகேள். (1)

வரையெனக் கழையென மஞ்செனத் திரைபொங்கிக்
கரையெனக் காற்றெனக் கடிதுவந் திசைப்பினும்
விழுமியோர் வெகுளிபோல் வேலாழி இறக்கலா
தெழுமுன்னீர் பரந்தொழுகும் ஏமஞ்சார் துறைவகேள். (2)

*(தாழிசை)*

கொடிபுரையும் நுழைநுசுப்பிற் குழைக்கமர்ந்த திருமுகத்தோள்
தொடிநெகிழ்ந்த தோள்கண்டும் துறவலனே என்றியால். (1)

கண்கவரு மணிப்பைம்பூண் கயில்கவைய சிறுபுறத்தோள்
தெண்பனிநீ ருகக்கண்டும் திரியலனே என்றியால். (2)

நீர்பூத்த நிரையிதழ்க்கண் நின்றொசிந்த புருவத்தோள்
பீர்பூத்த நுதல்கண்டும் பிரியலனே என்றியால். (3)

கனைவரல்யாற் றிருகரைபோல் கைநில்லா துண்ணெகிழ்ந்து
நினையுமென் நிலைகண்டும் நீங்கலனே என்றியால். (4)

கலங்கவிழ்ந்த நாய்கன்போல் களைதுணை பிறிதின்றிப்
புலம்புமென் நிலைகண்டும் போகலனே என்றியால். (5)

வீழ்சுடரி னெய்யேபோல் விழுமநோய் பொறுக்கலாத்
தாழுமென் னிலைகண்டும் தாங்கலனே என்றியால். (6)

*(தனிச்சொல்)*

அதனால்

*(அராகம்)*

அடும்பல் இறும்பி னெடும்பணை மிசைதொறும்
கொடும்புற மடலிடை யொடுங்கின குருகு. (1)

செறிதரு செருவிடை யெறிதொழி லிளையவர்
நெறிதரு புரவியின் மறிதரும் திமில் (2)

அரைசுடை நிரைபடை விரைசெறி முரைசென
நுரைதரு திரையொடு கரைபொரும் கடல். (3)

அலங்கொளிர் அவிர்சுட ரிலங்கொளி மறைதொறும்
கலந்தெறி காலொடு புலம்பின பொழில். (4)

*(தாழிசை)*

விடாஅது கழலுமென் வெள்வளையும் தவிர்ப்பாய்மன்
கெடாஅது பெருகுமென் கேண்மையும் நிறுப்பாயோ? (1)

ஒல்லாது கழலுமென் னொளிவளையுந் தவிப்பாய்மன்
நில்லாது பெருகுமென் னெஞ்சமும் நிறுப்பாயோ? (2)

தாங்காது கலுழுமென் றகைவளையும் தவிர்ப்பாய்மன்
நீங்காது பெருகுமென் நெஞ்சமும் நிறுப்பாயோ? (3)

மறவாத அன்பினேன் மனனிற்கு மாறுரையாய்
துறவாத தமருடையேன் துயர்தீரு மாறுரையாய். (4)

காதலார் மார்பன்றிக் காமக்கு மருந்துரையாய்
ஏதிலார் தலைசாய யானிற்கு மாறுரையாய். (5)

இணைபிரிந்தார் மார்பன்றி யின்பக்கு மருந்துரையாய்
துணைபிரிந்த தமருடையேன் துயர்தீரு மாறுரையாய் (6)

*(தனிச்சொல்)*

எனவாங்கு,

*(அம்போதரங்கம்)*

பகைபோன் றதுதுறை-பரிவா யினகுறி
நகையிழந் ததுமுகம்-நனிவாடிற் றுடம்பு
தகையிழந் தனதோள்-தலைசிறந் ததுதுயர்
புகைபரந் ததுமெய்-பொறையா யிற்றுயிர்.

*(தனிச்சொல்)*

அதனால்,

*(சுரிதகம்)*

இனையது நினையா வனையது பொழுதால்
நினையல் வாழி தோழி தொலையாப்
பனியொடு கழிக உண்கண்
என்னொடு கழிகவித் துன்னிய நோயே.

*இது தரவு இரண்டும், தாழிசை ஆறும், தனிச் சொல்லும், அராகம் நான்கும், மீண்டும் தாழிசை ஆறும், தனிச் சொல்லும், அம்போதரங்க உறுப்பு எட்டும், தனிச் சொல்லும், நான்கடிச் சுரிதகமும் பெற்று வந்த மயங்கிசைக் கொச்சகக் கலிப்பா.*

# 14. கலிப்பாவின் இனம்

கலிப்பாவுக்கும் மூன்று இனங்கள் உண்டு. (1) கலித்தாழிசை, (2) கலித்துறை, (3) கலிவிருத்தம் என்பன அவை.

## கலித்தாழிசை

அடி வரையறை இல்லாமல் இரண்டடி முதல் எத்தனை அடிகளாலும் வந்து, ஈற்றடி மற்ற அடிகளைவிடச் சீர்கள் மிக்கு நீண்டு வருவது கலித்தாழிசை. ஈற்றடியை அன்றி மற்ற அடிகள் தம்முள் அளவொத்தும், அளவு ஒவ்வாமலும் வரும். இவை ஒரு பொருள் மேல் மூன்று அடுக்கி வந்தால் சிறப்புடையன என்று சொல்வார்கள். ஆதலின் கலித்தாழிசை மூன்று வகைப்படுவதைக் காணலாம்.

''வாள்வரி வேங்கை வழங்கும் சிறுநெறிஎம்
கேள்வரும் போழ்தின் எழால்வாழி வெண்டிங்காள்
கேள்வரும் போழ்தின் எழாலாய்க் குறாலியரோ
நீள்வரி நாகத் தெயிறே வாழி வெண்டிங்காள்.''

இந்தப் பாடலில் முன் மூன்று அடிகளும் நான்கு சீர்களை உடையனவாய், ஈற்றடி ஐந்து சீர்களை உடையதாய் வந்தன.

வெள்ளமென அன்புடைய வித்தகருக் கெந்நாளும்
தள்ளரிய இன்பந் தருவான் குறவள்ளிக்
குள்ளுடைய அன்போங்க உற்ற திருக்கோலம்
நள்ளுகின்ற கொல்லியிலே நாணாளும் கொண்டுறுவான்
நண்ணுதிரே.

*இந்தப் பாடலும் முதல் மூன்றடிகளும் அளவொத்து நிற்ப, ஈற்றடி ஒருசீர் மிக்கு வந்த கலித்தாழிசை.*

"பூண்ட பறையறையப் பூதம் மருள
நீண்ட சடையா னாடுமே
நீண்ட சடையா னாடு மென்ப
மாண்ட சாயல் மலைமகள் காணவே காணவே."

*இந்தச் செய்யுளின் ஈற்றடி ஏனையடிகளினும் மிக்கு, ஐந்து சீர்களால் வந்தது. இரண்டாவது அடி மூன்று சீரால் அமைய, முதலடியும் மூன்றாமடியும் நான்கு சீர்களால் அமைந்தன. இது இடையிடை அளவு குறைந்து, ஈற்றடி அளவு மிக்கு வந்த கலித்தாழிசை.*

காந்தமா மலையினிற் காணலாம் கந்தவேள்
சாந்தமா ருளத்தினர் தாண்மலர்
ஏந்துமா மலரினால் ஏத்தியர்ச் சனைசெயப்
போந்தஅன் னவர்வினை யாவையும் போக்கியின்
பீவதே.

*இந்தப் பாடலும் அத்தகையதே. இவை இரண்டும் இரண்டாவது வகையைச் சார்ந்தன.*

"கொய்தினை காத்தும் குளவி அடுக்கத்தெம்
பொய்தற் சிறுகுடி வாரல்நீ ஐய நலம்வேண்டில்."

"ஆய்தினை காத்தும் அருவி அடுக்கத்தெம்
மாசில் சிறுகுடி வாரல்நீ ஐய நலம்வேண்டில்."

"மென்றினை காத்தும் மிகுபூங் கமழ்சாரற்
குன்றச் சிறுகுடி வாரல்நீ ஐய நலம்வேண்டில்."

*இது இரண்டடியாய் ஈற்றடி மிக்கு ஒரு பொருள் மேல் மூன்றடுக்கி வந்த கலித்தாழிசை.*

## கலித்துறை

*ஐந்து சீர்களை உடைய அளவொத்த நான்கடிகளால் வருவது கலித்துறை.*

''யானும் தோழியும் ஆயமும் ஆடும் துறைநண்ணித்
தானும் தேரும் பாகனும் வந்தென் னலனுண்டான்
தேனும் பாலும் போல்வன சொல்லிப் பிரிவானேல்
கானும் புள்ளும் கைதையும் எல்லாம் கலியன்றோ.''

*இவை ஐந்து சீர்களையுடைய நெடிலடி நான்கால் வந்த கலித்துறை.*

பொன்னைப் போற்றிலன் புகழினைப் போற்றிலன் பொலிமன்
தன்னைப் போற்றிலன் தகவுறு ஞானமாம் வைவேல்
மின்னைப் போற்கதிர் வீசுறக் கரத்தினில் விளங்கும்
நின்னைப் போற்றினன் நின்னடி யடைந்தனன் நிமலா.

*இந்தப் பாடலும் கலித்துறையே.*

*இத்தகைய கலித்துறைகளைக் கலிநிலைத்துறை யென்றும் சொல்வதுண்டு. காப்பியக் கலித்துறை, கட்டளைக் கலித்துறையென்று வேறு இரண்டுவகைக் கலித்துறைகளும் இருத்தலின், இதனைத் தனியே தெரிந்து கொள்ளக் கலிநிலைத் துறையென்று வழங்குகிறார்கள்.*

"வென்றான் வினையின் தொகையாயவி ரிந்து தன்கண்
ஒன்றாய்ப் பரந்த உணர்வின்னொழி யாது முற்றும்
சென்றான் திகழும் சுடர்சூழொளி மூர்த்தி யாகி
நின்றான் அடிக்கீழ்ப் பணிந்தார்வினை நீங்கி நின்றார்."

*இது காப்பியக் கலித்துறை. விருத்தக் கலித்துறை என்றும் இதைக் கூறுவதுண்டு. இந்தக் கலித்துறையில் ஒவ்வோரடியிலும் மூன்றாவது சீர் கனிச் சீராக வந்தது காண்க.*

யார்க்கும் எளியன் இனிதாகிய சொல்லன் என்றும்
ஆர்க்கும் நலமே புரிகின்றவன் ஆழ்ந்த அன்பன்
ஈர்க்கும் அழுக்கிற் செறியாதவன் ஏய்ந்த தூய்மை
சேர்க்கும் செயலான் அவன் ஆண்டிடின் தேயம் ஓங்கும்.

இதுவும் காப்பியக் கலித்துறை.

## கட்டளைக் கலித்துறை

கட்டளைக் கலித்துறை என்பது எழுத்துக்கணக்கை உடைய கலித்துறை என்னும் பொருளுடையது. கட்டளை என்பது கணக்கு. எழுத்துக் கணக்கையுடைய அடிகளைக் கட்டளையடிகள் என்று சொல்வது வழக்கம்.

கட்டளைக் கலித்துறை, அடிதோறும் ஐந்து சீர்களை உடையதாய், ஒவ்வோரடியும் தனித்தனியே வெண்டளை அமைய, ஈற்றுச் சீர் மட்டும் விளங்காய்ச் சீராகி, ஏகாரத்தில் முடியும். இடையில் விளங்காய்ச் சீர் வராது. இந்த இலக்கணம் அமைந்தால் ஒவ்வோரடியிலும் ஒற்றை விட்டு எண்ணிப் பார்த்தால் நேர்முதலாகிய அடியில் பதினாறு எழுத்துக்களும், நிரை முதலாகிய அடியில் பதினேழு எழுத்துக்களும் இருக்கும். இந்தக் கணக்குத் தவறவே தவறாது.

"வெண்டா மரைக்கன்றி நின்பதம் தாங்களன் வெள்ளையுள்ளத்
தண்டா மரைக்குத் தகாதுகொ லோசக மேழுமளித்
துண்டா னுறங்க ஒழித்தான்பித் தாகவுண் டாக்கும் வண்ணம்
கண்டான் சுவைகொள் கரும்பே சகல கலாவல்லியே."

இந்தக் கட்டளைக் கலித்துறையில் ஒவ்வோரடியிலும் பதினாறே எழுத்துக்கள் வந்திருக்கின்றன.

(1) வெண்டா-2, மரைக்கன்றி-4, நின்பதம்-3, தாங்களன்-3, வெள்ளையுள்ளத்-4=16.

*(2) தண்டா-2, மரைக்குத்-3, தகாதுகொ-4, லோசக-3, மேழுமளித்-4=16.*

*(3) துண்டா-2, னுறங்க-3, ஒளித்தான்பித்-4, தாகவுண்-3, டாக்கும் வண்ணம்-4-16*

*(4) கண்டான்-2, சுவைகொள்-3, கரும்பே-3, சகல-3, கலாவல்லியே-5=16.*

*இதில் மூன்றாம் அடியில் 'டாக்கும் வண்ணம்' என்று தேமாந்தண்பூவும் நான்காம் அடியில் 'கலா வல்லியே' என்று புளிமாங்கனியும் வந்தாலும் இடையிலுள்ள ஒற்றை நீக்கிக் கூவிளங்காயாகவும் கருவிளங்காயாகவும் கொள்ள வேண்டும்.*

"நாளென் செயும்வினை தானென் செயுமெனை நாடிவந்த
கோளென் செயுங்கொடுங் கூற்றென் செயுங்கும ரேசரிரு
தாளுஞ் சிலம்புஞ் சதங்கையுந் தண்டையுஞ் சண்முகமும்
தோளுங் கடம்பு மெனக்குமுன் னேவந்து தோன்றிடினே."

*இதுவும் கட்டளைக் கலித்துறையே. இதில் அடிதோறும் வெண்டளை பிறழாது வந்திருக்கிறது. நிரை முதலாகிய கட்டளைக் கலித்துறையில், ஓரடியின் ஈற்றுச் சீருக்கும் அடுத்த அடியின் முதற் சீருக்கும் இடையே வெண்டளை அமையாது.*

"விழிக்குத் துணைதிரு மென்மலர்ப் பாதங்கள் மெய்ம்மை குன்றா
மொழிக்குத் துணைமுரு காஎனும் நாமங்கள் முன்புசெய்த
பழிக்குத் துணையவன் பன்னிரு தோளும் பயந்ததனி
வழிக்குத் துணைவடி வேலுஞ்செங் கோடன் மயூரமுமே."

*இந்தக் கந்தர் அலங்காரப் பாட்டில் ஒவ்வோரடியின் இறுதிச் சீரும் விளங்காயாக முடிகிறது. அடுத்த அடி*

நிரையசையில் தொடங்குவதனால் காய்முன் நிரை வந்து கலித்தளை ஆயிற்று. ஆகவே ஒவ்வோரடியளவில் மட்டும் வெண்டளை அமைவது கட்டளைக் கலித்துறையின் இலக்கணம் என்று தெரிந்து கொள்ள வேண்டும்.

பழங்காலத்தில் கட்டளைக் கலித் துறையை விருத்தம் என்று சொல்லி வந்தார்கள் என்று தெரிகிறது. தேவாரத்தில் அப்பர் சுவாமிகள் பாடிய் திருவிருத்தங்களும், திவ்வியப் பிரபந்தத்தில் உள்ள திருவிருத்தமும் கட்டளைக் கலித் துறைகளே.

"குனித்த புருவமுங் கொவ்வைச் செவ் வாயிற் குமிண்சிரிப்பும்
பனித்த சடையும் பவளம்போன் மேனியிற் பால்வெண்ணீறும்
இனித்த முடைய எடுத்தபொற் பாதமும் காணப்பெற்றால்
மனித்தப் பிறவியும் வேண்டுவதே இந்த மாநிலத்தே.''

இது அப்பர் சுவாமிகள் பாடிய திருவிருத்தம். இது கட்டளைக் கலித்துறையே.

## கட்டளைக் கலிப்பா

இங்கே **கட்டளைக் கலிப்பா** என்ற ஒருவகைப் பாட்டின் இலக்கணத்தையும் தெரிந்து கொள்வது நலம். அதுவும் எழுத்துக் கணக்கு உடையதாகும்.

கட்ட ளைக்கலிப் பாவில் எழுத்தினில்
காட்டு மோர்கணக் குண்டுமெய் போக்கியே
ஒட்டு கின்ற அரையடிக் கேமுதல்
உற்ற தாம்நிரை யென்றிடின் பன்னிரண்
டெட்டும்; அந்த அரையடி நேர்முதல்
ஏய்ந்த தென்னிற் பதினொ ரெழுத்துறும்
திட்ட மாக அடிக்கெட்டுச் சீருறும்
சேரு மிந்தக் கணக்கு வழாதரோ.

கட்டளைக் கலிப்பா எட்டுச் சீர்களையுடைய அடிகள் நான்குடையதாக வரும். அரையடிக்கு, முதல் நேரசை யானால் எழுத்துப் பதி னொன்றும், நிரையசையானால் எழுத்துப் பன்னிரண்டும் இருக்க வேண்டும்.

வேதம் மேவிய தாமரை ஆகம
விரைப்பொ ழிற்படு தூமலர் மாலையாம்
போதம் மேவிய நெஞ்ச மலரினில்
புக்குத் தேன்சொரி புத்தமு தக்குடம்
நாத மேலுறு நுட்பம் சுடருரு
ஞான மேயுரு வாகிய சேமவைப்
பாதி யந்தமி லாததோர் மெய்ந்நிரை
ஆறு மாமுகன் செங்கழற் பாதமே.

இந்தக் கட்டளைக் கலிப்பாவில் முதலடியின் பின் பாதியை அன்றி மற்ற ஏழு அரையடிகளும் நேரசையை முதலில் உடையன. அவற்றில் உள்ள எழுத்துக்களை எண்ணிப் பார்த்தால் பதினோரெழுத்துக்களே இருப்பதைக் காணலாம். அரையடியில் முதல் இரண்டு சீரினிடையே நேரொன்றாசிரியத் தளையும், அதன்பின் வெண்டளையும் அமைந்திருக்கின்றன. தளையையும் எழுத்துக் கணக்கையும் பார்த்துப் பார்த்துப் பாடத் தொடங்கினால் பாடவே முடியாது. பழைய கட்டளைக் கலிப்பாக்களைப் படித்துப் படித்துப் பார்த்து அவற்றின் ஓசையை நன்றாக மனத்தில் வாங்கிக் கொண்டு பாட வேண்டும். பாடின பிறகு பாட்டுப் பிழையில்லாமல் இருக்கிறதா என்று தளையையும் எழுத்துக் கணக்கையும் வைத்துப் பார்க்கலாம்.

கட்டளைக் கலிப்பா வீறுகொண்டு சொல்லும் கருத்துக்களுக்கு ஏற்ற உருவம். பாரதியார் பாடலில் மிடுக்கான இடங்களில் கட்டளைக் கலிப்பாவை ஆண்டிருக்கிறார். புதுமைப் பெண், சுயசரிதை, பராசக்தி முதலியவற்றில் இந்தப் பாவைப் பார்க்கலாம்.

## கலி விருத்தம்

*கலிவிருத்தம்* என்பது நான்கு சீர்களையுடைய அளவடி நான்கினால் அளவொத்து அமைவது. அதன் வகைகளைப் பற்றி முதல் பாகத்திலேயே பார்த்தோம்.

''வேய்தலை நீடிய வெள்ளி விலங்கலின்
ஆய்தலி னொண்சுட ராழியி னான்றமர்
வாய்தலி னின்றனர் வந்தென மன்னர்முன்
நீதலை நின்றுரை நீள்கடை காப்போய்.''

இது ஒருவகைக் கலி விருத்தம்.

''ஆடும் பரிவே லணிசே வலெனப்
பாடும் பணியே பணியா யருள்வாய்
தேடும் கயமா முகனைச் செருவில்
சாடும் தனியா னைசகோ தரனே.''

இது மற்றொரு வகைக் கலிவிருத்தம்.

''உலகெ லாமுணர்ந் தோதற் கரியவன்
நிலவு லாவிய நீர்மலி வேணியன்
அலகில் சோதிய னம்பலத் தாடுவான்
மலர்சி லம்படி வாழ்த்தி வணங்குவாம்.''

இது பின்னும் ஒருவகைக் கலிவிருத்தம். இது கட்டளைக் கலிப்பாவைப் போன்ற ஓசையுடையதாய், அதில் வரும் அரையடியையே முழு அடியாகப் பெற்றதாய் இருக்கிறது. இந்த விருத்தத்தில் அடிக்குப் பன்னிரண்டும் பதினொன்றுமாக எழுத்துக்கள் அமையும்.

நான்கு சீர்களால் அளவொத்து வந்த கலிவிருத்தங்கள் புலவர்களின் ஆற்றலுக்கு ஏற்றபடி பலபல வகை களாக விரிந்துள்ளன.

# 15. வஞ்சிப்பாவும் இனமும்

வஞ்சிப்பா இரண்டு வகைப்படும். குறளடி வஞ்சிப்பா என்பது ஒன்று; மற்றொன்று சிந்தடி வஞ்சிப்பா. இந்த இருவகை வஞ்சிப்பாவும் வஞ்சியடிகள் வந்து அப்பால் தனிச் சொல்லும் ஆசிரியச் சுரிதகமும் பெற்று வரும். குறளடி என்பது இருசீரடி.

## வஞ்சிப்பா

இரண்டு சீரடிகளால் வந்து, தனிச்சொல்லும் ஆசிரியச் சுரிதகமும் பெற்று முடிவது குறளடி வஞ்சிப்பா. சிந்தடி என்பது முச்சீரடி. மூன்று சீர்களையுடைய அடிகளால் வந்து தனிச் சொல்லும் ஆசிரியச் சுரிதகமும் பெற்று முடிவது சிந்தடி வஞ்சிப்பா.

"பூந்தாமரைப் போதலமரத்
தேம்புனலிடை மீன்றிரிதரும்
வளவயலிடைக் களவயின்மகிழ்
வினைக்கம்பலை மனைச்சிலம்பவும்
மனைச்சிலம்பிய மணமுரசொலி
வயற்கம்பலைக் கயலார்ப்பவும்
நாளும்
மகிழ மகிழ்தூங் கூரன்
புகழ்த லானாப் பெருவண் மையனே."

இது குறளடி வஞ்சிப்பா. இதில் இருசீரடிகள் ஆறு முதலில் வந்து, பின்பு 'நாளும்' என்ற தனிச்சொல் வந்து, அப்பால் இரண்டு ஆசிரிய அடிகளால் சுரிதகம் வந்தது காண்க. முன் ஆறு அடிகளில் வஞ்சிச் சீர்கள் வந்தன.

மாகத்தினர் மாண்புவியினர்
யோகத்தினர் உரைமறையினர்
ஞானத்தினர் நயஆகமப்
பேரறிவினர் பெருநூலினர்
காணத்தகு பல்கணத்தினர்
என்றே
இன்னன பல்லோர் ஏத்தும் பெருமான்
மன்னவன் காந்த மலையுறை முருகனே.

*இதுவும் குறளடி வஞ்சிப்பாவே. இங்கே நிலை மண்டில ஆசிரியப்பாச் சுரிதகமாக வந்தது.*

*சிந்தடி வஞ்சிப்பாவுக்கு உதாரணம் வருமாறு:*

''கொடிவாலன குருநிறத்தன குறுந்தாளன
வடிவாலெயிற் றழலுளையன வள்ளுகிரன
பணையெருத்தி னிணையரிமா னணையேந்தத்
துணையில்லாத் துறவுநெறிக் கிறைவனாகி
எயினடுவ ணினிதிருந் தெல்லோர்க்கும்
புணையெனத்
திருவுறு திருந்தடி திசைதொழ
விரிவுறு நாற்கதி வீடுநனி யெளிதே.''

*இது, முதல் ஐந்தடிகளும் சிந்தடிகளாக வந்து, பின் 'புணையென' என்னும் தனிச்சொற் பெற்று, பிறகு இரண்டு ஆசிரிய அடிகள் உள்ள சுரிதகம் வந்த வஞ்சிப்பா. முன் அடிகளில் கனிச்சீர்களும், காய்ச்சீர்களும், விளச்சீரும் விரவி வந்தன.*

''தொன்னலத்தின் புலம்பலைப்பத் தொடித்தோண்மேல்
பன்னலத்த கலந்தொலையப் பரிவெய்தி
இன்னலத்தகை யிதுவென்ன வெழில்காட்டிச்

சொன்னலத்தகைப் பொருள் கருத்தினிற் சிறந்தாங்கெனப்
பெரிதும்
கலங்கரு ரெய்தி விடுப்பவும்
சிலம்பிடைச் செலவும் சேணிவந் தற்றே.''

இதுவும் சிந்தடி வஞ்சிப்பாவே. முதல் நான்கடிகளும் சிந்தடிகளாக வந்து, 'பெரிதும்' என்ற தனிச்சொற் பெற்று, மேல் இரண்டடி ஆசிரியச் சுரிதகம் பெற்று முடிந்தது இது. முன் அடிகளில் காய்ச்சீரும் கனிச்சீரும் விரவி வந்தன.

## வஞ்சிப்பா இனம்

வஞ்சிப்பாவுக்கும் தாழிசை, துறை, விருத்தம் என்று மூன்று இனங்கள் உண்டு.

*வஞ்சித் தாழிசை :* இரு சீரடி நான்காய் அமைந்த பாடல்கள் ஒரு பொருள் மேல் மூன்று அடுக்கி வரும்.

''மடப்பிடியை மதவேழம்
தடக்கையான் வெயின்மறைக்கும்
இடைச்சுர மிறந்தாற்கே
நடக்குமென் மனனேகாண்.''

''பேடையை இரும்போத்துத்
தோகையால் வெயின்மறைக்கும்
காடக மிறந்தார்க்கே
ஓடுமென் மனனேகாண்.''

''இரும்பிடியை இகல்வேழம்
பெருங்கையால் வெயின்மறைக்கும்
அருஞ்சுர மிறந்தார்க்கே
விரும்புமென் மனனேகாண்.''

இந்த மூன்றும், பிரிந்து சென்ற தலைவனை எண்ணி வருந்தும் தலைவி அப்பிரிவால் வருந்திக் கூறும் ஒரு

*பொருள் மேல் வந்தன. இவை குறளடிகளால் வந்தன. காய்ச்சீரும் விளச்சீரும் விரவி வந்தன.*

சூரறுத்த சுடர்வேலன்
சீருறுத்த திருவடியே
நாருறுத்து நணுகின்மயல்
வேரறுக்க மிளிருமின்பம்.

மாவழித்த வடிவேலன்
சேவடிக்கண் திகழன்பு
மேவுவர்க்கு வீணாசை
போவதுற்றுப் பொலியுமின்பம்

மலைபொடித்த வடிவேலன்
நிலைபிடித்த நிகரடியே
தலைபிடித்துச் சார்பவருக்
கிலைவருத்தம் இலகுமின்பம்.

*இவை மூன்றும் ஒரு பொருள்மேல் மூன்று அடுக்கிக் குறளடிகளால் வந்தமையின் வஞ்சித் தாழிசையாகும்.*

***வஞ்சித்துறை:*** *இரு சீரடியாகிய குறளடி நான்காய்த் தனியே வருவது.*

"மைசிறந்தன மணிவரை
கைசிறந்தன காந்தளும்
பொய்சிறந்தனர் காதலர்
மெய்சிறந்திில விளங்கிழாய்."

*இது அவ்வாறு வந்தது காண்க.*

எண்ணருங்கந் தன்புகழ்
பண்ணொடுஞ்சொ லன்பினர்
மண்ணுயர்ந்தின் பந்தர
விண்ணகஞ்சென் றொன்றுவர்.

*இதுவும் வஞ்சித்துறை.*

''திரைத்த சாலிகை
நிரைத்த போனிரைந்
திரைப்ப தேன்களே
விரைக்கொள் மாலையாய்.''

*இதுவும் வஞ்சித்துறையே.*

***வஞ்சி விருத்தம்:*** *மூன்று சீர்களையுடைய அடியாகிய சிந்தடி நான்கினால் வரும்.*

வண்ணங் கண்டு மகிழ்ந்தனன்
எண்ணங் கொண்டே இறைஞ்சினள்
திண்ணங் கொண்டு சிறந்தனள்
நண்ணும் கந்த நலங்கொடாய்.

*இது மூன்று சீரடிகள் நான்கால் வந்த வஞ்சி விருத்தம்.*

''சேலை யார்ந்த சுரத்திடைக்
காலை யார்கழல் ஆர்ப்பவும்
மாலை மார்பன் வருமாயின்
நீல உண்கண் இவள்வாழும்.''

*இதுவும் வஞ்சி விருத்தம்.*

''இருது வேற்றுமை யின்மையால்
சுருதி மேற்றுறக் கத்தினோ
டரிது வேற்றுமை யாகவே
கருது வேற்றடங் கையினாய்.''

*இதுவும் வஞ்சி விருத்தமே.*

*முன்பே வஞ்சி விருத்தங்களின் இலக்கணத்தையும் உதாரணங்களையும் பார்த்தோம். அவற்றையும் பார்த்துக் கொள்க.*

# 16. மருட்பா

*மருட்பா என்ற பாவகை ஒன்று உண்டு. அது நால் வகைப் பாக்களில் ஒன்றாகிய வெண்பாவும் ஆசிரியப்பா வும் இணைந்து வருவது. அதாவது முதலில் பல அடிகள் வெண்பா அடிகளாக அமைய, பின்னுள்ள அடிகள் ஆசிரியப்பா அடிகளாக அமையும். முதலில் வெண்பாவோ என்று தோன்றச் செய்து, முடிவில் ஆசிரியப்பாவோ என்று ஐயுறச் செய்வதால் இதற்கு மருட்பா என்ற பெயர் வந்தது போலும்! மருள்-மயக்கம்.*

*அடியிலக்கணத்தால் மருட்பா எல்லாம் ஒரு வகையாகவே அமையும். ஆனால் பொருளைக் கருதி அதை நான்காகப் பிரித்திருக்கிறார்கள். வேறு பாக்களில் இவ்வாறு பொருளை நோக்கிய பிரிவு இல்லை. புறநிலை வாழ்த்து மருட்பா, கைக்கிளை மருட்பா, வாயுறை வாழ்த்து மருட்பா, செவியறிவுறூஉ மருட்பா என்பவை அந்த நான்கு வகை.*

**புறநிலை வாழ்த்து** *என்பது, 'உன்னுடைய தெய்வம் உன்னைப் பாதுகாக்க, நீ சிறந்து வாழ்வாயாக!' என்ற பொருள் அமையப் பாடுவது.*

என்றும் இளையான் எழிலான் திருமுருகன்
நன்றருளிக் காப்ப நலஞ்சிறந்து கன்றலின்றிச்
சீரும் பொருளும் தெருளும் மிகப்பொலிய
ஆரும் புகழ அறிவோர்தம் நட்பமைய
நாளும் நாளும் வாழிய
கேளும் நண்பரும் கெழுமிப் பொலியவே.

*இதில், 'முருகன் காக்க வாழ்வாயாக' என்ற பொருள் அமைதலின், இது புறநிலை வாழ்த்து மருட்பா. இதில்*

முதல் நான்கு அடிகள் வெண்பா அடிகளாகவும் பின் இரண்டடிகள் ஆசிரியப்பா அடிகளாகவும் வந்தன.

"தென்ற லிடைபோழ்ந்து தேனார் நறுமுல்லை
முன்றில் முகைவிரியும் முத்தநீர்த் தண்கோளூர்க்
குன்றமர்ந்த கொல்லேற்றான் நிற்காப்ப வென்றும்
தீரா நண்பிற் றேவர்
சீர்சால் செல்வமொடு பொலிமதி சிறந்தே."

இதில் முன் மூன்றடி வெண்பா அடிகளாகவும் பின் இரண்டடி ஆசிரியப்பா அடிகளாகவும் வந்தன. 'சிவ பெருமான் காக்க நீ வாழ்க' என்ற பொருளுடைமையால் இதுவும் புறநிலை வாழ்த்தாயிற்று.

**கைக்கிளை மருட்பா,** கைக்கிளை என்னும் ஒரு தலைக்காமத்தைப் பற்றி வருவது. ஆண், பெண் என்னும் இருவருள் யாரேனும் ஒருவர் மட்டும் மற்றவரைக் காமுறுவது ஒருதலைக் காமம் அல்லது கைக்கிளை. அகப்பொருள் நூல்களில் இதை ஒரு திணையாகக் கூறியிருக்கிறார்கள். ஒருவன் ஒருத்தியைக் கண்டு அவள் விரும்பாமலே தான் விரும்பிய நிலையில் கூறுவதும், அப்படியே ஒருத்தி ஒருவனைக் கண்டு காமுற்றுக் கூறுவதும் கைக்கிளையில் அடங்கும். முன்னே சொன்னது ஆண்பாற் கைக்கிளை என்றும், பின்னே சொன்னது பெண்பாற் கைக்கிளை யென்றும் பெயர் பெறும். இந்த ஒருதலைக் காமம் பற்றி வரும் மருட்பா, கைக்கிளை மருட்பா.

"திருநுதல் வேர்வரும்பும் தேங்கோதை வாடும்
இருநிலம் சேவடியும் தோயும் - அரிபரந்த
போகிதழ் உண்கணும் இமைக்கும்
ஆகும் மற்றிவள் அகலிடத் தணங்கே."

இது ஒரு பெண்ணைக் கண்டு, இவள் மானிட மகளோ, தெய்வப் பெண்ணோ என்று ஐயுற்ற ஆடவன் ஒருவன் பிறகு இன்ன இன்ன காரணத்தால் இவள் நிலவுலகில் உள்ள பெண்தான் என்று தெளிந்து கூறியது. அவன் அவளிடம் விருப்பம் கொண்டவன். ஆனால் அவள் அவனை இன்னும் காணவில்லை; விரும்பவில்லை. ஆதலின் இது ஒரு பக்கம் மட்டும் காமம் உண்டான நிலை; ஒரு தலைக் காமமாகிய கைக்கிளை. பாட்டில் முன் இரண்டடி வெண்பா அடிகளாகவும் பின் இரண்டடி ஆசிரியப்பா அடிகளாகவும் இருத்தலின் இது மருட்பா.

வாயுறை வாழ்த்து மருட்பா உண்மையைச் சொல்வது. கசப்பான உண்மையாக இருந்தாலும் அதை வற்புறுத்திச் சொல்வது இது.

''பலமுறையும் ஓம்பப் படுவன கேண்மின்
சொலல்முறைக்கண் தோன்றிச் சுடர்மணித்தேர் ஊர்ந்து
நிலமுறையின் ஆண்ட நிகரில்லார் மாட்டும்
சிலமுறை அல்லது செல்வங்கள் நில்லா
இலங்கும் எறிபடையும் ஆற்றலும் அன்பும்
கலந்ததங் கல்வியும் தோற்றமும் ஏனைப்
பொலஞ்செய் புனைகலனோ டிவ்வாறா னாலும்
விலங்கிவருங் கூற்றை விலக்கலும் ஆகா
அனைத்தாதல் நீவிரும் காண்டிர் நினைத்தக்க
கூறிய வெம்மொழி பிறழாது
தேறிநீர் ஒழுகிற் சென்றுபயன் தருமே.''

'கூற்றுவனை விலக்கலாகாது' என்ற உண்மையைச் சொன்னமையால் வாயுறை வாழ்த்தாயிற்று. இதில் இறுதி இரண்டடிகள் ஆசிரிய அடிகள்; மற்றவை வெண்பா அடிகளாக நின்று மருட்பா ஆயிற்று.

*செவியறிவுறூஉ மருட்பா, இன்னபடி நடக்க வேண்டும் என்று அறிவுறுத்துதலைக் கூறுவது.*

"பல்யானை மன்னர் முருங்க அமருழந்து
கொல்யானைத் தேரொடும் கோட்டந்து நல்ல
தலையாலங் கானம் பொலியத் தொலையாப்
படுகளம் பாடுபுக் காற்றிப் பகைஞர்
அடுகளம் வேட்டோன் மருக அடுதிறல்
ஆளி நிமிர்தோட் பெருவழுதி எஞ்ஞான்றும்
ஈரம் உடையையாய் என்வாய்ச்சொற் கேட்டி
உடைய உழவரை நெஞ்சனுங்கக் கொண்டு
வருங்கால் உழவர்க்கு வேளாண்மை செய்யல்
மழவர் இழைக்கும் வரைக்காண் நிதியீட்டம்
காட்டும் அமைச்சரை ஆற்றத் தெளியல்
அமைத்த அரும்பொருள் ஆறன்றி வெளவல்
இனத்தைப் பெரும்பொரு ளாசையாற் சென்று
மன்ற மறுக அகழாதி என்றும்
மறப்புற மாக மதுரையார் ஓம்பும்
அறப்புறம் ஆசைப்பட் டேற்க அறத்தால்
அவையார் கொடுநாத் திருத்தி நவையாக
நட்டார் குழிசி சிதையாதி ஒட்டார்
செவிபுதைக்கும் தீய கடுஞ்சொற் கவியுடைத்தாய்க்
கற்றாற் கினனாகிக் கல்லார்க் கடிந்தொழுதிச்
செற்றார்ச் செறுத்துநிற் சேர்ந்தாரை ஆக்குதிநீ
சுற்றம் அறிந்த அறிவினாய் மற்றும்
இவையிவை வீயா தொழுகின் நிலையாப்
பொருகட லாடை நிலமகள்
ஒருகுடை நீழல் துஞ்சுவள் மன்னே."

*இது, இன்னது செய்யாதே, இன்னது செய்க என்று அறிவுறுத்தி வந்தமையால் செவியறிவுறூஉ மருட்பா வாயிற்று.*

கடவுள் புறத்தே நின்று காக்க வாழ்க என்ற பொருளைப் பற்றி வருதலால் புறநிலை வாழ்த்து என்றும், ஒரு பக்கத்து விருப்பத்தைக் கூறுவதனால் கைக்கிளை என்றும், உண்மையை வற்புறுத்தி வாழ்த்துவதனால் வாயுறை வாழ்த்து என்றும் (வாய்-உண்மை), செவியில் அறிவுறுத்துவதனால் செவியறிவுறூஉ என்றும் இவை பெயர் பெற்றன.

# 17. தெரிந்து கொள்ள வேண்டியவை

யாப்பிலக்கணத்தில் ஓசையின் அளவை அலகு என்று சொல்வது வழக்கம். அலகு என்பதற்கே அளவு என்பது பொருள். ''அலகிலா விளையாட்டுடையார்'' என்னும் கம்பராமாயணப் பாட்டில் அலகு என்பது அளவு என்னும் பொருளில் வந்திருக்கிறதைக் காண்க.

எழுத்துக்களில் அளவு குறைந்தவை சில உண்டு. ஒரு மொழியில் நிற்கும் போது சில காரணங்களால் அவை ஓசை குறைந்து ஒலிக்கும். குற்றியலிகரம், குற்றியலுகரம், ஐகாரக் குறுக்கம், ஔகாரக் குறுக்கம், ஆய்தக்குறுக்கம், மகரக் குறுக்கம் என்ற எழுத்துக்கள் அத்தகையவை. இவை சொல்லினிடையே வரும்போதுதான் ஓசை குறைந்து நிற்கும். எழுத்திலக்கணம் சொல்லும் நூல்களில் இவற்றைப் பற்றிய செய்திகளைக் காணலாம்.

இந்த எழுத்துக்களில் குற்றியலிகரமும், குற்றியலுகரமும் செய்யுளில் சில இடங்களில் கணக்கிடப்படாமல் நிற்கும். அவற்றைக் கணக்கிட்டால் செய்யுளின் ஓசைக் கணக்குத் தவறிவிடும். ஆதலின், சேர்த்துக் கணக்கிட்டால்

ஓசை சிதையுமென்று தோன்றும் இடங்களில் அவ் விரண்டையும் கணக்கிடக் கூடாது. அவை அலகு பெறாத எழுத்துக்களாகவே கொள்ளப்படுளம். மெய்யெழுத்துக்கள் யாப்பிலக்கணத்தில் அலகு பெறுவதில்லை. அது போலவே குற்றியலிகரத்தையும் குற்றியலுகரத்தையும் கொள்ள வேண்டும்.

> ''சிறுநன்றி இன்றியவர்க்கியாம் செய்தக்கால் நாளைப்
> பெருநன்றி மன்னும் பெரிதென்-றுறுநன்றி
> தானவாய்ச் செய்வதூஉம் தானமன் றென்பவே
> வானவாம் உள்ளத்த வர்.''

இந்தப் பாட்டில் முதலடியில் இரண்டாம் சீர், 'இன்றிவர்க்கியாம்' என்பது. இதற்கு உள்ளபடியே வாய்பாடு அமைத்தால் கூவிளங்கனி ஆகும். கனிச்சீர் வெண்பாவில் வராது. ஆகவே கி என்ற குற்றியலிகரத்தைக் கணக்குப் பண்ணாமல் க் என்ற எழுத்தைப் போல அலகு பெறாமல் வைத்து வாய்பாடு கூற வேண்டும் அப்போது அது கூவிளங்காய் ஆகும்.

> ''அருளல்ல தியாதெனிற் கொல்லாமை கோறல்
> பொருளல்ல தவ்வூன் றினல்.''

என்ற திருக்குறளில் முதலடியில் இரண்டாம் சீரில் 'தியாதெனில்' என்பதிலுள்ள தி குற்றியலிகரம். அதற்கு அலகு உண்டென்று கொண்டால் இரண்டாம் சீர் கருவிளம் ஆகும். முதற்சீர் புளிமாங்காய். காய்முன் நிரை வந்தால் அது கலித்தளையாகிவிடும்; பாட்டுப் பிழையாகிவிடும். ஆகவே தி என்ற எழுத்தைக் கணக்கிற் சேர்க்காமல் த் என்ற எழுத்து நிற்பது போல வைத்து வாய்பாடு சொல்ல வேண்டும். அப்போது அது கூவிளமாகிவிடும்.

*குற்றியலிகரம் மெய்க்குரிய அரை மாத்திரையே உடையதாதலின் உச்சரிக்கும் போது அந்த எழுத்து மெய்யைப் போலவே ஒலிக்கும். 'அருளல்லத் யாதெனின்' என்று சொல்லிப் பார்த்தால், 'அருளல்ல தியாதெனின்' என்பதும் அதேபோல ஒலிப்பதைக் காணலாம். அதனால் தான் அவசியமானபோது அது அலகு பெறாமல் நின்றது.*

*இவ்வாறே குற்றியலுகரமும் அலகு பெறாமல் நிற்பது உண்டு. அது மிக அருமையாகவே இருக்கும்.*

*குற்றியலிகரம் அலகு பெறுவது இயல்பு.*

> "வந்துநீ பேரின் உயிர்வாழும் வாராக்கால்
> முந்தியாய் பெய்த வளைகழலும்-முந்தியாம்
> கோளானே கண்டநம் கோல்குறியாய் இன்னுமோர்
> நாளானே நாம்புணரு மாறு."

*இந்தப் பாட்டில் இரண்டாம் அடியின் முதற் சீராகிய முந்தியாய் என்பதில் தி என்னும் குற்றியலிகரம் வந்தது. அது அலகு பெற்றமையால் அச்சீர் கூவிளமாக நின்று அடுத்து நேரசை வர வெண்டளை அமைந்தது. அவ்வடியே தனிச் சொல்லிலும் இருப்பதைக் காண்க.*

*பொதுவாக அளபெடைகள் ஓசைகெட வரும் போது வருபவை. ஆயினும் சில இடங்களில் வரும் உயிரளபெடை அலகு பெறாமல் நிற்பதும் உண்டு:*

> "இடைநுடங்க ஈர்ங்கோதை பின்தாழ வாட்கண்
> புடைபெயரப் போழ்வாய் திறந்து-கடைகடையின்
> உப்போஒ எனவுரைத்து மீள்வாள் ஒளிமுறுவற்
> கொப்போநீர் வேலி உலகு."

*இந்த வெண்பாவில் மூன்றாம் அடியின் முதற்சீரில் அளபெடை வந்தது. அதைக் கணக்குப் பண்ணினால்*

தேமாங்காய் என்ற வாய்பாடாகும்; காய் முன் நிரை வந்து கலித்தளையாகிவிடும். ஆகவே அந்த அளபெடையைக் கணக்குப் பண்ணாமல், அது அலகு பெறாததாக வைத்துத் தேமா என்னும் வாய்பாட்டுச் சீராகவே கொள்ள வேண்டும். அப்போது மாமுன் நிரை வந்து இயற்சீர் வெண்டளை அமைந்து விடும்.

ஐகாரக் குறுக்கம் குற்றெழுத்துப் போல அலகு பெறும்.

"அன்னையை நோவ தவமால் அணியிழாய்
புன்னையை நோவன் புலந்து."

அன்னையை, புன்னையை என்ற சீர்களில் இரண்டிரண்டு ஐகாரங்கள் வந்தன. அவை இரண்டு குறில்களைப் போல அலகு பெற்றுக் கூவிளச்சீராயின.

ஒற்றளபெடை ஓரலகுபெறும்.

"கண்ண் கருவிளை கார்முல்லை கூரெயிறு
பொன்ன் பொறிசுணங்கு போழ்வா யிலவம்பூ
மின்ன் நுழைமருங்குல் மேதகு சாயலாள்
என்ன் பிறமகளா மாறு."

இந்தப் பாடலில் ஒவ்வோரடியிலும் முதற்சீரில் ஒற்றளபெடை வந்தது. அதைக் கணக்குப் பண்ணா விட்டால் அந்தச் சீர்கள் ஓரசைச் சீராகவே இருக்கும். இப்போது நான்கு சீர்களும் தேமாவாக நின்று, வருஞ்சீர் முதலில் நிரை வர வெண்டளை அமைந்தது.

"எஃஃ கிலங்கிய கையரா யின்னுயிர்
வெஃஃகு வார்க்கில்லை வீடு."

இதில் 'எஃகிலங்கிய' என்றும் 'வெஃகுவார்க் கில்லை' என்றும் ஆயுதம் அளபெடுக்காமல் இருந்தால்

தளை தவறும். எஃ என்பது ஓரசைச் சீராகவும் வெஃகு என்பது தேமாவாகவும் நின்று இலக்கணத்தோடு மாறுபடும். ஆய்தம் அளபெடுத்து ஓரெழுத்தைப் போலக் கணக்குப் பண்ணும்படி நிற்பதனால் 'தேமா கருவிளம் கூவிளம் கூவிளம்-தேமாங்காய் தேமாங்காய் காசு' என்ற வாய்பாடு அமைந்து, வெண்டளை பிறழாமல் நின்று குறள் வெண்பாவின் இலக்கணம் நிரம்பி நிற்கிறது பாட்டு.

இவ்வாறு மிகவும் அருமையாக வரும் இலக்கணங்களை யாப்பருங்கலக் காரிகை, யாப்பருங்கல விருத்தியுரை என்னும் நூல்களில் கண்டு கொள்ளலாம்.

# 18. நல்ல கவிகள்

இது வரையில் சொன்ன இலக்கணங்களை யெல்லாம் அறிந்து கொண்டு பிறகு கவிபாடப் புகுவது என்பது இயலாத காரியம். பலமுறை பழம்புலவர்கள் பாடிய கவிகளைப் படித்துப் பார்த்து அவற்றின் ஓசை யமைதியைத் தெரிந்து கொள்ள வேண்டும். இங்கே கூறிய இலக்கணங்களில் எவை எவை அவற்றில் அமைந் திருக்கின்றன என்று ஆராய்ந்து அறிய வேண்டும். கருத்து வளமும் சொல் வளமும் உள்ளவர்களே நல்ல கவிதை பாடலாம். கவிதையில் அமையும் கவிதைத் தன்மை யென்பது பாடுவோரின் உள்ளுணர்வைப் பொறுத்தது. கவிதையிலுள்ள யாப்பமைதி அல்லது செய்யுட்டன்மை இத்தகையதென்று சுட்டிக் காட்டலாம். யாப்பிலக்கணம் கற்றவர்கள் இலக்கணப் பிழை இல்லாமல் செய்யுட் பாடலாம். ஆனால் அது கவிதையாக இருக்கும் என்று

சொல்ல இயலாது. சொல்லமைதி, பொருளமைதி, கவிதையெழில், யாப்பமைதி ஆகிய எல்லாம் சேர்ந்து அமைவதே நல்ல கவிதை. இவற்றில் கவியெழிலைத் தவிர மற்றவற்றை இத்தகையன என்று சுட்டிக் காட்டலாம்; கற்றுக் கொள்ளலாம். ஆனால் கவிதையெழில் என்பது அவரவர்களுடைய உள்ளுணர்வை ஒட்டி அமைவது. அதைப் பிரதிபை என்று கூறுவர். கருவிலே திருவுடைய வர்களே நல்ல கவிஞராகிறார்கள்.

இயல்பாகவே கவிபாடும் திருவுடையவர் பாடும் கவிதை இயல்பாக மலர்ந்த தாமரைபோல் இருக்கும். இலக்கண அறிவும் அகராதிப் பழக்கமும் உடையவர் அவற்றை மட்டும் வைத்துக் கொண்டு செய்யுள் இயற்றினால், அது நெட்டியால் செய்து வண்ணந் தீற்றிய தாமரையைப் போல இருக்கும். செயற்கைத் தாமரையில் தனித்தனியே இதழ்களைச் செய்வார்கள். பிறகு காம்பைச் செய்வார்கள். அவற்றைப் பிறகு இணைத்து வண்ணம் பூசுவார்கள்; மணம் ஊட்டுவார்கள். அவ்வண்ணமே செய்யுள் 'கட்டுகிறவர்கள்' ஒவ்வொரு சொல்லாக எடுத்து வைத்தும், மாற்றியும், எதுகைக்கு ஏற்ற சொல் என்னவென்று அகராதியைப் பார்த்துப் பொறுக்கியும் வைத்து அமைப்பார்கள். இயற்கையில் தாமரைப் பூ மலரும் போதே வண்ணம், மென்மை, வரவு, மணம் எல்லாம் ஒருசேர அமையப் பெற்று மலர்கிறது. கவிஞன் பாட்டும் அப்படியே முழுமையாகப் பிறக்கிறது.

கவி பாடுகிறவர்கள் கூடிய வரையில் சீர்களில் மொழிகள் முழுமையாகப் பொருந்தும்படி வைத்தால் அழகாக இருக்கும். சீர் பிரியும்போது மொழிகள் வெட்டுப் பட்டால் அதை வகையுளி என்று சொல்வார்கள்.

"மலர்மிசை ஏகினான் மாணடி சேர்ந்தார்
நிலமிசை நீடுவாழ் வார்"

என்ற குறளில் **வாழ்வார்** என்ற சொல்லில் ஒரு பகுதி இரண்டாம் அடியின் இரண்டாம் சீரிலும் எஞ்சிய பகுதி மூன்றாம் சீரிலும் இருக்கின்றன. இப்படி வருவது வகையுளி. வகையுளி வருவது இலக்கணப்படி பிழை யன்று. ஆனால் அப்படி வராமல், வார்த்தைகள் சீருக்காக வெட்டுப்படாமல் இருப்பதுஅழகாக இருக்கும். பெருங் கவிஞர்களுடைய பாடல்களில் இந்த அழகு இருப்பதைக் காணலாம்.

எதுகை மோனைகள் உரிய இடத்தில் வரும்படி பாடுவது அவசியம். விதிக்கு விலக்காகச் சில இலக்கணங்கள் உண்டு. அவற்றையே இலக்கணமாகக் கொண்டு கவி இயற்றக் கூடாது. பழையவர்கள் பாட்டில் சிலவற்றை இலக்கணத்தோடு பொருத்திக் கொள்வதற்காக அமைந்தவை அந்த விலக்குகள்.

எழுத்து, சொல் ஆகிய இலக்கணப் பிழைகள் இல்லாமல் பாடுவது அவசியம். இப்போது கவிபாடும் சிலர் குற்றியலுகரத்தைப் பிரித்து வைத்துப் பாடுகிறார்கள். அது தவறு. அதை யதிவழு என்று சொல்வர்.

காதலனும் காதலியும் கண்டு உளமகிழ்ந்து
ஆதரவில் வாழ்வர் அமைந்து.

இந்தப் பாட்டில் கண்டு உளம் மகிழ்ந்து ஆதரவில் என்று அடுத்து வரும் சொற்களில் இரண்டிடங்களில் குற்றுகரம் பிரிந்தே நிற்கிறது. அவை புணர்ந்து கெட்டுப் போவதுதான் எழுத்திலக்கணத்தின்படி முறை. 'கண்டுள மகிழ்ந்தாதரவில்' என்று சேர வேண்டும். அப்போது

பாட்டின் சீர் முதலியன கெட்டுப் போகும். இப்படிப் பிரித்துப் பாடுவது பிழை. இந்தப் பாட்டை,

காதலனும் காதலியும் கண்டு மனமகிழ்ந்தே
ஆதரவில் வாழ்வர் அமைந்து

என்று திருத்தியமைத்தால் இலக்கணப் பிழையின்றி நிற்கும்.

'எந்தன்' என்ற சொல்லை எதுகையில் வைத்துப் பாடுபவர் உண்டு.

கந்தன் கமலக் கழலடியே எந்நாளும்
எந்தன் றுணையென் றிரு.

இங்கே கந்தன் என்பதனோடு எதுகை சேர்ந்து எந்தன் என்ற சொல் இருக்கிறது. அது பிழை. என்+தன் என்பன சேர்ந்தால் என்றன் என்றே வரும். எந்தன் என்பதைப் பிரித்தால் எம் தன் எனப் பிரியும். எம் என்பது பன்மை; தன் என்பது ஒருமை. இரண்டும் இணைந்து வருவதில்லை. எந்தம் என்று வந்தால் பிழையன்று.

எதுகையில் இரண்டாம் எழுத்து ஒன்றுவதோடு முதல் எழுத்திலும் ஒரு விஷயத்தைக் கவனிக்க வேண்டும். முதல் எழுத்து நெடிலானால் எதுகையில் ஒன்றும் மற்றச் சொல்லின் முதல் எழுத்தும் நெடிலாக இருக்க வேண்டும். கட்டு என்பதற்குப் பாட்டு என்பது எதுகையாகாது; பட்டு என்பதே எதுகையாகும்.

கந்தா முருகா கடம்பா குறத்தியணை
வேந்தா எனவே விளம்பு.

இதில் ந்தா என்ற இரண்டெழுத்துக்கள் ஒன்றி வந்தாலும் எதுகை ஆவதில்லை. முதலெழுத்துக் குறில்

ஒன்றும், நெடில் ஒன்றுமாக இருப்பதே காரணம். 'மைந்தா எனவே வழங்கு' என்று மாற்றினால் எதுகை அமையும்.

எதுகை நயமும் மோனை நயமும் நன்கு அமைந் திருந்தால் கவிதை இனிய ஓசையுடன் விளங்கும். கம்பனுடைய பாடல்களில் இந்த அழகை நன்றாகப் பார்க்கலாம். இரண்டாம் எழுத்து மட்டும் ஒன்றினால் போதும் என்று எண்ணித் திருப்திப்படக் கூடாது. அதற்காகப் பொருத்தமில்லாத சொற்களையும் அமைக்கக் கூடாது.

சொல்வளம் இல்லாதவர்களுக்கு எதுகை மோனை அமைப்பதில் சங்கடம் உண்டாகும். அவை அமையச் சொற்களைத் தேடித் திண்டாடுவார்கள். கருத்தைச் சொல்வதற்கு ஏற்ற சொல்வளம் கவிதை பாடுபவர்களுக்கு மிகவும் இன்றியமையாதது. பணம் இல்லாதவன் அறம் செய்யப் புகுந்தது போல, வெறும் ஆசை மாத்திரம் இருந்தாற் போதாது. பல நூல்களைப் படித்துச் சொல்வளத்தைப் பெற வேண்டும்.

# 19. செய்யுளும் இசைப்பாடலும்

எதையும் செய்யுருளுருவத்தில் பாடி வைக்கும் பழக்கம் தமிழ் நாட்டில் பழங்காலந்தொட்டே இருந்து வருகிறது. அகராதியையே செய்யுள் வடிவத்தில் அமைத்து விட்டார்கள் அல்லவா? நிகண்டுகள் எல்லாம் செய்யு ளுருவத்தில் உள்ள அகராதிகள் என்று சொல்வதில் தவறு இல்லையே! பாடம் பண்ணுவதற்கு எளிதாக இருக்க வேண்டும் என்பதற்காகவே அப்படிச் செய்தார்களேயன்றி,

அதிலும் கவிச்சுவை சொட்ட வேண்டும் என்று எண்ணிச் செய்யவில்லை.

செய்யுளுருவத்தில் கவிதைகளும் இருக்கும்; வெறும் செய்யுளும் இருக்கும். வெறும் செய்யுள் என்பது, உரைநடையில் எழுதுவதையே எதுகை, மோனையோடு செய்யுள் உருவத்தில் எழுதுவதுதான். பழங்காலத்தில் சோதிடம், மருத்துவம் முதலிய கலைகளைப் பற்றிய நூல்களும், இலக்கணங்களும் வெறும் செய்யுள்களால் ஆனவை. ஓரளவு தல புராணங்களும் அத்தகையனவே. அவற்றில் இடையிடையே சில நயங்களும் இருக்கலாம். அவற்றில் செய்திகளைச் சொல்லிவிட வேண்டும் என்ற குறிக்கோளே தலைமையானது.

பழங்காலத்துச் செய்யுட்களாக நமக்குக் கிடைக்கும் சங்க நூல்கள் கவிச்சுவை செறிந்தனவாகவே உள்ளன. பொருளின் ஆழமும் சொல்லின் அமைப்பும் சொல்லுகின்ற அழகும் சேர்ந்து சுவையை விளைவித்தன. சொல்ல வேண்டிய கருத்தைத் தடையின்றி அமைப்பதற்கு ஏற்றபடி மிடுக்கான உருவங்களை மேற்கொள்ளாமல் எளிய ஆசிரியப் பாக்களையே பாடினார்கள். வெண்பாக்களையும் பாடினார்கள். இந்த இரண்டின் தன்மையும் கலந்து அமைந்த பரிபாடல், கலிப்பா ஆகியவற்றைப் பாடினார்கள். அந்தப் பாடல்களில் கருத்தமைதியையே உயிராகக் கருதினார்கள்.

"சொல்லென்னும் பூம்போது தோற்றிப் பொருள்என்னும்
நல்லிருந் தீந்தாது நாறுதலால்-மல்லிகையின்
வண்டார் கமழ்தாமம் அன்றே மலையாத
தண்டாரான் கூடல் தமிழ்''

என்பது ஒரு பழம் பாடல். இதில் தமிழ்க் கவிதையை மணமுள்ள மாலையாகச் சொல்கிறார் புலவர். மலரின்

உருவம் சொல்; அதன் மணத்துக்குக் காரணமான தாது பொருள். சிறிய உருவமும் வெண்மை நிறமும் படைத்த மல்லிகை மாலையையே சொல்கிறார். மல்லிகையில் வண்ண ஆடம்பரம் இல்லை. ஆனால் பழங்காலத்தில் அது தான் எல்லா மலர்களிலும் சிறந்தது என்ற கருத்து இருந்து வந்தது. இந்தப் பாடல் பொருளின் சிறப்பைச் சொல்கிறது. உருவ ஆடம்பர மின்றிப் பொருட் சிறப்புள்ள கவிதை யையே இந்தப் பாடலை இயற்றினவர் தம் கருத்திற் கொண்டிருக்கிறார்.

சிலப்பதிகாரத்தில் கொச்சக வகையில் அமைந்த சில வரிப் பாடல்கள் இருக்கின்றன. அவை இக்காலத்து ஆசிரிய விருத்தங்களில் சேரும். அவற்றைப் பண்ணுடன் பாடும் இசைப் பாடல்களாகவே இளங்கோவடிகள் இணைத் திருக்கிறார். இயற்றமிழில் பாட்டின் வடிவத்தில் ஆடம்பரம் இல்லை. இசைத் தமிழிலோ பண்ணுக்கும் தாளத்துக்கும் இடம் உண்டு.

ஆழ்வார்களும் நாயன்மார்களும் இறைவனை இசையுடன் பாடினார்கள்; தாளமிட்டுப் பாடினார்கள். பலவகை ஆசிரிய விருத்தங்கள் பெருகின. புதிய புதிய சந்தங்கள் வந்தன. இசைப் பாட்டுக்களே இயற் பாட்டுக்களாக வந்துவிட்டன. மெல்லமெல்ல அகவலும் வெண்பாக்களும் பின்னே நிற்கத் தொடங்கின. சீவக சிந்தாமணிமுதல் விருத்தம் முன்னிடத்தைப் பெற்றுக் கொண்டது. அளவொத்த ஓசையையுடைய அடிகளைப் பெற்ற விருத்தங்களைப் புலவர்கள் ஆயிரக் கணக்கில் பாடினார்கள். புதிய புதிய சந்தங்களில் விருத்தங்களைப் பாடினார்கள். பெரிய நூல்களை இயற்றும் கவிஞர் யாவரும் விருத்தத்தையே ஆண்டனர். கவிச்சக்கரவர்த்தி கம்பனும்,

பாரதம் பாடிய வில்லியும், நைடதம் பாடிய அதிவீரராம பாண்டியனும், கந்தபுராணம் பாடிய கச்சியப்பரும், தல புராணங்களைப் பாடிய பல புலவர்களும் விருத்த வகைகளில் வையாளி நடைபோட்டனர். இதனால் பாவினங்களில் விருத்தம் மட்டும் பெருகின.

இடையிலே மற்ற வகைப் பாடல்களையும் உயிருடன் இருக்கச் செய்ய வேண்டும் என்ற எண்ணம் கொண்டவர்களைப் போலக் **கலம்பகம்** என்ற பிரபந்தம் ஒன்றைப் புலவர்கள் பாடினர். அதில் எல்லா வகைப் பாக்களும் பாவினங்களும் கதம்பமாக இருந்தன. பலவகைச் செடி கொடிகளின் மாதிரிகளைப் பயிரிட்டு வைத்திருக்கும் மாதிரித் தோட்டம் (Botanical Garden) போல அது இருந்தது.

நாளாக ஆகத் தாளம் போட்டுப் பாடும் பாடல் களாகிய இசைப் பாடல்களும் இயல் தமிழ் இலக் கியங்களில் புகுந்தன. பள்ளு, குறவஞ்சி போன்ற பிரபந்தங் களை இயற்றமிழ்ப் புலவர்கள் பாடினர். பாரதியார் பல இசை வடிவங்களையே வைத்துப் பாடினார். பாஞ்சாலி சபதம் என்ற காவியமே நொண்டிச் சிந்தில் தொடங்குகிறது. இடையிலே வெவ்வேறு சிந்துகள் வருகின்றன.

சினிமா வந்த பிறகு எத்தனையோ பேர் கவிகளும் இசைப் பாட்டுக்களும் எழுதப் புறப்பட்டுவிட்டார்கள். அவை காற்றோடு காற்றாகப் போய்விடுகின்றன.

இசைப் பாட்டுப் பாடும் பழக்கம் இப்போது மிகுதியாகிவிட்டது. அதற்கும் எதுகை, மோனை, ஓசையமைதி வேண்டும். ''இழுக்குடைய பாட்டுக்கு இசை நன்று'' என்பார்கள். இயல் தமிழில் உள்ள குறையை ராகம்

இழுத்து நிரப்பிவிடலாம் என்ற எண்ணத்தில் எழுந்தது அது. இப்போது கவிதையை எழுதுகிறார்கள். அவை எழுத்தில் வரும்போது மற்றவர்களுக்கு எப்படிப் படிப்பதென்றே தெரிவதில்லை. கோணலும் மாணலுமாக அரை குறை வரிகளை எழுதிவிட்டு, ''இது கவிதை'' என்று சொல் பவர்களும் இருக்கிறார்கள். அத்தகையவர்கள் தங்கள் கவிதையைத் தாங்களே பாடிக் காட்டினால்தான் அது கவிதையென்று சிறிது எண்ணத் தோன்றும்.

இசைத் தமிழ்ப் பாடல்களிலும் ஓசை மிகவும் முக்கியமானது. தாளத்துக்கு ஒத்து வரும்படி பாட வேண்டும். இயல் தமிழ்ப் பாடல்களில் ஓசையைச் சீர்களின் அமைப்பால் தெரிந்து கொள்ளலாம். இசைப் பாடல்களில் தாளத்தால் ஓசையமைதியைத் தெரிந்து கொள்ளலாம். தாளம் தவறினால் பாட்டுத் தவறு என்று சொல்லி விடலாம்.

பல்லவி, அநுபல்லவி, சரணம் என்ற உறுப்புக் களையுடைய கீர்த்தனங்களை இப்போது சங்கீத வித்து வான்கள் பாடுகிறார்கள். இந்த வடிவத்தை உண்டாக்கித் தந்தவர் புரந்தர தாசர். அவர் காலத்துக்குப் பின்பே கீர்த்தனம் என்ற வகை பரவியது. அதற்கு முன் ஒரே மாதிரியான அடிகளே சாகித்தியங்களில் இருந்து வந்தன.

சாகித்தியங்களைச் சங்கீத வித்துவான்கள் உருப்படிகள் என்று சொல்வார்கள். பழங்காலத்தில் அவற்றையே தமிழ்ப் புலவர் உரு என்று சொல்லி வந்தார்கள்.

கீர்த்தனங்கள் தமிழில் திருக்குற்றாலக் குறவஞ்சி யிலேயே வந்துவிட்டன. அருணாசல கவிராயர் இராம

நாடகக் கீர்த்தனங்களும், வேதநாயம் பிள்ளை கீர்த்தனங் களும், நந்தன் சரித்திரக் கீர்த்தனங்களும் தமிழ் நாட்டில் நன்றாகப் பரவின காலம் ஒன்று உண்டு.

இப்போதும் கீர்த்தனங்களைப் பலர் பாடுகிறார்கள். ராகமும் தாளமும் பாவமும் இசைப்பாவுக்குரிய யாப் பமைதியும் ஒருங்கே பொருந்தியிருந்தால்தான் கீர்த்தனம் நன்றாக இருக்கும். பாவத்துக்கு ஏற்ற ராகம் இருக்க வேண்டும்.

கீர்த்தனங்களில் பல்லவியானது அநுபல்லவியோடும் சரணங்களோடும் பொருளால் தொடர்புடையதாகி, முடி மணிபோல விளங்கவேண்டும். சின்னதாக இருப்பது பல்லவி, அதைவிடச் சற்றே பெரியது அநு பல்லவி, அதைவிடப் பெரியது சரணம் என்று நினைத்துக் கொண்டு அமைப்பது கீர்த்தனம் ஆகாது.

பல்லவியும் அநுபல்லவியும் ஒரே எதுகையில் அமைந்திருக்க வேண்டும். சரணங்களில் தாளம் விழும் இடங்களில் மோனையோ எதுகையோ இருந்தால் கீர்த்தனத்தின் அழகு மிகுதியாகும். பாவத்துக்கு ஏற்றபடி ராகத்தை அமைப்பது போல, வார்த்தைகளையும் அமைக்க வேண்டும். இரக்கத்தை உண்டாக்க வேண்டிய இடத்தில் வல்லின மெய்களைப் போட்டு நிரப்பக் கூடாது. பெரியவர் களுடைய கீர்த்தனங்களை வாயாரப் பாடிப் பார்க்க வேண்டும். தாளம் விழும் இடங்களை நுட்பமாகக் கவனிக்க வேண்டும். வார்த்தைகள் விள்ளாமல் விரியாமல் அப்படி அப்படியே இருக்கும்படி அமைக்க வேண்டும். இசைப் பாட்டில் வகையுளி வந்தால் பாவமே போய்விடும்.

விருத்தம் பாடுவதைவிடக் கீர்த்தனமோ இசைப் பாட்டோ பாடுவது எளிது என்று பலர் நினைக்கிறார்கள். அது சரியன்று. பொருளையும் பாவத்தையும் தாளத்தையும் நன்றாகக் கவனித்து, வார்த்தைகளை இயல்பாகப் பொருந்தும்படி செய்து, நல்ல ஆடையில் சரிகைக் கரை இருப்பது போல எதுகை மோனைகளைத் தக்க இடத்தில் வைத்துப் பாடினால் கீர்த்தனம் மிகவும் சிறப்பாக இருக்கும். அதைப் பார்த்தாலே நன்றாக அமைத்த வீணை மாதிரி அழகாக இருக்கும். பாடிவிட்டாலோ வீணையை மீட்டிப் பாடியது போன்ற இன்பத்தைத் தரும்.

# 20. வினா விடைகள்

1. *''கும்பிட்டு வாழ்கிலே னியான் கூற்றையும் ஆடல் கொண்டேன்'' (கம்ப): இதில் மூன்றாம் சீரில் நிரையசை மட்டும் வருகிறதே:*

★ ''வாழ்கிலே னியான்'' என்று பிரிக்கக் கூடாது. அது அறுசீர் விருத்தம். ''வாழ்கி லேனியான்'' என்று சீர் பிரிக்க வேண்டும். வாழ்கி-தேமா, ''லேனியான்'' என்பதில் னி என்பது குற்றியலிகரம். அதற்கு ஓசை அளவு (அலகு) இல்லை. ஆகவே 'லேன்-யான்' என்று இருந்தால் என்ன வாய்பாடோ அதையே அமைக்க வேண்டும். ஆதலின் அதுவும் தேமாவே ஆகும்.

2. *''உணங்கினா னுயிரோ டியாக்கை யொருங்கினா னுரைசெய் தின்னும்'': மூன்றாம் சீர் புளிமாவாக வருகிறதே; சரியா?*

★ ''உயிரோ டியாக்கை'' என்னும் தொடரில் 'டி' என்பது குற்றியலுகரம் திரிந்த குற்றியலிகரம். அதற்கு அலகு இல்லை. ஆதலின் யாக்கை என்பது போலவே கருதித் தேமா என்ற வாய்பாடு கொள்ள வேண்டும்.

3. ''மதுரமொழி நல்லுமையாள்'' என்ற பாடலில் ''வல்லார்க்கு அரிதே'' என்னும் இடத்தில் குற்றியலுகரம் கெடாமல் நிற்பது பிழையல்லவா?

★ அங்கே வேண்டுமென்று பதம் பிரித்திருக்கிறதே யன்றிப் பாட்டு ''வல்லார்க் கரிதே'' என்றுதான் உள்ளது. இல்லையேல் தளை தவறாகி விடும்.

4. ''உயிர்வரின் உக்குறள் மெய்விட் டோடும்'' என்ற நன்னூல் சூத்திரத்திற்கு இணங்க, உரைநடையில் குற்றியலுகரம் கெடாமல் நிற்பது பிழையா? செய்யுளில் கெடாமல் நிற்கலாமா?

★ பதம் பிரித்து எழுதும்போது எதிலும் பிழை இல்லை. ஆனால் செய்யுட்களில் பிரிந்து நிற்கும்போது மட்டும் ஓசை சரியாக இருந்து, சந்தி சேர்த்தால் ஓசை குறையுமாயின் அது தவறு.

5. குற்றியலிகரம்போல் குற்றியலுகரம் அலகிடப் பெறுவதில்லையா?

★ யாப்பருங்கலக் காரிகையில், சில இடங்களில் குற்றியலுகரமும் அலகிடப் பெறுவதில்லை என்று இலக்கணம் இருக்கிறது. அதற்கு வஞ்சிப் பாட்டை உரையாசிரியர் உதாரணம் காட்டுகிறார். ஆனால், வெண்பா முதலியவற்றில் அலகிடாமல் குற்றியலுகரம் வந்ததற்கு உதாரணம் இல்லை.

6. ஐகாரத்தைத் தமது விருப்பம்போல் நெடிலாகவோ குறிலாகவோ கொள்ளலாம் போலும்!

★ சொல்லின் முதலில் ஐகாரம் வந்தால் அது பெரும்பாலும் நெடிலைப்போல அலகிடப் பெறும்.

7. ''பையர'' என்ற சீரைக் கூவிளம் என்றீர்கள். 'வாழையடி, ஏழைபடும்' முதலியவற்றைக் காய்ச்சீர் என்றீர்கள். வா-ழை-யடி-, ஏ-ழை-படும் என்று கனிச்சீராக அன்றோ கொள்ள வேண்டும்?

★ மொழி முதலில் வரும் ஐகாரம் ஐகாரக் குறுக்கமானாலும் அதற்கு ஒன்றரை மாத்திரை; ஆதலால் அதை நேராகவே கொள்ளுதல் பெரும்பான்மை. இடையில் வரும் ஐகாரம் குறில் போலவே ஒலிக்கும். வாழையடி என்பதும் வாழயடி என்பதும் ஒரே தன்மையின.

8. ''வசையென்ப வையத்தார்க் கெல்லாம்'' என்ற குறளில் 'ஐ'காரம் இரண்டு மாத்திரை ஓசை உடையதாக ஆளப்பட்டுள்ளது. சொல்லில் வரும்போது ஐகாரம் ஒரு மாத்திரை ஓசை தானே?

★ 'வையத்தார்க்' என்ற சீரைக் குறிப்பிட்டுக் கேட்ட கேள்வி இது. தன்னைச் சுட்டுகின்ற இடமன்றி மற்ற இடங்களில் ஐகாரம் தன் இரண்டு மாத்திரையில் குறுகும் என்பது எழுத்திலக்கண விதி. ஆனால், அப்படிக் குறுகு வதில் வேறுபாடு உண்டு. மொழிக்கு முதலில் குறுகும் போது ஒன்றரை மாத்திரையாக வரும். அங்கே ஐ என்பது அய் என்பது போல ஒலிக்கும். ஆதலால் குறிலும் ஒற்றும் இணைந்தது போல நேர் அசையாகக் கொள்ள வேண்டும்.

9. ஐகாரம், ஔகாரம் ஒரு மாத்திரையா, இரண்டு மாத்திரையா என்று சில வேளைகளில் ஐயம் ஏற்படுகிறது; தெளிவிக்க.

★ ஐகாரம் மொழிக்கு முதலில் வந்தால் பெரும்பாலும் நேரசையாக வரும். இடையில் வந்தால் குறில் போல இருக்கும். ஔகாரம் முதலிலேயே வருவதால் ஒன்றரை மாத்திரையையும், நேரசையாகிய அலகும் பெறும்.

10. "எடுத்தெடுத்துப்
பேஎய் விளக்கயரும் பெற்றித்தே செம்பியன்
சேஎய் பொருத களம்." (முத்தொள்ளாயிரம்)

இதில் சே-எய், பே-எய் என்று பிரித்தால் சரியே. ஆனால் எல்லாவற்றையும் இப்படியே பிரிக்க முடியுமா?

"கடை கடையில்
உப்போஒ எனவுரைத்து மீள்வா ளொளிமுறுவற்
கொப்போநீர் வேலி யுலகு."

இதில் கலித்தளை தட்டு வருகிறதே.

★ முதலில் உள்ள அளபெடைகள் செய்யுள் ஓசையை நிரப்புவதற்காகவே வந்தவை. ஆதலின், அவை அலகு பெறும். பின் உள்ளதோ பண்டமாற்றில் வந்தது. அது அலகு பெறாது. செய்யுளிசை அளபெடைகள் அல்லாதவை சில இடங்களில் அலகு பெற்றும், சில இடங்களில் அலகு பெறாதும் வரும்.

11. குற்றியலிகரம், குற்றியலுகரம், அளபெடைகள்- எவ்வெப்போது அலகு காரியம் பெறா?

★ எங்கெல்லாம் அலகு பெற்றால் ஓசை மிகும் என்று தோன்றுகிறதோ அங்கெல்லாம்.

12. "அற்றால் அழிபசி தீர்த்தல் அஃதொருவன்
பெற்றான் பொருள்வைப் புழி."

*இக் குறட்பாவில் தீர்த்தல்-அஃதொருவன் என்பதனை அலகிட்டு வாய்பாடும் தளையும் கூறின் தளை தட்டுகிறது. ஆய்தத்தை எப்படி வைத்துக் கொண்டாலும் வழு உண்டாகிறது. அமைதி யாங்ஙனம்?*

★ ஆய்தம் ஓரலகு பெற்றது. அதாவது அங்கே குற்றெழுத்திருந்தால் எப்படி அலகிட வேண்டுமோ, அப்படிக் கொள்ள வேண்டும். அஃதொருவன் என்பதை 'அகுதொருவன்' என்று உச்சரித்தால் வேறுபாடு தோன்றாது. கருவிளங்காய் என்று வாய்பாடு கொண்டாமல் மாமுன் நிரையாகிய இயற்சீர் வெண்டளை அமைதல் காணலாம்.

13. *மாத்திரை என்றால் என்ன?*

★ காலக் கூறுபாட்டின் அளவு. இமையை இமைக்கும் நேரமும், கை விரலை நொடிக்கும் நேரமும் மாத்திரைக்கு அளவாகும்.

14. "உறங்குவது போலுஞ் சாக்கா டுறங்கி
விழிப்பது போலும் பிறப்பு"

*இதில் முதலடியில் 'போலும்' என்ற தேமா முன் நேர் வந்தது எவ்வண்ணம்?*

★ சீர் பிரித்தது தவறு.

"உறங்கு வதுபோலுஞ் சாக்கா டுறங்கி
விழிப்பது போலும் பிறப்பு"

*என்று பிரிக்க வேண்டும்.*

15. வேல்பற்றும் கைக்குகேசன் மேதகைய தாமரைப்பூங்
கால்பற்றிற் காண்போம் கதி.

*இந்தக் குறள் வெண்பாவில் பிழை ஏதேனும் உண்டா?*

★ *முதலடியில் இரண்டாம் சீரில் இடையில் விளாஞ்சீர் வந்தமையால் ஓசை நீள்கிறது. குகே என்று குறில் நெடிலாகிய நிரை வந்தது. அப்படி வருவது தவறு.*

16. *ஒரு சீரில் ஒரு நெடிலும், ஒரு குறிலும் வந்தால் தேமா என்று பிரிக்கலாமா?*

★ *நெடில் முன்னும் குறில் பின்னும் வந்தால் அவை ஒவ்வொன்றும் நேரசையாம். இரண்டும் சேர்ந்தால் நேர் நேர்-தேமா ஆகும். 'வாகு' என்பது தேமா. ஆனால் குறில் முன்னும், நெடில் பின்னும் வந்தால் அது நிரையசை. 'குவா' என்பது நிரையசை.*

17. *சீரைப் பிரிப்பதில் சில குழப்பங்கள் ஏற் படுகின்றன. உதாரணமாக 'அவள்' என்று இருந்தால் அவ-ள் என்று பிரிப்பதா? அ-வள் என்று பிரிப்பதா?*

★ *அவ-ள் என்று மெய்யைத் தனியே பிரிப்பது தவறு. யாப்பிலக்கணத்தில் மெய் கணக்கில் வருவதில்லை. அவள் என்பது நிரை என்னும் அசையாக வரும். எங்காவது இரு சீர்களில் ஓசை பிரியும்படி வந்தால் அ-வள் என்று பிரித்து ஓசையூட்ட வேண்டியிருக்கும்.*

18. மாச்சீர் என்றாலே நேரசையை ஈறாகக் கொண்டு வரும் சீர் என்று குறித்த தாங்கள் தேமாச்சீர் என்று ஏன் குறித்திருக்கிறீர்கள்?

★ 'நேர் நேர்' என்று இரண்டும் நேராகவே வரும் ஈரசைச் சீர் என்பதைத் தெரிவிக்கவே, 'தேமாச்சீர்' என்றேன்.

19. தேமா, புளிமா என்பன போல வரும் வாய்பாடுகள் யார் அமைத்தவை?

★ யாப்பருங்கலக் காரிகை ஆசிரியராகிய அமிர்த சாகரர் அமைத்தார் என்று தோன்றுகிறது. வேறுவித வாய் பாடுகளை வேறு இலக்கண நூல் ஆசிரியர்கள் கூறியிருக்கிறார்கள்.

20. திருக்குறளில் கலித்தளை வருகிறதா?

★ வெண்பா வகை எதிலும் வெண்டளையன்றி வேறு எதுவும் வராது.

21. இயற்சீர் வெண்டளை, வெண்சீர் வெண்டளை இரண்டும் வெண்பாவுக்கும் கட்டளைக் கலித் துறைக்குமே உரியன. சரியா?

★ வெண்பாவில் வெண்டளையே வரும். மற்றத் தளைகள் வாரா. ஆனால் மற்றப் பாடல்களில் வெண்டளையும் வரும்.

22. வெண்பாவில் மோனை எந்தச் சீரில் அமைந்தால் சிறப்பு? ஈற்றடியில் எந்தச் சீரில் வந்தால் அழகு?

★ எல்லா அடிகளிலும் மூன்றாம் சீரில் வந்தால் சிறப்பு.

23. ங, ட, ண, ய, ர, ல, ழ, ள, ற, ன இவைகளுக்கு மோனை இல்லையா?

★ 'ய' கரத்தைத் தவிர மற்றவை தமிழில் மொழிக்கு முதலாவதில்லை. ர,ல இரண்டும் இந்தக் காலத்தில் மொழிக்கு முதலில் வருகின்றன, ரம்பம், லட்சம் என்பவை போல்; ய,ர,ல என்ற மூன்றுக்கும் இ,ஈ,எ,ஏ (உயிரெழுத்து) மோனையாக வரும்.

யானைதன் துதிக்கை நீட்டி
எடுத்ததைக் கண்டு நின்றான்

ராமனைத் தொழுத பின்னர்
இன்னலொன் றேனும் உண்டோ?

லட்சமே கூட்டி னாலும்
இலையெனும் லோபி கண்டாய்

என்பவற்றில் மோனை அமைந்தமை காண்க.

24. தொடை, மோனை என்பவை ஒரு பொருளைக் குறிக்கும் சொற்களா?

★ அல்ல. தொடைகள் பல. அவற்றில் ஒன்று மோனை.

25. இணைக்குறள், நேரிசை ஆசிரியப்பாக்களில் எங்கெங்கே மோனை அமைவது எழில்?

★ மூன்றாம் சீரில்.

26. எழுசீர்க் கழிநெடிலடி ஆசிரிய விருத்தத்துக்கு மோனை எங்கு அமைந்தால் சிறப்பு?

★ ஐந்தாவது சீரில்.

27. "மங்கை நல்லவர் கண்ணும் மனமும்போன்
றெங்கு நாடி யிடருஞ் சுரும்புகாள்
வண்டு காள்மகிழ் தேனினங் காள்மது
வுண்டு தேக்கிடும் ஒண்ஞிமி றீட்டங்காள்."

*சிந்தாமணியில் வரும் இந்தக் கலி விருத்தத்தில் நாலடிகளிலும் ஓரெதுகை வரவில்லையே!*

★ *இதில் மெல்லின எதுகை வந்தது.*

*28.* "உலக மூன்றும் ஒருங்குடன் ஏத்துமொண்
டிலக மாய திறலறி வன்னடி
வழுவில் நெஞ்சொடு வாலிதின் ஆற்றலாம்
தொழுவில் தொல்வினை நீங்குக வென்றல்போல்."

*இந்த விருத்தத்தில் இரண்டு விகற்பங்கள் வந்தது பிழை அன்றா?*

★ *இதில் சிறப்பில்லாத இடையின எதுகை வந்தது.*

*29.* *விகற்பம் என்றால் என்ன?*

★ *விகற்பம் என்ற சொல்லுக்கு வேறுபாடு என்று பொருள். யாப்பிலக்கணத்தில் எதுகை வேறு பாட்டைக் குறிக்க அச்சொல் ஆளப்படும். ஒரு விகற்பத்தால் வந்த நேரிசை வெண்பா என்று ஒரே எதுகையில் வந்தால் கூறுவார்கள். முன் இரண்டடியும் ஓரெதுகையாகவும், பின் இரண்டடியும் ஓரெதுகையாகவும் வந்தால் அது இரு விகற்ப நேரிசை வெண்பா என்று சொல்லப்பெறும்.*

*30.* கவிதையில் நாட்டங் கொண்டு கற்றிட முயன்றேன்யானும்
கவினுற வமைய வேண்டிக் கற்பனை செய்தேன்யாக்க
மேவிய விருப்பத்தாலே மெள்ளவே பார்த்து விட்டேன்
கவியதைத் திருத்தம் செய்வீர் கவனத்திற் கனுப்பி
வைத்தேன்.

★ *இதில் மூன்றாவதடியில் முதல் எழுத்துக் குறிலாக இருக்க வேண்டும். இல்லாவிட்டால் அங்கே எதுகை அமையாது.*

"கவியுறு விருப்பத்தாலே கருதியே யாத்து விட்டேன்"

என்பது போல வரலாம்.

31. மோனை அமைய வேண்டிய இடத்தில் எதுகை அமைந்தால் மோனை இல்லையே என்ற குறை இராது என்று கூறுகிறீர்களே, ஆசிரியப்பாவுக்கு மட்டுந்தான் இவ்விதியா?

★ ஆம்.

32. எதுகையில் வ வுக்கு வி யும் வாவும் சில பாடல்களில் இருக்கின்றன? சரியா?

★ இருக்கலாம். குறிலுக்குக் குறிலே இருப்பது சிறப்பு.

33. செய்யுளில் ஓரடியில் 'இப்படி' என்றும் மற்றோரடியில் 'மெய்ப்பரிவு' என்றும் வருகின்றன. இதில் எதுகைத் தொடை வரவில்லையே!

★ 'ய்' என்று இடையில் வந்திருப்பது ஆசு எனப்படும். இது ஆசிடையிட்ட எதுகை அமைந்த இடம்.

34. குறட்பாக்களில் எதுகை முதலடியின் முதற் சீரிலும், அதே அடியின் 4ஆம் சீரிலும் வரலாமா?

★ வரலாம். வந்தால் போதாது. அடிக்கு அடி வந்தால் சிறப்பு. வராவிட்டால் பிழை இல்லை. வந்தால் அழகு மிகுதி.

35. செந்தொடை என்றால் என்ன?

★ மோனை, எதுகை முதலிய தொடைகளில் எதுவும் வராமல் இருப்பது செந்தொடை ஆகும்.

36. தொடை இலக்கணம் 13708 வகைப்படும் என்று தொல்காப்பிய உரையில் கூறப்பட்டுள்ளது. இலக்கிய எடுத்துக்காட்டுகள் உள்ளனவா?

★ பலவகைத் தொடைகளைப் பெருக்கிக் கணக்கெடுத்து வந்த தொகை அது. எல்லாவற்றுக்கும் எடுத்துக் காட்டுகள் கிடைப்பது அருமை.

37. வெண்பாவின் இனங்களில் ஆசிரியத் தளையும், கலித்தளையும் பயின்று வருவானேன்?

★ வெண்பாவுக்கும், வெண்பா இனத்துக்கும் உள்ள முக்கியமான வேறுபாடு அது.

38. "தண்ணார மார்பிற் றமிழர் பெருமானைக்
கண்ணாரக் காணக் கதவு."

இதில் ஈற்றுச்சீர் வெண்பா இலக்கணப்படி அமைய வில்லையே. காரணம் என்ன?

★ நாள், மலர், காசு, பிறப்பு என்ற வாய்பாடுகள் நான்கில் கதவு என்பது பிறப்பு என்னும் வாய் பாட்டில் அமைந்தது. குற்றியலுகரம் வருவதே பெரும்பான்மை யாயினும் சிறுபான்மை முற்று கரமும் வரும்.

39. "அட்டாலும் பால்சுவையிற் குன்றா தளவளாய்
நட்டாலும் நண்பல்லார் நண்பல்லர்
கெட்டாலும் மேன்மக்கள் மேன்மக்க ளேசங்கு
சுட்டாலும் வெண்மை தரும்."

இது எந்த வகை வெண்பா? இரு குறள் இணைந்த வெண்பா என்னலாமா?

★ இதைச் சவலை வெண்பா என்று சிலர் கூறுவர். இரு குறள் இணைந்த வெண்பா அன்று இது. இந்தப் பாடலுக்கு ஒரு பாட பேதம் உண்டு. அது வருமாறு:

''அட்டாலும் பால்சுவையிற் குன்றா தளவளாய்
நட்டாலும் நண்பல்லார் நண்பல்லர்-கெட்டாலும்
மேன்மக்கள் மேன்மக்க ளேசங்கு சுட்டாலும்
தான்மிக்க வெண்மை தரும்.''

40. *வெண்பாவின் இரண்டாவது அடி தனிச் சீரின்றி முச்சிராக அமைந்திருந்தால் சவலை வெண்பாவாகக் கருத வேண்டுமா?*

★ *ஆம். சவலை வெண்பா என்று சிலர் சொல்வர். பெரியவர்கள் அப்படிச் செய்வதால் அதனை ஆரிடம் என்று அமைப்பர்.*

41. *காரிகையில் பாவை விளக்கும் ஆசிரியர் ஓரொலி என்ற சொல்லைப் பயன்படுத்துகிறாரே. அது பாவின் இலக்கணத்தில் எந்த வகையைச் சார்ந்தது?*

★ *ஓரொலி வெண்டுறை, வேற்றொலி வெண்டுறை என்று இரு வகை உண்டு. வெண்டுறை இலக்கணத்தைச் சொல்லும் போதுதான் ஓரொலி என்பது வருகிறது. ஓரே வகைச் சீர்களால் வருவது ஓரொலி வெண்டுறை. முற்பகுதிக்கும் பிற்பகுதிக்கும் சீர் வேறுபாட்டால் ஒலி மாற்றம் நிகழ்ந்தால் அது வேற்றொலி வெண்டுறையாகும்.*

42. *வெளி விருத்தத்தில் ஒவ்வோர் அடியும் ஒரு கருத்தைத் தாங்கி முடிகிறது. இதன் அடிகளைப் பெரும் பாலும் மறித்துப் போட வாய்ப்பு உண்டு. எனவே வெளி விருத்தத்தை அடிமறிமண்டில விருத்தம் என்று கூறலாமா?*

★ *அடிமறிமண்டில ஆசிரியப்பா என்பதுதான் உண்டு. விருத்தத்தில் அப்படி ஒன்றும் இல்லை.*

43. ஆசிரிய விருத்தத்துக்குத் தளை காண வேண்டாமா?

★ வேண்டியதில்லை.

44. கழிநெடிலடி ஆசிரிய விருத்தத்திற்கு இறுதியாக எத்தனை சீரென்ற வரையறை இருக்கிறது?

★ பதினான்கு, பதினாறு வரையிலும் நூல்களில் பயிலும். இராமலிங்க சுவாமிகள் அருட்பாவில்தான் வேறு எங்கும் காணாத பெரிய விருத்தம் இருக்கிறது. அதில் ஓரடிக்கு 192 சீர்கள் இருக்கின்றன.

45. அகவற்பாவில் காய்ச்சீரும், கனிச்சீரும் கலந்து பயின்று வரலாமா?

★ விளங்கனிச்சீர் வருவதில்லை. மற்றக் கனிச் சீர்கள் மிகவும் அருமையாகவே வரும். காய்ச்சீர் அடியில் ஓரிடத்தில் மட்டும் வந்தால் சிறப்பாக இருக்கும்.

46. ஆசிரியப்பாவில் குற்றியலிகர உகரங்கள் வந்து விடத்து நாலசைச் சீர்கள் எப்போது வரும்?

★ ஆசிரியப்பாவின் இடையில் வஞ்சியடி கலக்கும் போது அவ்வாறு வரும்.

47. ஆசிரிய விருத்தத்தில் எந்தச் சீர்கள் வரலாம்?

★ பெரும்பாலும் மாச்சீரும், விளச்சீரும், காய்ச்சீருமே வருகின்றன. சில விருத்தங்களில் கனிச்சீரும் வருகிறது. எப்படி வந்தாலும் அளவொத்து வரல் வேண்டும்.

எண்சீரடி இயைபாடலில்
கனிச்சீர்வர லுண்டோ
என்றாலது வரும்வண்ணமிவ்
விருத்தத்தினிற் காண்க.

இந்தப் பாடலில் எட்டுச் சீர்கள் வருகின்றன. அரையடிக்கு மூன்று கனிச்சீர்களும் ஒரு மாச்சீரும் வந்திருப்பதைக் காண்க.

48. "மலரின்மே லிருந்த வள்ளல்
வழுவிலா வரத்தி னானீ
உலைவிலாத் தருமம் பூண்டா
யுலகுள தனையு முள்ளாய்"

என்ற கம்ப ராமாயணப் பாட்டில், முதல் அடியின் முதலில் காய்ச்சீர் வந்திருக்கிறதே!

★ விளச்சீர்தான் வர வேண்டும். ஆயினும் சில இடங்களில் காய்ச்சீர் வருவதுண்டு. இடையில் மெல்லின மும், இடையினமும் வரும்போது அவை விளச்சீரைப் போலவே ஒலிக்கும். மெல்லினத்தின் பின் வல்லினம் வந்தால் அப்படி ஒலிக்காது. 'மலரின்மே' என்பது புளி மாங்காய் என்ற வாய்பாடு உடையது. ஆனாலும் கருவிளம் என்பது போலவே ஒலிக்கிறது. சில பாடல்களில் ஒவ்வோர் அடியிலும் முதல் சீரில் காய்ச்சீர்கள் வருவதுண்டு.

"சேலுண்ட ஒண்க ணாரிற்
றிரிகின்ற செங்கா லன்னம்
மாலுண்ட நளினப் பள்ளி
வளர்த்திய மழலைப் பிள்ளை"

என்பதில் அவ்வாறு வந்தது காண்க.

49. வெண்பாவுக்கு ஒருவிகற்ப எதுகை, இரு விகற்ப எதுகை, மூவிகற்ப எதுகை என அமைப்பது போல விருத்தங்களுக்கும் அமைவது சரியா?

★ சரி அன்று.

50. *விருத்தப்பாவில் மாச்சீர், விளச்சீர்களுடன் காய்ச் சீரும் கலந்து வரலாம் போல் தெரிகிறது. எனவே, காய்ச்சீர் வருவது போல் கனிச்சீரும் வரலாமா?*

★ *எது வந்தாலும் அளவொத்து அமைய வேண்டும். கனிச்சீர் வந்தாலும் ஓரடியில் அமைந்தவாறே பிற அடிகளிலும் இருக்க வேண்டும்.*

தேமாங்கனி தேமாங்கனி தேமா
தேமாங்கனி தேமாங்கனி தேமா

*என்ற வாய்பாட்டில் வரும் ஆறுசீர் விருத்தங்கள் உண்டு.*

51. *அளவொத்து வரவேண்டிய ஆசிரிய விருத்தங் களில் காய் வரவேண்டிய இடத்தில் சில பாடல்களில் கனிச்சீர் வருகிறது.*

"துங்கமுறு பத்தர்பலர் புவிமீ துள்ளார்."

*(பாரதி அறுபத்தாறு)*

"மங்கும் மாலைப் பொழுதினிலே
மதுவூண் சாலை வாயில்வழி"

*(உமர்கய்யாம் பாடல்-தே.வி.மொழி பெயர்ப்பு)*

"தமிழறியான் தமிழர்நிலை தமிழர்நெறி தமிழர்களின்
தேவை வாழ்வு."

*(தமிழியக்கம்-பாரதிதாசன் பாடல்கள்)*

*இவற்றிற் கனிச்சீர்கள் வந்துள்ளன. வந்தது சரியா?*

★ *கனிச்சீராகத் தோன்றும் சீர்களில் உள்ள ரகர ஒற்றும் லகர ஒற்றும் அவ்விடங்களில் இல்லாதது போலவே எண்ணி வாய்பாடு கொள்ள வேண்டும். யரலவழள*

ஒற்றுக்கள் இடையில் வந்தால் இப்படி அமைவது உண்டு.

52. தாயுமானவர் பாடலில், ''அங்கிங்கெனாதபடி'' என்பது போல வரும் விருத்தங்களைப் பதினான்கு சீர் விருத்தங்களாகக் கொள்வதா? பன்னிரு சீர் விருத்தங்களாகக் கொள்வதா?

★ பன்னிரு சீர் விருத்தமாகவே கொள்வது நலம்.

> ''அங்கிங் கெனாதபடி எங்கும்ப்ர காசமாய்
> ஆனந்த பூர்த்தி யாகி''

என்ற அரையடியில் ஆறாவது சீரை இரண்டாக்கிக் கணக்குப் பண்ணலாமென்று தோன்றும். ஆனால் எல்லா இடங் களிலும் அப்படிக் கணக்குப் பண்ண முடியாது.

> ''தங்கும் படிக்கிச்சை வைத்துயிர்க் குயிராய்த்
> தழைத்ததெது மனவாக்கினில்''

என்பதில் உள்ள ஆறாவது சீர் 'மனவாக்கினில்'. அதை மனவாக் கினில் என்று பிரித்தால் 'கினில்' ஒரு சீர் ஆகாது. ஆகையால் எல்லாவற்றையும் ஒரே சீராகக் கொள்வதே பொருத்தம். அப்போது 'பூர்த்தியாகி' என்பது கூவிளங்காய் ஆகும்.

53. ஆசிரியப்பாவுக்கு ஆசிரியத் தளையே வர வேண்டும் என்ற கட்டுப்பாடு உண்டா?

★ இல்லை.

54. கவிதை எழுதும்போது முதலடி எவ்வளவு நீளம் இருக்கிறதோ அதே அளவாகத்தான் மற்ற அடிகள் இருக்க வேண்டுமா?

★ எல்லாச் செய்யுட்களுக்கும் அடிகள் அளவொத்து வர வேண்டும் என்பதில்லை. ஆசிரிய விருத்தங்களில் நான்கு அடிகளும் அளவொத்து வரவேண்டும் என்பதைப் பார்த்தோம். பொதுவாக விருத்தம் என்னும் பாவினங்கள் எல்லாவற்றிலும் அளவொத்த நான்கடிகளே வரும்.

55. 56 சீர், 112 சீர் கொண்ட ஆசிரிய விருத்தங்கள் வருகின்றனவே!

★ வரலாம்.

56. ஆசிரிய விருத்தம் அளவொத்து வர வேண்டும் என்ற வரையறையின்றிப் புதிய முறையில் பாடலாமா?

★ அப்படிப் பாடினால் அது ஆசிரிய விருத்தம் ஆகாது. விருத்தம் என்ற பாவினங்கள் யாவுமே அளவு ஒத்து வரவேண்டும் என்பது பொது விதி.

57. எண்சீர் விருத்தத்தைப் போல அரையடிக்கு இரண்டு காயும் இரண்டு மாவும் வந்து ஈரடியான் வரும் பாவிற்கு என்ன பெயர்?

★ பரணி நூல்களில் இத்தகைய செய்யுட்கள் வரும். அவை தாழிசை என்று பெயர் பெறும்.

58. கந்தர் அநுபூதிப் பாடல்களை இரண்டு விதமான பாடல்களாகச் சொல்கிறார்கள்; எது சரி?

★ நான்கு சீராகப் பிரித்தால் கலிவிருத்தம் என்றும், மூன்று சீராகப் பிரித்தால் வஞ்சி விருத்தம் என்றும் சொல்லலாம்.

"வளைபட்டகை மாதொடு மக்களெனும்
தளைபட்டழி யத்தகு மோதகுமோ

கிளைபட்டெழு சூருர முங்கிரியும்
தொளைபட்டுரு வத்தொடு வேலவனே''

என்று பிரித்தால் வஞ்சி விருத்தமாகும். ஆனால் மோனை யமைதியைப் பார்த்தால் நான்கு சீராகப் பிரித்தலே பொருத்தம் என்று தோன்றும்.

''வளைபட் டகைமா தொடுமக் களெனும்
தளைபட் டழியத் தகுமோ தகுமோ
கிளைபட் டெழுசூ ருரமும் கிரியும்
தொளைபட் டுருவத் தொடுவே லவனே.''

இப்படிப் பிரிப்பதனால் பின் மூன்றடிகளிலும் மோனை நன்றாக அமைவதைக் காணலாம்.

59. *அளவொத்த நான்கு சீர் அடிகள் நான்காய் வருவது கலிவிருத்தம் என்று கூறப்பட்டிருக்கிறது. நாலடிகளால் வரும் தரவு கொச்சகக் கலிப்பாவும் நான்கு சீர்கள் கொண்டவையே. எனின், இவ்விரு பாக்களுக்குமுள்ள வேறு பாடுகள் யாவை?*

★ தரவு கொச்சகக் கலிப்பாவில் மாச்சீர், விளச்சீர் காய்ச்சீர் மூன்றும் விரவி வரும். மாச்சீர் வரும்போது வெண்டளை அமையும். நான்கு சீரும் காய்ச்சீராகவும் வரலாம். ஓரடியில் மாச்சீர் வந்த இடத்தில் மற்ற அடிகளில் மாச்சீரே வர வேண்டும் என்ற வரையறை இல்லை. கலிவிருத்தத்தில் அந்த வரையறை உண்டு. மூவகைச் சீர்களே நான்கு வருவது கலிவிருத்தத்துக்கு அமையாது.

60. *காரிகை என்று கட்டளைக் கலித்துறையைச் சொல்கிறார்களே; எப்படி வந்தது?*

★ செய்யுள் வடிவத்திலுள்ள உரையைக் காரிகை என்பது வடநூல் வழக்கு. தமிழில் யாப்பருங்கலம் என்ற இலக்கண நூலுக்கு வழி நூலாக யாப்பருங்கலக் காரிகை எழுந்தது. அந்தப் பெயர் வடமொழி வழக்கைத் தழுவி அமைந்ததென்றே தோன்றுகிறது. அது கட்டளைக் கலித்துறையால் அமைந்தது. நாளடைவில் காரிகை என்னும் பெயர் கட்டளைக் கலித்துறை காரணமாக வந்த தென்று கருதிக் கட்டளைக் கலித்துறைக்கும் காரிகையென்ற பெயரை வைத்து வழங்கத் தொடங்கினர் போலும்!

61. கட்டளைக் கலித்துறை, கட்டளைக் கலிப்பாவைத் தவிர, மற்றப் பாப் பாவினங்களில் கட்டளை பெறுவதுண்டா?

★ இலக்கணத்தில் இந்த இரண்டு பாடல்களுக்குமே எழுத்துக் கணக்குச் சொல்லப்பட்டிருக்கிறது. ஆனாலும் ஒருவகைக் கலி விருத்தத்தில் ஓரடிக்கு முதலில் நிரை வந்தால் 12 எழுத்தும், நேர் வந்தால் 11 எழுத்தும் இருக்கும். கட்டளைக் கலிப்பாவின் அரையடியையே ஓரடியாகக் கொண்டது போன்றவை இந்த விருத்தங்கள்.

> "உலகம் யாவையுந் தாமுள வாக்கலும்
> நிலைபெ றுத்தலு நீக்கலு நீங்கலா
> வலகி லாவிளை யாட்டுடை யாரவர்
> தலைவ ரன்னவர்க கேசர ணாங்களே"

என்ற கலிவிருத்தத்தில் ஓரடிக்கு 12 எழுத்துக்கள் இருக்கும்.

உலகம் யாவையும் தாமுள வாக்கலு
முயிர்கள் யாவு முடம்பை யெடுக்கவும்

என்று பாடினால் கட்டளைக் கலிப்பாவின் அடியாகி விடுவதைக் காண்க.

62. கட்டளைக் கலித்துறைக்கும், வெண்பாவுக்கும் சந்த அமைதி உண்டா?

★ வேண்டுமானால் சந்தம் அமைத்துக் கொள்ளலாம். பின் முடுகு வெண்பா, முன்முடுகு வெண்பா, முழு முடுகு வெண்பா என வருபவற்றில் சந்தம் அமைந்திருப்பதைக் காணலாம்.

63. சங்ககால இலக்கியமாகிய பரிபாடல் நான்கு பாவினங்களில் எதைச் சார்ந்தது?

★ பரிபாடல் என்பதே ஒரு வகைப்பா. அதன் இலக்கணம் தொல்காப்பியத்தில் இருக்கிறது.

64. தாழிசை, துறை, விருத்தம் என்பவற்றில் நூல்களில் அதிகமாகப் பயில்பவை எவை?

★ இனங்கள் மூன்றில் மிகுதியாக உள்ளது விருத்தம். வெளிவிருத்தம் மிகுதியாகக் காண்பதில்லை. வஞ்சி விருத்தம் ஓரளவு இருக்கும். ஆசிரிய விருத்தமும் கலி விருத்தமும் எல்லாவற்றைக் காட்டிலும் மிகுதியாக இருக்கும்.

கலித்துறைப் பாடல்கள் பல நூல்களில் வருகின்றன.

மற்றவை திவ்யப் பிரபந்தம், கலம்பகம் ஆகிய நூல்களில் ஓரோவிடத்தில் வந்துள்ளன.

65. செய்யுள் வகைகள் எத்தனை உள்ளன?

★ பாக்கள் நான்கு; வெண்பா, ஆசிரியப்பா, கலிப்பா, வஞ்சிப்பா. ஆசிரியமும் வெண்பாவும் இணைந்த மருட்பா என்பது ஒன்று. ஒவ்வொன்றிலும் பல வகை உண்டு. மருட்பா அல்லாத ஒவ்வொரு பாவுக்கும், தாழிசை, துறை, விருத்தம் என்று மூன்று இனங்கள் உண்டு. அவற்றிலும் பல வகை இருக்கின்றன.

66. வசன கவிதைக்குத் தமிழ் இலக்கண ரீதியாக அமைதி உண்டா?

★ இல்லை; ஆனாலும் புதுவது புகுதல் என்ற இலக்கணப்படி வசன கவிதை பாடலாம். அதில் கவிதைத் தன்மையும் செறிவும் இருக்க வேண்டும்.

67. தமிழ்க் கவிதையின் எல்லாச் சந்தங்களையும் நான் எந்த நூலில் காண முடியும்?

★ எல்லா வகையான பாடல்களுக்கும் உரிய உதாரணங்களைச் சிதம்பரச் செய்யுட் கோவை, பாப்பா வினம் என்னும் நூல்களில் காணலாம்.

68. ஒவ்வொரு பாடலுக்கும் ஒவ்வொரு பூக் கூறப்படுகிறதாமே; நால்வகைப் பாடலுக்குமுரிய நால்வகைப் பூக்கள் யாவை?

★ தாமரை, முல்லை, குவளை, நெய்தல்.

69. சந்தம் என்றால் என்ன?

★ ஓசை அமைதியினால் உண்டாகும் உருவம். சந்தம் என்ற சொல்லுக்குப் பாட்டு என்றும், ஓசை என்றும் பொருள். ஆறுசீர் விருத்தங்களில் வெவ்வேறு வகைகள் இருக்கின்றன. அவற்றில் ஒவ்வொன்றும் ஒவ்வொரு சந்தம்.

மற்றொரு வகையில் சந்தம் என்னும் சொல்லைப் புலவர்கள் ஆள்வார்கள். சந்தப் பாட்டு என்பதில் வரும் சந்தம் தான, தனன, தந்த, தத்த, தைய முதலிய வாய்பாடு களில் வரும். திருப்புகழ்ப் பாடல்கள் யாவும் சந்தப் பாடல்களே.

70. வகையுளி என்ற இலக்கணம் பற்றி விளக்கம் தருக.

★ பாடல்களில் சீர்களைப் பிரிக்கும் போது சொற்கள் வெட்டுண்டால் அதை வகையுளி என்று சொல்வார்கள்.

> "தனக்குவமை இல்லாதான் தாள்சேர்ந்தார்க் கல்லால்
> மனக்கவலை மாற்றல் அரிது."

என்ற குறட்பாவில் சீர் பிரிக்கும்போது சொற்கள் ஒடியாமல் முழுமையாக இருக்கின்றன. இதில் வகையுளிஇல்லை.

> வேண்டுதல்வேண் டாமை இலானடி சேர்ந்தார்க்
> கியாண்டும் இடும்பை இல.

என்பதில் வேண்டுதல்-வேண்டாமை-இலானடி என்று சொற்களுக்கு ஏற்பச் சீரைப் பிரித்தால் தளை பிழைபடும். ஆதலின் வேண்டாமை என்ற சொல்லை ஒடித்து முன்பகுதியோடு ஒரு பகுதியைச் சேர்த்தால்தான் தளை சரியாக வரும். ஓசையும் நன்கு அமையும்.

''வேண்டுதல்வேண்-டாமை-இலானடி'' என்று சீர் பிரிக்கும்போது சொல்லைப் பிளத்தல் வகையுளியாகும்.

71. இரண்டு உதடுகள் ஒட்டாமல் பாடும் பாடலுக்குப் பெயர் என்ன?

★ நிரோட்டகம் என்று பெயர். இதழ் ஒட்டாமல் பாடிய பாடல்களையுடைய யமக அந்தாதிகள் தமிழில் உண்டு. அவற்றை நிரோட்டக யமக அந்தாதி என்றும் இதழகல் யமக அந்தாதி என்றும் சொல்வார்கள். திருச் செந்தில் நிரோட்டக யமக அந்தாதி என்பது ஓர் உதாரணம்.

72. சதகச் செய்யுளுக்கும் விருத்தத்திற்கும் உள்ள வேறுபாடு என்ன?

★ நீதியை உரைக்கும் சதகங்களில் வரும் செய்யுட்கள் யாவும் பன்னிரு சீர்க் கழிநெடிலடியாசிரிய விருத்தம். அறப்பளீசுவர சதகம், குமரேச சதகம், மணவாள நாராயண சதகம், கைலாசநாதர் சதகம் என்பவை ஆசிரிய விருத்தங் களால் ஆனவை. ஆனால், கோவிந்த சதகம் என்பது மாத்திரம் கட்டளைக் கலித்துறையில் அமைந்தது. தொண்டைமண்டல சதகம், கொங்கு மண்டல சதகம் முதலியவையும் கட்டளைக் கலித்துறையில் அமைந்தவை. சோழ மண்டல சதகம் ஆசிரிய விருத்தங்களால் ஆகியது. திருவாசகத்திலுள்ள திருச்சதகம் என்பது பத்துப் பாட்டுக்கு ஒருவகைச் செய்யுளாகப் பத்து வேறு வகையான பாடல்களால் ஆனது.

73. நாற்கவி என்பதற்குத் தாங்கள் கூறியபடி வெண்பா, ஆசிரியப்பா, கலிப்பா, வஞ்சிப்பா என்பது போல் மதுரகவி, வித்தார கவி, சித்திரகவி, ஆசுகவி இவைகளும் வழங்குகின்றனவே; இவைகளின் பொருள் என்ன?

★ தனித்தனியே உள்ள பாக்களின் வகை வெண்பா முதலியன. கவிஞர்கள் பாடுகின்ற பாடல் தொகுதிகளின் இயல்பு நோக்கி வரும் பெயர்கள் மதுர கவி என்பன. முதலில் கவிஞர்களுக்கே அப்பெயர்கள் வந்து பின்பு பாடல் களுக்கும் வழங்கலாயினர். சொல்லினிமை பொருளினிமை மலியப் பாடுகிறவன் மதுரகவி. விரிந்த காவியங் களைப் பாடுகிறவன் வித்தாரகவி. நாகபந்தம், மடக்கு முதலிய விசித்திரங்கள் அமையப் பாடுகிறவன் சித்திர கவி. ஒரு கருத்தை ஒருவர் கூறினால் அதை வைத்து உடனுக்குடன் பாடுகிறவன் ஆசுகவி.

74. *சதகம், யமகம், அந்தாதி ஆகியன எப்பாவின் வகையைச் சார்ந்தவை?*

★ இவை பாவின் வகையால் அமைந்த பெயர் அல்ல. சதகம் என்றால் நூறு பாடல்கள் அடங்கியது என்று பொருள். ஆசிரிய விருத்தங்களாலும், கட்டளைக் கலித்துறையாலும் அமைந்த சதகங்கள் உண்டு.

யமகம் என்ற சொல்லுக்கு மடக்கு என்று பொருள். ஒரு பாடலின் நான்கு அடியின் முதலும் ஒரே மாதிரி வரப் பொருள் வேறுபட அமைவதை யமகம் என்பர் யமக அந்தாதிகள் பல தமிழில் உள்ளன.

அந்தாதி என்பது அந்தமும் ஆதியும் ஒன்றினது என்ற பொருளுடையது. அந்தாதித் தொடை, செய்யுளந் தாதி என்று இருவகை உண்டு. செய்யுளந்தாதி என்பது ஒரு நூலில் ஒரு செய்யுளின் ஈறே அடுத்த செய்யுளின் முதலாக அமைந்து சங்கிலி போலத் தொடர்ந்து வருவது.

75. கிரந்தம் என்றால் என்ன? காரிகைச் செய்யுள் ஒவ்வொன்றும் எத்தனை கிரந்தம் கொண்டது?

★ மெய்யெழுத்தைக் கணக்குப் பண்ணாமல் மற்ற வற்றில் முப்பத்திரண்டு வந்தால் அது ஒரு கிரந்தம்.

நேரசை முதலாக வந்த காரிகையில் அறுபத்து நான்கு எழுத்துக்கள் இருக்கும். அதில் இரண்டு கிரந்தங்கள் இருக்கும். நிரையசை முதலாக வந்த காரிகையில் அறுபத்தெட்டெழுத்துக்கள் இருக்கும். அவை இரண்டு கிரந்தங்களும் நான்கு எழுத்தும் ஆகும்.

76. கலிப்பாவினாலேயே அமைந்த தனி நூல் ஏதேனும் உண்டா?

★ கலித்தொகை என்ற சங்க நூல் நூற்றைம்பது கலிப்பாக்களால் அமைந்தது.

77. இன்ன பாடலுக்கு இன்ன ராகம் என்ற வரையறை ஏதாவது உண்டா?

★ அப்படித் திட்டமாக எதுவும் இல்லை. ஆனால் சில பெரியவர்கள் வெண்பாவைச் சங்கராபரணத்திலும், கட்டளைக் கலித்துறையைப் பைரவியிலும் பாடு வதை வழக்கமாகக் கொண்டிருந்தார்கள்.

78. எளிதில் யாப்பிலக்கணம் கற்க உதவும் நூல் எது?

★ விசாகப் பெருமாள் ஐயர் எழுதிய யாப்பிலக்கண வினாவிடையைப் படிக்கலாம்.

**நிறைந்தது**

## ‘சொல்லின் செல்வன்’ பி.என். பரசுராமன்
## எழுதிய நூல்கள்

1. வாரியார் சொற்பொழிவில் கேட்டவை I
2. வாரியார் சொற்பொழிவில் கேட்டவை II
3. அஷ்டாவக்ரர் உபதேசங்கள்
4. விதுர நீதி
5. பர்த்ருஹரியின் நீதி சதகம்
6. சனத்குமாரரின் உபதேசங்கள்
7. பீஷ்மர் சொன்ன தத்துவக் கதைகள்
8. விபூதி, ருத்ராட்சம் மகிமை
9. மன உறுதியுடன் வாழ வைராக்கிய சதகம்
10. சித்தர்கள் சரித்திரம்
11. யட்சப் பிரச்னம் & பிரச்னோத்ர ரத்னமாலிகா
12. துணுக் துணுக்குகள்
13. சித்ரகுப்தன் கதைகள்
14. அருணகிரிநாதரின் ராமாயணம்
15. ஊருக்கு நல்லது சொல்வேன்
16. மஹா ஸ்வாமிகள் அருளிய ஆதிசங்கரர் வரலாறு
17. மனோபோதை
18. அர்த்தமுள்ள கண்ணதாசன் பாடல்கள் I
19. ஸ்ருங்கார சதகம்
20. நீதிக் கதைகள் பாகம் 1
21. நீதிக் கதைகள் பாகம் 2
22. அம்மன் சந்நதி அற்புதங்கள்

(மேலும் ஆசிகள் நம்மைத் தேடி வரும்)

கி.வா.ஜ. அவர்களுக்கு சிறு வயதிலேயே தமிழ் இலக்கியங்கள் மீது பற்று ஏற்பட்டது. டாக்டர் உ.வே. சுவாமிநாதையர் அவர்களுடைய தலை மாணாக்கராக இருந்து தமிழ் பயின்று, அவர்களது அருந்தமிழ் பணிக்கும் துணை நின்று, 'கலைமகள்' மாதப் பத்திரிகையின் ஆசிரியராக ஐம்பதாண்டுகளுக்கு மேல் பணி யாற்றியுள்ளார்.

தமிழ் ஆராய்ச்சி, இலக்கியம், பக்தி இலக்கியங்கள், கவிதைகள், நாடோடிப் பாடல் கள், பழமொழிகள் என இவரே எழுதியும், தொகுத்தும் அளித்துள்ள நூல்கள் இருநூற்றுக் கும் மேற்பட்டனவாகும்.

குறிப்பாக, இலக்கணத்துக்கு விளக்கம் தருவதில் வல்லவர். சிலேடையாய்ப் பேசுவதில் இவருக்கு நிகர் இவரே.

எந்த இலக்கிய நூலிலே சந்தேகம் ஏற்படினும் உடனடியாக விளக்கம் கி.வா.ஜ. அவர்களிடமிருந்து கிடைக்கும் என்பதைத் தமிழ் அறிஞர்கள் பலரும் அறிவர்.

இவர், பல காலமாக உள்ள ஐயங்களைப் போக்குகின்ற வகையில், 'கலைமகள்' மாத இதழில் பதிலளித்து வந்தார். இவை என்றென்றும் நமக்குப் பயன் விளைக்கக் கூடும்.